# MAHA super

# பொருளியல்

## 12th Std

**NEW SYLLABUS**

**2022-2023**

*Copyright: Author*

*Thanks to*

*My Amma*

**S. MAHALINGAM**

**M.B.A., M.Phil., M.Com., (Ph.D)**

**Research scholar**

**Kurumandur – 638457**

**Gobi (Via), Erode Dt.**

**Cell: 7502709045**

**Price: Rs.**

**MAHA PUBLICATIONS**

**BOOKS & GUIDES**

www.Padasalai.Net

**Dedicated to**

**my students**

## Preface

**Plus Two Economics Tamil Medium Guide** helpful to students for get good marks.

I sincere thank to A.V. Thiyagarasu sir Principal, R. Sellappan sir Dean (Former Principal) Gobi Arts and Science College (Autonomous) Gobi and my professors for support and encourage me to prepare this Guide.

I sincere thank to my friends.

**Best Wishes**

**S. Mahalingam**

www.Padasalai.Net

**Studied At:**

**Commerce:** Diamond Jubilee Higher Secondary School, Gobichettipalayam

**B.B.M :** Gobi Arts and Science College (Autonomous), Gobichettipalayam

**M.B.A :** Sree Amman Arts and Science College, Chithode, Erode

**M.Phil :** Alagappa University (Distance Education)

**M.Com :** Annamalai University (Distance Education)

**(Ph.D) Research Scholar** studying at Gobi Arts and Science College (Autonomous), Gobichettipalayam

3 Articles, 20 Books wrote

## Forword

The Guide Titled **"Plus Two Economics Tamil Medium"** by **S. Mahalingam** is a very useful addition to the field of Management and Commerce. The author took beautiful efforts in making the book a user guide which could be of great help for Commerce Candidates. The Guide though not provides ample explanation to the concepts will help the readers to have a glimpse at the salient aspects of the subjects like NTA UGC NET/SET Paper 1. NTA UGC NET/SET Management Paper 2, Marketing Management and Management related books etc. The model questions given at the end of the book would help the candidates to review and revisit the concepts. I congratulate the author for his wonderful effort in bringing out this useful Guide. I wish him to pursue his passion relentlessly and continue his hard and good work.

**Dr. R. Sellappan**

M.B.A., M.Com., M.Phil., D.L.L., Ph.D

(Former Principal)

Dean

Gobi Arts and Science College (Autonomous)

Gobichettipalayam, Tamilnadu

www.Padasalai.Net

## பொருளடக்கம்


1 பேரியல் பொருளாதாரம்

2 தேசிய வருவாய்

3 வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்

4 நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள்

5 பணவியல் பொருளியல்

6 வங்கியியல்

7 பன்னாட்டுப் பொருளியல்

8 பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்

9 நிதிப் பொருளியல்

10 சுற்றுச்சூழல் பொருளியல்

11 பொருளாதார மேம்பாடு மற்றும்திட்டமிடல்

12 புள்ளியியல்


## அத்தியாயம் 1 பேரியல் பொருளாதாரம்

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை

அ. சொத்து மற்றும் நலமும் ஆ. உற்பத்தி மற்றும் நுகர்வு இ. தேவையும் மற்றும் அளிப்பும் ஈ. நுண்ணியல் மற்றும் பேரியல்

**ஈ. நுண்ணியல் மற்றும் பேரியல்**

2. "மேக்ரோ " (Macro) என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார்?

அ. ஆடம்ஸ்மித் ஆ. ஜே.எம். கீன்ஸ் இ. ராக்னர் பிரிக்ஸ் ஈ. காரல் மார்க்ஸ்

**இ. ராக்னர் பிரிக்ஸ்**

3. " நவீன பேரியல் பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?

அ. ஆடம்ஸ்மித் ஆ. ஜே.எம். கீன்ஸ் இ. ராக்னர் பிரிக்ஸ் ஈ. காரல் மார்க்ஸ்

**ஆ. ஜே.எம். கீன்ஸ்**

4. பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது?

அ. விலை கோட்பாடு ஆ. வருவாய் கோட்பாடு இ. அங்காடி கோட்பாடு ஈ. நுண்ணியல் கோட்பாடு

**ஆ. வருவாய் கோட்பாடு**

5. பேரியல் பொருளாதாரம் என்பது பற்றிய படிப்பு.

அ. தனிநபர்கள் ஆ. நிறுவனங்கள் இ. நாடு ஈ. மொத்தங்கள்

**ஈ. மொத்தங்கள்**

6. ஜே. எம். கீன்ஸின் பங்களிப்பை குறிப்பிடுக.

அ. நாடுகளின்செல்வம் ஆ. பொது கோட்பாடு இ. மூலதனம் ஈ. பொது நிதி

**ஆ. பொது கோட்பாடு**

7. பொதுவான விலையின்த தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து __________ஆகும்.

அ. மொத்தவிலைக் குறியீடு ஆ. வாணிபச் சுழல் இ. பணவீக்கம் ஈ. தேசிய வருவாய்

**இ. பணவீக்கம்**

8. பொருளாதாரக் கொள்கைகளின் அவசியத்தைக் குறிப்பிடுக

அ. அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பது ஆ. தடைகளை முறியடிப்பது இ. வளர்ச்சியை அடைவது ஈ. மேலேகூறப்பட்ட அனைத்தும்

**ஈ. மேலேகூறப்பட்ட அனைத்தும்**

9. ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக.

அ. உற்பத்தி மற்றும் பகிர்வும் ஆ. உற்பத்தி மற்றும் பரிமாற்றம் இ. உற்பத்தி மற்றும் நுகர்வு ஈ. உற்பத்தி மற்றும் சந்தையிடுகை.

m

**இ. உற்பத்தி மற்றும் நுகர்வு**

10. ஒரு பொருளாதார அமைப்பில் காணப்படுவது

அ. உற்பத்தி துறைஆ. நுகர்வு துறை இ. அரசு துறை ஈ. மேலேகூறப்பட்ட அனைத்தும்

**ஈ. மேலேகூறப்பட்ட அனைத்தும்**

11. எந்தப பொருளாதார அமைப்பில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?

அ. முதலாளித்துவ அமைப்பு ஆ. சமத்துவ அமைப்பு இ. உலகமய அமைப்பு ஈ. கலப்புப் பொருளாதார அமைப்பு

**அ. முதலாளித்துவ அமைப்பு**

12. கிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கிற பொருளாதார அமைப்பு ________ ஆகும்.

அ. முதலாளித்துவ அமைப்பு ஆ. உலகமயத்துவ அமைப்பு இ. கலப்புப் பொருளாதாரம் அமைப்பு ஈ. சமத்துவ பொருளாதார அமைப்பு

**ஈ. சமத்துவ பொருளாதார அமைப்பு**

13. முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுவர் யார்?

அ. ஆடம்ஸ்மித் ஆ. காரல் மார்க்ஸ் இ. தக்கேரி ஈ. ஜே.எம்.கீன்ஸ்

**அ. ஆடம்ஸ்மித்**

14. முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு ________ ஆகும்.

அ. ரஷ்யா ஆ. அமெரிக்கா இ. இந்தியா ஈ. சீனா

**ஆ. அமெரிக்கா**

15. சமத்துவத்தின் தந்தையை கண்டுபிடி.

அ. ஜே.எம்.கீன்ஸ் ஆ. காரல் மார்க்ஸ் இ. ஆடம்ஸ்மித் ஈ. சாமுவேல்சன்

**ஆ. காரல் மார்க்ஸ்**

16. தனியார் மற்றும் அரசு சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பை குறிப்பிடும் பதம் ___________ஆகும்.

அ. முதலாளித்துவ பொருளாதாரம் ஆ. சமத்துவ பொருளாதாரம் இ. உலகமயத்துவ பொருளாதாரம் ஈ. கலப்புப் பொருளாதாரம்

**ஈ. கலப்புப் பொருளாதாரம்**

17. ஒரு குறிப்பிட்டகாலத்தில் (Point of time) குவிந்த சரக்குகளின் அளவை குறிப்பிடும் பதம் ________ஆகும்.

அ. உற்பத்தி ஆ. இருப்பு இ. மாறிலி ஈ. ஓட்டம்

**ஆ. இருப்பு**

18. கீழ்வருவனவற்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி.

அ. பணஅளிப்பு ஆ. சொத்துக்கள் இ. வருவாய் ஈ. வெளிநாட்டுச் செலாவணி இருப்பு

**இ. வருவாய்**

19. இருதுறை மாதிரியில் உள்ள இருதுறைகளை குறிப்பிடுக

அ. குடும்பங்களும் நிறுவனங்களும் ஆ. தனியார் மற்றும் பொதுத்துறை இ. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத்துறைகள் ஈ. நிறுவனங்களும் அரசும்

www.Padasalai.Net

**அ. குடும்பங்களும் நிறுவனங்களும்**

20. திறந்துவிடப்பட்ட பொருளதாரத்தின் வட்ட ஓட்ட மாதிரி என்பது ________ஆகும்

அ. இரு துறைமாதிரி ஆ. முத்துறைமாதிரி இ. நான்கு துறைமாதிரி ஈ. மேல் சொல்லப்பட்டஅனைத்தும்

**இ. நான்கு துறை மாதிரி**

**பகுதி – ஆ**

**கீழ்க்கண்டவற்றுக்கு ஓரிரு வார்த்தையில் விடையளி**

**21. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.**

கிரேக்க மொழியில் உள்ள 'Makros' என்ற சொல்லில் இருந்து 'Macro' என்ற சொல் பெறப்பட்டது. அதன் பொருள் "பெரிய" என்பது ஆகும். பேரியல் பொருளாதாரம் என்பது பொருளாதார அமைப்பு முழுமையையும் படிப்பது ஆகும்.

**22. பணவீக்கம் என்றபதத்தின் பொருள் தருக.**

பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.

**23. "பொருளாதாரம்" என்பதன் பொருள் யாது?**

பொருளாதார அமைப்பு என்ற கருத்தினை ஏ.ஜே. பிரவுண் (A.J. Brown) என்பவர், "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது" என்று வரையறுத்துள்ளார்.

**24. வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.**

பொருளாதார அமைப்புகளை பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

1. வளர்ச்சி நிலை - வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள்
2. நடவடிக்கைகளின் முறை - முதலாளித்துவ, சமத்துவ மற்றும் கலப்பு பொருளாதார அமைப்புகள்
3. நடவடிக்கைகள் அளவு - சிறிய மற்றும் பெரிய பொருளாதார அமைப்புகள்
4. செயல்படும் தன்மை - நிலையான மற்றும் இயங்கும் பொருளாதார அமைப்புகள்
5. செயல்பரப்பு தன்மை - மூடிய மற்றும் திறந்த வெளி பொருளாதார அமைப்புகள்
6. முன்னேற்ற தன்மை - பழைமையான மற்றும் நவீன பொருளாதார அமைப்புகள்
7. தேசிய வருவாய் அளவு - குறைந்த வருவாய், இடைநிலை வருவாய் மற்றும் அதிக வருவாய் பொருளாதார அமைப்புகள்

**25. முதலாளித்துவம் என்றால் என்ன?**

பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் இருக்கும்.

**26. பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக.**

மாதிரி (Model) என்பது உண்மை சூழலை எளிமையாக பிரதிபலிப்பது ஆகும். பொருளாதார வல்லுநர்கள், பொருளாதார நடவடிக்கைகள், அவைகளுக்கிடையேயான உறவுகள், நடத்தைகள் பற்றி விவரிப்பதற்கு மாதிரிகளை பயன்படுத்துகின்றனர். மாதிரி என்பது, பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகிறது.

**27. "வருமானத்தின் வட்ட ஓட்டம்" – வரையறு.**

ஒரு பொருளாதார அமைப்பின் வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரியானது அந்த பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும். இது, பொருளாதார முகவர்களாகிய நிறுவனம், குடியிருப்பு, அரசாங்கம் மற்றும் நாடுகளிடையே வருவாய், பொருட்கள் மற்றும் பணிகள், மற்றும் உற்பத்தி காரணிகளின் ஓட்டத்தைகாண்பிப்பதாகும்.

வருவாயின் வட்ட ஓட்டம் ஆய்வானது தேசிய கணக்குகள் மற்றும் பேரியல் பொருளாதாரத்தின்அடிப்படையாகும்.

**பகுதி – இ**

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் பதில் தருக**

**28. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை தருக.**

ஒரு பொருளாதார அமைப்பின் ஒட்டு மொத்த செயல்பாடுகளை புரிந்து கொள்ளவும், அதற்குத் தேவையான சரியான யுக்திகளை மாற்றவும் மற்றும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

· எதிர்கால பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவும், தேவைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்வதற்கும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பேரியல் பொருளாதாரம் பயன்படுகிறது.

· நடப்புப் பிரச்சினைகளை அறிவியல் பூர்வவிசாரணை மூலம் அறிய பேரியல் பொருளாதாரம் வாய்ப்பளிக்கிறது.

· பொருளாதாரக் குறியீடுகளை பகுத்தாயவும் அவைகளை ஒப்பிடவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

· பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணவும், சரியான கொள்கைகளை உருவாக்கவும், எதிர்காலத்தில் நடப்பவைகளை முன் கணிக்கவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

**29. பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.**

பொருளாதார அமைப்புகளை பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

1. வளர்ச்சி நிலை - வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள்
2. நடவடிக்கைகளின் முறை - முதலாளித்துவ, சமத்துவ மற்றும் கலப்பு பொருளாதார அமைப்புகள்
3. நடவடிக்கைகள் அளவு - சிறிய மற்றும் பெரிய பொருளாதார அமைப்புகள்
4. செயல்படும் தன்மை - நிலையான மற்றும் இயங்கும் பொருளாதார அமைப்புகள்
5. செயல்பரப்பு தன்மை - மூடிய மற்றும் திறந்த வெளி பொருளாதார அமைப்புகள்
6. முன்னேற்ற தன்மை - பழைமையான மற்றும் நவீன பொருளாதார அமைப்புகள்

7.தேசிய வருவாய் அளவு - குறைந்த வருவாய், இடைநிலை வருவாய் மற்றும் அதிக வருவாய் பொருளாதார அமைப்புகள்

.

**30. முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக.**

**1. தனியார் சொத்துரிமை மற்றும் பரம்பரைச் சட்டம் (Private Ownership of Property and Law of Inheritance)**

முதலாளித்துவத்தின் முக்கிய இயல்பு என்னவெனில், நிலம், உழைப்பு, மூலதனம், இயந்திரங்கள், சுரங்கம் போன்ற அனைத்து வளங்களும் தனிநபர்களுக்கு சொந்தமாக இருக்கும். உரிமையாளர்கள் வளங்களை அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு உரிமம் கொள்ள, வைத்துக்கொள்ள, விற்கமற்றும் பயன்படுத்தஅதிகாரம் படைத்தவர்களாவர். உரிமையாளர்கள் இறந்தபிறகு சொத்துக்கள் அவர்கள் வாரிசுகளுக்கு மாற்றப்படும்.

**2. தெரிந்தெடுப்பதில் சுதந்திரம் (Freedom of Choice and Enterprise)**

ஒவ்வொரு தனிநபரும் தங்களது வேலையைத் தேர்ந்தெடுப்பதிலும், உற்பத்தி செய்யும் பொருட்களை தேர்ந்தெடுப்பதிலும் மற்றும் வியாபார இடத்தை தெரிவு செய்வதிலும் முழு சுதந்திரம் பெற்றிருப்பர். அதே போன்று நுகர்வோர்கள் தங்களுக்கு விருப்பமான பொருட்களை தெரிவு செய்வதிலும் முழு சுதந்திரம் பெற்றிருப்பார்கள்.

**3. இலாபநோக்கம் (Profit Motive)**

முதலாளித்துவ பொருளாதார அமைப்பில், அனைத்து பொருளாதார நடவடிக்கைகளிலும் இலாபம் பெறுவதே உந்து விசையாக காணப்படும். ஒவ்வொரு தனிநபர்களும், அமைப்புகளும் அதிக இலாபம் தரக்கூடிய பொருட்களை மட்டுமே உற்பத்தி செய்வார்கள். இங்கு வேலை பகுப்பு, புதிய தொழில்நுட்பம் மற்றும் சிறப்புக் கவனம் போன்றவை பின்பற்றப்படும். முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் உற்பத்தியாளர்களால்

www.Padasalai.Net

பின்பற்றப்படுகின்ற தங்கவிதி (Golden Rule) 'உச்சஇலாபம்' அடைதல்.

**4. போட்டியில் சுதந்திரம் (Free Competition)**

பொருட்கள் சந்தை மற்றும் காரணிகள் சந்தை ஆகிய இரண்டிலும் முழு சுதந்திரம் உண்டு. அரசாங்கமோ வேறு எந்த அமைப்போ நிறுவனங்களின் வாங்குதல் மற்றும் விற்பதில் தலையிட முடியாது. வாங்குபவர் மற்றும் விற்பவர் இடையே போட்டி நிலவும்.

**5. விலை இயங்கு முறை (Price Mechanism)**

விலை இயங்கு முறையானது முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் இதயமாகும். அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் விலை இயங்கும் முறை, தேவை மற்றும் அளிப்பு அங்காடி சக்திகளால் கட்டுப்படுத்தப்படுகிறது.

**6. அரசின் பங்கு (Role of Government)**

முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் விலை இயங்கு முறையைகட்டுப்படுத்துவதால், அரசின்பங்கு மிகக் குறைவாக இருக்கும். அடிப்படை பணிகளான பாதுகாப்பு, பொதுநலம், கல்வி போன்றவற்றை அரசாங்கம் வழங்குகிறது.

**7. வருமானஏற்றத்தாழ்வு (Inequalities of Income)**

முதலாளித்துவ சமுதாயம் இரண்டு வகுப்பாகப்பிரிக்கப்படுகிறது. சொத்துக்களை வைத்திருப்பவர்கள் (Haves) மற்றும் சொத்துக்கள் இல்லாதவர்கள் (Have – nots) எனப்பிரிக்கப்பட்டுள்ளனர். இதன்விளைவாக, பணக்காரர்கள் இன்னும் பணக்காரர்களாகவும், ஏழைகள் இன்னும் ஏழைகளாகவும் இருக்கின்றனர். இதனால் பொருளாதார சமனற்றநிலை அதிகரிக்கிறது.

**31. சமத்துவத்தின்குறைகளைக் கூறுக.**

1. சிகப்பு நாடா (Red Tapism) **மற்றும்** அதிகார வர்க்கம் (Bureaucracy)
   அனைத்து முடிவு அரசு அமைப்புகளே எடுப்பதாலும், அநேக அலுவலர்களின் அனுமதி பெற வேண்டி, கோப்புகள் ஒரு மேஜையிலிருந்து மற்றொன்றுக்கு செல்ல எடுக்கும் கால அளவு அதிகமாவதாலும் ஒரு சிகப்பு நாடா நிலைக்கு கொண்டு செல்லப்படும்.
2. ஊக்கமில்லாமை
   சமத்துவத்தின் மிகப்பெரிய குறை என்பது, இந்த முறையில் திறமைக்கு எந்த ஊக்கமும் அளிப்பதில்லை. எனவே, உற்பத்தி திறனும் பாதிக்கப்படும்.
3. தெரிவு செய்வதில் சுதந்த குறைவு
   பண்டங்கள் மற்றும் பணிகளை நுகர்வதில் தெரிவு செய்யும் சுதந்திரம் நுகர்வோரால் அனுபவிக்க முடியாது.
4. அதிகாரம் குவிதல்
   அரசே அனைத்து முடிவுகளையும் எடுக்கிறது. பொருளாதார தீர்மானங்களில் தனியார் எந்த முயற்ச்சியும் எடுப்பது இல்லை.

**32. கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.**

**கலப்பு பொருளாதார அமைப்பின் தன்மைகள்**

**1. சொத்து, உற்பத்திச் சாதனங்களின் உரிமம் (Ownership of Property and Means of Production)**

உற்பத்திச் சாதனங்களும் சொத்துக்களும் தனியார் மற்றும் பொதுத் துறைக்குச் சொந்தமாக இருக்கும். பொதுத் துறையும் தனியார் துறையும் வளங்களைக் கொள்முதல் செய்யவும், பயன்படுத்தவும் அல்லது மாற்றவும் உரிமை கொண்டிருக்கும்.

**2. பொது மற்றும் தனியார் துறைகள் இணைந்திருக்கும் (Coexistence of Public and Private Sectors)**

கலப்புப்ப பொருளாதாரங்களில் தனியார், பொதுத்துறைகள் இரண்டும் இணைந்திருக்கும். தனியார் தொழிற்சாலைகள் இலாபத்திற்காகவே நடவடிக்கைகளை மேற்கொள்ளும். சமூக நலனை உச்சப்படுத்துவதற்காக பொதுத்துறைநிறுவனங்கள் அரசின்வசம் இருக்கும்.

**3. பொருளாதாரத் திட்டமிடல் (Economic Planning)**

மைய திட்டமிடல் அதிகாரம் பொருளாதாரத் திட்டங்களைத் தயாரிக்கும். அரசினால் தயாரிக்கப்படும் தேசிய திட்டங்களை. தனியார்

துறையும் பொதுத்துறையும் மதித்து பின்பற்றும். பொதுவாக, திட்டத்தில் வரையறுக்கப்பட்ட நோக்கங்கள், முன்னுரிமைகள், இலக்குகள் அடிப்படையில் தான் எல்லாத் துறைகளும் இயங்கும்.

**4. பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு (Solution to Economic Problems)**

எதனை உற்பத்தி செய்வது? எப்படி உற்பத்தி செய்வது? யாருக்காக உற்பத்தி செய்வது? மற்றும் எப்படிப் பகிர்ந்தளிப்பது போன்ற அடிப்படைப் பிரச்சினைகளை விலை இயக்கமுறை(Price mechanism) மற்றும் அரசின் தலையீட்டின்(Government Intervention) மூலம் தீர்க்கப்படும்.

**5. சுதந்திரமும் கட்டுப்பாடும் (Freedom and Control)**

வளங்களை உரிமை கொண்டாடவும், பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்து பகிரவும் தனியாருக்குச் சுதந்திரம் இருந்தாலும்கூட, அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளின்ஒட்டு மொத்தக் கட்டுப்பாடும் அரசிடமேகாணப்படும்.

**33. முதலாளித்துவம் மற்றும் சமத்துவத்தைவேறுபடுத்துக.**

| | | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின்உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக லன் | சமூக நலன்மற்றும் இலாபநோக்கம் |
| 3. | மைய பிரச்சனைகளின்தீர்வு | தடையில்லாசந்தை முறை | மத்திய திட்டமுறை | மத்திய திட்டமுறைமற்றும் தடையில்லாசந்தை |
| 4. | அரசின்பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்தபங்கு |
| 5. | வருவாய் பங்கீடு | சமனற்றநிலை | சமநிலை | குறைந்தசமநிலைபற்றநிலை |
| 6. | நிறுவனதன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையானசுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாட்டுடன்சுதந்திரம் |
| 8. | முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |

**34. இரு துறைசுழல் ஓட்டமாதிரியினை விளக்குக.**

**இரு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம் (Two Sector Economy)**

இல்லத் துறை மற்றும் நிறுவனத் துறை என்ற இரு துறைகள் மட்டுமே காணப்படும்.

**i. இல்லத் துறை (Household Sector)**

இல்லத்துறைதான் பொருட்கள் மற்றும் பணிகளை வாங்கும் ஒரே துறையும், நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் அமைப்பு ஆகிய உற்பத்தி காரணிகளை அளிக்கும் ஒரேதுறையும் ஆகும். இத்துறை, அதன் அனைத்து வருவாயையும் நிறுவனத் துறை தயாரிக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை வாங்க பயன்படுத்துகிறது. இல்லத் துறையானது, அதற்கு சொந்தமான உற்பத்திக் காரணிகளைஅளிப்பதன் மூலம் வருவாயை பெறுகிறது.

**ii. நிறுவனத் துறை (Firm Sector)**

நிறுவனத் துறையானது பொருள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகின்றது. இல்லத் துறைக்கு சொந்தமான நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் அமைப்பு ஆகிய 12 உற்பத்திக் காரணிகளை பணியமர்த்துகிறது. நிறுவனத்துறை அதன் அனைத்து உற்பத்தியையும் இல்லத்துறைக்கு விற்பனை செய்கின்றது

**பகுதி – ஈ**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி**

**35. பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.**

**தேசிய வருவாய் (National Income)**

தேசிய வருவாயை கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயில் துறைகளின் பங்கு போன்றவை பேரியல் பொருளாதார பகுத்தாய்வின் அடிப்படை அம்சங்களாகும். தேசிய வருவாய் மற்றும் அதன் பங்குகளின் போக்கு ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி முறையின் நீண்டகாலஅறிவைத் தருகிறது.

**பண வீக்கம் (Inflation)**

பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும். மொத்தவிலை குறியீட்டெண், மற்றும் நுகர்வோர் விலை குறியீட்டெண் போன்றவிலை குறியீட்டெண்களைப் பயன்படுத்தி மொத்தவிலை அளவை மதிப்பிடுவது அவசியமாக இருக்கிறது.

**வாணிபச் சுழற்சி (Business Cycle)**

பொதுவாக எல்லா நாடுகளும் வாணிப ஏற்றத் தாழ்வு மற்றும் வாணிப சுழற்சியால் ஏற்படும் பிரச்சினைகளை சந்திக்கின்றன. மொத்த பொருளாதார காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் வாணிபச் சுழற்சி மாற்றங்களைத் (செழிப்பு, பின்னிறக்கம், மந்தநிலை மற்றும் மீட்பு) தெரிந்துக் கொள்ளமுடிகிறது.

**வறுமை மற்றும் வேலையின்மை(Poverty and Unemployment)**

வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமை மற்றும் வேலையின்மை மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. இது ஒரு பொருளாதார முரண்பாடுகளில் ஒன்றாகும். இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண, வளங்களை ஒதுக்கீடு செய்யவும், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

**பொருளாதார வளர்ச்சி (Economic Growth)**

பேரியல் பகுத்தாய்வின் மூலம் தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், அதை தீர்மானிக்கும் காரணிகள் போன்றவற்றை புரிந்துக் கொள்ளமுடியும்.

**பொருளாதார கொள்கைகள் (Economic Policies)**

பொருளாதார கொள்கைகளை உருவாக்குவதற்கு பேரியல் பொருளாதாரம் உதவுகிறது. அடிப்படை பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும், தடைகளை தகர்த்தெறியவும் மற்றும் வளர்ச்சியை அடைவதற்கும் பொருளாதாரக் கொள்கைகள் தேவைப்படுகின்றன.

**36. நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.**

ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை நடவடிக்கைகள் உற்பத்தி (Production) மற்றும் நுகர்வு (Consumption) ஆகும். இந்த இரு நடவடிக்கைகளும் பல்வேறு பிற நடவடிக்கைகளால் உதவப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளின் தலையான நோக்கம் வளர்ச்சியை (Growth) அடைவதாகும். பரிமாற்றம் பணி (Exchange Activity) யானது உற்பத்தி மற்றும் நுகர்வு பணிகளுக்கு உதவுகின்றன.

செயல்பாட்டின்அடிப்படையில் பொருளாதாரத்தின்பணிகள்

**வளர்ச்சி**

**உற்பத்தி நடவடிக்கைகள்**

**நுகர்வு நடவடிக்கைகள்**

**பரிமாற்ற நடவடிக்கை**

**பொருளாதாரம் மற்றும் பொருளாதாரத்தில் சாராத நடவடிக்கைகளுக்கு உறுதுணை வெளிப்புற நடவடிக்கைகள்** (ஏனைய **பொருளாதாரத்தின்** செயல்பாடுகள்)

பல்வேறு பொருளாதார மற்றும் பொருளாதார மற்ற நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகின்றன. முக்கிய பொருளாதார நடவடிக்களாவன (Economic Activities): போக்குவரத்து, வங்கிப்பணி, விளம்பரம், திட்டமிடல், அரசின் கொள்கை மற்றும் பிற பணிகள். முக்கிய பொருளாதார மற்ற நடவடிக்கைகளாவன (Non - Economic Activities): சுற்றுச்சூழல், ஆரோக்கியம், கல்வி, பொழுது போக்கு, ஆட்சிமுறை, நெறிப்படுத்துதல் போன்றவை. இந்த உதவிப்பணிகளுக்கு மேலாக, பிற பொருளாதாரத்தின் வெளி நடவடிக்கைகளான இறக்குமதி, ஏற்றுமதி, பன்னாட்டு உறவுகள், குடியேற்றம், இடப்பெயர்ச்சி, பன்னாட்டு முதலீடு, பன்னாட்டு மாற்று வருவாய் போன்றவை பொருளாதார அமைப்பின் மொத்த செயல்பாட்டையும் பாதிக்கின்றன.

37. **முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக.**

**பொருளாதார அமைப்புகளை ஒப்பிடுதல்**

| **வ. எண்.** | **தன்மைகள்** | **முதலாளித்துவம்** |
|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின்உரிமை | தனியார் உரிமை |

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக லன் |
| 3. | மைய பிரச்சனைகளின்தீர்வு | தடையில்லாசந்தை முறை | மத்திய திட்டமுறை |
| 4. | அரசின்பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு |
| 5. | வருவாய் பங்கீடு | சமனற்றநிலை | சமநிலை |
| 6. | நிறுவனதன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையானசுதந்திரம் | சுதந்திரமின்மை |
| 8. | முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை |

**38. முதலாளித்துவ, சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக**

**பொருளாதார அமைப்புகளை ஒப்பிடுதல்**

| **வ. எண்.** | **தன்மைகள்** | **முதலாளித்துவம்** | **சமத்துவம்** | **கலப்புத்துவம்** |
|---|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின்உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக லன் | சமூக நலன்மற்றும் இலாபநோக்கம் |
| 3. | மைய பிரச்சனைகளின்தீர்வு | தடையில்லாசந்தை முறை | மத்திய திட்டமுறை | மத்திய திட்டமுறைமற்றும் தடையில்லாசந்தை |
| 4. | அரசின்பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்தபங்கு |
| 5. | வருவாய் பங்கீடு | சமனற்றநிலை | சமநிலை | குறைந்தசமனற்றநிலை |
| 6. | நிறுவனதன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையானசுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாட்டுடன்சுதந்திரம் |
| 8. | முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |

## அத்தியாயம் 2 தேசிய வருவாய்

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. உற்பத்திக் காரணியின் செலவின் அடிப்படையிலான NNP

அ. தேசிய வருவாய் ஆ. உள்நாட்டு வருமானம் இ. தலா வீத வருமானம் ஈ. சம்பளம்

**அ. தேசிய வருவாய்**

2. முதன்மை துறைஎன்பது ______

அ. தொழில் ஆ. வியாபாரம் இ.விவசாயம் ஈ.கட்டடம் கட்டுதல்

**இ.விவசாயம்**

3. எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?

அ. இரண்டு ஆ. மூன்று இ. ஐந்து ஈ. நான்கு

**ஆ. மூன்று**

4. எவற்றைக் கூட்டி வருமான முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?

அ. வருவாய் ஆ. வரி இ. செலவு ஈ. வருமானம்

**ஈ. வருமானம்**

5. கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் எது மிகப்பெரிய எண்ணாக இருக்கும்?

அ. செலவிடக்கூடிய வருமானம் ஆ. தனிநபர் வருமானம் இ. NNP ஈ. GNP

**ஈ. GNP**

6. ______ துறையில் செலவு முறையில் தேசிய வருவாய் மதிப்பிடப்படுகிறது.

அ. கட்டடத்துறை ஆ. விவசாயத் துறை இ. பணித்துறை ஈ. வங்கித் துறை

**அ. கட்டடத்துறை**

7. மூன்றாம் துறை______எனவும் அழைக்கப்படுகிறது.

அ. பணிகள் ஆ. வருமானம் இ. தொழில் ஈ.உற்பத்தி

www.Padasalai.Net

**அ. பணிகள்**

8. ஒரு நாட்டின்__________ செயலை தேசிய வருவாய் குறிப்பிடுகிறது.

அ. தொழில் ஆ. விவசாயம் இ. பொருளாதாரம் ஈ. நுகர்வு

**இ. பொருளாதாரம்**

9. ________ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்.

அ. உற்பத்தி ஆ. நாட்டின் மக்கள் தொகை இ. செலவு ஈ. GNP

**ஆ. நாட்டின்மக்கள் தொகை**

10. GNP = ……..+ வெளிநாட்டிலிருந்து வரும் நிகர காரணி வருமானம்.

அ. NNP ஆ. NDP இ.GDP ஈ. தனிநபர் வருமானம்

**இ.GDP**

11. NNP என்பது __________

அ. Net National Product ஆ. National Net Product இ. National Net Provident ஈ. Net National Provident

**அ. Net National Product**

12. மொத்த மதிப்பிலிருந்து __________ ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்?

அ. வருமானம் ஆ. தேய்மானம் இ. செலவு ஈ. முடிவடைந்த பொருட்களின்மதிப்பு

**ஆ. தேய்மானம்**

13. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது __________

அ. ஏப்ரல் 1 முதல் மார்ச்31 ஆ. மார்ச்1 முதல் ஏப்ரல் 30 இ. மார்ச்1 முதல் மார்ச்16 ஈ. ஜனவரி 1 முதல் டிசம்பர் 31

**அ. ஏப்ரல் 1 முதல் மார்ச்31**

14. NNPயிலிருந்து வெளிநாட்டு காரணிகளின் நிகர வருமானம் கழிக்கப்பட்டால் கிடைக்கும் நிகர மதிப்பு __________

அ. மொத்த தேசிய உற்பத்தி ஆ. செலவிடக்கூடிய வருமானம் இ. நிகர தேசிய உற்பத்தி ஈ. தனிநபர் வருமானம்

**இ. நிகர தேசிய உற்பத்தி**

15. உற்பத்திப் புள்ளியில் NNPயின் மதிப்பு __________ எனஅழைக்கப்படுகிறது

அ. காரணி செலவில் NNP ஆ. சந்தை விலையில் NNP இ. காரணி செலவில் GNP ஈ. தலைவீத வருமானம்

**அ. காரணி செலவில் NNP**

16. ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது __________

அ. தனிநபர் வருமானம் ஆ. தலைவீத வருமானம் இ. பணவீக்க வீதம் ஈ. செலவிடக்கூடிய வருமானம்

**ஆ. தலைவீத வருமானம்**

17. பணவீக்கத்திற்கு சரிபடுத்தப்பட்ட தேசிய வருவாயின்மதிப்பு __________ என அழைக்கப்படுகிறது

அ. பணவீக்க வீதம் ஆ. செலவிடக்கூடிய வருமானம் இ. GNP ஈ. உண்மைத் தேசிய வருவாய்

**ஈ. உண்மைத் தேசிய வருவாய்**

18. கீழ்வருவனவற்றுள் எது ஓட்ட (Flow) கருத்துரு?

அ. சட்டைகளின் எண்ணிக்கை ஆ. மொத்த சொத்து இ. மாத வருமானம் ஈ. பண அளிப்பு

**இ. மாத வருமானம்**

19. PQLI என்பது __________ ன் குறியீடு ஆகும்.

அ. பொருளாதார வளர்ச்சி ஆ. பொருளாதார நலன் இ. பொருளாதார முன்னேற்றம் ஈ. பொருளாதார மேம்பாடு

**ஆ. பொருளாதார நலன்**

20. மிக அதிக அளவிலான தேசிய வருவாய் __________ லிருந்து வருகிறது.

அ. தனியார் துறை ஆ. உள்துறை இ. பொதுத்துறை ஈ. எதுவும் இல்லை

**அ. தனியார் துறை**

**பகுதி – ஆ**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில்அளிக்கவும்**

**21. தேசிய வருவாய் இலக்கணம் கூறுக.**

தேசிய வருவாய் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பாகும்

**22. GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.**

மொத்த தேசிய உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பின் மொத்த கணக்கிடுதல் ஆகும். இதில் நிகர வெளிநாட்டு வருமானமும் (நிகர ஏற்றுமதி) சேர்க்கப்படும்.

**23. NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது?**

நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் ஏற்படும் தேய்மானத்தை கழித்தபிறகு கிடைக்கும் நிகர உற்பத்தி ஆகும். தேய்மானத்தின் மதிப்பை GDPயிலிருந்து கழித்துவிட்டால் கிடைப்பது NDP ஆகும்.

நிகர உள்நாட்டு உற்பத்தி = GDP - தேய்மானம்.

**நிகர தேசிய உற்பத்தி ( NNP at Market Prices )**

நிகர தேசிய உற்பத்தி என்பது ஒரு ஆண்டின், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பு ஆகும். GNP யிலிருந்து தேய்மானத்தின் மதிப்பு, முதலீட்டு கழிவு ஆகியவற்றை கழித்த பின் கிடைப்பது நிகர தேசிய உற்பத்தி ஆகும்.

NNP = GNP - தேய்மான கழிவு

**24. GNPக்கும் NNPக்கும் உள்ள தொடர்பினை எழுது**

**மொத்த தேசிய உற்பத்தி (Gross National Product) (GNP)**

மொத்த தேசிய உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பின் மொத்த கணக்கிடுதல் ஆகும்.

**நிகர தேசிய உற்பத்தி ( NNP at Market Prices )**

நிகர தேசிய உற்பத்தி என்பது ஒரு ஆண்டின், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பு ஆகும். GNPயிலிருந்து தேய்மானத்தின் மதிப்பு, முதலீட்டு சொத்தின் மாற்று கழிவு ஆகியவற்றை கழித்தபின் கிடைப்பது நிகர தேசிய உற்பத்தி ஆகும்.

NNP = GNP – தேய்மானகழிவு

**25. தனிநபர் வருமானம் என்றால் என்ன?**

தனிநபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்க பெறும் மொத்த வருமானம் ஆகும். அவை வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம். அவை அனைத்தையும் ஒவ்வொரு தனி நபருக்கும் கூட்டினால் அது தனி நபர் வருமானம் ஆகும்.

**26. GDP குறைப்பான் இலக்கணம் தருக.**

**GDP குறைப்பான் (GDP Deflator)**

GDP குறைப்பான் என்பது GDPயில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண் ஆகும். இதுவும் ஒரு விலை குறியீட்டெண் ஆகும். கொடுக்கப்பட்ட ஆண்டில் பணமதிப்பு அடிப்படையில் கணக்கிடப்பட்ட GDPயை உண்மை GDP யால் வகுத்து, 100 ஆல் பெருக்கினால், GDP குறைப்பானை கணக்கிடலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| GDP குறைப் பான் | = | பணம திப்பு GDP/ உண் மை GDP | x | 100 |
| | | உண் மை GDP | | |

**27. தேசிய வருவாய் கணக்கீட்டில் "சுய நுகர்வு" எவ்வாறு சிரமத்தைத் தருகிறது?**

www.Padasalai.Net

உற்பத்தி முறையில் தேசிய வருவாய் கணக்கிடுதல் என்பது நடப்பு சந்தை விலையில் முடிவடைந்த பொருள்கள் மற்றும் பணிகளின் மதிப்பை அளவிடுதல் ஆகும். ஆனால் விலைகள் ஒரே மாதிரி நிலையாக இருப்பது இல்லை. இந்த பிரச்சனைக்கு தீர்வுகான, பொருளியல் அறிஞர்கள் நுகர்வோர் விலை குறியீட்டெண்ணை பயன்படுத்தி நிலையான விலையில் உண்மை தேசிய வருவாயை கணக்கிடுகின்றனர்.

**பகுதி – இ**

**கீழவரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்**

**28. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக**

தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும். தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக்கிடைப்பது தலா வருமானம்.

தலாவருமானம் =

தேசிய வருமானம் / மக்கள் தொகை

**29. தனிநபர் வருமானத்திற்கும் செலவிடக் கூடிய வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

வ. எண் தனிநபர் வருமானம்

1. தனிநபர் வருமாணம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப் பெறும் மொத்த வருமானம் ஆகும்.
2. வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம். இவை அணைத்தையும் ஒவ்வொரு தனி நபருக்கும் கூட்டினால் அது தனி நபர் வருமானம் ஆகும்.

3.சூத்திரம்

தனிநபர் வருமானம் = தேசிய வருமானம் - (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம்) + மாற்று செலுத்தல்கள்

**30. காரணி செலவில் NNP – குறிப்பு தருக.**

தேசிய வருவாய் (NNPfc) = ஒரு நாட்டில் இருக்கும் அனைத்து உற்பத்தி துறைகளும் உற்பத்தி செய்த மொத்தமதிப்பு – தேய்மானம் – நிகர மறைமுகவரி + நிகர வெளிநாட்டு காரணிகளின் வருமானம்.

இங்கு,

நிகர மறைமுகவரிகள் = மறைமுகவரி – உதவித்தொகைகள்

மொத்த மதிப்பு கூட்டல் = உற்பத்தியின் மதிப்பு – இடைநிலை நுகர்வு

உற்பத்தியின் மதிப்பு = விற்பனை + இருப்பில் மாற்றம்

இருப்பில் மாற்றம் = முடியும் இருப்பு (Closing Stock) – தொடக்கஇருப்பு ( opening Stock)

குறிப்பு: ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பொருள்களும் விற்கப்பட்டால், மொத்த உற்பத்தி, விற்பனைக்கு சமமாக இருக்கும்.

உற்பத்தியின்மதிப்பு = விலை × விற்பனை அளவு

31. **செலவு முறை பற்றி ஒரு சிறு குறிப்பு தருக**

**செலவு முறை (Expenditure or outlay method):**

இம்முறையில், ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது. தனிநபர் சுய நுகர்வு செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டு பொருள் வாங்கும் செலவு மற்றும் நிகர ஏற்றுமதி போன்ற அனைத்து செலவுகளையும் கூட்டி செலவு முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

மொத்தச் செலவும் கீழ்க்கண்ட முறையில் சமன்பாட்டின்மூலம் கணக்கிடப்படுகிறது.

**GNP = C + I + G + (X-M)**

C – தனியார் நுகர்வுச் செலவு

I – தனியார் முதலீட்டு செலவு

G – அரசின் கொள்முதல் செலவு

X – M = நிகர ஏற்றுமதி.

**32. தேசிய வருவாய் கணக்கிடுதலில் "இரு முறை கணக்கீட்டுப் பிரச்சனைக்கு என்ன தீர்வு?**

இருமுறை கணக்கெடுப்பு

1. ஒரே பொருள் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறைய>ல் இருக்கிறது.

2. இறுதி உற்பத்திக்கு எந்த ஒரு பொருள் மூலப் பொருளாகவோ அல்லது இடைநிலைப் பொருளாகவோ இருந்தால் அப்பொருளின் உற்பத்தியை கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது.

3. உதாரணத்திற்கு, ஜவுளியின் விலைக்குள் துணியின் விலையும்,நூலின் விலைக்குள் நூலின் விலையும் உள்ளது. எனவே பஞ்சு, நூல், துணி மற்றும் ஆடைகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பினைக் கூட்டுவது "பல முறை கணக்கில் சேர்த்தல்" என பிழைக்கு வழிவகுக்கும்.

**33. தேசிய வருவாய் மற்றும் பொது நலன்ஆகியவற்றைப் பற்றி சுருக்கமாக எழுதுக.**

**தேசிய வருவாயும் பொது நலனும் (National Income and Welfare)**

ஒரு நாட்டின் வளர்ச்சியும் பொருளாதார அந்தஸ்தும் அந்நாட்டின் தேசிய வருவாயைப் பொறுத்தே அமைகிறது. GDPயில் தலைவீத வருமானம் மற்றும் அதன் ஆண்டு வளர்ச்சி வீதம் அடிப்படையில் நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் அளவிடப்படுகிறது. அதிக தலைவீத வருமானம் உடைய நாடு, நல்ல வாழ்க்கைத் தரத்துடன்அதிக பொருளாதார நலனையும் பெற்றதாக இருக்கும்.

ஆனால் GDP அல்லது தலைவீத வருமானம் அதிகரித்தால் பொருளாதார நலனும் அதிகரிக்கவேண்டும் என்பது இல்லை. பொருளாதார நலன் குறியீட்டெண்ணாக தலைவீத வருமானம் உள்ள போதிலும் கீழ்க்கண்ட குறைகளை கொண்டுள்ளது.

1. பொருட்கள் மற்றும் பணிகளின் அளிப்பை பொது நலன் சார்ந்து உள்ளது. நுகர்வு பொருட்களை காட்டிலும் மூலதன பொருட்கள் அதிகமாக இருந்தால், பொருளாதார நலனின் முன்னேற்ற குறைவாக இருக்கும். அதே போன்று ஆடம்பர பொருட்களின் உற்பத்தி பணக்காரர்களுக்காக மட்டுமேஇருக்கும்.

2. இயற்கை வளங்களான காற்று, நீர் மற்றும் மண் போன்றவற்றை மாசுபடுத்தி அதிகமான GDPயை பெற்றால் பொருளாதார நலன் குறையும்.

3. இராணுவ தளவாடங்கள் உற்பத்தி அதிகரிப்பதினால் தேசிய உற்பத்தி அதிகரித்தாலும் பொருளாதார நலன் குறையும்.

4. பெண்களுக்கு வேலைவாய்ப்பை தருதல் மற்றும் உழைப்பாளர்களை அதிக நேரம் வேலை செய்ய வைத்தல் போன்றவற்றின் மூலமாக தலைவீத வருமானத்தை அதிகரிக்கலாம். ஆனால் பொருளாதார நலனில் முன்னேற்றம் இருக்காது.

ஆகவே PQLI என்பது பொருளாதார நலனை கணக்கிடுவதில் முக்கிய குறியிட்டெண்ணாக உள்ளது. மக்களின் வாழ்க்கைதரம், வாழும் காலம் மற்றும் கல்வியறிவு போன்றவை PQLI (Physical Quality of Life Index) உள்ளடங்கி இருக்கிறது.

**34. தேசிய வருவாயின்பயன்களைப் பட்டியலிடுக.**

**1. ஒரு நாட்டின் பொருளாதார செயல்திறன் (அ) உற்பத்தி செயல்திறனை தேசிய வருவாய் விளக்குகிறது.**

**2. பொருளாதார வல்லுநர்கள், திட்டமிடுபவர்கள், அரசு, வியாபாரிகள் மற்றும் IMF, உலக வங்கி, போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தேசிய வருவாய் மற்றும் புள்ளி விவரத்தை பயன்படுத்துகின்றன.**

**3. நாட்டின் பல்வேறு நோக்கங்களுக்காக இந்த புள்ளி விவரங்களை பகுத்தாய்வு செய்கின்றன**

**4. மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளதா என்பதை கண்டறிய தேசிய வருவாய் உதவுகிறது**

www.Padasalai.Net

**பகுதி – ஈ**

**கீழக்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக**

**35. தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி.**

1. தேசிய வருவாய் கணக்கீட்டின் மூலம், பொருளாதாரத்தில் இருக்கும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் தேசிய வருமானத்தில் அத்துறைகளின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது..

2. தேசிய அளவிலான பணவியல் மற்றும் பொதுநிதிக் கொள்கைகளை உருவாக்கவும், பொருளாதாரத்தைச் சரியான பாதையில் இட்டுச் செல்ல கடைபிடிக்க வேண்டிய சரியான வழிமுறைகளைக் கையாளவும் தேசிய வருவாய் ஆய்வு உதவுகிறது.

3. திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி, சேமிப்பு மற்றும் நுகர்ச்சியின் அளவு ஆகிய புள்ளி விவரங்களை தேசிய வருவாய் கணக்கீடு அளிக்கின்றது.

4. குறுகிய காலமற்றும் நீண்ட கால பொருளாதார மாதிரிகளைஉருவாக்கதேசிய வருவாய் கணக்கீடு பயன்படுகிறது.

5. துறைவாரியான பொருளாதார விவரங்களையும், ஒரு நாட்டில் வட்டாரங்களின் வருமானத்தை ஒப்பிடவும், மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும், தேசிய வருவாய் விவரங்கள் பயன்படுகின்றன.

6. தேசிய வருமானம் மூலம் தலா வருமானம் கணக்கிடப்படுகிறது. தலா வருமானம் ஒரு நாட்டின் பொருளாதார நலனை அறிய பயன்படுகிறது.

7. ஒரு நாட்டில் இருக்கும் பல்வேறு உற்பத்தி காரணிகளின் வருமானப் பகிர்வை தெரிந்து கொள்ள தேசிய வருவாய் பயன்படுகிறது.

8.பேரியல் பொருளாதாரக் காரணிகளான வரி – GDP விகிதம், நடப்புக் கணக்கு பற்றாக்குறை– GDP விகிதம், நிதிப்பற்றாக்குறை- GDP விகிதம், கடன்– GDP விகிதம் போன்றவற்றை கண்டறிய உதவுகிறது.

**36. தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.**

தேசிய வருவாயை மூன்று முறைகளை பயன்படுத்தி அளவிடலாம். அவை: உற்பத்தி முறை, வருவாய் முறை மற்றும் செலவு முறை இவற்றை:

1. உற்பத்தி அல்லது மதிப்புக்கூடுதல் (Value added) முறை

2. வருமானம் அல்லது காரணிகளின் ஊதிய முறை மற்றும்

3. செலவு முறை

இம்மூன்று முறைகளை சரியாக பயன்படுத்தி கணக்கிட்டால் உற்பத்தி , வருமானம், செலவு இம்மூன்றின் மதிப்பும் சமமாக இருக்கும்.

**உற்பத்தி முறை (Product Method)**

உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறைகளின் உற்பத்தியின் மொத்தமே தேசிய உற்பத்தி ஆகும். ஒரு துறையின் வெளியீடு (Output) மற்றொரு துறையின்உள்ளீடு (Input) ஆகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இரு முறை அல்லது பலமுறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது. இதற்கு இருமுறை கணக்கிடல் என்று பெயர். இதனை தவிர்க்க இறுதி பொருட்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

**வருமான முறை (Income Method)**

வருமானமுறை என்பது தேசிய வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது. உற்பத்தி நிலைகளில் உற்பத்திக்காரணிகள் பெற்ற அனைத்து வித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தைக் கணக்கிடலாம். வருமானமுறை, காரணிகள் சம்பாதிக்கும் முறை என்றும் அழைக்கப்படுகிறது.

**செலவு முறை (Expenditure or outlay method):**

இம்முறையில், ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது. தனிநபர் சுய

நுகர்வு செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டு பொருள் வாங்கும் செலவு மற்றும் நிகர ஏற்றுமதி போன்ற அனைத்து செலவுகளையும் கூட்டி செலவு முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

மொத்தச்செலவும் கீழ்க்கண்ட முறையில் சமன்பாட்டின்மூலம் கணக்கிடப்படுகிறது.

**GNP = C + I + G + (X-M)**

**37. தேசிய வருவாய் கணக்கிட்டில் உள்ள சிரமங்கள் யாவை?**

*விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

**மூலதன இலாபம் (Capital Gains)**

மூலதன சொத்துக்களான வீடு மற்றும் பிற சொத்துக்கள், பங்குகள் போன்றவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் மூலதன இலாபம் கிடைக்கிறது. தேசிய வருவாய் கணக்கீட்டில் மூலதன இலாபம் சேர்க்கப்படுவது இல்லை.

**புள்ளி விவர சிக்கல்(Statistical Problems)**

புள்ளி விவரங்களை சேகரிப்பதில் பல பிரச்சினைகள் உள்ளன. ஒரே விவரத்தை பல முறை கணக்கில் சேர்ப்பது, நம்பகத் தன்மை, புள்ளி விவரங்கள் கிடைக்காமை, சேகரிப்பவர்களின் திறன் குறைவு, அர்ப்பணிப்பு இன்மை ஆகியவை தேசிய வருவாய் கணக்கிடுதலில் பிரச்சனைகளைத் தரலாம்.

**38. பொருளாதார ஆய்வில், சமூகக்கணக்கிடுதலின்அவசியத்தைவிவாதி.**

**சமூக கணக்கிடுதல் மற்றும் துறைகள் (Social Accounting and Sector)**

இம்முறையில் ஒரு நாட்டின் பொருளாதாரம் பல்வேறு துறைகளாக பிரிக்கப்படுகிறது. தனி நபர்கள் உள்ளடக்கிய ஒரு குழு அல்லது பல நிறுவனங்கள் சேர்ந்த ஒரு குழு போன்றவைகளுக்கு இடையே நடைபெறும் பொருளாதாரப் பரிமாற்றங்களை ஒரு துறை என்கிறோம். ஒரு நாட்டின் பொருளாதாரம் கீழ்கண்ட துறைகளாக பிரிக்கப்படுகிறது.

i. நிறுவனங்கள்
ii. குடும்பங்கள்
iii. அரசு
iv. வெளிநாட்டு வாணிபம்
v. மூலதனதுறை

**நிறுவனங்கள்**

நிறுவனங்கள் உற்பத்திக் காரணிகளைப் பணியில் அமர்த்தி பண்டங்கள் மற்றும் பணிகளைஉற்பத்தி செய்கின்றன.

**குடும்பங்கள்**

குடும்பங்கள் தங்கள் உழைப்பினை அளித்து கூலியை பெற்று, அதன்மூலம் பண்டங்கள் மற்றும் பணிகளைப் வாங்குகின்றன. அதாவது ஊதியத்தினைப் பெற்று பொருட்களை வாங்குகின்றது. நிறுவனங்கள் குடும்பங்களின் பணியை பெற்று கூலியை தருகின்றன. குடும்பங்கள் கூலியைபெற்று நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்கள் மற்றும் பணிகளைவாங்குகின்றன.

**அரசு**

அரசுத் துறையில் பல நிலைகள் உள்ளன. கிராமம், வட்டம், மாவட்டம், மாநிலம், மத்திய அரசு என பல நிலைகள் உள்ளன. எடி மற்றும் பீகாக் (Edey and Peacock) கூற்றுப்படி, அரசு என்பது “ஒன்று சேர்க்கப்பட்ட நபர்கள்” எனக் குறிப்பிடுகின்றனர். வரி, தண்டனை, கட்டணம் மற்றும் கடன் மூலமாக அரசு நிதியைத் திரட்டி பண்டங்களையும் பணிகளையும் வாங்குகிறது. பாதுகாப்பு, பொது சுகாதாரம், கல்வி ஆகியவற்றை மக்களுக்கு வழங்குவது தான் அரசின் முக்கிய பணி ஆகும். பொது நிறுவனங்களான அஞ்சல் அலுவலகம் மற்றும் இரயில்வே துறைகள் அரசுத் துறையாக சேர்க்கப்படாமல் நிறுவனங்களாக கருதப்படுகின்றன.

**வெளிநாட்டு வாணிபம்**

ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் மூலம் கிடைக்கும் வருமானம், வெளிநாட்டு கடன்கள், வெளிநாட்டு மூலதன வருமானம் மற்றும் செலுத்துதல்கள் போன்றவை வெளிநாட்டுத் துறையாகக் கருதப்படுகிறது.

www.Padasalai.Net

**மூலதன துறை**

மூலதனத் துறை சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது. காப்பீட்டு நிறுவனம், வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பண பரிமாற்றங்கள் இதில் அடங்கும். மூலதனத் துறை, நிறுவனங்களாக கருதப்படுவது இல்லை. மாறாக தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்து வருகின்றன.

GDP யில் துறைகளின் பங்கை மதிப்பிடுவதற்கு ஒரு நாட்டின் பொருளாதாரம் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் துறை எனபிரிக்கப்படுகிறது.

## அத்தியாயம் 3 வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்

**பிரிவு – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. நடப்புக்கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது_________எனப்படும்

அ. முழுவேலைவாய்ப்பு ஆ. குறைந்தளவு வேலைவாய்ப்பு இ. வேலைவாய்ப்பின்மை ஈ. வேலைக்கான வாய்ப்பு

**அ. முழுவேலைவாய்ப்பு**

2. அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு_______

அ. இயங்காசமுதாயம் ஆ. சமதர்ம சமுதாயம் இ. இயங்கும்சமுதாயம் ஈ. கலப்புப் பொருளாதாரம்

**இ. இயங்கும்சமுதாயம்**

3. மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி

அ. பூஜ்யம் ஆ. ஒன்று இ. இரண்டு ஈ. நேர்மறை

**அ. பூஜ்யம்**

4. தொன்மைப் பொருளியல் கோட்பாட்டின் பிரதான இயல்பு _______

அ. குறைந்த அளவு வேலைவாய்ப்பு ஆ. பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும் இ. தேவை அதன் அளிப்பை உருவாக்குகிறது ஈ. நிறைகுறைப் போட்டி

**ஆ. பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும்**

5. J.B. சே ஒரு ___________

அ. புதிய – தொன்மை பொருளியலாளர் ஆ. தொன்மை பொருளியலாளர் இ. நவீன பொருளியலாளர் ஈ. புதிய பொருளியலாளர்

**ஆ. தொன்மை பொருளியலாளர்**

6. கீன்ஸின் கருத்துப்படி, முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் எப்படிப்பட்ட வேலையின்மை காணப்படுகிறது?

அ. முழு வேலைவாய்ப்பு ஆ. தன் விருப்ப வேலையின்மை இ. தன் விருப்பமற்ற வேலையின்மை ஈ. குறைவு வேலைவாய்ப்பு

**ஈ. குறைவு வேலைவாய்ப்பு**

7. வேலை வாய்ப்பு பற்றி தொன்மை போட்பாட்டின்மையக்கருத்து என்பது ______

அ. குறைந்து செல் விளைவு விதி ஆ. தேவைவிதி இ. அங்காடி விதி ஈ. நுகர்வு விதி

**இ. அங்காடி விதி**

8. கீன்ஸின் கூற்றுப்படி வேலையின்மை என்பது _____

அ. விளைவு அளிப்பு பற்றாக்குறை ஆ. விளைவு தேவை பற்றாக்குறை இ. இரண்டும் பற்றாக்குறை ஈ. எவையும்இல்லை

**ஆ. விளைவு தேவை பற்றாக்குறை**

9. சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே சம நிலையை கொண்டு வருவது __________ நெகிழ்வு ஆகும்.

அ. தேவையின் ஆ. அளிப்பின் இ. மூலதனத்தின் ஈ. வட்டியின்

**ஈ. வட்டியின்**

10. நவீன பொருளாதார கோட்பாட்டின் வளர்ச்சியில் ___________ கோட்பாடு ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

அ. கீன்ஸ் ஆ. சே (Say) இ. தொன்மையது ஈ. வேலைவாய்ப்பு

**அ. கீன்ஸ்**

11. வேலை வாய்ப்பு மற்றும் வருவாய் பற்றிய கீன்ஸின் கோட்பாட்டின்அடிப்படைக் கருத்துரு ___________ ஆகும்.

அ. தொகுத் தேவைஆ. தொகு அளிப்பு இ. விளைவுத் தேவை ஈ. இறுதி நிலை நுகர்வு விருப்பு

**இ. விளைவுத் தேவை**

12. தொகுத் தேவையின் கூறு ___________ ஆகும்

அ. தனி நபர் தேவை ஆ. அரசுச் செலவு இ. ஏற்றுமதி மட்டும் ஈ. இறக்குமதி மட்டும்

**ஆ. அரசுச் செலவு**

13. மொத்த அளிப்பு சமம்___________

அ. C + I + G ஆ. C + S + G + (X – M ) இ. C + S + T +(X-M ) ஈ. C + S + T + Rf

**ஈ. C + S + T + Rf**

14. தலையிடாக் கொள்கைக்குப் பதிலாக கீன்ஸின் கோட்பாடு ________யை எடுத்துரைக்கிறது.

அ. அரசுத் தலையீடின்மை ஆ. உச்ச அளவுத் தலையீடு இ. சில சூழல்களில் அரசின் தலையீடு ஈ. தனியார் துறை தலையீடு

**இ. சில சூழல்களில் அரசின் தலையீடு**

15. கீன்ஸின் வேலை வாய்ப்பு மற்றும் வருவாய் கோட்பாட்டில், ___________ பொருளாதார மந்த நிலைக்குக்காரணமாக உள்ளது.

அ. குறைவான உற்பத்தி ஆ. அதிகத் தேவை இ. நெகிழ்வற்றஅளிப்பு ஈ. உற்பத்தித்திறன் ஒப்பிடும் போது மிகக் குறைந்தளவு மொத்தத்தேவை

**ஈ. உற்பத்தித்திறன் ஒப்பிடும் போது மிகக் குறைந்தளவு மொத்தத்தேவை**

16. தொன்மைக் கோட்பாடு _________ ஐ ஆதரிக்கிறது.

அ. சமநிலை வரவு செலவு ஆ. சமமற்றவரவு செலவு இ. உபரி வரவு செலவு ஈ. பற்றாக்குறை வரவு செலவு

**அ. சமநிலை வரவு செலவு**

17. ___________ சமநிலையை கீன்ஸிடைய கோட்பாடு வலியுறுத்தியது.

அ. மிகக் குறுகிய காலம் ஆ. குறுகிய காலம் இ. மிக நீண்ட காலம் ஈ. நீண்ட காலம்

**ஆ. குறுகிய காலம்**

18. தொன்மைக் கோட்பாட்டின்படி, வட்டி வீதம்___________க்கான வெகுமதி

அ. முதலீடு ஆ. தேவைஇ. மூலதனம் ஈ. சேமிப்பு

**ஈ. சேமிப்பு**

19. கீன்ஸின் கோட்பாட்டில், பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது ___________ ஆகும்.

அ. வட்டி வீதம் ஆ. விளைவுத் தேவை இ. தொகுத் தேவை ஈ. மொகு அளிப்பு

**அ. வட்டி வீதம்**

20. ஒரு பொருளாதாரத்தில் ___________ இயக்கத்தை சே (Say) யின்விதி வலியுறுத்தியது.

அ. தூண்டடப்பட்ட விலைக் கருவி ஆ. தானியங்கும்விலைக் கருவி

இ. தூண்டடப்பட்ட தேவை ஈ. தூண்டடப்பட்ட முதலீடு

**ஆ. தானியங்கும்விலைக் கருவி**

**பகுதி – ஆ**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி.**

**21. “முழு வேலைவாய்ப்பு” வரையறு.**

லர்னரின் கூற்றுப்படி, முழு வேலை நிலை என்பது “கூலியும் விலையும் எந்த வேலைநிலையில் மாறிமாறி அதிகரிக்கின்றதோ அங்குமுழு வேலைவாய்ப்பு நிலவுகிறது” என்கிறார்.

**22. ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?**

www.Padasalai.Net

1.இந்திய கிராமப்புறங்களில் வேலையின்மையும் குறைவான வேலையின்மையும் குறைவான வேலைவாய்ப்பும் காணப்படுகின்றன.

2. கிராமங்களில் மறைமுக வேலையின்மை மற்றும் பருவகால வேலையின்மை நிலவுகிறது.

**23. உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக.**

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது. உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயராமை, திறமை பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப் பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது. வேலையை இழந்து புதிய வேலை தேடும் உழைப்பாளர்களும் இவ்வகையில் அடங்குவர்.

**24. தற்போதுள்ளசூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தைத்தருக.**

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தாற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது. உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயராமை, திறமை பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப்பொருட்களில் பற்றாக்குறை போன்ற காரணங்களால் உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது.

**25. சே விதியின் எடுகாள்களை பட்டியலிடுக.**

* ஒரு தனி வாங்குவோரோ, விற்பவரோ அல்லது உள்ளீடோ பொருளின் விலையை மாற்ற முடியாது.

* முழு வேலை நிலை நிலவும்.

* உழைப்பு மற்றும் பண்டங்களின் சந்தையில் நிறைவுப்போட்டி நிலவும்.

**26. “விளைவுத் தேவை” என்றால் என்ன?**

விளைவுத் தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும். தொழில் முயல்வோர்கள், வட்டி, வாடகை, கூலி மற்றும் இலாபம் போன்றவற்றை பணமாகவே கொடுப்பார்கள்; எனவே விளைவுத் தேவை தேசிய வருவாய்க்குச் சமமாகஇருக்கும்.

**27. தொகு அளிப்பின் கூறுகள் யாவை?**

**தொகு அளிப்பின் கூறுகள்:**

தொகு அளிப்பில் கீழ்கண்ட நான்கு பகுதிகள் உள்ளன.

1. மொத்த (விரும்பப்படுகிற) நுகர்வுச் செலவு (C)

2. மொத்த (விரும்பப்படுகிற) தனியார்சேமிப்பு (S)

**பகுதி – இ**

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் பதில் தருக.**

**28. கீழ்க்காணுபவற்றை சுருக்கமாக எழுதுக.**
**அ. பருவகால வேலையின்மை**
**ஆ. உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை**
**இ. படித்தவர் வேலையின்மை (Unemployment)**

**அ. பருவகால வேலையின்மை**

ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் (கரும்பு, பருத்தி) போன்றவை குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே நடைபெறும். இத்தகைய தொழில்களில் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் வேலைவாய்ப்பு இருக்கும். மற்ற பருவங்களில் வேலையிருக்காது. எனவே அவற்றை நம்பி செயல்படும், வேளாண்மை மற்றும் தொழிற்சாலைகளிலும் வேலையின்மை நிலை நிலவும். மக்களின் தேவை கூடுவதாலும் குறைவதாலும் பருவ கால வேலையின்மை தோன்றும், உதாரணம், ஐஸ்கீரிம், விடுமுறை கால சுற்றுலாவின் தேவை குறைவதாலும் வேலைவாய்ப்பு குறையலாம்.

**ஆ. உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை**

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது. உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயராமை, திறமை பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல்,

மூலப் பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது. வேலையை இழந்து புதிய வேலை தேடும் உழைப்பாளர்களும் இவ்வகையில் அடங்குவர்.

**இ. படித்தவர் வேலையின்மை**

சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலைகிடைப்பது இல்லை அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர். இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர். தவறான கல்வி முறை, வேலைக்கான திறன் பற்றாக்குறை அதிக அளவு மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பட்டங்களை முடித்து வெளிவருதல், இலகுவான வேலையை மட்டுமே விரும்புதல் போன்ற காரணங்களால் பட்டம் பெற்றவர்களின் வேலையின்மை கூடுகிறது.

**29. தொன்மை வேலைவாய்ப்பு கோட்பாட்டின்படி கூலிக்குறைப்பு எவ்வாறு வேலையின்மைப்பிரச்சனைக்குத்தீர்வாகஅமைந்தது என்பதைவரைபடம்மூலம்விளக்குக.**

**30. J.B. சே விதியில் விளைவுகளைப்பற்றி குறிப்பு வரைக**

அதிக உற்பத்திகோ, வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை.

பயன்படுத்தாத வளங்கள் நாட்டில் இருந்தால், முழுவேலை வாய்ப்பு வரை பயன்படுத்துவது இலாபகரமாக இருக்கும். உற்பத்தி காரணிகள் அதன் உற்பத்தி திறனுக்கு இணையாகும் வரை ஏற்றும் கொள்ளும்.

விலைக் கருவி தானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவை இருக்காது.


வட்டி வீத நெகிழ்வுத்தன்மை, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும்.

பரிவர்த்தனைக்கு மட்டுடே பணம் செயல்படும். பணத்தை மக்கள் கையிருப்பாக வைத்திருக்க மாட்டார்கள்.

**31. கீன்ஸின் கோட்பாட்டைதொடர்வரைபடம்(Flowchart ) மூலம்விளக்குக.**


**32. தொகு தேவைஎன்றால் என்ன? அதன்கூறுகளைக்கூறுக.**

*




www.Padasalai.Net

வரைபடம். தொகுத்தேவைக்கும், வேலைவாய்ப்புக்கும்உள்ள தொடர்பைகாட்டுகிறது.




வேலைவாய்ப்பு அதிகரித்தல் மற்று ம்குறைதல் ஆகியவற்றிற்கு ஏற்ப மொத்த தேவை கூடும் அல்லது குறையும். வரைபடத்தில் முதலில் மொத்த தேவை வளைகோடு அதிகரிக்கும் விகிதத்தில் அதிகரிக்கின்றது. பின்பு இவ்வளைகோடு குறையும் விகிதத்தில் அதிகரிக்கிறது. அதாவது வேலைவாய்ப்பு அதிகரித்தால் வருமானம் அதிகரிக்கும். ஆனால் வருமானம் அதிகரித்த வீதத்தில் பொருளாதாரத்தில் செலவு அதிகரிப்பது இல்லை. மாறாக, குறைந்த விகிதத்தில் அதிகரிக்கிறது என்பதை வரைபடம் விளக்குகிறது.

**33. தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக.**

தொகு அளிப்பு விலை என்பது ஒரு குறிப்பிட்ட அளவு உழைப்பையும் இடு பொருட்களையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்ற பிறகு கிடைக்கும், 'எதிர்பார்க்கப்படும் (வருமானம்) மொத்த தொகை' ஆகும். இங்கு "விலை" என்பது விற்பனையால் கிடைத்த வருவாயை குறிப்பிடுகிறது.

**மொத்தஅளிப்பு = C + S + T + Rf**

*

வரைபடம் வேலை வாய்ப்புக்கும், எதிர்பார்க்கும்வருமானத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது. பூஜ்ஜியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட Z நேர்கோடு என்பது பணக்கூலி மாறாமல் இருக்கும் போது உள்ள நிலையையும் மற்றொன்று (Z1) வேலைவாய்ப்பைப் பொறுத்து பணக்கூலி மாறும்போது உள்ள நிலையையும் விளக்குகின்றன. Z கோடு நேர்கோடாகவும், Z1 கோடு குறிப்பிட்ட நிலைக்கு பிறகு வளை கோடாகவும் இருக்கிறது ONf அளவில் பொருளாதாரம் முழு வேலை நிலையை அடைகிறது. அதற்குப் பின்பு உழைப்பினை அதிகப்படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்த இயலாது. எனவே, Nf க்குப்பின்னர், தொகு அளிப்புக்கோடு செங்குத்தாக, நெகிழ்வற்றதாகஉள்ளது.

தொகு அளிப்பு கோட்டின் சாய்வு (Slope) என்பது வேலை வாய்ப்புக்கும் உற்பத்தித் திறனுக்கும் இடையே உள்ள தொடர்பைப் சார்ந்து அமைந்துள்ளது. மூலதன இருப்பு மாறாமல் இருக்கும் போது அதிக உழைப்பாளர்களை பணியிலமர்த்துவதால் குறைந்து செல் இறுதிநிலை விளைவு செயல்படுகிறது. பொதுவாக தொகு அளிப்பு வளைகோடு Z1 போன்று இருக்கும். ஆகவே விலைக்கும் கூலிக்கும் உள்ள தொடர்பை சார்ந்து தான் தொகு அளிப்பு இருக்கும். பொருளின் விலை அதிகமாக இருந்து கூலி குறைவாக இருந்தால், உற்பத்தியாளர்கள் கூடுதாலாக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவார்கள். மாறாக பொருட்களின்விலை குறைவாக இருந்து கூலி அதிகமானால், முதலீடு குறையும். இதனால் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனும் குறையும். எனவே பொருளாதார நடவடிக்கையை தீர்மானிக்கும் காரணிகளில் தொகு அளிப்பு முக்கியப்பங்கு வகிக்கிறது.

**34. தொன்மையியத்தையும் கீன்ஸியத்தையும் ஒப்பிடுக. (ஏதேனும்ஐந்து)**

**(Comparison of Classicism and Keynesianism)**

| **வரிசைஎண்** | **கீன்ஸியம்** |
|---|---|
| 1. | குறுகிய காலச் சமநிலை |
| 2. | சேமிப்பு கெடுதல் |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| | | |
|---|---|---|
| 3. | பணத்தின் பணி என்பது ஒரு புறம் பரிமாற்றத்திற்கு மறுபுறம் சேமிக்க செயல்படும் | [illegible] மட்டுமே |
| 4. | நாட்டின் பிரச்சனைகளுக்கு பேரியல் அணுகுமுறை | [illegible] |
| 5. | அரசுத் தலையீடு அனுமதிக்கப்படுகிறது | தலையிடாக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது |
| 6. | எல்லா சூழ்நிலைக்கும் முழு வேலை வாய்ப்பு மற்றும் குறை வேலை வாய்ப்பு பொருத்தமானது | முழு வேலை வாய்ப்புச் சூழலுக்கு மட்டுமே பொருந்தக்கூடியது |
| 7. | முரண்பாடுகளைக் கொண்டது முதலாளித்துவம் | முதலாளித்துவம் சரியானது |
| 8. | பொருளாதாரத்தின் தேவைக்கு ஏற்ப வரவு – செலவு அறிக்கையை மாற்றிக் கொள்ளலாம் | சமநிலை வரவு – செலவு அறிக்கை ஆதரிக்கப்படுகிறது |
| 9. | வருமான மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமநிலை முன்வைக்கப்படுகிறது | வட்டிவீத மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமத்துவம் முன் வைக்கபபடுகிறது |
| 10. | பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பே வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது | சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய இரண்டும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது |
| 11. | வட்டி வீதம் மாறிக் கொண்டே உள்ளது (Flow) | வட்டி வீதம் மாறாதது (Stock) |
| 12. | தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது | அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது |
| 13. | வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி | வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி |

**பகுதி – ஈ**

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.**

**35. வேலையின்மைகளின் வகைகளை விவரி**

**வேலையின்மையின் வகைகள்**

**1. வாணிபச் சூழல் வேலையின்மை (Cyclical Unemployment)**

[illegible] நிகழ்கின்ற [illegible] சுழல் வேலையின்மை (Cyclical Unemployment) என்று பெயர். வாணிப சூழலின் பின்னிறக்க பகுதியில், உற்பத்தி மற்றும் வருமானம் குறைந்து வேலையின்மை அதிகரிக்கும். இது [illegible] தேவை இல்லாததால் நிகழ்வதாகும். அரசு முதலீட்டை அதிகரிப்பதன் மூலமும், விரிவான பணவியல் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும் இந்த சுழல் வேலையின்மையைக் குறைக்கலாம்.

**2. பருவகால வேலையின்மை (Seasonal Unemployment)**

ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் (கரும்பு, பருத்தி) போன்றவை குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே நடைபெறும். இத்தகைய தொழில்களில் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் வேலைவாய்ப்பு இருக்கும். மற்ற பருவங்களில் வேலையிருக்காது. .எனவே அவற்றை நம்பி செயல்படும், வேளாண்மை மற்றும் தொழிற்சாலைகளிலும் வேலையின்மை நிலை நிலவும். மக்களின் தேவை கூடுவதாலும் குறைவதாலும் பருவ கால வேலையின்மை தோன்றும், உதாரணம், ஐஸ்கீரிம், விடுமுறை கால சுற்றுலாவின் தேவை குறைவதாலும் வேலைவாய்ப்பு குறையலாம்.

**3. தற்காலிக அல்லது உடன்பாடில்லா(பிறழ்ச்சி) வேலையின்மை (Temporary Unemployment or Frictional Unemployment)**

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது. உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயராமை, திறமை பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப்பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது. வேலையை இழந்து புதிய வேலை தேடும் உழைப்பாளர்களும் இவ்வகையில் அடங்குவர்.

**4. கற்றோர் வேலையின்மை(Educated Unemployment)**

www.Padasalai.Net

சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர். இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர். தவறான கல்வி முறை, வேலைக்கான திறன் பற்றாக்குறை அதிக அளவு மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பட்டங்களை முடித்து வெளிவருதல், இலகுவான வேலையை மட்டுமே விரும்புதல் போன்ற காரணங்களால் பட்டம் பெற்றவர்களின் வேலையின்மை கூடுகிறது.

**5. தொழில் நுட்ப வேலையின்மை(Technical Unemployment)**

புதிய தொழில் நுட்பம் மூலதன செறிவு உடையதாக இருப்பதால், குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். *

**36. சேயின்அங்காடி விதியினைதிறனாய்வு செய்க**

கீன்ஸின் கருத்துப்படி, அளிப்பு அதற்கான தோவையை உருவாக்காது. உற்பத்தி அதிகரிக்கும் அளிவிற்கு தேவை அதிகரிக்காவிட்டால் இந்த விதி செயல்படாது.
பொருளாதாரத்தில் தானாக சரி செய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறிக்காது. மூலதனவிகிதத்தை அதிகரித்து வேலையின்மையைக் குறைக்கலாம்.
தனிநபர் எதிர்பாராத சூழ்நிலைக்காகவும், வியாபாரிகள் எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் பணத்தை இருப்பாக வைத்திருப்பார்கள். ஆகவே பணம் நடுநிலையாக இருக்காது.
சேயின் சந்தை விதி, அளிப்பு தன் தேவை தானே உருவாக்கும் என்ற அடிப்படையில் செயல்படுவாதால், அதிக உற்பத்திக்கு வாய்ப்பு இல்லை என்று கூறுகிறது, ஆனால் கீன்ஸீன் கூற்றுபடி அளவுக்கு அதிகமான உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளது.
முதலாளித்துவ நாடுகளில் குறைவான வேலை உள்ளதால், முழு வேலை வாய்ப்புக்கு சத்தியமில்லை என கீன்ஸ் கூறுகிறார்.
அளவுக்கு அதிகமான உற்பத்தியும், அதிக வேலையின்மையும் பல முதலாளித்துவ நாடுகளில் காணப்படுவதால் அரசுத் தலையீடு அவசியம் எனக் கீன்ஸ் கருதுகிறார்.

**37. ADF மற்றும்ASF க்கு இடையிலான சமநிலையைவரைபடம்மூலம்விவரி.**

**ADF மற்றும் ASF** சமநிலையை விளக்க, குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது. நுகர்வு செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன. நுகர்வுச் சார்பு நேர்கோடு ஆகவும், முதலீடு தன்னிச்சையானது (அதıணிணணிட்ணிதண்) எனவும் கீன்ஸின் கோட்பாடு அனுமானிக்கிறது.

கீன்ஸின் கோட்பாட்டில் வருமான சமநிலையை நீர்ணயிக்க இரு அணுகுமறைகள் பயன்படுத்தப்படுகின்றன.
தொகுத் தேவை மற்றும் தொகு அளிப்பு அணுகுமறை
சேமிப்பு மற்றும் முதலீடு அணுகுமுறை
இந்த அத்தியாத்தில் மொத்த அகுமறை மட்டும் விளக்கப்பட்டுள்ளது.

தொகுத் தேவை மற்றும் தொகு அளிப்பு "உ" என்ற புள்ளியில் சமநிலை அடைகிறது. இப்புள்ளியில்
வேலை வாய்ப்பு Nணி ஆக இருக்கும். ON1 அளவு வேலைவாய்ப்பில், தொகு அளிப்பு N1கீ1 ஆக இருக்கும். ஆனால் M1N1 அளவு உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவர். ஏனெனில் N0 நிலைக்கு பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால் தொகுத் தேவை, தொகு அளிப்பைவிட குறைவாக இருக்கும். எனவே முதலாளித்துவ பொருளாதாரம் அல்லது திறந்த வெளிசந்தை பொருளாதாரத்தில் (கீஸஸ் கோட்பாட்டின்படி) உற்பத்தி சமநிலையை தீர்மானிப்பத்தில் தொகுத் தேவை கருத்து அதிக முக்கியத்துவம் வகிக்கிறது.

கீன்ஸின் வேலைவாய்ப்பு கோட்பாட்டின் மைய கருத்து என்னவெனில், சமநிலை வேலைவாய்ப்பு என்பது ஒரு நாட்டின் பொருளாதாரம் முழுவேலை நிலையில் இருக்க வேண்டும் என்பதில்லை நிலையில் இருக்க வேண்டும் என்பதில்லை. வரைபடத்தில் *Nணி மற்றும் *Nஜ க்கும் இடையே உள்ள வித்தியாசம் வேலையின்மையை காட்டுகிறது. ஆகவே வேலை சமநிலையை விளக்குவதில் விளைவுத்தேவை கருத்துமுக்கியப்பங்கு வகிக்கிறது.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**38. தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.**

**தொன்மையியம் மற்றும் கீன்ஸியம் – ஓர் ஒப்பீடு (Comparison of Classicism and Keynesianism)**

| வரிசைஎண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1. | குறுகிய காலச் சமநிலை | நீண்ட காலச் சமநிலை |
| 2. | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது |
| 3. | பணத்தின் பணி என்பது ஒரு புறம் பரிமாற்றத்திற்கு உதவவும், மறுபுறம் சேமிக்க கூடியதாகவும் செயல்படும் | பரிவர்த்தனைக்குத் மட்டுமே பணம் உதவும் |
| 4. | நாட்டின் பிரச்சனைகளை தீர்க்க பேரியல் அணுகுமுறை தேவை | நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் அணுகுமுறை |
| 5. | அரசுத் தலையீடு அனுமதிக்கப்படுகிறது | தலையிடாக் கொள்ளை வலியுறுத்தப்படுகிறது |
| 6. | எல்லா சூழ்நிலைக்கும் குறை வேலைவாய்ப்பு மற்றும் முழு வேலை வாய்ப்பு பொருத்தமானது | முழு வேலை வாய்ப்புச் சூழலுக்கு மட்டுமே பொருந்தக்கூடியது |
| 7. | முரண்பாடுகளைக் கொண்டது முதலாளித்துவம் | முதலாளித்துவம் சரியானது |
| 8. | பொருளாதாரத்தின் தேவைக்கு ஏற்ப வரவு செலவு அறிக்கையைமாற்றிக் கொள்ளலாம் | சமநிலை வரவு – செலவு அறிக்கை ஆதரிக்கப்படுகிறது |
| 9. | வருமான மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமநிலை முன்வைக்கப்படுகிறது | வட்டி வீத மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமத்துவம் முன் வைக்கப்படுகிறது |
| 10. | பணத்திற்கான தேவை மற்றும்அளிப்பே வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது | சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய இரண்டும்வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது |
| 11. | வட்டி வீதம் மாறும் கொண்டே உள்ளது (Flow) | வட்டி வீதம் மாறாதது (Stock) |
| 12. | தேவையே அதன் அளிப்பை | அளிப்பு தானே தேவையை உருவாக்குகிறது |
| 13. | | வட்டி என்பது ரொக்க இ[illegible] விட்டுக் கொடுப்பத[illegible] வெகுமதி |

**அத்தியாயம் 4 நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள்**

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது

அ) C/Y ஆ) C Y இ) Y/C ஈ) C+Y

**அ) C/Y**

2. இறுதி நிலைநுகர்வு நாட்டம் கூடினால்

அ) நுகர்வுச் சார்புக்கோடு செங்குத்தை நோக்கிச் செல்லும்

ஆ) நுகர்வுச் சார்பு மேல் நோக்கி இடம் பெயரும்

இ) நுகர்வுச் சார்பு கீழ் நோக்கி இடம் பெயரும்

ஈ) சேமிப்புச் சார்பை மேலே தள்ளும்

**அ) நுகர்வுச் சார்புக்கோடு செங்குத்தை நோக்கிச் செல்லும்**

3. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8 ஆக இருந்து, செலவிடத் கூடிய வருவாய் ₹1000 ஆக இருந்தால், நுகர்வு எவ்வளவு?

அ) ₹0.8 ஆ) ₹800 இ) ₹810 ஈ) ₹0.81

**இ) ₹810**

4. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8Y ஆகஇருந்து, செலவிடக் கூடிய வருவாய் 100 ஆக இருந்தால், இறுதிநிலை நுகர்வு நாட்டம் எவ்வளவு?

அ) 0.8 ஆ) ₹800 இ) ₹810 ஈ) ₹0.81

அ) 0.8

**அ) 0.8**

கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8Y ஆ கஇருந்து, செலவிடக்கூடிய வருவாய் 100

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

ஆக இருந்தால், சராசரி நுகர்வு நாட்டம் எவ்வளவு?

அ) □0.8 ஆ) □800 இ) □810 ஈ) 0.9

**ஈ) 0.9**

6. தேசிய வருவாய் உயரும் போது

அ) APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC யின் மதிப்பை நெருங்கிவிடும்.

ஆ) APC உயர்ந்து APC யின் மதிப்பைவிட்டு விலகிச் செல்லும்.

இ) APC மாறாமல் இருக்கும்.

ஈ) APC முடிவிலியை (INFINITY) நெருங்கிச் செல்லும்

**அ) APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC யின் மதிப்பை நெருங்கிவிடும்.**

7. ஒரு குறிப்பிட்ட வருவாய் அளவில், நுகர்வு அதிகரித்தால்

அ) மொத்த தேவை உயரும் ஆ) ஏற்றுமதி உயரும் இ) வரியின் மூலம் வரும் வருவாய் குறையும் ஈ) இறக்குமதி செலவு குறையும்

**அ) மொத்த தேவை உயரும்**

8. குறைவான வட்டி வீதம்

அ) நுகர்வைக் குறைக்கும் ஆ) கடனுக்கான செலவை உயர்த்தும் இ) சேமிப்பை ஊக்குவிக்கும் ஈ) நுகர்வையும் செலவையும் அதிகரிக்கும்

**ஆ) கடனுக்கான செலவை உயர்த்தும்**

9. இறுதி நிலைநுகர்வு விருப்பு =

அ) மொத்த செலவு/மொத்த நுகர்வு ஆ) மொத்த நுகர்வு/ மொத்த வருவாய் இ) நுகர்வு மாற்றம்/ வருவாய் மாற்றம் ஈ) மேற்காண் ஏதுமில்லை

**இ) நுகர்வு மாற்றம்/ வருவாய் மாற்றம்**

10. வருவாய்க்கும் மொத்த நுகர்வுச் செலவுக்கும் உள்ள தொடர்பு

அ) நுகர்வுச் சார்பு ஆ) சேமிப்பு சார்பு இ) முதலீட்டுச் சார்பு ஈ) மொத்த தேவைச் சார்பு

**அ) நுகர்வுச் சார்பு**

11. MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது

அ) 1 ஆ) 2 இ) 0.1 ஈ)1.1

**அ) 1**

12. வருவாய் உயர்ந்தால், நுகர்வு

அ) குறையும் ஆ) மாறாது இ) ஏறி இறங்கும் ஈ) உயரும்

**ஈ) உயரும்**

13. முதலீடு தன்னிச்சையானது என அனுமானிக்கப்பட்டால், AD யின் சாய்வை நிர்ணயிப்பது.

அ) இறுதி நிலை முதலீட்டு நாட்டம் ஆ) செலவிடக்கூடிய வருவாய் இ) இறுதி நிலை நுகர்வு நாட்டம் ஈ) சராசரி நுகர்வு நாட்டம்

**இ) இறுதி நிலை நுகர்வு நாட்டம்**

14. ________இடம் பெயர்ந்த பின்னர்________எவ்வளவு மாறுகிறது என்பதை பெருக்கி கூறுகிறது.

அ) வருவாய், நுகர்வு ஆ) வெளியீடு, முதலீடு இ) முதலீடு, சேமிப்பு ஈ) மொத்த தேவை, வெளியீடு

**ஈ) மொத்த தேவை, வெளியீடு**

15. பெருக்கியின் மதிப்பு =

அ) 1/(1-MPC) ஆ) 1/MPS இ) 1/MPC ஈ) அ மற்றும் ஆ

**ஈ) அ மற்றும் ஆ**

16. MPC = 0.5 எனில், பெருக்கியின் மதிப்பு

அ) 2 ஆ) 1/2 இ) 0.2 ஈ) 20

**அ) 2**

17. ஒரு திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தில் (Open Economy) இறக்குமதி, பெருக்கியின் மதிப்பை

அ) குறைக்கிறது ஆ) உயர்த்துகிறது இ) மாற்றாது ஈ) மாற்றும்

**அ) குறைக்கிறது**

18. கீன்ஸின் கருத்துப்படி, முதலீடு MEC ஐயும் ________சார்ந்தது.

அ) தேவையையும் ஆ) அளிப்பையும் இ) வருவாயையும் ஈ) வட்டி வீதத்தையும்

**ஈ) வட்டி வீதத்தையும்**

www.Padasalai.Net

19. மிகைப் பெருக்கி (Super Multiplier) என்றகருத்தைமுதன்முதலில் பயன்படுத்தியவர்.

அ) J. R. ஹிக்ஸ் ஆ) R.G.D. ஆலன் இ) கான் ஈ) கீன்ஸ்

**அ) J. R. ஹிக்ஸ்**

20. MEC என்ற கருத்துருவைஅறிமுகப்படுத்தியவர்யார்?

அ) ஆடம் ஸ்மித் ஆ) J.M. கீன்ஸ் இ) ரிகார்டோஈ) மால்தஸ்

**ஆ) J.M. கீன்ஸ்**

**பிரிவு – ஆ**

**கீழ்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் தருக**

**21. நுகர்வுச் சார்பு என்றால் என்ன?**

Á¸Áõ´US® ~PºÄUS® EÒÍ öuõhºø£÷¯ “~PºÄ \õº¦” AÀ»x “~PºÄ |õmh®” GßQ÷Óõ®.

**22. “நுகர்வு நாட்டம்” என்றால் என்ன?**

Á¸Áõ´US® ~PºÄUS® EÒÍ öuõhºø£÷¯ “~PºÄ \õº¦” AÀ»x “~PºÄ |õmh®” GßQ÷Óõ®.

**23. சராசரி நுகர்வு நாட்டம் (APC) - வரையறு.**

**சராசரி நுகர்வு நாட்டம்**

வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டமாகும். கணிதரீதியாக

இங்கு

**APC = C/ Y**

C - நுகர்வு

Y- வருமானம்

24. இறுதி நிலைநுகர்வு நாட்டம் (MPC) - வரையறு.

**இறுதிநிலை நுகர்வு நாட்டம்**

வருமான மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கிடையேயான வீதமே இறுதிநிலைநுகர்வு நாட்டம் என வரையறை செய்யப்படுகிறது. கணித ரீதியாக

இங்கு

$\Delta C$ = நுகர்வு மாற்றம்

$\Delta Y$ = வருமான மாற்றம்

MPC – நேர்மறைஎண்ஆனால் ஒன்றுக்கும் குறைவானது.

MPC = **$\Delta$C/ $\Delta$Y**

**25. சேமிப்பு நாட்டம் (Propensity to Save) என்றால் என்ன?**

வருமானத்திற்கும், சேமிப்பிற்குமிடையேயான வீதமே சேமிப்பு நாட்டம் எனப்படும்.

**26. சராசரி சேமிப்பு நாட்டம் (APS) - வரையறு**

சராசரி சேமிப்பு நாட்டம் என்பது மொத்த சேமிப்பை மொத்த வருவாய் வகுத்தால் கிடைக்கக் கூடியதாகும். வேறு வகையில் கூறினால் மொத்த வருவாய்க்கும், மொத்த சேமிப்பிற்கிடையேயான வீதமாகும். கணித ரீதியாக

**APS = S/Y**

இங்கு

S = சேமிப்பு

Y = வருமானம்

**27. இறுதி நிலை சேமிப்பு நாட்டம் (MPS)- வரையறு**

**இறுதி நிலை சேமிப்பு நாட்டம்**

வருமான மாற்றத்திற்கும் சேமிப்பு மாற்றத்திற்கும் இடையேயுள்ள வீதமே இறுதிநிலை சேமிப்பு நாட்டமாகும்.

இறுதிநிலை சேமிப்பு நாட்டத்தை அறிய சேமிப்பு மாற்றத்தை, வருமான மாற்றத்தினால் வகுத்தால் கிடைக்கும். கணித ரீதியாக

**MPS = $\Delta$S/ $\Delta$Y**

இங்கு

$\Delta S$ = சேமிப்பு மாற்றம்

$\Delta Y$ = வருமான மாற்றம்

www.Padasalai.Net

மேலும் MPC+MPS=1

MPS = 1- MPC மற்றும் MPC = 1 - MPS

பொதுவாக சராசரி நுகர்வு நாட்டம் சதவீதமாகவும், இறுதி நிலை நுகர்வு நாட்டம் பின்னமாகவும் இருக்கும்.

**28. பெருக்கி - வரையறு**

தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ளவீதத்தைபெருக்கி என்று வரையறுக்கலாம். ΔI என்பது முதலீட்டில் அதிகரிப்பையும், மற்றும் ΔY என்பது வருமானத்தில் அதிகரிப்பையும் குறிக்கின்றது, எனவேபெருக்கி K =ΔY/ΔI. என உள்ளது. முதலீடு மாற்றத்தினால் வருமானம் மாறுவதால் பெருக்கியை முதலீட்டு பெருக்கி என அழைக்கப்படுகிறது.

**29. முடுக்கி - வரையறு.**

“தூண்டப்பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வுச் செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையேயுள்ள விகிதம்”

**- கே.கே. குரிஹாரா**

**பிரிவு – இ**

**கீழ்வரும் வினாக்களுக்கு ஓரிரு பத்தி அளவில் விடையளி.**

**30. கீன்ஸின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருத்துகளைக் கூறுக**

**விதியின கருத்துக்கள்**

ஆதலால் நுகர்வு பொருட்களின் மீது செய்கின்ற செலவு குறைகிறது. எனவே நுகர்வு செலவு ஆனது வருமானம் அதிகரிக்கும் போது அதிகரிக்கும், ஆனால் குறைந்த அளவே அதிகரிக்கும்.

(2) **அதிகரித்த வருமானம் நுகர்வு செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகின்றது.** இது முதல் கருத்துரையின் படி தொடர்கிறது. ஏனெனில் முழுவதுமான அதிகரித்த வருமானம் நுகர்வில் முழுவதுமாக செயல்படவில்லை, மீதம் சேமிக்கப்படும் இதன் வழியில் நுகர்வும், சேமிப்பும் ஒன்றோடு ஒன்று நகர்கின்றது.

(3) **அதிகரிகின்ற வருமானம் எப்பொழுதும் நுகர்வு மற்றும் சேமிப்பை இரண்டை அதிகரிக்க செய்யும்.** இது அதிகரித்த வருமானம் ஒன்று நுகர்வுகோ அல்லது சேமிப்பிற்கோ கொண்டு செல்லும். ஆதலால் அதிகரிகின்ற வருமானம், நுகர்வு மற்றும் சேமிப்பை இரண்டையும் அதிகரிக்கும்.

**31. தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றைவேறுபடுத்துக.**

**முதலீட்டின்வகைகள்**

**தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு.**

**i) தன்னிச்சையான முதலீடு**

தன்னிச்சையான முதலீடு என்பது மூலதனத் திரட்சியின் மீது ஆகும் செலவு இலாப வீதத்தை சார்ந்து இருக்காது.

**தன்னிச்சை முதலீடு**

- முதலீடு நாட்டு வருமானத்தைச் சார்ந்ததல்ல.
- இலாப நோக்கின்றி நலத்திற்காகமுதலீடு மேற்கொள்ளப்படுகிறது.
- உதாரணம் : சாலைகள் அமைத்தல், பாலங்கள், பள்ளிகள், தொண்டு நிறுவனங்கள்
- உயரும் கச்சாப் பொருட்கள் மற்றும் உழைப்பாளர்களின் ஊதியம் ஆகியவற்றை பாதிக்காது.
- நாட்டு வளர்ச்சிக்கும், பொருளாதார மந்தத்திலிருந்து விடுபடுவதற்கும் இது அவசியம்.


வருமானம்

பொருளாதார நடவடிக்கைகளில் சுதந்திரமான எதையும் சாராத முதலீடு இது. தன்னிச்சையான முதலீடு வருமானம் நெகிழ்சியற்றது, தன்னிச்சையான முதலீடு அளவு எல்லாநிலைகளிலும் ஒரேமாதிரியாக இருக்கும்.

தன்னிச்சைமுதலீட்டு வரைகோடு X அச்சுக்கு படிக்கிடை இணைக்கோடாக இருக்கும்.

FORMULAE *

வரைபடம்4.3




**பொருளாதார மந்தகாலத்தில் அரசு தன்னிச்சை முதலீட்டிற்கு ஊக்கமளிக்கும்**. **நலப் பொருளாதரத்தின் முக்கிய பகுதி தன்னிச்சையான முதலீடு ஆகும்**.

பொதுவாக, அரசு நலத்தினை கருத்தில் கொண்டு தன்னிச்சையான முதலீட்டை மேற்கொள்ளும்.


**ii) தூண்டப்பட்ட முதலீடு**

பொருளாதாரம் வளர்ச்சி அடையும் போது அதிகரிக்கின்ற வருமானம் மற்றும் தேவை உயர்வினால் ஏற்படும் நிலையான சொத்து மற்றும் பங்குகள் மீதான செலவே தூண்டப்பட்டமுதலீடு ஆகும்.

தூண்டப்பட்ட முதலீடு லாப நோக்கம் உடையது. தேசிய வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தோடு தொடர்புடையது. தேசிய வருமானத்திற்கும், தூண்டப்பட்ட முதலீட்டிற்கும் நேரிடையான தொடர்பு இருக்கிறது. தேசிய வருமானம் குறைந்தால் தூண்டப்பட்ட முதலீடும் குறையும் மற்றும் தூண்டப்பட்டமுதலீடு வருமான நெகழிச்சியுடையது.

பின்வருமாறு நேர்மறைசாய்வு கோடாகஇருக்கும்.

Page no.:




| தொ.எண் | தன்னிச்சையான முதலீடு |
|---|---|
| 1 | தன்னிச்சையானது |
| 2 | வருவாயைப் பெ நெகிழாதது |
| 3 | நல நோக்கமுடையது |

**32. நுகர்வுச் சார்பைப் பாதிக்கிற ஏதேனும் மூன்று அகமற்றும் புறக் காரணிகளை விளக்குக.**

**அ) அகவயகாரணிகள்**

அகவய காரணிகள் உளவியல் சிந்தனைகளுடன் தொடர்புடையது. நுகர்வு சார்பை தூண்டுகின்ற முக்கிய அகவய காரணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கீன்ஸ் எட்டு நோக்கங்களை பட்டியலிட்டு உள்ளார். இவை தனி நபர்களை செலவு செய்வது இருந்து விலக்களிக்கிறது. அவையாவன:

**1.முன்னெச்சரிக்கைநோக்கம்:** எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக கையில் ரொக்கமாக வைப்பது. எ.கா. விபத்து, உடல் நலனின்மை

**2. எதிர்பார்க்கும் நோக்கம் :** எதிர்கால தேவைக்கான விருப்பம். எ.கா. வயதான காலம்

**3. கணிக்கும் நோக்கம் :** விருப்பம் மற்றும் பாராட்டைஅனுபவிப்பதற்கான விருப்பம்.

www.Padasalai.Net

**ஆ) புறவயக் காரணிகள்**

**1) வருமான பகிர்வு**

செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால், நுகர்வு குறைவாக இருக்கும். காரணம் செல்வந்தர்கள் குறைவான நுகர்வு விருப்பமும், அதிகப்படியான சேமிப்பு விருப்பமும் கொண்டு இருப்பர். சமநிலை வருமான பகிர்வுடைய சமூகத்தில் அதிகமான நுகர்வு விருப்பம் இருக்கும். V.K.R.V. ராவ் அவர்களால் இக்கருத்து வலியுறுத்தப்பட்டது.

**2) விலை அளவு**

நுகர்வு சார்பை மிக முக்கியமான தீர்மானிக்கின்ற காரணியாக இருப்பது விலை அளவே ஆகும். விலை வீழ்ச்சி அடையும் போது, உண்மை வருமானம் அதிகரிக்கும், மக்கள் அதிகமாக நுகர்வார்கள் மற்றும் சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.

**3) கூலி அளவு**

நுகர்வு சார்பை தீர்மானிக்கின்ற முக்கியமானதாக கூலி அளவு இருக்கின்றது. நுகர்விற்கும், கூலிக்கும் இடையே நேர்மறையான தொடர்பை கொண்டு இருக்கும். கூலி அதிகரிக்கும் போது நுகர்வுச் செலவும் அதிகரிக்கும். மேலும் எதிர்பாராத லாபம் ஏற்படும் போது இதே மாதிரி விளைவு ஏற்படும்.

**33. முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.**

**பெருக்கி (Multiplier):**

பெருக்கிக் கோட்பாட்டை முதலில் எப்.ஏ.கான் வேலைவாய்ப்பின் அடிப்படையில் உருவாக்கினார். ஜே.எம்.கீன்ஸ் இதனை வருமானம் அல்லது முதலீட்டுப் பெருக்கியாக மாற்றி அமைத்தார்.

தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம். $\Delta I$ என்பது முதலீட்டில் அதிகரிப்பையும், மற்றும் $\Delta Y$ என்பது வருமானத்தில் அதிகரிப்பையும் குறிக்கின்றது, எனவே பெருக்கி $K = \Delta Y/\Delta I$. என உள்ளது. முதலீடு மாற்றத்தினால் வருமானம் மாறுவதால் பெருக்கியை முதலீட்டு பெருக்கி என அழைக்கப்படுகிறது.

**பெருக்கியின்எடுகோள்கள்**

கீன்ஸின் பெருக்கியின் கோட்பாடு சில எடுக்கோள்களின் அடிப்படையில் செயல்படுகிறது. அவை:

1) தன்னிச்சையான முதலீட்டில் மாற்றம் உண்டு.

2) தூண்டப்பட்ட முதலீடு இல்லை.

3) இறுதி நிலை நுகர்வு நாட்டம் நிலையாகஇருக்கும்.

4) நுகர்வு நடப்பு வருமானத்தைச் சார்ந்தேஅமையும்.

5) **பெருக்கியின்** செயல்பாட்டில் கால இடைவெளி இல்லை.

6) உறுதித் தேவைகேற்ப நுகர்வு பொருள்கள் கிடைக்கும்.

7) நாடு மூடிய பொருளாதாரமாகும், அந்நிய நாட்டின் செயல்பாடுகள் தாக்கத்தைஏற்படுத்தாது.

8) விலையில் மாற்றம் இல்லை.

9) முழு நிலைவேலைவாய்ப்பு நிலைக்கு கீழ் பொருளாதாரம் செயல்படுகிறது.

**<u>முடுக்கி கோட்பாடு:</u>**

**பெருக்கியின்வகைகள்**

1. வரி பெருக்கி
2. வேலைவாய்ப்பு பெருக்கி
3. வெளிநாட்டு வர்த்தகபெருக்கி
4. முதலீடு பெருக்கி

**பொருள்**

பொருளாதாரத்தில் நுகர்வு பொருட்களின் தேவை அதிகரிக்கின்ற போது பொதுவாக இயந்திரங்களின் (முதலீட்டு பொருட்கள்) தேவையை முடுக்கிவிட்டு அதிகரிக்க வழி செய்யும். முடுக்கி என்பது அதிகரித்த நுகர்வு மற்றும் அதன் விளைவினால் ஏற்படும் அதிகரிக்கும் முதலீட்டுக்கான தொடர்பை குறிக்கும் எண் மதிப்பு ஆகும்.

**முடுக்கி விளைவுகள்**

**அதிகரித்த நுகர்வுத் தேவையை ஈடு செய்ய நிறுவனங்கள்**

**நிறுவனங்கள் முழு உற்பத்தித் திறனை நெருங்குதல்**

www.Padasalai.Net

**நுகர்வுத் தேவையின் அதிகரிப்பு**

**முதலீட்டைஅதிகரித்தல்**

முடுக்கி (β)= ΔC *

இதில் β = முடுக்கி

ΔI = முதலீட்டுச் செலவில் மாற்றம் (100 என்போம்)

ΔC = நுகர்வுத் தேவையில் மாற்றம் (50 என்போம்)

முடுக்கியானது முதலீட்டு மாற்றத்திற்கும் நுகர்வின் மாற்றத்திற்கும் உள்ள விகிதத்தை வெளிப்படுத்துகின்றது.

**வரைவிலக்கணம்**

“தூண்டப்பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வுச் செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையேயுள்ள விகிதம்”

**- கே.கே. குரிஹாரா**

அனுமானமாக □50 கோடி நுகர்வுப் பொருட்களின் தொழில்களில் செலவு செய்யும் போது, □100 கோடி முதலீட்டு பொருட்கள் தொழில்களில் முதலீடு செய்யவழி வகுக்கிறது. அப்படியானால் முடுக்கி ஆகும்.

**எடுகோள்கள்**

1. நுகர்வு பொருட்கள் தொழில் துறையில் எச்ச சக்தியின்மை.
2. நிலையான மூலதனம் - வெளியீடு விகிதம்
3. தேவையின் அதிகரிக்கும் தன்மை நிலையாக இருக்கும் என்று அனுமானித்தல்.
4. நிதி அளிப்பு மற்றும் மற்ற உள்ளீடுகள் நெகிழ்ச்சியுடையது.
5. மூலதனப் பொருட்கள் தேவைப்படும் அளவுக்கு பகுக்க முடியும்.

**34. மிகைப் பெருக்கி – விளக்குக.**

**மிகைப் பெருக்கி** எளிய பெருக்கியை விட **சிறந்ததாகும்**, **ஏனெனில் எளியபெருக்கி தன்னிச்சைமுதலீட்டை மட்டும் உள்ளடக்கி இருக்கும்**, **ஆனால் மிகைப் பெருக்கி தன்னிச்சை முதலீடு மற்றும் தூண்டபப்பட்ட முதலீடு** ஆகிய **இரண்டையும் கொண்டிருக்கும்**.

**Or**

ஆரம்ப முதலீட்டினால் வருமானத்தில் ஏற்படும் மொத்த விளைவை அறிய ஹிக்ஸ் K மற்றும் β ஐ இணைத்து மிகைப் பெருக்கி என்பதை கணித ரீதியில் உருவாக்கினார். மிகைப் பெருக்கியானது தூண்டப்பட்டநுகர்வு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ஆகியவை இணைந்து செயல்படுவதாகும்.

**35. பெருக்கி கருத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக.**

**1. பெருக்கியின் கசிவுகள்**

**1. பெருக்கியின் எடுகோளானது வருமானத்தின் ஒரு பகுதி செலவிடப்படுகிறது**

**2. நடைமுறையில் மக்கள் அதிகரித்த வருமானத்தை வேறு ஒரு பொருட்களின் மீதும் செலவு செய்வார்கள். இவ்வகை செலவே கசிவுகள் எனப்படும்.**

**2. பழைய கடனை திரும்ப செலுத்தல்**

**பழைய கடனை திரும்ப செலுத்துவதற்காக வருமானம் பயன்படுமானால் MPC**

**குறைந்து அதன் காரணமாக பெருக்கியின் மதிப்பு தடைபடும்**

**3. செல்வத்தை வாங்குதல்**

**அதிகரித்த வருமானம் நடைமுறையில் செல்வங்களாக நிலம், கட்டிடம், மற்றும் பங்குகளை வாங்குவதற்க்காக பயன்படுத்தினால் பணம் மக்களிடையே சுழன்று கொண்டிருக்கும் நுகர்வுக்குள் வராது. இதன் விளைவாக பெருக்கியில் மதிப்பு பாதிக்கும்**

**பிரிவு – ஈ**

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பக்கஅளவில் பதில் தருக.**

**36. கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.**

போது, பகுதி பகுதியாகநம் விருப்பமும் நிறைவேறும், ஆதலால் நுகர்வு பொருட்களின் மீது செய்கின்ற செலவு குறைகிறது. எனவே நுகர்வு செலவு ஆனது வருமானம் அதிகரிக்கும் போது அதிகரிக்கும், ஆனால் குறைந்த அளவே அதிகரிக்கும்.

(2) **அதிகரித்தவருமானம் நுகர்வு செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகின்றது.** இது முதல் கருத்துரையின் படி தொடர்கிறது. ஏனெனில் முழுவதுமான அதிகரித்தவருமானம் நுகர்வில் முழுவதுமாகசெயல்படவில்லை, மீதம் சேமிக்கப்படும் இதன் வழியில் நுகர்வும், சேமிப்பும் ஒன்றோடு ஒன்று நகர்கின்றது.

(3) **அதிகரிகின்ற வருமானம் எப்பொழுதும் நுகர்வு மற்றும் சேமிப்பை இரண்டை அதிகரிக்க செய்யும்.** இது அதிகரித்த வருமானம் ஒன்று நுகர்வுக்கோ அல்லது சேமிப்பிற்கோகொண்டு செல்லும். ஆதலால் அதிகரிக்கின்ற வருமானம், நுகர்வு மற்றும் சேமிப்பை இரண்டையும் அதிகரிக்கும்.

இவ்விதியின் மூன்று கருத்துரைகள் பின்வரும் அட்டவணை உதவியுடன் விளக்கப்படுகிறது.

**அட்டவணை**

**விதியின்மூன்று கருத்துரைகள்.**

| **வருமானம்** Y | **நுகர்வு** C | **சேமிப்பு** S = Y - C |
|---|---|---|
| 120 | 120 | 0 |
| 180 | 170 | 10 |
| 240 | 220 | 20 |

**கருத்துரை(1)**

வருமானம் □60 கோடிகளாகஅதிகரிக்கின்றது மற்றும் நுகர்வு □50 கோடிகளாகஅதிகரிக்கிறது

**கருத்துரை(2)**

180 லிருந்து 240 ஆக வருமானம் அதிகரிக்கும் பொழுது இது இரண்டு பகுதிகளாகநுகர்வு 170 லிருந்து 220 ஆகவும், சேமிப்பாக 10 லிருந்து 20 ஆகவும் முறையே பிரிகின்றது.

**கருத்துரை(3)**

வருமானம் 180 லிருந்து 240 உயரும்போது நுகர்வை 170 லிருந்து 220 ஆகவும், சேமிப்பை10 லிருந்து 20ஆகவும் அதிகரிக்க செய்கிறது. C கோட்டிற்கும் 450 கோட்டிற்கும் இடையேயுள்ள அகன்ற பகுதி சேமிப்பைக் காட்டுகிறது.

37. நுகர்வுச் சார்பின் அகமற்றும் புறக் காரணிகளைவிளக்குக.

**காரணிகள் (அகவயமற்றும் புறவய காரணிகள்)**

நுகர்வு சார்பை தூண்டுகின்ற காரணிகளை ஜே.எம்.கீன்ஸ் இரண்டாக பிரிக்கின்றார். அதாவது அகவய காரணிகள் மற்றும் புறவய காரணிகள்.

**அ) அகவயகாரணிகள்**

அகவய காரணிகள் உளவியல் சிந்தனைகளுடன் தொடர்புடையது. நுகர்வு சார்பை தூண்டுகின்ற முக்கிய அகவய காரணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கீன்ஸ் எட்டு நோக்கங்களை பட்டியலிட்டு உள்ளார். இவை தனி நபர்களை செலவு செய்வது இருந்து விலக்களிக்கிறது. அவையாவன:

**1.முன்னெச்சரிக்கைநோக்கம்:** எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக கையில் ரொக்கமாக வைப்பது. எ.கா. விபத்து, உடல் நலனின்மை

**2. எதிர்பார்க்கும் நோக்கம் :** எதிர்கால தேவைக்கான விருப்பம். எ.கா. வயதான காலம்

**3. கணிக்கும் நோக்கம் :** விருப்பம் மற்றும் பாராட்டை அனுபவிப்பதற்கான விருப்பம்.

**4. முன்னேறும் நோக்கம் :** வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற விரும்புதல் சார்ந்தவிருப்பம்

**5. உளவியல் சுதந்திர நோக்கம்.**

**6. வாணிப நோக்கம்** (வியாபாரத்தைமுன்னேற்றுவதற்கான நோக்கம்)

www.Padasalai.Net

**7. கர்வ நோக்கம்** (விட்டுச் செல்வதற்கான விருப்பம்)

**8. பேராசை நோக்கம்** (முற்றிலும் மோசமான உள்ளுணர்வு)

கீன்ஸ் : முன்னெச்சரிக்கை, எதிர்பார்த்தல் கணித்தல், முன்னேறுதல், பணவியல் சுதந்திரம், வாணிபம், கர்வம், பேராசை ஆகியவை நுகர்ச்சியைப் புறக்கணிக்கும் நோக்கங்களாகக் கூறியுள்ளார்.

அரசாங்கம், நிறுவனங்கள் மற்றும் வாணிப கழகங்கள், தொழிற்சாலைகளும் பின்வரும் நான்கு நோக்கங்களுக்காக முக்கியமாக சேமிக்கும்.

**1.வாணிபநோக்கம்:** கடன் இல்லாமல் மூலதன முதலீடு மேற்கொள்வதற்காக வளங்களை பெறும் விருப்பம்.

**2.நீர்மை தன்மை நோக்கம்**:அவசரகாலம், சிக்கல்களை சந்திப்பதற்காக நீர்மை வளங்களை பாதுகாக்கும் நோக்கம்.

**3. முன்னேறும் நோக்கம் :** வருமானத்தை அதிகரிப்பதற்காகவும், வெற்றி பெறும் மேலாண்மையை நிரூபிக்க வேண்டியதற்கான நோக்கம்.

**4. நிதி விவேக நோக்கம் :** கடனை செலுத்த, தேய்மானம் மற்றும் பழங்கால தொழில் நுட்பத்தை மாற்றும் நோக்கம் போன்றவற்றிற்கு தேவையான நிதி ஆதாரங்களை உறுதிப் படுத்தும் விருப்பம்.

கீன்ஸ் அகவயக் காரணிகள் குறுகிய காலத்தில் மாறாது என்றும் எனவே, நுகர்வுச் சார்பு குறுகிய காலத்தில் நிலையானது என்கிறார்.

### ஆ) புறவயக் காரணிகள்

புறவயக் காரணிகள் உண்மையான மற்றும் அளவிடக் கூடியது. நீண்டகாலங்களில் இந்த காரணிகள் எளிதாக மாற்றம் அடையும். பெரும்பான்மையான புறகாரணிகள் நுகர்வு சார்பை தீர்மானிக்கின்றவைகளாகும்.

#### 1) வருமான பகிர்வு

செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால், நுகர்வு குறைவாக இருக்கும். காரணம் செல்வந்தர்கள் குறைவான நுகர்வு விருப்பமும், அதிகப்படியான சேமிப்பு விருப்பமும் கொண்டு இருப்பர். சமநிலை வருமான பகிர்வுடைய சமூகத்தில் அதிகமான நுகர்வு விருப்பம் இருக்கும். V.K.R.V. ராவ் அவர்களால் இக்கருத்து வலியுறுத்தப்பட்டது.

#### 2) விலை அளவு

நுகர்வு சார்பை மிக முக்கியமான தீர்மானிக்கின்ற காரணியாக இருப்பது விலை அளவே ஆகும். விலை வீழ்ச்சி அடையும் போது, உண்மை வருமானம் அதிகரிக்கும், மக்கள் அதிகமாக நுகர்வார்கள் மற்றும் சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.

#### 3) கூலி அளவு

நுகர்வு சார்பை தீர்மானிக்கின்ற முக்கியமானதாக கூலி அளவு இருக்கின்றது. நுகர்விற்கும், கூலிக்கும் இடையே நேர்மறையான தொடர்பை கொண்டு இருக்கும். கூலி அதிகரிக்கும் போது நுகர்வுச் செலவும் அதிகரிக்கும். மேலும் எதிர்பாராத லாபம் ஏற்படும் போது இதே மாதிரி விளைவு ஏற்படும்.

#### 4) வட்டி விகிதம்

வட்டி விகிதமும் நுகர்வுச் சார்பை தீர்மானிக்கின்ற முக்கிய காரணியாகும்.. அதிக வட்டி விகிதம் மக்களை அதிக அளவில் பணத்தை சேமிக்க ஊக்கம் அளிக்கும் மற்றும் நுகர்வை குறைக்கும்.

#### 5) நிதி கொள்கை

அரசாங்கம் வரியை குறைக்கும் போது, செலவிடத்தக்க வருமானம் அதிகரிக்கும் மற்றும் சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும். வளர்வீத வரிக் கொள்கையானது ஏழைகளுக்கு சாதகமான வருமான பகிர்வை தருவதால், ஏழைகளின் நுகர்வு விருப்பம் மாறும்.

#### 6) நுகர்வோர் கடன்

சுலப தவணைகளாக நுகர்வுக் கடன் அளிக்கும் போது அவர்கள் நுகர்வோர் பொருட்களான கனரகவாகனங்கள், பிரிட்ஜ், கம்யூட்டர் போன்றவற்றினை வாங்குவார்கள். இது நுகர்வை அதிகப்படுத்தும்.

#### 7) மக்கள் தொகைகாரணிகள்

மற்றவைமாறாமல் இருக்கும் போது குடும்பஅளவு அதிகமாகஇருந்தால், நுகர்வு

அதிகமாக இருக்கும். மேலும் குடும்ப அளவு, குடும்ப வாழ்கை சுழற்சி நிலை, இருப்பிடம் மற்றும் வேலைவாய்ப்பு நுகர்வுச் சார்பை பாதிக்கும். ஆரம்ப நிலை கல்வி பயிலும் மாணவர்களை விட குடும்பத்தில் கல்லூரி கல்வி பயிலும் மாணவர்கள் அதிகமாக செலவு செய்வார்கள் கிராமப்புற குடும்பங்களை விட நகர்ப்புற குடும்பங்கள் அதிகமாக செலவு செய்யும்.

**38. பெருக்கி இயங்கும் விதத்தினைவிவரி.**

**பெருக்கி செயல்படும் விதம்**

அரசு □100 கோடி பொதுப் பணிக்காக கூலி, இதர பொருட்கள் வாங்குவதற்காக செலவிடகிறது எனக் கொள்வோம். இந்த □100 கோடி உழைப்பாளர்களுக்கும் பொருட்களை அளித்தவர்களுக்கும் வருமானமாக அமையும். இங்கு இறுதி நிலை நுகர்வு நாட்டம் 0.8 (80%) எனக் கொண்டால் □80 கோடியை நுகர்வுச் செலவுக்கும், மீதம் □20 கோடியை சேமிக்கவும் செய்வர். இதில் மேற்காண் வருமானம் பெற்றவர்களின் இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8. எனில் □80 கோடியில் □64 கோடி நுகர்வுச் செலவுக்கும் மீதம் □16 கோடியை சேமிக்கவும் செய்வர். இந்த வழியில் நுகர்வுச் செலவானது ஒரு சங்கிலித் தொடர்பு போன்று சென்று கொண்டேசெல்லும்.

**நேர்மறை மற்றும் எதிர்மறைப் பெருக்கியின் விளைவுகள்**

**எதிர்மறைப் பெருக்கி CHECK**

**நேர்மறைபெருக்கி**

உட்செலுத்தலில் துவக்க நிலையில் ஏற்படும் குறைவானது (கசிவு அதிகரிக்கும் போது) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகப்பெரிய இறுதி நிலைக் குறைவை ஏற்படுத்தும் உட்செலுத்தலில்

துவக்க நிலையில் ஏற்படும் அதிகரிப்பானது (கசிவு குறையும் போது) மொத்தஉள்நாட்டு உற்பத்தியில் மிகப்பெரிய இறுதிலைஉயர்வைஏற்படுத்தும்.

எனவேஇறுதி முடிவுகள்

ΔY=100+100×4/5+100×[4/5]2+100×[4/5]3 அல்லது,

ΔY = 100 + 100 x 0.8 + 100 x (0.8)2 + 100 x (0.8)3

= 100 + 80 + 64 + 51.2...

= 500

அதாவது 100×1/1-4/5

100×1/1/5

100×5 = □500 கோடிகள்

உதாரணமாகC = 100 + 0.8Y, I = 100,

என்றால் Y = 100 + 0.8Y + 100

0.2Y = 200

Y = 200/0.2 = 1000→ புள்ளி B

I இன் மதிப்பு 110, ஆகஅதிகரிக்கப்பட்டால்

0.2Y =210

Y = 210/0.2 = 1050→புள்ளி D

I, □10 அதிகரித்தால், Y □ 50 அதிகரிக்கும்.

இது பெருக்கியின் விளைவு.

புள்ளி Aயில், Y = C = 500

C = 100 + 0.8 (500) = 500; S=0

புள்ளி Bயில், Y = 1000

C = 100 + 0.8 (1000) = 900; S = 100 = I

புள்ளி Dயில், Y = 1050

C = 100 + 0.8 (1050) = 940; S = 110 = I

I மதிப்பு 10 அதிகரிக்கும் போது Y மதிப்பு 50 அதிகரிக்கும். இதுவே பெருக்கி விளைவாகும்.

Page no.: 78 formulae

**39. முடுக்கி இயங்கும் விதத்தினை விவரி.**

**முடுக்கி கோட்பாடு செயல்படும் விதம்**

ஒரு எளிமையான எடுத்துக்காட்டின் மூலம் முடுக்கியின் செயல்பாட்டை பின் வருமாறு விளக்கலாம்.

இதற்கு 100 இயந்திரங்கள் தேவைப்படுவதாக எடுத்துக் கொள்வோம். 10 வருடங்கள் அந் தஇயந்திரங்களின் வாழ்நாள் என்று கொள்வோம். அதாவது ஒவ்வொரு வருடமும் 10 எந்திரங்களை மாற்றியமைக்கப்படுகிறது. காரணம் நிலையான 1000 நுகர்வு பொருட்களை தயாரிப்பதற்காக இதனை மாற்றியமைக்கும் தேவை எனப்படுகிறது.


10 சதவீதம் அளவிற்கு (அதாவது 1000லிருந்து 1100 ஆக) நுகர்வு பொருட்களின்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

தேவை அதிகரிக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இதன் விளைவாக மேலும் 10 இயந்திரங்களின் தேவை அதிகரிக்கும். எனவே மொத்த இயந்திர தேவை 20 ஆகும். (10 மாற்றமைப்பதற்காக மற்றும் 10 அதிகரித்த தேவையை சந்திப்பதற்காக) இங்கே 10 சதவீதம் நுகர்வு பொருட்கள் தேவையானது 100 சதவீதத்திற்கு இயந்திரத்தின் தேவை அதிகரிக்கின்றது என்பது குறிக்கின்றது (10 லிருந்து 20 வரை) ஆதலால் இறுதியாகஒ ரு சிறிய நுகர்வு பொருட்களின் தேவையில் மாற்றம் அதிகப்படியான முதலீட்டு மாற்றத்திற்கு வழிவகுக்கிறது.

### முடுக்கியின்செயல்பாடு




### வரைப்படவிளக்கம்

SS என்பது சேமிப்பு கோடு. II என்பது முதலீட்டு கோடு E1 புள்ளியில் பொருளாதாரம் OY1 வருமானத்துடன் சம நிலையில் இருக்கிறது. சேமிப்பும் முதலீடும் OI2 ல் சம நிலையாகஉள்ளது. இப்பொழுது முதலீடு OI2 லிருந்து OI4 ஆக அதிகரிக்கிறது. இது வருமானத்தை OY1 லிருந்து OY3 ஆகஅதிகரிக்கிறது. E3 சம நிலைப் புள்ளியில் முதலீடு I2I4 ஆக முழுவதுமாக வெளிப்புற காரணியில் அதிகரிக்கின்றது என்றால், வருமானமும் Y1Y3 ஆக முடுக்கியின் விளைவாகஅதிகரிக்கும். ஆனால் வரைப்படத்தில் வெளிபுற முதலீடு I2I3 ஆகவும், தூண்டப்பட்டமுதலீடு I3I4ஆகவும் இருக்கிறது என்று அனுமானித்துக் கொள்வோம். ஆதலால், அதிகரித்த வருமானம் Y1Y2ஆனது பெருக்கியின் விளைவாலும் மற்றும் அதிகரித்த வருமானம் Y2Y3 ஆனது முடுக்கியின் விளைவாலும் ஏற்படுகின்றது.

### வரையறைகள்

1. நிலையான மூலதனம் -வெளியீடு விகிதம் என்ற எடுகோள் உண்மையானது அல்ல.

2. முழு நிலை வேலை வாய்ப்பிற்கு முன்பு வரை மட்டுமே வளங்கள் கிடைக்கும்.

3. மூலதன பொருட்கள் தொழிற்சாலையில் உபரி சக்தி உள்ளதாகஅனுமானிக்கப்படுகிறது.

4. முடுக்கியானது தேவை அதிகரித்தல் நிலையானது என்ற நிலையில் மட்டுமே வேலை செய்யும்.

5.* ன் எளிதாககிடைத்தால் மட்டுமேமுடுக்கி செயல்படும்.

6. நுகர்வு பொருட்கள் தொழிலில் பயன்படுத்தாத அல்லது மிகுதியான திறன் இருந்தால், முடுக்கி கோட்பாடு செயல்படாது.

40. மூலதனத்தின் இறுதிநிலைஉற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலைஉற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ளவேறுபாடுகள் யாவை?

| மூலதனத்தின்இறுதிநிலை உற்பத்தித் திறன்(MEC) | முதலீட்ட |
|---|---|
| 1) இது மூலதனத்தின் அளிப்பு விலையைப் பொறுத்து அமைகிறது | 1) மூலத விலையை அமைகிற |
| 1) இது மூலதனத்தின் அளிப்பு விலையைப் பொறுத்து அமைகிறது | 1) மூலத விலையை அமைகிற |
| 2) ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது. | 2) ஆரப மூலதனத் |
| 3) வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது | 3) வரைப அளக்கப்ப |
| 4) இது ஒரு "இருப்பு" கருத்துரு (stock) | 4) இது ஒ |
| 5) ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது | 5) கொடு வட்டி வி என்பதை |

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**அத்தியாயம் 5 பணவியல் பொருளியல்**

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. ஆர்பிஜ -ன் தலைமையகம் அமைந்துள்ளஇடம்

அ) டில்லி ஆ) சென்னை இ) மும்பை ஈ) பெங்களுரு

**இ) மும்பை**

2. பணம் என்பது

அ) உள்ளடக்க மதிப்பு இருந்தால் ஏற்றுக் கொள்ளளப்படுவது

ஆ) நிலையான வாங்கும் சக்தியை கொண்டது

இ) உள்ளவற்றில் அதிக நீர்மைத் தன்மை கொண்ட சொத்து ஆகும்.

ஈ) வளங்களைபங்கிட்டுக் கொள்ளதேவைப்படுகிறது.

**இ) உள்ளவற்றில் அதிக நீர்மைத் தன்மை கொண்ட சொத்து ஆகும்.**

3. காகிதப்பண முறையை மேலாண்மை செய்வது

அ) மைய பணவியல் அமைப்பு ஆ) மாநில அரசு இ) மைய அரசு ஈ) வங்கிகள்

**அ) மைய பணவியல் அமைப்பு**

4. M1 மற்றும் M2 ஆகிய இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்

அ) அஞ்சலக அனைத்து வைப்புகள் ஆ) அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள் இ) வங்கியின் கால வைப்புகள் ஈ) காகிதப்பணம்

**இ) வங்கியின் கால வைப்புகள்**

5. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு

அ) 1908 ஆ) 1910 இ) 1911 ஈ) 1914

**இ) 1911**

6. MV என்பது

அ) பணத் தேவை ஆ) சட்டபூர்வ பண அளிப்பு இ) வங்கிப் பண அளிப்பு ஈ) மொத்த பண அளிப்பு

**ஆ) சட்டபூர்வ பண அளிப்பு**

7. பண வீக்கம் என்பது

அ) விலைகள் அதிகரிப்பு
ஆ) விலைகள் குறைதல்
இ) பணமதிப்பு அதிகரிப்பு
ஈ) விலைகள் மாறாதிருத்தல்

**அ) விலைகள் அதிகரிப்பு**

8. ______________ பணவீக்கம் பண மதிப்பில் தீவிர மதிப்பு குறைவினை ஏற்படுத்துகிறது.

அ) தவழும் ஆ) நடக்கும் இ) ஓடும் ஈ) உயர்

**ஈ) உயர்**

9. கூலி மற்றும் மூலப் பொருட்கள் செலவு கூடுவதால் பொருட்களின் பொது விலை மட்டம் அதிகரிப்பது __________ பணவீக்கம் ஆகும்

அ) செலவு உந்து ஆ) தேவை இழுப்பு இ) ஓடும் ஈ) தாவும்

**அ) செலவு உந்து**

10. பணவீக்கத்தின் பொழுது பயனடைபவர்கள் யார்?

அ) கடன் பெற்றோர்கள் ஆ) கடன் வழங்கியோர்இ) கூலி மற்றும் சம்பளம் பெறுவோர்ஈ) அரசு

**அ) கடன் பெற்றோர்கள்**

11. ______________ என்பது பணவீக்க விகிதம் குறைந்து செல்வது ஆகும்.

அ) எதிர்பணவீக்கம் ஆ) பணவாட்டம் இ) தேக்கவீக்கம் ஈ) மந்தம்

**அ) எதிர்பணவீக்கம்**

12. தேக்கவீக்கத்தில் பணவீக்க விகிதத்துடன் இணைந்திருப்பது

அ) தேக்கம் ஆ) வேலைவாய்ப்பு இ) உற்பத்தி ஈ) விலை

**அ) தேக்கம்**

13. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை______________ அழைக்கின்றோம்.

www.Padasalai.Net

அ) பூரிப்பு ஆ) பின்னிறக்கம் இ) மீட்சி ஈ) வணிகச்சுழற்ச்சி

**ஈ) வணிகச்சுழற்ச்சி**

14. மந்தகாலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்

அ) உயர்ந்த பட்சமாக ஆ) மிக மோசமாக இ) மிக குறைந்த பட்சமாக ஈ) மிக நல்ல நிலையில்

**இ) மிக குறைந்த பட்சமாக**

15. “ பரிவர்த்தனைகளில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு இடையீட்டுக் கருவியாகவும், அளவீடு மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினை செய்யும் ஒரு பொருள் பணம்” என்ற இலக்கணத்தை வழங்கியவர்;

அ) கிரௌதர் ஆ) பிகு இ) வாக்கர் ஈ)பிரான்சிஸ்டி பேக்கான்

**அ) கிரௌதர்**

16. பற்று அட்டை என்பது ____________ உதாரணம் ஆகும்.

அ) கட்டளைப் பண ஆ) காகிதப் பண இ) நெகழி பண ஈ) கடன் பண

**இ) நெகழி பண**

17. ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பணத்தின் இந்த பணியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது

அ) மதிப்பளவு ஆ) மதிப்பின் நிலைக்கலன் இ) பரிவர்த்தனைகருவி ஈ) வருங்கால செலுத்துதல்களுக்கான அடிப்படை

**இ) பரிவர்த்தனைகருவி**

18. MV = PT என்ற சமன்பாட்டில், V என்பது

அ) வாணிபத்தின் அளவு ஆ) பணத்தின் சுழற்ச்சி வேகம் இ) ரொக்கப் பணத்தின் அளவு ஈ) வங்கி மற்றும் கடன் பணஅளவு

**ஆ) பணத்தின் சுழற்ச்சி வேகம்**

19. விலைவாசி மெதுவாக உயரும் பொழுது அது அழைக்கப்படுவது

அ) தாவும் பணவீக்கம் ஆ) மிதமான பணவீக்கம் இ) உயர் பணவீக்கம் ஈ) பணவாட்டம்

**ஆ) மிதமான பணவீக்கம்**

20. ____________ பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்தவகையிலும் பாதிக்காது.

அ) நடக்கும் ஆ) ஓடும் இ) தவழும் ஈ) தாவும்

**இ) தவழும்**

**பகுதி - ஆ.**

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதிலளிக்கவும்.**

**21. பணத்தின் இலக்கணம் வரைக.**

பணம் எதைச் செய்கிறதோ, அதுதான் பணம் (“(“Money is what money does”) வாக்கர்

பரிவர்த்தனைளில் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு இடையீட்டுக்கருவியாகவும், மதிப்பளவை மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தால் ஆகியவற்றினைச் செய்யும் ஒன்றாகவும் இருப்பது பணம் ஆகும்.

**22. பண்டமாற்று என்றால் என்ன?**

மெசபடெமியா பழங்குடியினரால் பண்டமாற்று முறை பயன்படுத்தப்பட்டது.
பாபடிலோனியர்கள் பொருட்களுக்குப் பொருட்களை மாற்றும் பண்டமாற்று முறையை பயன்படுத்தினர்.

**23. பண்டப்பணம் என்றால் என்ன?**

பொது இடையீட்டுக் கருவிகளா விலங்கின் தோல், உரோமம், உப்பு, அரிசி, கோதுமை, பாத்திரங்கள், ஆயுதங்கள், போன்ற பொருட்கள் பணமாக பயன்படுத்தப்பட்டு வந்நன. இவ்வாறு பொருட்களை பொருட்களுக்கு மாற்றிக் கொள்ளும் முறையே பண்டமாற்று முறை என அழைக்கப்பட்டது.

**24. பொன் திட்டம் என்னறால் என்ன?**

www.Padasalai.Net

பொன் திட்டத்தின் கீழ் ஒரு பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவினால் வரையறுக்கப்பட்டிருந்தது. ஒரு பண அலகின் வாங்குதிறன் அப்பொன் பணத்தின் எடை அளவுக்கு சமமாக நிர்வகிக்கப்பட்டு வந்தது.

**25. நெகிழிப் பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.**

அட்டையில் அறிமுகப்படுத்தப்பட்ட பணம் நெகிழிப்பணம். நெகிழிப் பணம் நடைமுறையில் உள்ள காகிதப் பணத்திற்க்கு ஒரு மாற்றாகும்.

உதாரணம்.
ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை, முன்கூட்டியே பணம் செலுத்தப்பட்ட அட்டை, வணிக நிறுவன அட்டை பரிவர்த்தனைக்காக ரொக்கப் பணம் கையில்கொண்டு வருவதை தவிர்ப்பதுதான் இவ்வகைப் பணத்திக் நோக்கம் ஆகும்.

**26. பணவீக்கம் என்பதன் இலக்கணம் தருக.**

பணவீக்கம் என்பது தொடர்ச்சியான மற்றும் குறிப்பிடும் படியான பொது விலைமட்ட அதிகரிப்பு ஆகும். சற்று விளக்கமாககூறினால்,பணவீக்கம் என்பது பண்டங்கள் மற்றும் பணிகளில் பொது விலை மட்ட அதிகரிப்பு விகிதத்தையும், அதன் விளைவாக பணத்தின் வாங்கும் சக்தி குறைவதையும் காட்டுகிறது.

குறைந்த அளவு பண்டங்களை அதி அளவு பணம் துரத்தும் நிலை"

**- கோல்பர்ன்**

"வாங்கும் சக்திக்கான அளவின் அசாதாரண குறைவு நிலையாகும்"

**- கிரிகெரி**

**27. தேக்கவீக்கம் என்றால் என்ன?**

**தேக்கவீக்கம்** (Stagflation)

தேக்கவீக்கம் என்பது பொருளாதார வளர்ச்சியில் தேக்க நிலையும், வேலைவாய்ப்பின்மையும், அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும்.

**பகுதி - இ.**

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடையளி.**

**28. உலோகப் பணம் பற்றி ஒரு குறிப்பு வரைக.**

£sh ©õØÖ •øÓ ©ØÖ® £sh¨ £n•øÓUS¨ ¤ß |ÃÚ £n •øÓPÒ போன்ற ஆரம்பித்தது. அதில் முதன்மையானது உலோகப் பணத்திட்டம் ஆகும். உலோகத்திட்டத்தில் தங்கம், வெள்ளி போன்ற ஏதாவது ஒரு உலோகம் பணத்தின் திட்ட மதிப்பினைநிர்ணயிக்கப் பயன்படுத்தப்பட்டது. உலோகத் திட்டத்தின் கீழ் உலோகநாணயங்கள் பணமாகஉருவாக்கப்பட்டன. இந்தநாணயங்கள் முழு மதிப்பு பணமாகஅல்லது முழு நிறையுடைய சட்டமுறை பணமாகஇருந்து வந்தன. அதாவது அந்நாணயங்களில் முகமதிப்பு மற்றும் உள்ளடக்க மதிப்பு ஆகிய இரண்டும் சமமாகஇருந்தன.

**29. பண அளிப்பு என்றால் என்ன?**

இந்தியாவில் காகிதப் பணங்கள் ரிசர்வ் பேங்க்ஆப் இந்தியாவாலும் நாணயங்கள் மத்திய அரசின் நிதித்துறையாலும் வெளியிடப்படுகின்றது. இது தவிர பொது மக்களால் வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள பல்வேறு வித கணக்குகளில் உள்ள இருப்புத் தொகைகளும் பணமாக கருதப்படுகின்றது. காகித பணங்கள் அதிகாரம் பெற்ற சட்ட பூர்வமான செலாவணியாகும்.

இந்திய ரிசர்வ்வங்கி பண அளிப்பில் M1, M2, M3 மற்றும் M4 என நான்கு வகையிலான அளவீடுகளை செய்கின்றது:

M1 = காகிதப்பணம், நாணயங்கள் மற்றும் கேட்பு வைப்புகள்

M2 = M1 + அஞ்சலகசேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்

M3 = M2 + அனைத்து வணிகவங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளிலுள்ளகால வைப்புகள்

M4 = M3 + அஞ்சலகத்திலுள்ளஅனைத்து வைப்புகள்.

இதில் M1 மற்றும் M2 குறுகிய பணம் என்றழைக்கப்படுகிறது. மேலும் M3 மற்றும் M4 பரந்தநிலைபணம் என்றழைக்கப்படுகிறது.

மேற்கூறிய M1 முதல் M4 வரையிலான வகைப்பாட்டு வரிசையில் பணத்தின் நீர்மைத் தன்மை தொடர்ச்சியாக குறைந்து வருவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

www.Padasalai.Net

**30. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?**

**பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள்**

**1. ரொக்க வைப்பு விகிதம் (Cash Deposit Ratio - CDR).** இது பொது மக்கள் கையில் வைத்திருக்கும் பணம்/வங்கி வைப்புக்களில் உள்ள பணம் என்ற விகிதத்தை குறிக்கும்.

**2. ரொக்க இருப்பு வைப்பு விகிதம் (Reserve Deposit Ratio - RDR).** "வங்கி தனது பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்திருக்கும் இருப்பு மற்றும் மைய வங்கியில் வைத்திருக்கும் ரொக்க வைப்பு/மொத்த வைப்புகள்" என்ற விகிதம்.

**3. ரொக்க இருப்பு விகிதம் (Cash Reserve Ratio - CRR).** "வங்கியில் வைப்புகளில் குறைந்தபட்சமாக மைய வங்கியில் வைக்க வேண்டிய அளவு/வங்கிகளில் செலுத்தப்பட்ட மொத்த வைப்புக்கள்" என்ற விகிதம்.

4. **சட்ட பூர்வ நீர்மை விகிதம் (Statutory Liquidity Ratio - SLR).** "வணிக வங்கிகள் வைத்திருக்கும் நீர்மை தன்மையிலான சொத்துக்கள்/வணிக வங்கிகளில் இருக்கும் மொத்த கேட்பு மற்றும் கால வைப்புகள்" என்ற விகிதம்

**31. பணவீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக.**

1.தவழும் பணவீக்கம்

தவழும் பணவீக்கம் மிக குறைவான மற்றும் எளியைமாள விகித்தில் பணவீக்க விகிதம் இருப்பதாகும்.

2. நடக்கும் பணவீக்கம்

பணவீக்கம் மிதமான வேகத்தில் ஒற்றை இலக்கத்தில், அதாவது 3 முதல் 9 சதவிகிதத்தில், இருந்தால் அது நடக்கும் பணவீக்கம் அல்லது நகரும் பணவீக்கம் என்றழைக்கப்படுகிறது.

3.ஓடும் பணவீக்கம்

ஆண்டு பணவீக்கம் விகிதம் 10 முதல் 20 சதவிகிதத்ற்குள் இருந்தால் அது ஓடும் பணவீக்கம் எனப்படுகிறது.

**இதர காரணிகள் (தூண்டும் அடிப்படையில்)**

**i) காகிதப்பண பணவீக்கம் (Currency Inflation)**

அளவுக்கு அதிகமான காகிதப் பணத்தை மைய வங்கி பயன்பாட்டிற்கு விடுவிக்கும் பொழுது ஏற்படும் விலைவாசி உயர்வு காகிதப் பணவீக்கம் எனப்படுகிறது.

**ii) கடன்பண பணவீக்கம் (Credit Inflation)**

வணிகவங்கிகள் தாராளமாக கடனை அளிக்கும் பொழுது ஏற்படும் விலைவாசி உயர்வினை கடன்பண பணவீக்கம் ஆகும்.

**iii) வரவு-செலவு பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம் (Deficit Induced Inflation)**

வரவு-செலவுத் திட்டத்தினால் ஏற்படும் பற்றாக்குறையை( Budget Deficit) சரி செய்யும் நிதியாக்க முறைகளில் ஒன்றாக, மையவங்கி மூலம் கூடுதல் காகிதப் பணத்தினை அச்சிட்டு பயன்பாட்டிற்கு விடப்படுகிறது. இக்கூடுதல் பணத்தினால் ஏற்படும் விலைவாசி உயர்வினை வரவு-செலவு பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம் என்கிறோம்.

**iv) இலாபத் தூண்டல் பணவீக்கம் (Profit Induced Inflation)**

அதிக இலாபத்தினை பெறும் நோக்கில் பொருட்களின் விலையில் உயர் இலாப விகித்தை சேர்ப்பதால் பொருட்களின் விலை அதிகரிக்கின்றது. இதுவே இலாபத் தூண்டல் பணவீக்கம் ஆகும்.

**v) பொருள் பற்றாக்குறைதூண்டல் பணவீக்கம் (Scarcity Induced Inflation)**

விவசாயம் போன்ற துறைகளில் இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் இதர காரணங்களால் உற்பத்தி பாதிக்கப்படும்பொழுது பொருள் பற்றாக்குறை ஏற்படும். மேலும், பதுக்கல் நடவடிக்கையினாலும் கருப்புச் சந்தையினாலும் பொருள் பற்றாக்குறை ஏற்படும். இப்பற்றாக்குறைகளினால் ஏற்படும் விலைவாசி உயர்வினை பொருள் பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம் என்கிறோம்.

**vi) வரி தூண்டல் பணவீக்கம் (Tax Induced Inflation)**

மறைமுக வரிகளான கலால்வரி, சுங்கவரி மற்றும் விற்பனைவரி ஆகியவற்றில் ஏற்படும் உயர்வு காரணமாக விலைவாசி உயர்ந்து செல்வது வரி தூண்டல் பணவீக்கம் எனப்படுகிறது. உதாரணத்திற்கு பெட்ரோல் மற்றும் டீசல் பொருட்கள் மீதான வரி உயர்வு பணவீக்கத்தை தூண்டுகிறது. இவ்வகையான பணவீக்கத்தைவரிவீக்கம் (Taxflation) எனவும் அழைக்கிறோம்..

**32. தேவை-இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினைவிளக்குக.**

**கூலி-விலைசுழல்**

கூலி-விலை சுழல் மூலம் கூலி உயர்வுக்கும் பணவீக்கத்திற்கும் இடையேயான காரண-விளைவு உறவு விளக்கப்படுகிறது. கூலி உயரும் பொழுது செலவிடத்தகுந்த வருவாய் உயருகிறது; இதனால் பொருட்களுக்கான தேவை உயருகின்றது; தொடர்ந்து பொருட்களுக்கான விலையும் உயருகின்றது; இதன் விளைவாக பணவீக்கம் ஏற்படுகிறது; விலைவாசி உயர்வின் காரணமாக தொழிலாளர்கள் கூலி உயர்வினை கோருவார்கள்; இது உற்பத்திச் செலவினைமீண்டும் உயர்த்தி பொருட்களின் விலையை மீண்டும் மேல்நோக்கி உயர்த்ததூண்டும் ஒரு சுழலை ஏற்படுத்துகிறது

**33. பண மதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளைவிளக்குக.**

**கேம்பிரிட்ஜ் அணுகுமுறை (ரொக்கஇருப்பு அணுகுமுறை)**

**i) மார்ஷலின் சமன்பாடு**

மார்ஷலின் சமன்பாடு பின்வருமாறு:

**M = KPY**

இங்கு,

M = பணத்தின் அளவு

Y = சமுதாயத்தின் மொத்தஉண்மைவருமானம்

P = பொது விலைமட்டம்

K = மக்கள் தங்கள் கையில் ரொக்கமாக வைத்திருக்க விரும்பும் சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானத்தின் ஒரு பகுதி

மேற்கண்ட சமன்பாட்டினை மாற்றி எழுதும் பொழுது, P=M/KY என்று பொது விலை மட்டத்தினை(P) காண உதவுகிறது. மேலும் அதனை தலைகீழியாக மாற்றி எழுதும் பொழுது நமக்கு 1/P=KY/M என பணத்தின் வாங்கும் சக்தி, அதாவது பண மதிப்பினை கண்டறிய முடிகிறது.

இறுதியாககூறப்பட்ட 1/P=KY/M என்ற சமன்பாட்டினை மேலும் சற்று விளக்கமாக கூறவேண்டுமெனில், மக்கள் தங்கள் கையில் வைத்திருக்க விரும்பும் உண்மை வருமானத்தை (KY= மொத்த பணத் தேவையின் அளவு) பண அளிப்பினால் (M) வகுத்தால் பணத்தின் மதிப்பினை கண்டறியலாம்.

மார்ஷல் கூற்றுப்படி, பண அளவு (M) என்ற காரணியை விட மக்கள் தங்கள் கையில் ரொக்கமாக வைத்திருக்க விரும்பும் உண்மை வருமானத்தின் பகுதி (K என்ற கெழு) பணமதிப்பினை தீர்மானிப்பதில் மிகமுக்கிய பங்கினைவகிக்கறது.

**34. மீள்பணவீக்கம் பற்றி விளக்குக?**

**மீள்பணவீக்கம் (Disinflation)**

வேலைவாய்ப்பினை பாதிக்காத வகையில் கடன்களை (வங்கிக்கடன், தவணைமுறைகள் கொள்முதல் முறைகளை) கட்டுப்படுத்துவதன் மூலமும் பணவீக்கத்தினை குறைத்து வருவது மீள் பணவீக்கம் ஆகும். மீள் பணவீக்கம் என்பதனை பின்வருமாறு வரையறுக்கலாம்: “வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தாமலும், உற்பத்தி அளவுகள் குறையாமலும் பணவீக்கத்தை திருப்பும் செயல்முறையே மீள்பணவீக்கம் ஆகும்”.

**பகுதி - ஈ.**

**பினவரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.**

**35. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினைவிளக்குக.**

**அ) ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு**

பண அளவுக் கோட்பாடு என்பது மிகபழமையான கோட்பாடு ஆகும். இது 1588- ஆம் ஆண்டு டாவன்ஷட்டி என்ற இத்தாலிய பொருளியல் அறிஞரால் முன் மொழியப்பட்டது. ஆனால், நவீன வடிவிலான இக்கோட்பாட்டினை உருவாக்கிய புகழ் முழுதும் “பணத்தின் வாங்கும் சக்தி” (1911) என்ற நூலை எழுதிய அமெரிக்க பொருளியலறிஞரான இர்விங் ஃபிஷரைச் சாரும். இவர் தனது கோட்பாட்டினை“ பரிவர்த்தனைக்கான சமன்பாடு” என்று கணித சமன்பாட்டின் வாயிலாக வழங்கியுள்ளார்.

இச்சமன்பாட்டின் பொது வடிவம் ஆகும்.

இங்கு,

MV = PT

M = மொத்த(காகித) பண அளவு

V = பணத்தின் சுழற்சி வேகம்;
P = பொது விலைமட்டம்
T = வாணிபத்தின் அளவு

∴பிஷர்ஒரு நாட்டில் குறிப்பிட்ட கால அளவில் மொத்தபண அளிப்பு (MV) என்பது நாட்டில் வாங்க-விற்கப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் அளவின் பண மதிப்பிற்கு (அதாவது மொத்தபணத்தேவைக்கு) (PT) சமமாகஇருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

MV = PT

**பண அளிப்பு = பணத்தேவை**

இச் சமன்பாடு "ரொக்க பரிவர்த்தனைசமன்பாடு" என்றும் அழைக்கப்படுகிறது.

36. பணத்தின் பணிகளை விளக்குக.

**பணத்தின் பணிகள்**

**i) பணம் ஓர் பரிவர்த்தனை கருவியாக:** இது பணத்தின் அடிப்படை பணியாகும். பணம் பொது ஏற்புத் தன்மையைக் கொண்டது. மேலும், இது அனைத்து பரிவர்த்தனைகளிலும் தவறாது இடம் பெறுகிறது. பணத்தை பயன்படுத்தி செய்யும் பரிவர்த்தனைகளை இரு பகுதிகளாக பார்க்கலாம். முதலில் மற்றொருவருக்கு பொருட்களை வழங்கும்பொழுது பணம் பெறப்படுகிறது. இந்தசெயல் விற்பனை எனப்படுகிறது. இரண்டாவதாக, பொருட்களை நாம் வாங்கும் பொழுது பணம் செலுத்தப்படுகிறது. இது கொள்முதல் எனப்படுகிறது. ஆகவே, நவீன பரிவர்த்தனைகளில் பணம் ஒரு இடையீட்டு கருவியாக செயல்பட்டு வருகிறது.

**ii) பணம் ஓர் மதிப்பின் அளவுகோலாக:** பொருட்கள் மற்றும் பணிகளை மதிப்பளவை செய்வது பணத்தின் இரண்டாவது முக்கிய பணியாகும். பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்புகளை பண அலகில் விலைகளாக வெளிப்படுத்தப்படுகிறது. ஆகவே, பணம் ஒரு பொது அளவுகோலாக பார்க்கப்படுகிறது. இதனால் சமுதாயத்திலுள்ள பல்வேறு பொருட்களுக்கான பாரிவர்த்தனை விகிதங்களை எளிதாக தீர்மானிக்க உதவுகிறது.

**2. இரணடாம் நிலைபணிகள்**

**i) பணம் ஒரு மதிப்பு நிலைகலனாக:** பொருட்களை சேமிப்பாக வைத்திருந்தால் அது நிலைத்திருக்காது. ஆனால் பணம் கண்டுபிடிக்கப்பட்ட பின் பொருள் மற்றும் பணியினை சேமித்து வைப்பதில் உள்ள சிக்கல்கள் மறைந்துவிட்டன. பணம் நீர்மைத் தன்மையைக் கொண்டிருப்பதனால், அதை எப்பொழுது வேண்டுமானாலும் நிலம், இயந்திரம் மற்றும் தளவாடம் என எளிதாக சந்தைப்படுத்தப்படும் சொத்துக்களாக மாற்றிக் கொள்ளலாம். அவ்வகை சொத்துக்களை மீண்டும் பணமாகவும் மாற்றிக் கொள்ள இயலும். ஆகவே, பணம் மிகச் சிறந்த மதிப்பின் நிலைக்கலனாக செயல்படுகிறது. அதே சமயம், பணத்தின் மதிப்பு ஓரளவுக்கு நிலைத்தன்மை கொண்டதாக இருந்தால் தான் இவ்வகையில் தனது பணியை சிறப்பாக செய்யமுடியும்.

**ii) பணம் வருங்கால செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை:** பண்டமாற்று முறையில் கடன் வாங்குவதிலும் திருப்பிச் செலுத்துவதிலும் சிக்கல் நிறைந்திருந்தது. கடனுக்குப் பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளை திருப்பிச் செலுத்தும்பொழுது மதிப்பு மாற்றத்தினால் எந்தஅளவு பொருட்களை, பணிகளை திருப்பிச் செலுத்துவது என்ற சிக்கல் இருந்தது. ஆனால், இன்றைய நவீன பொருளாதாரத்தில் கடன்களை பெறுவதையும், திரும்பச் செலுத்துவதையும் பணம் எளிதாக்குகிறது. அதாவது பணம் வருங்கால செலுத்துதல்களுக்கு இடையீட்டுக் கருவியாக செயல்படுகின்றது.

i)**பணம் வாங்குதி றனை மாற்றிக்கொள்ளும் ஒரு கருவியாக:** பொருளாதார வளர்ச்சியினை ஒட்டி பரிவர்த்தனை விரிவடைந்து செல்கிறது. தூரப் பகுதிகளுக்கு இடையிலும், எல்லை கடந்தும் பரிவர்த்தனைகள் நடைபெறுகிறது. இதனால், ஓரிடத்திலிருக்கும் வாங்குதிறன் மாற்றொரு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. பணம் என்ற கருவி இந்த பணியினை எளிதாகவும் விரைவாகவும் செய்கிறது.

**3. துணைப்பணிகள்**

**i) கடனுக்கான அடிப்படை:** கடன் முறைக்கு அடிப்படையாக பணம் அமைந்துள்ளது. வணிக பரிவர்த்தனைகள் ரொக்கத்திலோ அல்லது கடனிலோ நடைபெறுகிறது. உதாரணத்திற்கு, வங்கி வைப்பினை வைத்திருக்கும் ஒருவர் அவர் கணக்கில் போதிய அளவு ரொக்க பண இருப்பு இருக்கும்பொழுது மட்டுமே காசோலைகளை பயன்படுத்துவார். வணிக வங்கிகள் வாடிக்கையாளர் கணக்குகளிலுள்ள ரொக்க இருப்பின் அளவைப பொறுத்தே கடன்களை உருவாக்கின்றன. ஆகவே, ரொக்க

பணமே கடனுக்கான அடிப்படையாகஅமைகிறது.

**ii) பணம் தேசிய வருவாய் பங்கீட்டிற்கு உதவுகிறது:** பண்டமாற்று முறையில் தேசிய வருவாய் பங்கீடானது மிகச் சிக்கலான ஒன்றாகும். ஆனால், பணம் என்ற கருவி கண்டறியப்பட்ட பின் வாரம், கூலி, வட்டி மற்றும் இலாபம் என காரணிகளுக்கான வருமானத்தை, அதாவது தேசியவருவாயை எளிதாக பகிர்ந்தளிக்க முடிகிறது.

**iii) இறுதிநிலைப் பயன்பாடுகளை ஒப்பிடவும், இறுதிநிலை உற்பத்தி திறன்களை ஒப்பிடவும் பணம் பயன்படுகிறது:** நுகர்வோர் தனது மொத்த பயன்பாட்டினை உச்சநிலைப்படுத்தும் நோக்கில் தான் நுகரும் பல்வேறு பொருட்களின் இறுதிநிலைப் பயன்பாடுகளை பணத்தின் துணையுடன் சமப்படுத்தவேண்டியதாகிறது. ஏனெனில், பொருட்களின் விலைபணத்தில் உள்ள நிலையில் இறுதிநிலைப் பயன்பாடுகள் பணத்தின் அலகுகளில் வெளிப்படுத்தும் பொழுதான் அவைகளை ஒப்பிட்டு பயன்பாட்டினை உச்சநிலைப்படுத்த முடியும். அதேபோல், உற்பத்தியாளர் தனது இலாபத்தினை உச்சநிலைப்படுத்த பல்வேறு காரணிகளின் இறுதிநிலை உற்பத்தி திறனை பண அளவுகளில் ஒப்பிட வேண்டியுள்ளது.

**iv) பணம் மூலதனத்தின் உற்பத்தி திறனை உயர்த்துகிறது:** மூலதனம் பல்வகை வடிவங்களில் காணப்படுகிறது. பணம் நீர்மைத் தன்மை கொண்ட ஒரு மூலதனமாகும். அதாவது, பணம் மூலதனத்தை எளிய முறையில் பிறவகை மூலதனமாக மாற்றலாம். பிறவகை மூலதனங்களை பணமாகவும் மாற்றலாம். ஆகவே, உற்பத்தியில் குறைந்த இறுதிநிலை உற்பத்தி திறன் கொண்ட ஒரு மூலதனத்தை மாற்றி, அந்த இடத்தில் அதிக இறுதிநிலை உற்பத்தித் திறன் கொண்ட மற்றொரு மூலதனத்தை கொணர பணம் துணைசெய்கின்றது.

**4. இதரபணிகள்**

**i) திரும்பச் செலுத்தும் திறனை தக்கவைக்கபணம் உதவுகிறது:** பணம் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு சாதனமாகும். நிறுவனங்கள் தங்களின் செலுத்துதல்களை மேற்கொள்ள எப்பொழுதும் குறிப்பிட்ட அளவு ரொக்க பணத்தை தயார் நிலையில் வைத்திருக்கும். இதேபோல், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களும் கூட தங்களது திரும்பச் செலுத்தும் திறனை தக்க வைத்துக் கொள்ள பணத்தை தயார் நிலையில் வைத்திருக்கும்.

**ii) பணம் பொதுமைப்படுத்தப்பட்ட வாங்கு திறனை குறிக்கிறது:** பணம் என்ற வாங்குதிறன் கொண்ட சாதனத்தைக்கொண்டு எதை வாங்குவதற்கு வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். எந்த குறிப்பிட்ட நோக்கத்திற்காக அந்த பணம் என்ற வாங்குதிறன் சேமித்து வைக்கப்பட்டதோ, அதை மட்டுமே வாங்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

**iii) பணம் மூலதனத்திற்கு நீர்மைத் தன்மையைதருகிறது:** பணம் என்பது நீர்மைத் தன்மை கொண்ட ஒரு மூலதனமாகும். இதன் துணையுடன் அனைத்து இடுபொருட்களை வாங்குவதன் மூலம் எந்த ஒரு செய்பொருளையும் உற்பத்தி செய்ய இயலும்

37. ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கத்திற்கான காரணங்கள் மற்றும் விளைகள் யாவை?

**இதரகாரணிகள் (தூண்டும் அடிப்படையில்)**

**i) காகிதப் பண பணவீக்கம்** **(Currency Inflation)**

அளவுக்கு அதிகமான காகிதப் பணத்தை மையவங்கி பயன்பாட்டிற்கு விடுவிக்கும் பொழுது ஏற்படும் விலைவாசி உயர்வு காகிதப் பணவீக்கம் எனப்படுகிறது.

**ii) கடன்பண பணவீக்கம்** **(Credit Inflation)**

வணிக வங்கிகள் தாராளமாக கடனை அளிக்கும்பொழுது ஏற்படும் விலைவாசி உயர்வினை கடன்பண பணவீக்கம் ஆகும்.

**ii) வரவு-செலவு பற்றாக்குறைதூண்டல் பணவீக்கம்** **(Deficit Induced Inflation)**

வரவு-செலவுத் திட்டத்தினால் ஏற்படும் பற்றாக்குறையை (Budget Deficit) சரிசெய்யும் நிதியாக்க முறைகளில் ஒன்றாக, மைய வங்கி மூலம் கூடுதல் காகிதப் பணத்தினை அச்சிட்டு பயன்பாட்டிற்கு விடப்படுகிறது. இக்கூடுதல் பணத்தினால் ஏற்படும் விலைவாசி உயர்வினை வரவு-செலவு பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம் என்கிறோம்.

**iv) இலாபத் தூண்டல் பணவீக்கம்** **(Profit Induced Inflation)**

அதிக இலாபத்தினை பெறும் நோக்கில் பொருட்களின் விலையில் உயர் இலாப

விகித்தை சேர்ப்பதால் பொருட்களின் விலை அதிகரிக்கின்றது. இதுவே இலாபத் தூண்டல் பணவீக்கம் ஆகும்.

**v) பொருள் பற்றாக்குறைதூண்டல் பணவீக்கம் (Scarcity Induced Inflation)**

விவசாயம் போன்ற துறைகளில் இயற்கைஇடர்ப்பாடுகள் மற்றும் இதர காரணங்களால் உற்பத்தி பாதிக்கப்படும்பொழுது பொருள் பற்றாக்குறை ஏற்படும். மேலும், பதுக்கல் நடவடிக்கையினாலும் கருப்புச் சந்தையினாலும் பொருள் பற்றாக்குறை ஏற்படும். இப்பற்றாக்குறைகளினால் ஏற்படும் விலைவாசி உயர்வினை பொருள் பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம் என்கிறோம்.

**viவரி தூண்டல் பணவீக்கம் (Tax Induced Inflation)**

மறைமுக வரிகளான கலால்வரி, சுங்கவரி மற்றும் விற்பனைவரி ஆகியவற்றில் ஏற்படும் உயர்வு காரணமாக விலைவாசி உயர்ந்து செல்வது வரி தூண்டல் பணவீக்கம் எனப்படுகிறது. உதாரணத்திற்கு பெட்ரோல் மற்றும் டீசல் பொருட்கள் மீதான வரி உயர்வு பணவீக்கத்தை தூண்டுகிறது. இவ்வகையான பணவீக்கத்தை வரிவீக்கம் (Taxflation) எனவும் அழைக்கிறோம்.

**38. வணிகச் சுழற்ச்சியின் பல்வேறு கட்டங்களைவிவரிக்க.**

Page no.: 105 image

வணிகச் சுழற்ச்சியினை உற்று நோக்கும்பொழுது அதனுடைய நான்கு கட்டங்கள் வெளிப்படும். அவைகள் முறையே i) பூரிப்பு, ii) பின்னிறக்கம், iii) மந்தம், மற்றும் iv) மீட்சி எனப்படுகின்றன.

வணிகச் சுழற்ச்சியின் பல்வேறு கட்டங்களை **வரைபடம்** தெளிவாகக்காட்டுகின்றது.

**i) பூரிப்பு கட்டம் (Boom)**

நீண்டகால இயல்பான வளர்ச்சி நிலைக்கு மேல் பொருளாதார நடடிவக்கைகள் உயர்ந்து முழு வேலைவாய்ப்பு நிலையை தாண்டுவது வணிகச் சுழலின் வளர்ச்சிக் கட்டம் எனப்படுகிறது. இக்காலகட்டத்தில பொருள் உற்பத்தி, பணக்கூலி, லாபம், மற்றும் வட்டி விகிதங்கள் உயரும். வங்கிக்கடன் தேவைகள் உயரும். பொதுவாகஅனைத்து தரப்பினரிடமும் நம்பிக்கைகள் உயரும். வளர்ச்சிக்கட்டத்தின் உச்சத்தில் பூரிப்புநிலை(Boom) தோன்றும். பூரிப்பு நிலையில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உச்சநிலையில் இருக்கும்.

**ii) பின்னிறக்கம் (Recession)**

வளர்ச்சியின் உச்சத்தில் பூரிப்பைஎய்திய பொருளியல் நடவடிக்கைகள் அடுத்ததாககீழ்நோக்கி திரும்புகின்றன. பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு நடடிவக்கைகள் பின்னோக்கி திரும்புவதை பின்னிறக்கம் என்கிறோம். இக்கட்டத்தில் உற்பத்தி, பணக்கூலி, லாபம் மற்றும் வட்டி விகிதம் ஆகியன குறையத் துவங்கும். நிறுவனங்கள் தோல்வியடைய துவங்கும். வணிகர்கள் தாங்கள் அகலக்கால் வைத்து வணிகத்தை விரிவாக்கிவிட்டதை உணர்வார்கள். நம்பிக்கைகள் இருந்த இடத்தில் அவநம்பிக்கைள் தோன்ற ஆரம்பிக்கும். இதன் காரணமாக முதலீட்டை பெருமளவுக்கு குறைக்க ஆரம்பிப்பார்கள். தோடர்ந்து உற்பத்தி, வருமானம் ஆகியன குறைந்து வரும். பங்குச் சந்தையில் விலை வீழ்ச்சியின் காரணமாகபெரும் அச்சம் உருவாகும். வணிகநடடிவக்கைகள் சுணக்கமடையும். மக்களின் நீர்மைவிருப்பம் அதிகரித்து பணத்தை ரொக்கமாககையில் வைத்துக்கொள்ளவிரும்புவதால் பணச்சந்தைநடவடிக்கைகள் சுருங்க ஆரம்பிக்கும்.

**iii) மந்தம் (Depression)**

வணிக சுழற்ச்சியின் மூன்றாவது கட்டமான மந்தகாலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்பு நிலைக்குகீழ் மிகத் தீவிரமாக குறைந்து வரும். நிறுவனங்கள் நட்டமடைவதும், மூடப்படுவதும் பொது இயல்புகளாக இருப்பதுடன் வேலைவாய்ப்பின்மையையும் ஏற்படுத்தும். வட்டி, இலாபம் மற்றும் கூலி ஆகியன மிகக்குறைந்த அளவில் இருக்கும். விவசாயிகளும், கூலி வேலை செய்வோரும் அதிகபாதிப்புக்குள்ளாவார்கள். வணிகர்களுக்கு கடன் வழங்குவதில் வங்கிகள் தயக்கம் காட்டும். வணிகச் சுழற்ச்சியின் மிக மோசமான கட்டம் மந்தம் ஆகும். ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வாங்கும் சக்தி இல்லாததால் கிடங்குகளில் தேக்கமடைய செய்யும். மந்தத்தின்

கீழ் நிலை“தொட்டி” (Trough) என்றழைக்கப்படுகிறது. எவ்வாறு ஒருவர் மிக ஆழமான தொட்டிக்குள் தவறி விழுந்துவிட்டால் பிறர் உதவியின்றி எளிதில் அவரால் மீள முடியாதவோ, அதுபோல பொருளாதார நடடிவக்கைள் மந்த நிலையின் ஆழத்தில் விழுந்துவிட்டால், வெளியார் உதவியின்றி தானே மீள இயலாத நிலையை குறிக்க “தொட்டி” என்ற கருத்து பயன்படுத்தப்படுகிறது.

**iv) மீட்சி (Recovery or Revival)**

மந்தநிலைக்குப் பின் மீட்சி இடம்பெறுகிறது. இது, மந்தத்திலிருந்து பொருளாதார நடடிவக்கைகள் மேல்நோக்கி திரும்பும் நிகழ்வாகும். முதலில், மூலதன பொருட்களுக்கான தேவைமீட்சி பெறுவதில் துவங்குகிறது. அரசால் செய்யப்படும் தன்னிச்சை முதலீடுகள் (Autonomous Investments) பொருளாதார நடவடிக்கைகளை மேல்நோக்கி திரும்ப ஊக்கமளிக்கின்றன. அம்முதலீடுகள் மூலம் கிடைக்கும் வேலைவாய்ப்புகளினால் ஏற்படும் வருமானம் பொருட்களுக்கான தேவையை மெதுவாக உயர்த்துகிறது. கிடங்குகளில் தேக்கமடைந்த பொருட்கள் காலியாக துவங்குகிறது. இதனால், தனியார் முதலீடுகள் மெதுவாக அதிகரித்து, பொருளாதார நடடிவக்கைகளான வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருவாய், கூலி, லாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.

## அத்தியாயம் 6 வங்கியியல்

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. ஒரு வங்கி என்பது

அ) நிதி நிறுவனம் ஆ) கூட்டு பங்கு நிறுவம் இ) தொழில் ஈ) சேவை நிறுவனம்

**அ) நிதி நிறுவனம்**

2. ஒரு வணிக வங்கி செய்யும் சேவை

அ) வைப்புகளை ஏற்றுக் கொள்வது ஆ) கடன் வழங்குவது இ) அ மற்றும் ஆ. ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

**இ) அ மற்றும் ஆ.**

3. வணிக வங்கிகளின் பணிகளின் இரு பெரும் பிரிவு

அ) முதன்மைப் பணிகள்
ஆ) இரண்டாம் நிலைபணிகள்
இ) மற்ற பணிகள்
ஈ) மேற்சொன்ன அனைத்தும்

**ஈ) மேற்சொன்ன அனைத்தும்**

4. வங்கிக்கடன் என்பது எதைக் குறிக்கிறது?

அ) கடன் பணம் ஆ) முன்பணம் இ) கடன் பணம் மற்றும் முன்பணம் ஈ) கடன் பெறுதல்

**இ) கடன் பணம் மற்றும் முன்பணம்**

5. கடன் உருவாக்கம் என்பதன் பொருள்

அ) கடன் மற்றும் முன்பண பெருக்கம் ஆ) வருவாய் இ) செலவு ஈ) சேமிப்பு

**அ) கடன் மற்றும் முன்பண பெருக்கம்**

6. வங்கியல்லா நிதிநிறுவனங்கள் ------- -------- வைத்திருப்பதில்லை.

அ) வங்கி உரிமம் ஆ) அரசு அங்கீகாரம் இ) பணச்சந்தை அங்கீகாரம் ஈ) நிதி அமைச்சக அனுமதி

**அ) வங்கி உரிமம்**

7. மைய வங்கி நாட்டின் ------------- அதிகார அமைப்பு.

அ) பணவியல் ஆ) நிதியியல் இ) கூலி ஈ) தேசிய வருவாய்

**அ) பணவியல்**

8. வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது

அ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஆ) நபார்டு இ) ICICI ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

**ஈ) இந்திய ரிசர்வ்வங்கி**

9. கடைசி நேரத்தில் உதவும் உற்ற நண்பன் என்ற பணியினைச் செய்வது

அ) மைய வங்கி ஆ) வணிக வங்கிகள் இ) நிலவளவங்கிகள் ஈ) கூட்டுறவு வங்கிகள்

**அ) மைய வங்கி**

10. வங்கி விகிதம் என்பது

அ) முதல் நிலை பத்திரங்களை மறு தள்ளுபடி செய்வது

ஆ) வட்டி விகிதம் இ) அந்நிய செலாவணி ஈ) வளர்ச்சி விகிதம்

**அ) முதல் நிலை பத்திரங்களை மறு தள்ளுபடி செய்வது**

11. ரெப்போ விகிதம் என்பதன் பொருள்

அ) வணிக வங்கிகள் ரிசர்வ்வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்

ஆ) ரிசர்வ்வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்

இ) அந்நிய செலாவணி விகிதம்

ஈ) நாட்டின் வளா;ச்சி விகிதம்

**ஆ) ரிசர்வ்வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்**

12. நெறிமுறை தூண்டல் என்பது

அ) உத்தமநிலைப் படுத்தல் ஆ) உச்சநிலைப்படுத்தல் இ) தூண்டுதல் நடவடிக்கை

ஈ) குறைவு நிலைப்படுத்துதல்

**இ) தூண்டுதல் நடவடிக்கை**

13. விவசாய மறுநிதி மேம்பாட்டுக்கழகம் துவங்கப்பட்டது

அ) ஜூன் 3, 1963 ஆ) ஜூலை3. 1963 இ) ஜூன் 1, 1963 ஈ) ஜூலை1, 1963.

**ஈ) ஜூலை1, 1963**

14. நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?

அ) ஜூலை1962 ஆ) ஜூலை1972 இ) ஜூலை1982 ஈ) ஜூலை1992

**இ) ஜூலை1982**

15. ஏற்றுமதி-இறக்குமதி வங்கி துவங்கப்பட்டது?

அ) ஜூன் 1982 ஆ) ஏப்ரல் 1982 இ) மே1982 ஈ) மாh;ச் 1982

**ஈ) மார்ச் 1982**

16. மாநில நிதிக்கழகம் எந்த சட்டத்தின் கீழ் துவங்கப்பட்டது?

அ) இந்திய அரசு ஆ) தமிழக அரச இ) யூனியன் பிரதேசம் ஈ) உள்துறை அரசு.

**அ) இந்திய அரசு**

17. பணவியல் கொள்கையைவடிமைப்பது

அ) கூட்டுறவு வங்கிகள் ஆ) வணிக வங்கிகள் இ) மைய வங்கி ஈ) வெளிநாட்டு வங்கி

**இ) மைய வங்கி**

18. நிகழ்நிலைவங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ) இ-வங்கி ஆ) இணைய வங்கி இ) ஆர்.டி.ஜி.எஸ் ஈ) நெப்ட்.

**ஆ) இணைய வங்கி**

19. ஏ.டி.எம்.(ATM) என்பதன் விரிவாக்கம் என்ன?

அ) தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்

ஆ) சரி செய்து பணம் வழங்கும் இயந்திரம்

இ) தானாக பணம் வழங்கும் முறை

ஈ) எந்த நேரமும் பணம் (Any Time Money)

**அ) தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்**

20. 2016 ல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்பு பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது?

அ) 500 மற்றும் 1000 ஆ) 1000 மற்றும் 2000 இ) 200 மற்றும் 500 ஈ) மேற்சொன்னவை அனைத்தும்

**அ) 500 மற்றும் 1000**

**பகுதி – ஆ**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்**

**21. வணிக வங்கிகள் என்பதனை வரையறு.**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

வணிக வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புக்களைப் பெற்று, பேரளவில் உற்பத்தி செய்வோர், பெரிய மற்றும் நடுத்தர நிறுவனங்களிக்கு கடனை அளிக்கும் ஒரு நிதி அமைப்பு ஆகும்.

**22. கடன் உருவாக்கம் என்றால் என்ன?**

கடன் உருவாக்கம் வணிக வங்கிகளின் பணிகளில் மிகச் சிறந்த ஒன்றாகும். இது மேற்ச்சொன்ன பண அளிப்பினைஅதிகரிக்கும் பணியை ஒட்டி அமைந்ததாகும். கடன் உருவாக்கம் என்பது கடன்களையும், முன்பண அளிப்பினையும் அதிகரிக்கும் ஒரு செயல். மொத்த பண அளிப்பில் கடன் பணத்தின் அளவினைஅதிகரிப்பது கடன் உருவாக்கம் ஆகும்.

**23. மைய வங்கி என்பதனைவரையறு.**

JÆöÁõ¸ |õmiß ø©¯ Á[Q A¢u |õmiß uø»ø© Á[Q¯õS®. C¢v¯õÂß ø©¯ Á[Q C¢v¯ ›\ºÆ Á[Q GÚ AøÇUP¨£kQÓx.

**24. CRR மற்றும் SLR ஆகியவற்றினை வேறுபடுத்துக.**

A) öµõUP C¸¨¦ ÂQu®:

வணிக வங்கிகளிடம் வந்து சேரும் கேட்பு மற்றும் கால வைப்புகளில்
ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை அவைகள் மைய வங்கியில் இருப்பாக வைக்கவேண்டும். இது மைய வங்கி சட்டத்தின்படி பின்பற்ற வேண்டியது ஆகும். இதுவே, ரொக்க இருப்பு விகிதம் எனப்படுகிறது. ரொக்க இருப்பு விகிதம் எனப்படுகிறது. ரொக்க இருப்பு விகிதத்திற்கும் வணிக வங்கிகள் வழங்கும் கடன் அளவிற்கும் எதிர்மறை தொடர்பு உள்ளது. வணிக வங்களிடம் கூடுதலான பணம் உள்ள சூழ்நிலையில் அவைகள் தேவைக்கு அதிகமான கடன் பணத்தை உருவாக்க வாய்ப்பிருக்கிறது. இது பொருளாதாரத்தில் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே மைய வங்கி தனது அதிகாரமான ரொக்க இருப்பு விகிதத்தை உயர்த்துவதன் மூலம், வணிக வங்கிகளின் கடன் அளவை கட்டுப்படுத்துகிறது.

***

**25. வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறு.**

வெளிச்சந்தை நடவடிக்கைகள் **(Open Market Operations)**

ஒரு குறுகிய அளவில் பார்க்கும் பொழுது, மைய வங்கியானது பொதுச் சந்தையில் அரசின் கடன் பத்திரங்களை வெளியிடுவதும் திரும்பப் பெறுவதும் வெளிச்சந்தை நடவடிக்கைகள் எனப்படுகின்றது.

**26. கடன் விநியோகப் பகிர்வு என்றால் என்ன?**

**கடன் பங்கீடு (Rationing of Credit)**

இது ஒரு பழமையான கடன் கட்டுப்பாட்டு முறையாகும். முதன் முறையாக பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் மையவங்கியான இங்கிலாந்து வங்கியில் (Bank of England) இம்முறை பயன்படுத்தப்பட்டது. வணிக வங்கிகள் வழங்கும் கடன்கள் பல்வேறு நோக்கங்களுக்காக வழங்கப்படுகிறது. நாட்டின் பண அளிப்புச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அக்கடன் நோக்கங்களைப் பட்டியலிட்டு வரையறை செய்வதன் மூலம் கடன் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துவது ஆகும். இதில் பின்வரும் இருவகைகள் உள்ளன: மாறும் தொகுப்பு வரையறை(Variable Portfolio Ceiling) மற்றும் மாறும் மூலதன-சொத்து விகிதம் (Variable Capital-Asset Ratio).

**27. விவசாய கடன் வழங்கும் துறையின் பணிகளை குறிப்பிடுக.**

**விவசாய கடன் துறையின் பணிகள்**

அ) நிபுணத்துவம் பெற்ற அலுவலரைநியமித்து விவசாய கடன் தொடர்பான அனைத்து வினாக்களையும் ஆய்வு செய்வது.

ஆ) மைய அரசு, மாநில அரசு, மாநில கூட்டுறவு வங்கிகள், மற்றும் இதர வங்கி நடவடிக்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனைகளை வழங்குவது.

இ) ஊரகத் துறைக்கு தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மூலமாக விவசாயக்கடன் வழங்குவது மேலும் அவைகளை ஒருங்கிணைப்பது ஆகியவையாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**பகுதி – இ**

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்**

**28. வணிக வங்கிகளின் கடன் உருவாக்க முறை நுட்பத்தினைஎழுதுக.**

வங்கிகளின் கடன் உருவாக்கும் என்பது மிக முக்கிய செயல் ஆகும். வங்கிக் கடன் என்பது வாடிக்கையாளர்களின் வைப்புகளிலிருந்து, தேவைப்படுவோருக்கு அவர்களின் விண்ணப்பம் மற்றும் ஒப்பந்தத்தின் போல் கடன் மற்றும் முன்பணம் கொடுப்பது ஆகும். வங்கிகள் வழங்கும் கடன்கள் பொருளாரத்தில் நிகர பண அளிப்பினை அதிகப்படுத்தும். சுருக்கமாக சொன்னால் வங்கிகளின் கடனளிப்பு பணத்தை உருவாக்கும், அதே கடன்கள் வாங்கியோரால் திருப்பிச் செலுத்தப்படும் பொழுது கீடுதலாக உருவான பணம் மறைந்து போகும். இதை ஒருசிலர் மாயை (டிடுடுதண்டிணிண) என்றும் கூறுகின்றனர்.

வணிக வங்கிகள் கேட்பு வைப்புக்களின் அளவை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ முடியும். அதிக அளவு கடன்களை அதிகரிக்க முடியும். வணிக வங்கிகள் தங்களின் கடன் அல்லது முன்பணம் அளிக்கும் முறை மூலமாக அல்லது சொத்துக்ளை வாங்கும் தன்மையகள் மூலமாகவும் தேவை வைப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ முடிகிறது. இச்சத்து வங்கிகள் வைப்புக்களை புதிய வைப்புக்களை உருவாக்குவதன் மூலம் சாத்தியமாகிறது. இது எப்படி சாத்தியம் பின் வரும் பகுதி நமக்கு விளக்குகிறது. அதற்கு முன்னர் வணிக வங்கிகள் உருவாக்கும் வைப்பு முறைகளை தெரிந்து கொள்ள வேண்டும்.

29. வங்கியல்லா நிதியமைப்புகளைப் பற்றி சிறு குறிப்பு தருக

ஒரு வங்கியல்லா நிதி நிறுவனம் (Nணிண - ஞச்ணடுடிணஞ் ஊடிணச்ணஞிடிச்டு ஐணண்tடிtதடிணிண - Nஆஊஐ) அல்லது வங்கியல்லா நிதி நிறுமம் (Nணிண - ஞச்ணடுடிணஞ் ஊடிணச்ணஞிடிச்டு இணிட்ணீச்ணதூ - Nஆஊஇ) என்பது ஒரு நிதி நிறுவனம் ஆகும். ஆது முழு மற்றும் மைய வங்கியால் கண்காணிக்கப்படுவதும் இல்லை.

வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் முழுமையான வங்கிப் பணிகளைச் செய்யாமல் மற்ற நிதி பரிமாற்றங்களை மேற்கொள்கின்றது. அவைகள் வைப்புக்களைப் பெற்றுக்கொண்டு கடன்களை வழங்குகின்றது. மக்களின் சேமிப்பைத் திரட்டி முதலீட்டு நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளிக்கின்றது. சுருங்கச்சொன்னால் அவை பண அங்காடியிலும் மூலதன அங்காடியிலும் செயல்படுகின்றன.

ஒரு வங்கியல்லா நிதி நிறுவனம் இருவகைப்படும். இரண்டாவது வகையில் வருவது நிதி நிறுவனங்கள், கட்டிட சங்கங்கள், சீட்டு நிறுவனங்கள், கட்டிட சங்கங்கள், முதல்நிலை பங்கு வெளியீட்டு நிறுவனங்கள் முதலீட்டு அமைப்புகள், யூனிட் டிரஸ்ட் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள்.

**30. கடன் கட்டுப்பாட்டு முறைகளைக்கூறுக**.

**கடன் கட்டுப்பாட்டு முறைகள் (Methods of Credit Control)**

**I. கடன் அளவுக் கட்டுப்பாடு முறைகள் (Quantitative Methods of Credit Control)**

**1. வங்கி விகிதக்** கொள்கை**(Bank Rate Policy)**

வங்கி விகிதக் கொள்கை என்பது தள்ளுபடி விகிதக் கொள்கை(Discount Rate Policy) என்றும் அழைக்கப்படுகிறது. மைய வங்கியானது எந்த விகிதத்தில் முதல்நிலைமாற்றுச் சீட்டுகள் மற்றும் பிணையங்கள் தள்ளுபடி செய்கிறது என்பதே வங்கி விகித கொள்கை என்பதாகும். மைய வங்கியானது, பணவீக்க காலத்தில் வங்கி விகிதம் அதாவது மைய வங்கியின் தள்ளுபடி விகிதம் அதிகரிக்கப்படுவதால் நடப்பு வட்டி விகிதம் அதிகரிக்கப்பட்டு கடன் அளவு குறைக்கப்படுகிறது. மாறாக, பணவாட்ட காலத்தில் எதிர்மறையாக வங்கி தள்ளுபடி விகிதம் குறைக்கப்படுகிறது. இது நடப்பு சந்தைவட்டி விகிதத்தை குறைக்கும். இதனால் உந்தப்பட்டு நிறைய கடன்கள் உருவாகும். இதனால் கடன் பண அளி;ப்பு அதிகரித்து பணவாட்டம் சரிசெய்யப்படும்.

**2. வெளிச்சந்தைநடவடிக்கைகள் (Open Market Operations)**

வெளிச்சந்தை நடவடிக்கைகள் **(Open Market Operations)**

ஒரு குறுகிய அளவில் பார்க்கும் பொழுது, மைய வங்கியானது பொதுச் சந்தையில் அரசின் கடன் பத்திரங்களை வெளியிடுவதும் திரும்பப்

பெறுவதும் வெளிச்சந்தை நடவடிக்கைகள் எனப்படுகின்றது.

**31. நபார்டின் பணிகள் யாவை?**

**நபார்டு வங்கியின் பணிகள்**

(i) நபார்டு வங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் அனைத்து வகையான உற்பத்தி மற்றும் முதலீட்டுக்காக விவசாயம், சிறு தொழில்கள், குடிசை மற்றும் கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், மற்றும் இதர ஊரக தொழில் நடவடிக்கைகளுக்கான மறுகடனை வழங்குகிறது.

(ii) இது மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இதர நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு குறுகிய கால, மத்தியகால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது.

(iii) கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களின் பங்கு முதலீட்டை வழங்கும் பொருட்டு மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது.

(iv) மைய அரசினால் அங்கீகரிக்கப்பட்டஅல்லது விவசாயம் மற்றும் ஊராக வளர்ச்சிக்கான பங்கு மூலதனம் அல்லது கடன் பத்திரங்களை பெற்றிருக்கும் நிறுவனங்களுக்கு நீண்டகால கடனை அளிக்கிறது.

(v) மைய அரசு, மாநில அரசுகள், திட்டக்குழு (தற்பொழுது நிதி ஆயோக்) மற்றும் மைய, மாநில அரசுகளின் – சிறு தொழில்கள், குடிசைமற்றும் கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், இதர மிகச்சிறு தொழில்களுக்கு உதவும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து செயலாற்றும் நடவடிக்கைகளை நபார்டு வங்கி மேற்கொண்டுள்ளது.

(vi) நபார்டு வங்கி, வட்டார ஊரக வங்கிகள் மற்றும் துவக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை தவிர்த்த அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்யும் பணியினைசெய்கிறது.

(vii) வேளாண்மை மற்றும் ஊராக வளர்ச்சிக்கான ஆய்வுகளை மேம்படுத்தும் விதமாக ஆய்வு மற்றும் வளர்ச்சி நிதியினை பராமரிக்கிறது.

32. இந்திய தொல் நிதிக்கழகத்தின் பணிகளைக் குறிப்பிடுக.

**இந்திய தொழில் நிதிக் கழகம்**

தொழில் நிதி மற்றும் மேம்பாட்டு நிறுவன சங்கிலித் தொடரில் முதன்மையாக ஆரம்பிக்கப்பட்டது நிறுவனம் இந்திய தொழில் நிதிக்கழகம் ஆகும். பாராளுமன்ற சட்டப்படி இது 1948-ஆம் ஆண்டு ஜுலை1-ல் அமைக்கப்பட்டது. இக்கழகம் பின்வரும் வழிகளில் தொழில் நிதியினை வழங்குகிறது:

i) இந்திய ரூபாய் மற்றும் வெளிநாட்டு பணத்தில் நீண்டகாலக் கடன்களை வழங்குகிறது.

ii) வெளியிடப்பட்ட சம உரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களுக்கு ஒப்புறுதியளிக்கிறது.

iii) சம உரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை வாங்குகிறது.

iv) இறக்குமதி செய்யப்படும் மற்றும் இந்தியாவிலிருந்து வாங்கப்படும் தொழிற்துறைஇயந்திரங்களுக்கான பணத்திற்கு உத்திரவாதம் அளிக்கின்றது.

v) வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து அந்நாட்டின் பணத்தில் வாங்கப்படும் கடன்களுக்கான உத்திரவாதத்தையும் அளிக்கிறது.

**33. பணச்சந்தையையும், மூலதனச் சந்தையையும் வேறுபடுத்துக.**

**பணச் சந்தை(Money Market)**

அதிக நீர்மைத் தன்மையை கொண்டதும் குறுகிய காலத்தில் முதிர்ச்சியுறுவதுமான நிதிக்கருவிகளை கையாளும் சந்தையே பணச் சந்தை எனப்படுகிறது. ஒரு நாள் முதற்கொண்டு ஒரு வருடத்திற்குள் முதிர்ச்சியடையும் நிதிக்கருவிகள் இச்சந்தையில் கையாளப்படுகிறது. இங்கு கையாளப்படும் நிதிக்கருவிகள் அரசுப் பத்திரங்கள், வணிகப் பத்திரங்கள், அழைப்புப் பணம், வைப்புச் சான்றுகள், வங்கியாளர் ஏற்புகள், மாற்றுச் சீட்டுகள், மறு வாங்கல் ஒப்பந்தங்கள், கருவூல உறுதிச் சீட்டுக்கள், அந்நிய செலாவணிகள் போன்றவை ஆகும். இவைகள் அனைத்தும் ஒரு வருடத்திற்குள் முதிர்ச்சியடையும் வகையிலான கருவிகள் ஆகும். இந்திய ரிசர்வ்வங்கி, வணிக வங்கிகள், மேம்பாட்டு வங்கிகள், வட்டார

வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள், மற்றும் இதர அமைப்புசாரா நிதி நிறுவனங்கள் ஆகியவைகுறுகிய கால நிதியைபணச்சந்தையில் அளிக்கின்றது.

**மூலதனச் சந்தை(Capital Market)**

நீண்டகால நிதிக்கருவிகளை வாணிபம் செய்யும் சந்தைமூலதனச் சந்தைஎனப்படுகிறது. உற்பத்தி நோக்கில் நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு தேவைப்படும் நிதியினைதிரட்டும் இடமாக மூலதனச் சந்தைஇருக்கிறது. மூலதனச் சந்தையில் பயன்படுத்தப்படும் பாரம்பரியமான நிதிக்கருவிகள் கடன் பத்திரங்களும் சமபங்குகளும் ஆகும். ஆனால் இப்பொழுது அக்கருவிகளின் எண்ணிக்கைஅதிகரித்து வருகிறது. மேற்கூறியவையுடன் அந்நிய செலாவணி, முன்பேர வர்த்தகம் மற்றும் இதர கடன் சாதனங்களும் அடங்கும். இச்சந்தையில் தனி முதலீட்டாளர்கள், நிதி நிறுவனங்கள், நிதிக்கழகங்கள், வங்கிகள், அரசு, பங்கு சந்தைகள், தொழில் நிறுவனங்கள் உள்ளிட்டவைஉறுப்பினர்களாக உள்ளனர். இவர்களை கடனளிப்பவர்கள், கடன்பெறுவர்கள், மற்றும் வசதி செய்யும் நிறுவனங்கள் என மூன்று வகையாக பிரிக்கலாம்.

**34. பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.**

**பணமதிப்பு நோக்கங்கள்**

1. கருப்புப் பணத்தினைஒழிப்பது,
2. இலஞ்சத்தைதடுப்பது
3. தீவிரவாதித்திற்கு பணம் செல்வதைதடுப்பது மற்றும்
4. கள்ளப் பணத்தினைதடுப்படுது ஆகியன.

**பகுதி – ஈ**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்கஅளவில் பதில் தருக**

**35. நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினைவிளக்குக.**

**பொருளாதார வைர்ச்சியில் வணிக வங்கிககளின் பங்கு**

**1. மூலதன திரடசி.**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததான மூலதக திரட்சியில் வங்கிகள் முக்கிய பங்குவகிக்கின்றக. வணிக வங்கியானது தனது வங்கிப் பிரிவுகளின் (ஆணுூச்ணஞிடனுண்) கீழ் பரவலாக செயல்பட்டு பொதுமக்களின் சேமிப்பினை வைப்புகளாக திரட்டி அவைகளை உற்பத்தி நோக்கிற்காக கடன்களாக வழங்குகின்றன. இன்றைய நாட்களில் வங்கிகளின் செமிப்புகளை திரட்டுவதில் பல கவர்ச்சிகரமாக திட்டங்களை மக்களிடம் அறிமுகப்படுத்தி, அவர்களிடமுள்ள சேமிப்புகளை முறைப்படுத்தப்பட்ட பணச்சந்தைக்கு கொண்டுவருகின்றன.

2. கடன் உருவோக்கம்

வங்களின் கடன் உருவாக்கும் மூலம் முன்னேற்றத் திட்டங்களுக்கு அதிக நிதியை பெற்றுத் தருகிறது. இதன் மூலம் உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருமானம், விற்பனை ஆகியவை ஏற்றம் பெற்று விரைவான பொருளாதார வளர்ச்சியை கொண்டு வருகின்றது.

**3. அதிக உற்பத்தித்திறனை கொண்ட முதலீட்டை நோக்கி பணத்தை முறைப்படுத்துதல்**

வங்கிகள் உற்பத்தி நோக்கில் பணத்தினை முதலீடு செய்கிறது. வெறுமனேவங்கிகள் மூலதன ஆக்கத்தை மட்டும் செய்யவில்லை. ஒரு துறையில் செய்யப்பட்ட முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைவாக இருந்தால் அத்துறைக்கு வழங்கப்படும் முதலீட்டுக் கடனை குறைத்துக் கொண்டு, அதிக உற்பத்தி திறன் கொ ண்டதுறைகளுக்கு கூடுதலாக முதலீட்டுக்கான கடனைமடைமாற்றம் செய்கிறது. இதனால் பொருளாதாரத்தில் முதலீட்டின் ஒட்டு மொத்த உற்பத்தி திறன் கூடுகிறது. இவ்வகையில் வணிகவங்கிகள் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுகின்றன.

**4. சரியான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்**

வங்கிகள் சரியான தொழிலையும், சரியான நபர்களையும் தெரிந்தெடுத்து கடன் வழங்குவதால் தொழிற்பெருக்கம் ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் நாட்டின் பொருளதார

வளர்ச்சியில் உதவுகின்றன. எந்த பொருளுக்கு அதிக தேவை உள்ளதோ அந்த பொருளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு கடன்களையும், முன்பணங்களையும் வழங்குகிறது. ஆகவே, உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்தி முறைகளில் நவீனத்துவத்தைப் புகுத்தி நாட்டின் தேசிய வருவாய் உயர்வதற்கு வழி செய்கின்றனர். சில சமயங்களில் முக்கியத்துவம் குறைந்த துறைகளுக்கும் கடன் வழங்குகிறது. இதனால் அமெரிக்காவில் 2007 – 08ம் ஆண்டுகளில் ஏற்பட்டது போன்ற பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படும்.

**5. கடனை பணமாக்குதல்**

வணிகத்தில் எழும் குறிப்பிட்டகாலக் கடன்களை இடையிலேயே ரொக்கமாக்கித் தருவதன் மூலம் உற்பத்தி மற்றும் வணிக நடவடிக்கைகளில் சுணக்கம் ஏற்படாமல் வணிக வங்கிகள் பாதுகாக்கிறது. வணிகத்தை அதிகப்படுத்த கடன் அடிப்படையில் விற்பனைமேற்கொள்வதைத் தவிர்க்கமுடியாது. ஆனால் கடன் விற்பனை முதலீட்டைமுடக்கிடும் செயலைச் செய்கின்றது. இதனால் உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்-படுகின்றன. கடன் விற்பனையில் கடனுக்கான உத்தரவாதமாக மாற்றுச்சீட்டுக்களை (Bills of Exchange) வங்கிகள் கழிவு செய்வதால், வர்த்தக நிறுவனங்கள் எந்த இடையூறுமின்றி பொருளாதார நடவடிக்கைகளைத் தொ டர முடிகின்றது.

**6. அரசிற்கு நிதி வழங்குதல்**

குறைவளர்ச்சி நாடுகளில் தொ ழில் வளர்ச்சியைமேம்படுத்தும் பணியினைஅரசு மேற்கொள்கிறது. இதற்கு அதிக அளவு நிதி அரசிற்குத் தேவைப்படுகிறது. வணிக வங்கிகள் அரசிற்கு நீண்டகால கடன்களை மற்றும் குறுகியகால கடன்களை அரசு பத்திரங்களை ஏற்பதன் வாயிலாக வழங்குகிறது. இந்திய ரிசர்வ்வங்கி 2018 – 19 ஆண்டில் தனது உபரி நிதியிலிருந்து மத்திய அரசுக்கு ₹68,000 கோடி வழங்கியுள்ளது.

**7. வேலைவாய்ப்பினைஉருவாக்குதல்**

வங்கிகள் தேசியமயமாக்கலுக்குப் பின் வங்கித்துறைபெருமளவுக்கு வளர்ந்துள்ளது.

நின்றய எண்ணிகனகயில் கினைகள் திறககப்பட்டு கடன் பருககத்தினனச் செய்வதால் தவனலவாய்ப்புகள் உருவாகிறது.

**8. வங்கிகள் தொழில்முமனவிமன ஊக்கப்படுதுதல்**

**36. வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.**

**முதன்மை பணிகள்**

**வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்**

**பொதுமக்களால் செலுத்தப்படும் வைப்புகளை** (ஈனுணீணிண்டிtனுண்) **ஏற்றுக்கொள்ளுதல் ஆகும்.**

**கேட்பு வைப்புகள்**

**இவை வங்கிகளில் வைப்புக்களை வைத்திருக்கும் வாடிக்கையாளர் முன்னறிவிப்பின்றி எப்பொழுது வேண்டுமானலும் பணத்தை தனது கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படும் ஒரு வைப்பாகும்.**

**கால வைப்புக்கள்**

**இவை ஒரு குறிப்பிட்ட காலவரையறை வரை வங்கிகளிடமிருந்து மீளப் பெறப்படாமல் இருக்கும் வைப்புகளாகும்.**

**கடன் வழங்கல்**

**தனி நபர்கள் மற்றும் வாணிபத்திற்கான கடன்களை வங்கிகள் வழங்குகின்றன.**

**இரண்டாம் நிலை பணிகள்**

**முகமைப்பணிகள்**

**வங்கி வாடிக்கையாளர்களுக்கு முகவராக இருந்து செய்யும் பணிகளை முகமைப்பணிகள் எனப்படுகிறது.**

**காசோலைகளை பணமாக்குதல்**

**வருமானத்தை பெறுதல்**

**வணிக வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வரவேண்டிய இலாப ஈவு, ஓய்வூதியம், சம்பளம், வாடகை, வட்டி ஆகியவற்றினை வசூலித்து தருகின்றன.**

**செலவுகளை செலுத்துகிறது**

**வணிக வங்கிகள் வாடிக்கையாளர்களின் பல்வேறு செலுத்துக் கடமைகளை செய்கின்றது. தொலைபேசி கட்டணம் வாடகை செலுத்துதல்**

**பாதுகாப்பு பெட்டக வசதி**

**பயணக் காசோலைகளை வழங்குதல்**

**அந்நியச் செலாவணியைக் கையாளுதல்**

**கடன் உறுதியளிப்பு கடிதம்**

**பத்திரங்களுக்கு எழுத்துறுதி வழங்குதல்**

**மின்னணு வங்கி**
**இதர பணிகள்**
**பண அளிப்பு**
**கடன் உருவாக்கம்**
**புள்ளிவிவரங்களை திரட்டுதல்**

(அ) **முதன்மைப் பணிகள்**

(**கணூடிட்ச்ணூதா ஊதணஞிtடிணிணண்**)

**பொதுமக்களால் செலுத்தப்படும் வைப்புகளை** (**ஈஹுணீணிண்டிtண்**) **ஏற்றுக்கொள்ளுதல் ஆகும்**.

(ஆ) **கேட்பு வைப்புகள்** (**ஈஹுட்ச்ணஞீ ஈஹுணீணிண்டிtண்**)

**இவை வங்கிகளில் வைப்புக்களை வைத்திருக்கும் வாடிக்கையாளர் முன்னறிவிப்பின்றி எப்பொழுது வேண்டுமானலும் பணத்தை தனது கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படும் ஒரு வைப்பாகும்**.

(இ) **கால வைப்புக்கள்** (**கூடிட்னு ஈஹுணீணிண்டிtண்**)

**இவை ஒரு குறிப்பிட்ட காலவரையறை வரை வங்கிகளிடமிருந்து மீளப் பெறப்படாமல் இருக்கும் வைப்புகளாகும்**.

2. **கடன் வழங்கல்** (**ஃஹுணஞீடிணஞ் ஃணிச்ணண்**).

**தனி நபர்கள் மற்றும் வாணிபத்திற்கான கடன்களை வங்கிகள் வழங்குகின்றன**.

**(ஆ) இரண்டாம் நிலை பணிகள் (Secondary Functions)**

இரண்டாம் நிலைபணிகளை முகமைப் பணிகள், பொதுப் பயன்பாட்டுப்பணிகள், இதரப் பணிகள் என மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன.

**1. முகமைப் பணிகள் (Agency Function)**

வங்கி வாடிக்கையாளர்களுக்கு முகவராக (Agent) இருந்து செய்யும் பணிகளை முகமைப்பணிகள் எனப்படுகிறது.

**(i)** காசோலைகள **பணமாக்குதல்:** தன் வாடிக்கையாளர்களுக்காக அவர்களுக்கு வரும் காசோலைகள், மாற்றுச் சீட்டுக்கள் போன்றவற்றைவங்கிகள் தீர்வகத்தின் மூலம் வசூல் செய்து கொடுக்கின்றன.

**(ii) வருமானத்தைபெறுதல்:** வணிக வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வரவேண்டிய இலாப ஈவு, ஓய்வூதியம், சம்பளம், வாடகை, வட்டி ஆகியவற்றினைவசூலித்து தருகின்றன. வாடிக்கையாளருக்கான வருமானம் வசூலிக்கப்பட்டதைபற்றுச்சீட்டின் மூலம் வங்கிகள் தெரியப்படுத்துகிறது.

**(iii) செலவுகளை செலுத்துகிறது:** வணிக வங்கிகள் வாடிக்கையாளர்களின் பல்வேறு செலுத்துக்கடமைகளை செய்கின்றது. தொலைபேசி கட்டணம், காப்பீட்டு பிரிமியம், கல்விக்கட்டணம், வாடகைசெலுத்துதல் போன்றவற்றைவாடிக்கையாளர்களுக்காக செய்கிறது. இச்செலவுகளைச் செய்யும் பொது செலவுச் சீட்டின் மூலம் வங்கிகள் வ ◌ா டி க ◌ைகய ◌ா ளர ◌்களு க்கு தெரியப்படுத்துகின்றது.

**2. பொதுப்பயன்பாட்டு பணிகள் (General Utility Functions)**

இது வங்கிகள் தன் வாடிக்கையாளர்களுக்காக சில கூடுதல் பயன்பாடுகளை உருவாக்கும் நோக்கில் செய்யும் பணிகளைப் பொதுப் பயன்பாட்டு பணிகள் என்கிறோம். அவைகள்:

**(i) பாதுகாப்பு பெட்டக வசதி:** நகைகள், பங்குகள், கடன் பத்திரங்கள் போன்ற மதிப்புமிக்க பொ பொருட்களை பாதுகாக்க, பெட்டக வசதியைவணிக வங்கிகள் தருகின்றன. திருட்டு, இழப்புக்களையும் தவிர்க்கஇவ்வசதி உதவுகிறது. பெட்டகத்தில் உள்ளப பொருட்களுக்கு வங்கி பொறுப்பல்ல.

**(ii) பயணக் காசோலைகளை வழங்குதல்:** பயணக் காசோலைகளை வழங்குவதன் மூலம் வெளிநாட்டு பயணத்தின்போது பணப்பாதுகாப்பினைவழங்குகிறது.

**(iii) அந்நியச் செலாவணியைக் கையாளுதல்:** ஏற்றுமதி, இறக்குமதியில் ஈடுபடும் வணிகர்களுக்கு வணிக வங்கிகள் அந்நிய செலாவணி வசதியைச் செய்து தருகிறது. ஆனால், இதற்காக நாட்டின் மைய வங்கியிடம் வணிகவங்கிகள் உரிய அனுமதியினைபெற்றிருக்கவேண்டும்.

3. **நிதிமாற்றுதல்:** ஒரு வங்கியிலிருந்து மற்ற வங்கிக்கு நிதியை மாற்றுவதாகும். வரைவு காசோலைகள், தொலைபேசி மற்றும் மின்னணு பரிமாற்றங்கள் மூலம் நிதி மாற்றப்படுகிறது.

www.Padasalai.Net

**4. கடன் உறுதியளிப்பு கடிதம் (Letter of Credit):** வாடிக்கையாளரின் கடன் நம்பகத் தன்மையைசான்றளிக்கும் விதமாக வணிக வங்கிகள் கடன் உறுதியளிப்பு கடிதங்களை வழங்குகின்றன.

**(i). பத்திரங்களுக்கு எழுத்துறுதி வழங்குதல் (Under-writing of Securities):** வணிக வங்கிகள் மேலும் பத்திரங்களுக்கான எழுத்துறுதி வழங்கும் பணியினை

முழு நம்பிக்கையைவைத்திருப்பதால் அவைகள் எழுத்துறுதி வழங்கிய பத்திரங்களை வாங்குவதில் தயக்கம் ஏதும் இருக்காது.

**(ii). மின்னணு வங்கி:** வணிக வங்கிகள் மின்னணு முறையைபின்பற்றுவதால் அவைகள் பற்று அட்டை, கடன் அட்டைமற்றும் இணைய வங்கி மூலம் விரைவான பணப்பரிவர்த்தணைகள் மேற்கொள்ளஉதவுகின்றன.

**இ) இதர பணிகள் (Other Functions)**

**(i) பண அளிப்பு**

வணிக வங்கியின் முக்கிய பணிகளில் ஒன்று பணப்புழக்கவேகத்தை அதிகரிப்பதன் மூலம் பண அளிப்பைஅதிகரித்தல் ஆகும். உதாரணமாக வங் கி ஒருவருக்கு □5 இலட்சம் கடன் வழங்கும் போது கடன் பெறுபவர்பெயரில் உள்ளகேட்பு வைப்பு கணக்கில் வரவு வைக்கப்படுகின்றது. இங்கு பணம் ரொக்கமாகச் செலுத்தப்படவில்லைஎன்பதைகவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். எனவேஅதிகமாக பணம் அச்சடிக்கபடாமல் பண அளிப்பு அதிகரிக்கின்றது.

**(ii) கடன் உருவாக்கம்**

கடன் உருவாக்கம் வணிக வங்கிகளின் பணிகளில் மிகச் சிறந்த ஒன்றாகும். இது மேற்சொன்னபண அளிப்பினைஅதிகரிக்கும் பணியைஒட்டி அமைந்ததாகும். கடன் உருவாக்கம் என்பது கடன்களையும், முன்பண அளிப்பினையும் அதிகரிக்கும் ஒரு செயல். மொத்த பண அளிப்பில் கடன் பணத்தின் அளவினைஅதிகரிப்பது கடன் உருவாக்கம் ஆகும்.

**iii) புள்ளிவிவரங்களை திரட்டுதல்**

இந்திய ரிசர்வ்வங்கியை போன்றே, வணிக வங்கிகளும் வணிகம், தொழில், விவசாயம், நிதி போன்ற அடிப்படைதுறைகளின் புள்ளிவிவரங்களை வெளியிடுகின்றன. இவைகளின் அடிப்படையில் தனது வாடிக்கயாளர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் தங்களது ஆலோசனைகளை வணிக வங்கிகள் வழங்குகிறது

**37. இந்திய ரிசர்வ்வங்கியின் பணிகளை விவரிக்க.**

மைய வங்கி

மைய வங்கி, ரிசர்வு வங்கி அல்லது பணவியல் அதிகார அமைப்பு என்பது அரசின் பணம், பண அளிப்பு, மற்றும் வட்டிவிகிதம் ஆகியவற்றை மேலாண்மை செய்யும் ஒரு நிறுவனம் ஆகும். மேலும், நாட்டிலுள்ள வணிக வங்கிகளை மேற்பார்வையிடுவதும் இதன் பணியாகும்.

மைய வங்கியின் பணிகள்

ஒவ்வொரு நாட்டின் மைய வங்கி அந்த நாட்டின் தலைமை வங்கி ஆகும். இந்தியாவின் மைய வங்கி இந்தியா ரிசர்வு வங்கி என்று அழைக்கப்படுகிறது. இது பணவியல் கொள்கை மூலம் பண அளிப்பை மேலாண்மைச் செய்கிறது. இந்திய ரிசர்வு வங்கியின் சட்டம் 1934ன்படி, ஏப்ரல் 1ஆம் தேதி 1935 முதல் ரிசர்வு வங்கி தனது பணியணை துவங்கியது. துவக்கத்தில் வங்கியின் மூலன ரூ. 100 மதிப்பு கொண்ட சம பங்குகளாக பிரிக்கப்பட்டு தனியார் வசம் இருந்தன. இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு, குறிப்பாக ஜனவரி 1, 1949 அன்று இந்திய ரிசர்வு வங்கி நாட்டுடமையாக்கப்பட்டது.

**இந்திய ரிசர்வ் வங்கி**

**பணிகள்**

- காகிதப்பணம் வெளியிடுதல்
- அரசின் வங்கியாகச் செயல்படுதல் (அரசிற்கான நிதி வருவாயைப் பெற்றுக்க கொள்ளுதல் மற்றும் அரசின் செலவினங்களுக்குப் பணம் வழங்குதல்)
- இந்திய வங்கி அமைப்புக்களை நெறிப்படுத்துதல்
- அந்நியச் செலாவணியின் பாதுகாவலன்
- கடன் அளிப்பைநெறிப்படுத்துதல்.

**வரலாறு**

• 1934ம் ஆண்டு சட்டவிதிப்படி 1935ம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி அமைக்கப்பட்டது.

• ஜனவரி 1ம் தேதி 1949ம் ஆண்டு தேசிய மயமாக்கப்பட்டு மத்திய அரசுக்குச் சொந்தமானது.

• 1937 ல் தலைமைஅலுவலகம் கல்கத்தாவிலிருந்து மும்பைக்கு மாற்றப்பட்டது.

• ஓஸ்போர்ன் ஸ்மித் (Osborne smith) RBI இன் முதல் ஆளுநர்ஆவார்

**நிர்வாகம்**

• மைய வங்கி/மற்ற இந்திய வங்கிகளின் நெறியாளர்

• கடைசி நிலைக்கடன் ஈவோன்

• ஆளுநர், நான்கு துணைஆளுநர்கள் மற்றும் மைய அரசால் நியமிக்கப்படும் மைய நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

18ம் நூற்றாண்டில் காகிதப் பணம் வெளியிடும் முறைதுவங்கியது. தனியார்வங்கிகளான வங்காளவங்கி, மும்பைவங்கி மற்றும் சென்னைவங்கிகள் முதலில் காகிதப் பணத்தைஅச்சடித்தது.

ஷெர்ஷா சூரி (Sher shah suri) என்பவரால் 1 க்கு 40 செம்பு நாணயங்கள் என்ற விகிதத்தில் முதல் ரூபாய் வெளியிடப்பட்டுள்ளது. சமஸ்கிருதச் சொல்லான ரௌப்பியா (Raupya) விலிருந்து ரூபாய் என்ற வார்த்தை தோன்றியது. இந்தியாவின் பன்முகத் தன்மையைவிளக்கும் விதமாக ஒவ்வொரு ரூபாய் கோட்டிலும் அதன் மதிப்பு 17 மொழிகளில் எழுதப்பட்டிருக்கும் (முன்பக்கத்தில் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் பின்பக்கத்தில் மற்ற 15 மொழிகளிலும்)

.பண அதி கார அமைப்பு

இது இந்தியாவில் பண அளிப்பினை கட்டுப்படுத்துவதன் மூலம் அந்நிய செலாவணி பரிவர்த்தனை விகிதத்தினை நிலைப்படுத்துதல்.

2. காகிதப்பண வெளியீடு

இந்தியாவில் நாணயங்கள் மற்றும் ஒரு ரூபாய் காகிதப்பணத்தை தவிர அனைத்து

வகையான காகித பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமை பெற்ற நிறுவனம் ரிசர்வு வங்கியாகும்.

3.வங்கி உரிமங்கள் வழங்குபவர

வங்கிகள் முறைப்படுத்துதல் சட்டம், பிரிவு 22ன் படி ஒவ்வொரு வணிக வங்கியும் இந்தியாவில் வங்கித்தொழில் வணிக வங்கியும் இந்தியாவில் வங்கித்தொதில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும்.

4.அரசுக் கான வங்கி

இது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கான வங்கி ஆகும். அரசுகளுக்கு குறுகியகால கடன்களை தருகிறது. இது அரசுகளுக்கு குறுகியகால கடன்களை தருகிறது. இது அரசு கடன்கள், அரசு கடன் தொடர்பான சேவைகள், அரசு கடன் பத்திரங்கள்களை உருவாக்கி விற்பனை செய்வது ஆகிய பணிகளைச் செய்கின்றது. மேலும், அரசுக்கு வங்கி மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்குகிறது.

**5. வங்கிகளின் வங்கி**

இந்திய ரிசர்வ்வங்கி அனைத்து வங்கிகளுக்கும் தலைமைவங்கியாகும். இது வங்கிகளுக்கு வேண்டிய கடன்களை அளிக்கிறது, அவைகளின் வைப்புக்களை ஏற்கிறது, மாற்றுச் சீட்டுக்களை மறு தள்ளுபடி செய்கிறது. அதனால் இது வங்கிகளின் வங்கி எனப்படுகிறது.

**6. கடைநிலைக் கடன் ஈவோன்**

வணிக வங்கிகளுக்கு தீர்க்கஇயலாதநிதிச் சிக்கல்கள் ஏற்படும்பொழுது, நிதிக்கான மற்ற ஆதாரங்கள் இல்லாதசூழ்நிலையில் அச்சிக்கலிருந்து மீள்வதற்கு இந்திய ரிசர்வ்வங்கி ஈட்டுக்கடனைஅளித்து உதவுகிறது.

**7. தீர்வாக செயல்படுகின்றது**

வங்கிகளுக்கிடையேநடக்கும் பரிவர்த்தனைகளை தனது 14 தீர்வகங்களைக் கொண்டு இந்திய ரிசர்வ்வங்கி சமன் செய்கின்றது. பரிவர்த்தனைக்கருவிகளை பரிமாறிக் கொள்ளஉதவுவதுடன், பரிவர்த்தனைத தொடர்பான அறிவுறுத்தல்களையும் வழங்குகிறது.

**8. அந்நிய செலாவணி பாதுகாவலன்**

இது அந்நிய செலாவணி இருப்புக்களை பாதுகாக்கும் பணியினைசெய்கிறது. 1999- ஆம் ஆண்டு அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் (Foreign Exchange Management Act – FEMA) சட்டத்தின்படி இது அந்நிய செலாவணி மேலாண்மையும பணத்திற்கு எதிரான இந்திய ரூபாயின் பரிமாற்ற விகிதத்தைநிலைப்படுத்துவதற்காக வெளிநாட்டு பணங்களை அவ்வப்பொழுது வாங்கி விற்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது.

**9. பொருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது**

பணவியல் கொள்கையைஅடிப்படையாக கொண்டு பொருளாதாரத்தை நெறிப்படுத்தி விரும்பத்தகுந்த பாதையில் கொண்டு செல்கிறது. மேலும், தேசிய வருவாய், வேலைவாய்ப்பு, செலவு, சேமிப்பு, முதலீடு போன்ற முக்கிய குறியீடுகளை தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்துகிறது.

**10. அரசு கடன் பத்திரங்களை நிர்வகிக்கிறது**

குறிப்பிட்டசதவிகிதத்திலான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசின் கடன்பத்திரங்களாக கொண்டுள்ளநிறுவனங்களை இந்திய ரிசர்வ்வங்கி கண்காணித்து நிர்வகிக்கின்றது.

**11. செலுத்துதல் மற்றும் தீர்வு செய்வதில் நெறியாளாராகவும், மேலாளராகவும் செயல்படுகிறது**

2007-ஆம் ஆண்டு செலுத்துதல் மற்றும் தீர்வுச் சட்டம் (The Payment and Settlement System Act. 2007 – PSS Act) இந்திய ரிசர்வ்வங்கிக்கு நாட்டின் செலுத்துதல் மற்றும் தீர்வு செய்வதற்கான மேற்பார்வையிடும் அதிகாரத்தைவழங்கியுள்ளது. ஆகவே, ரிசர்வ்வங்கி பாதுகாப்பான மற்றும் திறமையான செலுத்துதல் மற்றும் தீர்வுகளை மேற்பார்வையிடுவதன் மூலம் மேம்பாட்டிற்கு வழிவகுக்கின்றது.

**12. மேம்பாட்டு பணி**

இந்திய ரிசர்வ்வங்கி சிறந்த வங்கி அமைப்பினை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அதன் மூலம் சிறந்த உற்பத்தித் திறன் கொண்ட துறைகளுக்கு கடன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்கின்றது. தேசிய குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் பல்வேறு பரந்த மேம்பாட்டு பணிகளை மேற்கொள்கின்றது. இது மேலும், நாட்டின் நிதிக்கட்டமைப்பினை ஏற்படுத்தும் நிறுவனங்களையும் அமைக்கின்றது. இதனுடன்கூட, நாட்டில் நிதிச் சேவைகள் மற்றும் நிதிக்கல்வியறிவு ஆகியவற்றைவிரிவாக்கும் பணியினையும் செய்கின்றது. இதற்கான கல்வி, ஆய்வு நிறுவனங்களையும் நடத்துகின்றது.

**13. பணவியல் மற்றும் இதர தகவல்களை வெளியிடுகிறது**

பணம், வங்கி மற்றும் முக்கிய பொரு ளா தா ர ப் பு ள் ளி வி வ ர ங்களை வெளியிடுகிறது. மேலும், இந்தியாவின் பொருளாதாரக்கொள்கைகளை திறனாய்கிறது. புள்ளிவிவரங்களை திரட்டி, வரிசைப்படுத்தி இந்திய ரிசர்வ்வங்கி வெளியீடு (Reserve Bank of India Bulletin) மூலம் மாத, காலாண்டு, ஆண்டு விவரங்களை வெளியிடுகிறது.

**14. பரிவர்த்தனைமேலாளர் மற்றும் நெறியாளார்**

சர்வதேசபண நிதியத்தின் (International Monetary Fund) இந்திய உறுப்பினர்பிரதிநிதியாக இந்திய ரிசர்வ்வங்கி விளங்குகிறது. நிதியத்திலிருந்து பெறப்படும் அந்நிய செலாவணியைமேலாண்மைசெய்வதும், அதிகாரம் அளிக்கப்பட்டஅந்நிய செலாவணி விற்பனையாளர்களான வணிக வங்கிகளை நெறிப்படுத்தும் செயலையும் இந்திய ரிசர்வ்வங்கி செய்கிறது.

**15. வங்கி குறைதீர்ப்பாய திட்டம்**

இந்திய ரிசர்வ்வங்கி 1995ல் வங்கி குறைதீர்ப்பாயத்தினை(Banking Ombudsman) அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ், வங்கிகள் தொடர்பாக ரிசர்வ்வங்கிக்கு வரும் அனைத்து புகார்கள் மற்றும் மேல்முறையீடுகளை வங்கி குறைதீர்ப்பாயம் களைகின்றது. இணையவழியில் வரும் புகார்கள் உட்பட அனைத்து வழிகளில் வரும் புகார்களையும் இந்த குறைதீர்ப்பாயம் கணக்கில் எடுத்துக் கொள்கின்றது.

**16. இந்திய வங்கி நெறிமுறைமற்றும் மதிப்பீடுகள் வாரியம்**

வங்கிகளின் திறனைஅளவிடும் விதமாக உலகளவில் ஏற்கப்பட்டுள்ளநெறிமுறைகள் மற்றும் மதிப்பீடுகள் (அடிப்படையில்) இந்திய ரிசர்வ்வங்கி, இந்திய வங்கி நெறிமுறைமற்றும் மதிப்பீடுகள் வாரியத்ததை(Banking Codes and Standards Board of India - BCSBI) அமைத்துள்ளது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**38. பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக.**

**பணவியல் கொள்கையின் நோக்கங்கள் (Objectives of Monetary Policy)**

**பணவியல் கொள்கையின் குறிப்பிடப்பட்ட குறிக்தகோள்கள்**

விலைநிலைத்தன்மைஎன்பது விலைமாறாமல் நிலையாக (price rigidity) இருப்பதலோ, விலைத் தேக்கமடைந்து (price stagnation) இருப்பதவோஅல்ல. ஒரு மிதமான விலையேற்றம் என்பது பொருளாதார வளர்ச்சியின் ஊக்கசக்தியாக இருக்கும். இந்த மிதமான விலையேற்றம் என்பது கிட்டத்தட்டநிலையான விலையின் பெரும்பாலான பண்புகளையும் தன்னகத்தே கொண்டதாக இருக்கும்.

## . பணத்தின் நடுநிலைத் தன்மை

1.பொருளியலாளர்களான விக்ஸ்டெட், ஹேயக் மற்றும் ராபர்ட்சன் ஆகியோர் பணத்தின் நடுநிலை பற்றி விவரித்த முக்கிய நிபுணர்கள் ஆவர்கள். அவர்கள் பணவியல் அதிகார அமைப்பு பொருளாதாத்தில் பணம் நடுநிலைத் தன்மை நோக்கம் கொண்டதாக இருக் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினர்.

2. விகித நிலைத்தன்மை

பரிவர்த்தனை விகித நிலைத்தன்மை என்பது பணவியல் கொள்கையில் பாரம்பரியமான நோக்கமாகும்.

3.விலை நிலைத்தன்மை

பொருளியலாளர்கள் காஸல், கீன்ஸ் போன்றலர்கள் விலை நிலைத்தன்மை ஏற்படுத்துவது பணவியல் கொள்ளையில் முக்கிய நோக்கமாக என்கின்றனர்.

**4. முழுவேலைவாய்ப்பு**

உலக பெருமந்தத்தின்பொழுது, வேலைவாய்பின்மைமிகவேகமாக அதிகரித்தது. இது சமுதாய அளவில் அபாயகரமானதும், பொருளாதார அளவில் வீணடிப்பையும், அறநெறியளவில் வருந்தத்தக்கதாகவும் இருந்தது. ஆகவே, முழு வேலைவாய்ப்பு என்பது பணவியல் கொள்கையின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. மேலும், 1936-ல் வெளியிடப்பட்ட“வேலைவாய்ப்பு, வட்டி, மற்றும் பணத்திற்கான பொதுக்கோட்பாடு” (General Theory of Employment, Interest and Money) என்ற கீன்ஸின் நூல் முழுவேலைவாய்ப்பு என்ற பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைப்படுத்தியது.

**5. பொருளாதார வளர்ச்சி**

பொருளாதார வளர்ச்சி என்பது நீண்டகாலத்தில் உண்மைதலா வருவாய் (real per capita income) அதிகரித்து செல்லும் நடவடிக்கைஆகும். இது மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பொருள் உற்பத்தியின் அளவு அதிகரிப்பதைஉணர்த்துவது ஆகும்.

ஆகவே, சமநிலைபண அளவு, உற்பத்தி அளவுகள், சாதகமான சேமிப்பு- முதலீடு ஆகிய சூழ்நிலைகளை பராமரித்து அதன்மூலம் நீடித்த பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் குறிக்கோளாக அமைகிறது. தேவைமற்றும் அளிப்பிற்கிடையேசமநிலையைஏற்படுத்த நெகிழ்ச்சியுடன் கூடிய பணவியல் கொள்கைஒரு சிறந்த வழிமுறையாகும்.

**6. செலுத்துச் சமநிலையில் சமநிலையைபேணுதல்**

செலுத்துச் சமநிலையில், சமநிலையைபேணுதல் என்பது பணவியல் கொள்கையின் அடுத்தக்குறிக்கோளாகும். உலகப்போர்களுக்குப் பிறகு வாணிபத்தில் சமனற்ற நிலைகள் போ ன்ற ஆரம்பித்தன. உலக வர்த்தகம் சமனற்ற நிலையில் அதிகரித்ததால் வரும் அந்நிய செலாவணி பிரச்சனையாகும். இதன்காரணமாக செலுத்துசமநிலையில் வரும் பற்றாக்குறை பொருளாதாரத்தின் மற்ற குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதின் திறனையும் குறைக்கும். இதனால், குறைவளர்ச்சி நாடுகள் தங்களுடைய இறக்குமதியினைகுறைப்பதால் அதன் வளர்ச்சி நடவடிக்கைகள் பாதிக்கப்படும பாதகமான நிலைக்கு தள்ளப்படுகிறது. ஆகவே, பணவியல் கொள்கைசெலுத்துச்சமநிலையில் சமமான நிலையினைபேணுவதைதனது குறிக்கோளாக கொண்டிருக்கிறது.

www.Padasalai.Net

## அத்தியாயம் 7 பன்னாட்டுப் பொருளியல்

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது ______

அ. வெளிவாணிகம் ஆ. உள்வாணிகம் இ. மண்டலங்களுக்கிடையானவாணிகம் ஈ. உள்நாட்டு வாணிகம்

**அ. வெளிவாணிகம்**

2.கீழ்கண்டவற்றுள் வாணிகத்தை தீர்மானிக்கும் காரணி எது?

அ. ஒரு பொருளின் மேம்பாட்டு கால கட்டம் ஆ. உற்பத்தி காரணிகளின் ஒப்பீட்டு விலை இ. அரசாங்கம் ஈ. மேற்கண்ட அனைத்தும்

**ஈ. மேற்கண்ட அனைத்தும்**

3. பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத்திலிருந்து வேறுபடக்காரணம்

அ. வணிகக் கட்டுப்பாடுகள் ஆ. உற்பத்திக் காரணிகள் இடம் பெயர இயலாமை

இ. நாடுகளின் கொள்கை வேறுபாடுகள் ஈ. மேற்சொன்ன அனைத்தும்

**ஈ. மேற்சொன்ன அனைத்தும்**

4. நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட அடிப்படைகாரணம்

அ. ஒரு நாடு ஒரு குறிப்பிட்டப் பொருளையும் வேறு நாடு மற்றொரு பொருளையும் உற்பத்தி செய்யவிரும்புகிறது

ஆ. உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையேஏற்றத் தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளது

இ. பன்னாட்டு வாணிகம் லாபகுவிப்பு வாய்ப்பைஅதிகப்படுத்துகிறது

ஈ. நாடுகளில் நிலவும் வட்டி வீதமும் வெவ்வேறு அளவில் உள்ளது

**ஆ. உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையேஏற்றத் தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளது**

5. புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு எதன் அடிப்படையில் அமைந்தது?

அ. முழுமைச் செலவு
ஆ. ஒப்புமைச் செலவு
இ. உற்பத்திக்காரணிக் கோட்பாடு
ஈ. எதுவுமில்லை

6. பணமாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை

அ. பணசந்தை ஆ. அந்நிய செலாவணி இ. பங்கு சந்தை ஈ. மூலதனசந்தை

**ஆ. அந்நிய செலாவணி**

7.கீழ்கண்ட எந்த பணமாற்று நிர்ணய முறையில் சந்தை விலைகளான தேவையும் அளிப்பும் பணமாற்று வீதத்தை நிர்ணயிக்கிறது.

அ. மாறா பணமாற்று வீதம் ஆ. மாறுகின்ற பணமாற்று வீதம் இ. நிலைத்தபணமாற்று வீதம் ஈ. அரசு ஒழுங்காமைப்பும் முறை

**ஆ. மாறுகின்ற பணமாற்று வீதம்**

8. ஏற்றுமதி நிகரம் என்பது

அ. ஏற்றுமதி X இறக்குமதி
ஆ. ஏற்றுமதி + இறக்குமதி
இ. ஏற்றுமதி – இறக்குமதி ஈ. பணிகள் ஏற்றுமதி

**இ. ஏற்றுமதி – இறக்குமதி**

9. கீழ்கண்டவர்களில் யார்ஒற்றைக்காரணி வாணிபவீத்தைவடிவமைத்தவர்

அ. ஜேக்கப் வைனர் ஆ.G.S. டோரன்ஸ் இ. எப்.டபில்யு டாசிக் ஈ. ஜே.எஸ் மில்

**அ. ஜேக்கப்வைனர்**

10. வாணிப வீதம் ________ பற்றி குறிப்பிடுகின்றது.

www.Padasalai.Net

அ. பொருள் ஏற்றுமதி இறக்குமதி விகிதம் ஆ. இறக்குமதி வழி விகிதம் இ. ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம் ஈ. (அ) வும் (இ)யும்

**இ. ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம்**

11. சாதகமான வாணிக சூழலில் ஏற்றுமதி இறக்குமதியை விட _______ஆக இருக்கும்

அ. அதிகமாக ஆ. குறைவாக இ. கிட்டத்தட்ட சமமாக ஈ. சமமாக

**அ. அதிகமாக**

12. இறக்குமதி ஏற்றுமதியை விட அதிகமாக இருத்தலை கீழ்கண்ட வழிகளில் எது சரி செய்யும்

அ. சுங்கத் தீர்வையைக் குறைத்தல் ஆ. ஏற்றுமதி வரியை அதிகரித்தல் இ. ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல் ஈ. இறக்குமதிக்கு ஊக்கமளித்தல்

**ஆ. ஏற்றுமதி வரியை அதிகரித்தல்**

13.அயல்நாட்டுச் செலுத்து நிலைஉள்ளடக்கிய இனங்கள்

அ. புலனாகும் பொருட்கள் மட்டும் ஆ. புலனாகாத பணிகள் மட்டும் இ. அ மற்றும் ஆ ஈ. பண்டவாணிபம் மட்டும்

**இ. அ மற்றும் ஆ**

14. அயல்நாட்டுச் செலுத்து நிலை கூறுகள் கீழ் கண்டவைகளில் எவை

அ. நடப்பு கணக்கு ஆ. மைய வங்கி இருப்பு இ. மூலதன கணக்கு ஈ. அ,ஆ,இ மூன்றும்

**ஈ. அ,ஆ,இ மூன்றும்**

15. வாணிபக் கொடுப்பல் நிலை அறிக்கையில்

அ. பொருள் பரிவர்த்தனைமட்டும் பதிவாகிறது

ஆ. பொருள் மற்றும் பணிகள் பரிவர்த்தனைகள் பதிவாகிறது

இ. மூலதனம் மற்றும் நிதி பரிவர்த்தனைகள் பதிவாகிறது

ஈ. மேற்கண்ட அனைத்தும் பதிவாகிறது

**அ. பொருள் பரிவர்த்தனைமட்டும் பதிவாகிறது**

16. சுற்றுலா மற்றும் வெளிநாட்டுப்பயணம் தொடர்புடைய பரிவர்த்தனைகள் அயல்நாட்டு செலுத்துநிலையின் எந்தகணக்கின் கீழ் பதிவாகிறது

அ. பொருள் வாணிகக்கணக்கு ஆ. பணிகள் வாணிக கணக்கு இ. பணபரிவர்த்தனை கணக்கு ஈ. மூலதனகணக்கு

**ஆ. பணிகள் வாணிக கணக்கு**

17. சுழற்சி அயல்நாட்டுச் செலுத்து நிலை சமமற்ற நிலைக்கான காரணம்

அ. வாணிக சுழற்சியின் மாறுபட்டகால கட்டம்

ஆ. வருவாய்மற்றும் விலை தேவை நெகிழ்ச்சி நாடுகளுக்கிடையே வேறுபடுதல்

இ. நீண்டகால பொருளாதார மாற்றங்கள்

ஈ. அ மற்றும் ஆ

**ஈ. அ மற்றும் ஆ**

18. கீழ்கண்டவைகளில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான உதாரணமாக கூற முடியாது?

அ. வெளிநாட்டில் தன்னூர்தி ஆலைஅமைத்தல்

ஆ.வெளிநாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இரும்பு உருக்கு ஆலையை வாங்குதல்

இ. வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தைவாங்குவது

ஈ. முழு தனி உரிமையுடன் ஒரு புதிய நிறுவத்தை வெளிநாட்டில் தொடங்குவது

**ஈ. முழு தனி உரிமையுடன் ஒரு புதிய நிறுவத்தை வெளிநாட்டில் தொடங்குவது**

19. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை?

அ. வங்கி ஆ. அணு ஆற்றல் இ. மருந்து உற்பத்தி ஈ. காப்பீடு

**ஆ. அணு ஆற்றல்**

www.Padasalai.Net

20. கோட்பாட்டு அடிப்படையில் வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகளாவன

அ. பொருளதார வளர்ச்சி ஆ. பன்னாட்டு வாணிபவளர்ச்சி இ. வேலைவாய்ப்பு மற்றும் திறன் அதிகரித்தல் ஈ. மேற்கண்ட அனைத்தும்

**ஈ. மேற்கண்ட அனைத்தும்**

**பகுதி – ஆ**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்**

**21. பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன?**

பன்னாட்டுப் பொருளியல் என்பது பொருட்கள் மற்றும் பணிகள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது

பன்னாட்டுப் பொருளியலை நாடுகள் ஒன்றை ஒன்று சார்ந்திருத்தல், இந்த சார்ந்திருத்தலை நிர்ணயிக்கும் காரணிகள் மற்றும் அதன் விளைவுகளை விளக்கமாக எடுத்துரைக்கும் பொருளியலின் சிறப்பு பாடப்பிரிவு எனலாம்.

**22. பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம் தருக.**

**பன்னாட்டு வாணிகம்**

பொருட்கள் மற்றும் பணிகளை இரு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் பரிமாறிக் கொள்வதை பன்னாட்டு வாணிகம் எனலாம். இது நாடுகளின் எல்லைகளை கடந்து நடைபெறும் வாணிகம். இதை வெளிவர்த்தகம், அல்லது ‘அயல் வாணிகம்’ அல்லது ‘மண்டலங்களுக்கிடையிலான வாணிகம்’ என்றும் அழைக்கலாம்.

**23. பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டு குறிப்பிடுக**

**I. திறனுடைய உற்பத்தி**

பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் அனைத்து நாடுகளும் முழு அல்லது ஒப்பிட்டுத் தனிதேர்ச்சி கிடைப்பதனால் கீழ்கண்ட நன்மைகளைப் பெறுகின்றன.

1. உற்பத்தி வளங்களை சிறப்பாக பயன்படுத்துதல்
2. ஒப்பிட்டுத் தனித் தேர்ச்சியுள்ள பொருளுற்பத்தியில் கவனம் செலுத்துதல்
3. உழைப்பு விரயம் தவிர்த்தல்
4. உற்பத்தி திறன் மேம்படுதல்
5. உற்பத்தி பொழில் நுட்பம் மேம்படுதல்
6. உற்பத்தி அளவு அதிகரித்தல்

7. பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் நாடுகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

**II. நாடுகளிடையே விலை சமனடைதல்**

பன்னாட்டு வாணிகம் அனைத்து வணிக நாடுகளிலும் சமநிலை நிலவ உதவுகிறது.

1. பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் நாடுகளில் விலை சமமாகும்.
2. போக்குவரத்து செலவில் மட்டும் வேறுபாடு காணப்படும்.
3. உற்பத்தி காரணிகளின் விலையும் நாடுகளிடையே சமமாகும்.

24. பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை விளக்குவதில் ஆடம் ஸ்மித்துக்கும், டேவிட் ரிக்கார்டோவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

**ஆடம் ஸ்மித்தி**ன் கோட்பாடு

ஆடம்ஸ்மித்தின் கருத்தின் படி குறைந்த தனி அடக்கச் செலவில் பொருளுற்பத்தி செய்யும் தேர்ச்சியை நாடுகள் பெற்றிருப்பதே பன்னாட்டு வாணிகம் நடைபெறுவதற்கான அடிப்படையாகும். இரண்டு நாடுகள் பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபடுகிறது என எடுத்துக் கொள்வோம். அதில் ஒரு நாடு ஒரு பொருளை குறைந்த தனி அடக்கச் செலவில் உற்பத்தி செய்யும் சிறப்பு தேர்ச்சியை பெற்றுள்ளது. மற்றொரு நாடு வேறு பொருளை குறைந்த தனி அடக்கச் செலவில் உற்பத்தி செய்யும் தேர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்த இரு நாடுகளும் பொருட்களை பன்னாட்டு வாணிகத்தில் பரிவர்த்தனை செய்து கொண்டால் இரண்டு நாடுகளுக்கும் நல்லபலன் கிடைக்கும்.

**ரிக்கார்டோவின் ஒப்புமைச் செலவுக் கோட்பாடு**

டேவிட் ரிக்கார்டோ இங்கிலாந்து நாட்டைசேர்ந்த பொருளியல் அறிஞர். தன் “அரசியல் பொருளாதாரம் மற்றும் வரி விதித்தலின் கோட்பாடுகள்” என்ற புத்தகத்தை1817 ல் வெளியிட்டார். இதில்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

ஒப்புமைச் செலவு கோட்பாட்டைவிளக்கி எழுதியுள்ளார். இதற்கு பிறகு ஜே.எஸ்.மில், மார்ஷல், டசிக் மற்றும் பலர் இக்கோட்பாட்டை மெருகேற்றினர்.

**.25. வாணிபவீதத்தினைவிளக்குக.**

£ßÚõmk ÁõoP •øÓ°ß C»õ£® Gß£x Áõo£ Ãuzøu ö£õÖzx®, HØÖ©v, CÓUS©v Âø» Ãvzøu ö£õÖzx® Aø©²®.

**26. வாணிபச் செலுத்துநிலைபற்றி நீவிர்அறிவது யாது?**

**அயல் நாட்டுச் செலுத்து நிலை பொருள் விளக்கம்**

ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கையை அயல்நாட்டுச் செலுத்துநிலை என்கிறோம். இது இரட்டைப்பதிவு கணக்கியல் முறையில் தயாரிக்கப்படும் அறிக்கையாகும்
.

**27. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?**

அந்நிய செலாவணி சந்தையில் பரிவர்த்தனைகள் சந்தையில் நிலவுகின்ற பணமாற்று வீதத்தில் நடைபெறுகிறது. இது அயல் பண அளவில் உள்நாட்டு பணத்தின் மதிப்பாகும். நாடுகள் அவர்களின் பணத்தை பல முகமதிப்பு இனங்களாக பிரித்து வெளியிடுகிறார். ஒரு அலகு அயல்பணத்தை பெறுவதற்கு கொடுக்கிறோம்.

**பகுதி – இ**

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்**

**28. பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தை பட்டியலிடுக**

**பன்னாட்டுப் பொருளியலின் பொருளடக்கம்**

பன்னாட்டுப் பொருளியலின் பொருளடக்கம் பல பாகங்களை உள்ளடக்கியது. அவை கீழ் கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**1. தூய வாணிபக் கோட்பாடு**

நாடுகள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான காரணங்கள், எந்தவகையான பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன, எந்தெந்தவகையான நாடுகளுக்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகிறது, வாணிகம் செய்யப்படும் அளவு, அயல் வாணிப விகிதம், பணமாற்று விகிதம் பன்னாட்டு பொருள் வாணிக செலுத்து நிலை மற்றும் அயல் வாணிக செலுத்து நிலை ஆகியவற்றை விவரிக்கும் பிரிவே தூய வாணிப கோட்பாடாகும்.

**2. கொள்கைச் சச்சரவுகள்**

நாடுகளுக்கிடையேயான வாணிக உறவுகளை கட்டுப்படுத்துவதா, தடைகளற்ற வாணிகத்தை அனுமதிப்பதா போன்றவற்றை இப்பிரிவு விவாதிக்கிறது. பொருள் வாணிகம் முதலீடு மற்றும் தொழில்நுட்பம் இடம் பெயர்தல், அயல் வாணிகத்தின் மீது வரிவிதித்தல், மானியம் வழங்குதல், பன்னாட்டு விலைபேதம், செலவாணிக்கட்டுப்பாடுகள், பன்னாட்டு நிதி உதவி மற்றும் பன்னாட்டுக்கடன் அன்னிய நேரடி முதலீடு, அயல்நாட்டுச் செலுத்துநிலைத் தீர்வுகள் ஆகியவை இந்தப்பிரிவின் கீழ் அடங்கும்.

**3. பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும்**

இந்தபிரிவு பன்னாட்டுக் கூட்டமைப்பு, சுங்கவரி ஒன்றியங்கள், பணவியல் ஒன்றியங்கள் மற்றும் நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பு, அமைப்புகளின் மூலமாக நாடுகளின் பொருளாதாரம் இணைக்கப்பட்டுள்ளதை விவரிக்கிறது. பன்னாட்டு வாணிக நிறுவனங்களின் செயல்பாடுகளையும் இப்பிரிவு விவாதிக்கிறது.

**4. பன்னாட்டு நிதி மற்றும் வாணிப ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள்**

பன்னாட்டுப் பணநிதியம், மறு கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான பன்னாட்டு வங்கி (உலக வங்கி), உலக வர்த்தக நிறுவனம் மற்றும் வாணிகம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டு அமைப்பு போன்ற பன்னாட்டு அமைப்புகள் நாடுகளுக்கிடையிலான பொருளாதார உறவுகளை மாற்றியமைக்கும் விதம் பற்றி இப்பிரிவில் புரிந்து கொள்ளலாம்

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**29.பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்கும் புதிய கோட்பாட்டிற்குமிடையிலான வேறுபாடுகளை எழுது.**

தொன்மை **மற்றும் புதிய கோட்பாடுகள் ஒப்பீடு**

| **வ. எண்** | **தொன்மைப் பன்னாட்டு வாணிபக் கோ ட்பாடு** | **புதிய பன்னாட்டு வாணிபக் கோ ட்பாடு** |
|---|---|---|
| 1. | பன்னாட்டு வாணிபத்தை விளக்குவதற்கு உழைப்பைச் சார்ந்தமதிப்புக்கோட்பாட்டைஅடிப் படையாகக் கொண்டது. | பன்னாட்டு வாணிபத்தைவிளக்குவதற்கு பொது மதிப்புக்கோட்பாட்டைஅடிப்படையாகக் கொ ண்டது |
| 2. | இது ஒரு காரணி (உழைப்பு) மாதிரியாகும் | இது இரு காரணி (உழைப்பு, மூலதனம்) மாதிரியாகும். |
| 3. | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உழைப்பாளர்களின் உற்பத்தி திறன் வேறுபாடுகள் காரணம் என்கிறது | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உற்பத்தி காரணிகளின் கிடைப்பளவு வேறுபாடேகாரணம் எனநம்புகிறது. |

**30. மொத்த மற்றும் நிகர பண்டபரிமாற்று வாணிப வீத்தை சுருக்கமாக எழுதுக**

1. மொத்தபண்டமாற்று வாணிப வீதம்

இந்த வீதத்தையும் தாசிக் என்பவரே 1927ல் அறிமுகப்படுத்தினார். நிகர பண்டமாற்று வீதத்தை மேம்படுத்தி இதை வடிவமைத்தார். மொத்த ஏற்றுமதி பொருட்களின் குறியீட்டெண்ணிற்கும் மொத்த இறக்குமதி பொருட்களின் குறியீட்டெண்ணிற்குமிடையிலான விகிதத்தை 100 ஆல் பெருக்க கிடைக்கும் தொகையாக மொத்த பண்டமாற்று வாணிப வீதத்தை புரிந்து கொள்ளலாம்.

2.நிகர பண்டபரிமாற்று வாணிபவீதம்

நிகர பண்டமாற்று வீதத்தை எப். டபில்யு தாசிக் 1927ல் வடிவடைத்தார். ஏற்றமதி விலைகளுக்கும் இறக்குமதி விலைகளுக்குடையிலான விகிதமே நிகர பண்டமாற்று வாணிப வீதம் என்கிறார். ஜேக்கப் வைனர் இதை பொருள் வாணிபவீதம் என்றழைக்கிறார். இதனை கீழ்கண்டவாறு குறிப்பிடலாம்.

இதனை சூத்திர வடிவில் கீழ்கண்டவாறு எழுதலாம்.

**Tg= (Qx/Qm) x 100**

இங்கு Tg = பண்டமாற்று வாணிப வீதம்

Qm = இறக்குமதி அளவு குறியீட்டெண்

Qx = ஏற்றுமதி அளவு குறியீட்டெண்

ஒரு குறிப்பிட்ட அளவு ஏற்றுமதி செய்யும் நாடு எந்த அளவு பொருட்களை இறக்குமதி செய்து கொள்ளலாம் என மொத்த பண்டமாற்று வாணிப வீதம் சுட்டிக் காட்டுகிறது.

**31. வாணிபக் கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டுச் செலுத்து நிலைக்குமிடையிலான ஏதேனும் மூன்று வேறுபாடுகளை பட்டியலிடுக**

**வாணிபக் கொடுப்பல் நிலை(BOT)**

ஒரு நாட்டின் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பையே வாணிபக் கொடுப்பல் நிலைஎன்கிறோம். ஒரு நாட்டின் வாணிபக் கொடுப்பல் நிலை அறிக்கையில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விவரங்கள் மட்டுமே தொகுத்தளிக்கப்படுவது கவனிக்கத்தக்கது. பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதியை“புலப்படும் வாணிகம்” எனவும் அழைக்கலாம் ஏனென்றால் பொருட்களைகண்ணால் காணவும் தொட்டுணரவும் முடியும்.

**அயல் நாட்டு செலுத்து நிலை(BOP)**

நாடுகளுக்கிடையே பொருட்கள் மட்டுமல்லாமல் பணிகள், மூலதனம் பணம் போன்றவையும் பரிமாறிக் கொள்ளப்படுகிறது. இவற்றையும் உள்ளடக்கிய சமநிலையை ஒரு நாடு அடைய வேண்டும். இவை எல்லாவற்றையும் உள்ளடக்கிய தொகுப்பு அறிக்கையேஅயல்நாட்டுச் செலுத்துநிலை.

**அயல் நாட்டுச் செலுத்துநிலை பொருள்விளக்கம்**

ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனைஅறிக்கையைஅயல்நாட்டுச் செலுத்துநிலை என்கிறோம். இது

இரட்டைப்பதிவு கணக்கியல் முறையில் தயாரிக்கப்படும் அறிக்கையாகும்.

**32. இறக்குமதி பங்களவு என்றால் என்ன?**

இறக்குமதியை கட்டுப்படுத்தும் கீழ்கண்ட வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி இறக்குமதியை கட்டுப்படுத்தலாம் i) இறக்குமதி மீது வரிவிதித்தல் முன்பே விதிக்கப்பட்டிருந்தால் விகிதத்தை அதிகப்படுத்தலாம். ii) பங்களவு நிர்ணயித்து இறக்குமதியை குறைக்கலாம். பங்களவு என்பது இறக்குமதி அளவை நிர்ணயித்தலாகும். iii) கட்டுபாடு அல்லது தவிர்ப்பு என்ற முறையில் அத்தியாவசியமற்ற பொருட்களை குறைப்பது. ஆனால் இது கடத்தலை ஊக்குவிக்கும்.

**33. மாறுகின்ற பணமாற்று வீதத்தின் பொருள் தருக?**

அந்நிய செலாவணி சந்தை விசைகளான மாறுகின்ற அந்நிய செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பண மாற்று வீதத்தை நிர்ணயிக்கும் முறையே மாறுகின்ற பண மாற்று வீதமாகும். இதை மிதக்கும் பணமாற்று வீதம் என்றும் அழைக்கலாம்.

.

**34. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களைகுறிப்பிடுக**

**வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்கள்**

1. விற்பனையை விரிவுப்படுத்துதல்
2. இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்
3. வாணிக பரவலாக்கம்
4. போட்டி இடர்களை குறைத்தல்

**பகுதி – ஈ**

**கீழ்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக**

**35. உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்**

**உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகள்**

| **வ. எண்** | **உள்நாட்டு வாணிகம்** | **பன்னாட்டு வாணிகம்** |
|---|---|---|
| 1. | ஒரு நாட்டிற்குள் மக்கள் ம நிறுவனங்களுக்கிடையேநை றும் வாணிகம் | |
| 2. | உழைப்பு மற்றும் மூலதனம் நாட்டின் பகுதிகளுக்கிை தடையில்லாமல் இடம் பெயர | |
| 3. | பொருட்கள் மற்றும் ப இடம் பெயர்தலில் ஏதுமில்லை | |
| 4. | விற்றல் வாங்கலில் ஒ பணம் மட பயன்படுத்தப்படுகிறது | |
| 5. | புவி அமைப்பு மற்றும் நிலைசூழல் கிட்டத்தட்டஒரேமாதிரி இருக் | |
| 6. | வாணிக மற்றும் நடைமுறைகள் ஒரேமாதிரியானவை | |
| 7. | அரசமைப்பு முறைமக்க பழக்கவழக்கங்கள் மற் அரசின் கொள்கைக வேறுபாடில்லை | |

**36. ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விவரி**

**ரிக்கார்டோவின் ஒப்புமைச் செலவுக் கோட்பாடு**

டேவிட் ரிக்கார்டோ இங்கிலாந்து நாட்டைசேர்ந்த பொருளியல் அறிஞர். தன் "அரசியல் பொருளாதாரம் மற்றும் வரி விதித்தலின் கோட்பாடுகள்" என்ற புத்தகத்தை 1817 ல் வெளியிட்டார். இதில் ஒப்புமைச் செலவு கோட்பாட்டை விளக்கி எழுதியுள்ளார். இதற்கு பிறகு ஜே.எஸ்.மில், மார்ஷல், டசிக் மற்றும் பலர் இக்கோட்பாட்டை மெருகேற்றினர்.

ரிக்கார்டோ பொருட்களை உற்பத்தி செய்ய செலவழிக்கப்படும் செலவு

வேறுபாட்டை பன்னாட்டு வாணிபத்திற்கான அடிப்படை என்கிறார். ஒரு நாடு உற்பத்தி செய்யும் பொருட்களுக்கிடையே தனி அடக்க செலவில் வேறுபாடில்லை ன்றாலும் ஒப்புமை செலவு வேறுபட்டிருக்கும். ஒரு நாடு குறைந்த ஒப்புமைசெலவில் ஒரு பொருளை உற்பத்தி செய்யுமானால் அந்நாடு பன்னாட்டு

வாணிபத்தின் மூலம் பலனடைய முடியும் என்கிறார்.

ரிக்கார்டோ இரண்டு பொருட்களை ஒரு நாடு குறைந்ததனி அடக்கசெலவில் உற்பத்தி செய்ய முடிந்தாலும் அந்த நாடு மற்ற நாட்டு உற்பத்தி செலவுடன் ஒப்பிட்டு குறைந்த செலவில் உற்பத்தி செய்ய இயலும் பொருளுற்பத்தியில் தனித் தேர்ச்சி அடைந்து ஏற்றுமதி செய்யலாம். இதே போன்று, எந்த பொருளையும் குறைந்தசெலவில் உற்பத்தி செய்ய இயலாத நாடு மற்ற நாட்டின் பொருளுற்பத்தி செலவுடன் ஒப்பிட்டு மிக உயர்வான உற்பத்தி செலவுள்ள பொருள் உற்பத்தியை நிறுத்திவிட்டு அவற்றை இறக்குமதி செய்து பலனடையலாம்.

**எடுகோள்கள்**

1. இரண்டு நாடுகள் இரண்டு பொருட்களைஉற்பத்தி செய்கின்றன. (2 ×2 மாதிரி)

2. கூலிச் செலவு மட்டுமே உற்பத்தி செலவாகும்.

3உழைப்பாளர்களனைவரும் சமமான திறன் பெற்றவர்கள்.

4. உழைப்பு ஒரு நாட்டுக்குள் இடம்பெயர தக்கது. நாடுகளுக்கிடையே இடம் பெயர இயலாதது.

5.உற்பத்தியளவு மாறா விளைவு விதிக்குட்பட்டது.

6. நாடுகள் பன்னாட்டு வாணிகத்தின் மீது தடைகளை விதிப்பதில்லை.

7. உற்பத்தி தொழில் நுட்பத்தில் மாற்றங்கள் நிகழ்வதில்லை.

8 போக்குவரத்து செலவு கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை.

9 நாட்டின் சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுகிறது.

10. உற்பத்தி வளங்கள் முழுவதும் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்றன.


11.நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடுவதில்லை.

**எடுத்துக்காட்டு விளக்கம்**

ரிக்கார்டோவின் ஒப்புமைச் செலவு கோட்பாட்டினை அமெரிக்காவும் இந்தியாவின் துணி மற்றும் கோதுமை உற்பத்தி செலவுகளை கற்பனை உதாரணங்களாக கொண்டு புரிந்து கொ ள்ளலாம்.

**ஒப்புமைச் செலவு (ஒரு அலகு உற்பத்தி செய்ய தேவைப்படும் உழைப்பின்அளவு)**

| நாடு | துணி | கோதுமை | உள்நாட்டு பரிமாற்ற விகிதம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 100 | 120 | 1 மூட்டை கோதுமை = 1.2 மீட்டர்துணி |
| இந்தியா | 90 | 80 | 1 மூட்டை கோதுமை = 0.88 மீட்டர்துணி |




**குறிப்பு:வளைகோட்டின் சாய்வுகள் வேறுபாடனவை**

**37. புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டினை விவாதிக்கவும்**

**கோட்பாடு**

ஒப்புமைச் செலவு வேறுபாடே பன்னாட்டு வாணிகத்திற்கான காரணம் எனத தொன்மைப் கோட்பாடுகளில் காணப்படுகிறது. மேலும் தொன்மை **கோட்**பாடு உழைப்பைமட்டுமேஉற்பத்தி காரணியாக கருதுகிறது. ஆனால் புதிய வாணிகக் **கோட்**பாடு ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கான காரணங்களை விளக்குகிறது. கீழ்கண்ட இரண்டு காரணங்களால் நாடுகளுக்கிடையே ஒப்புமைச் செலவு வேறுபடுகின்றது.

www.Padasalai.Net

i) நாடுகள் பெற்றுள்ள உற்பத்தி காரணிகள் அளவு வேறுபடுகிறது.

ii) உற்பத்திக்குத் தேவைப்படும் உற்பத்தி காரணிகளின் விகிதமும் வேறுபடுகிறது.

**எடுகோள்கள்**

1. இரண்டு நாடுகள் இரண்டு உற்பத்தி காரணிகளை பயன்படுத்தி இரண்டு விதமான பொருட்களை உற்பத்தி செய்கிறது (2X2X2 மாதிரி).
2. நாடுகள் வெவ்வேறு அளவுகளில் உற்பத்தி காரணிகளை பெற்றுள்ளது.
3. பொருட்கள் அவற்றின் உற்பத்தியில் உற்பத்தி காரணியின் தேவைப்படும் அளவு தீவிரத்தன்மையைப பொறுத்து வகைப்படுத்தப்படுகிறது.
4. இரண்டு நாடுகளும் ஒரேவிதமான உற்பத்தி தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றன.
5. இரண்டு நாடுகளும் ஒரே இயல்பானதேவையை பெற்றுள்ளன.
6. இரண்டு நாட்டின் பொருள் மற்றும் உற்பத்தி காரணிகளுக்கான சந்தையில் நிறைவுப்போட்டி நிலவுகிறது.

**ஹெக்செர் – ஒலின் கோட்பாடு (H – O Theorem)**

**H – O கோட்பாடு**

**ஏற்றுமதிகள்**

**காரணி**

“மூலதன இருப்பை அதிகம் கொண்ட நாடு மூலதனப் பண்டஙகளையும், உழைப்பு இருப்பை அதிகம் கொண்ட நாடு உழைப்பை அதிகம் பயன்படுத்தும் பண்டஙகளையும் ஏற்றுமதி செய்யும்”.

ஒரு நாடு அது அதிகமாகக் கொண்டுள்ளகாரணியைக் கொண்டு உற்பத்தி செய்யும் பண்டஙகளை ஏற்றுமதி செய்யும் காரணி விகிதங்களின் மாதிரி ஏற்றுமதி, இறக்குமதியை காரணி இருப்பு அளவுகளகோடு தொடர்புபடுத்துகிறது.

**விளக்கம்**

மூலதனம் மிகுதியாக உள்ள நாடு அதிக முதலீட்டில் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி செய்யும் உழைப்பாளர்கள் மிகுதியாக உள்ள நாடு அதிக உழைப்பினால் தயாரிக்கப்படும் பொருட்களை ஏற்றுமதி செய்யும் என ஹெக்சர் ஒலின் கூறுகிறார்கள். ஒரு உற்பத்தி காரணி மிகுதியாகச் கிடைக்கிறதா பற்றாக்குறையாக உள்ளதா என்பது மற்ற காரணிகள் கிடைக்கும் அளவைப் பொருத்தது. ஒரு நாட்டின் மூலதனஅளவிற்கும் மற்ற உற்பத்தி காரணி அளவிற்கு மானவிகிதம் மற்ற நாடுகளின் விகிதத்தைவிட அதிகமாக இருந்தால் அந்தநாட்டை மூலதனம் மிகுந்த நாடு எனக்கருதலாம்.

**உதாரண விளக்கம்**

| **விபரங்கள்** | **இந்தியா** |
|---|---|
| உழைப்பின் அளிப்பு | 50 |
| மூலதனத்தின் அளிப்பு | 40 |
| மூலதனஉழைப்பு விகிதம் | 40/50 = 0.8 |

இந்தியா அதிக மூலதனம் உள்ள நாடு போன்று தோன்றினாலும் அமெரிக்காவே மூலதனம் மிகுந்தநாடாகும் என்பது அமெரிக்காவின் மூலதனஉழைப்பு விகிதமான1.25 இந்தியாவின் 0.8 விட அதிகமிருப்பதிலிருந்து புரிகிறது. கீழ்க்கண்ட வரைபடம் புதிய வாணிபக் கோட்பாட்டின்படி உலக வாணிகத்தில் பொருள் கலவை எப்படி இருக்கும் என விளக்குகிறது.

**அதிக மூலதனத்தால் உற்பத்தியாகும் பொருள்களை ஏற்றுமதி செய்யும்**

**மூலதன மிகுதி நாடு**

**உழைப்பு மிகுதி நாடு**

**அதிக உழைப்பினால் தயாரிக்கும் பொருள்களை ஏற்றுமதி செய்யும்**

**குறைபாடுகள்**

1. நாடுகளில் உற்பத்தி காரணிகளின் இருப்பளவு காலத்திற்கேற்றாற் போல மாறலாம்.

2. உற்பத்திக்காரணிகளின் திறன் நாடுகளுக்கிடையே வேறுபடலாம். உழைப்பாளர்களின் எண்ணிக்கை கவனத்தில் எடுத்துக் கொண்டால் அமெரிக்கா உழைப்பாளர் பற்றாக்குறை உள்ளநாடு போன்று தோன்றும். ஆனால் உழைப்பாளர்களின் உற்பத்தி திறனை கணக்கிலெடுத்துக் கொண்டால் அமெரிக்கா உழைப்பாளர்கள் மிகுந்த நாடாகும்.

**38 ஜேக்கப்வைனரால் வடிவமைக்கப்பட்ட வாணிபவீத வகைகளை விவரி**

உற்பத்திக் காரணிகள் பரிமாற்றத்தின் அடிப்படையில் இரண்டு வகையான வாணிப வீதங்கள் உள்ளன.

அ. ஒற்றை காரணி வாணிப வீதம்.

1. ஜேக்கப் வைனர் ஒற்றைக் காரணி வாணிப வீதத்தை வடிவமைத்தார்

2. பண்ட பரிமாற்ற வாணிப வீதத்தை விரிவுபடுத்தி இந்த வாணிப வீத சுதந்திரத்தை உருவாக்கினார்.

3. ஏற்றுமதி விலை குறியீடு எண்ணற்கும் இறக்குமதி விலை குறியீட்டெண்ணுக்கும் இடையான விகிதத்தில் ஏற்றுமதிக்கான உற்பத்தி தொழில் துறையின் உற்பத்தி திறன் குறியீட்டெண்ணின் மதிப்பினால் மாற்றம் செய்யப்பட்ட வீதமே ஒற்றைக் காரணி வாணிப வீதமாகும்.

கூஊ = (கது / கட்) ஊது

கூஔ = ஒற்றைக்காரணி வாணிப வீதம்

கது = ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்

கட் = இறக்குமதி விலை குறியீட்டெண்

ஊது = ஏற்றுமதிக்கு பொருள் உற்பத்தி செய்யும் தொழில் துறையின் உற்பத்தி திறன்.

ஆ. இரட்டைக் காரணி வாணிப வீதம்.

இந்த வீதத்தையும் வைனரே வடிவமைத்தார். இதன் சூத்திர வடிவம் கீழ்வறுமாறு.

கூஊ = (கது / கட்) ஊது

கூஔ = ஒற்றைக்காரணி வாணிப வீதம்

கது = ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்

கட் = இறக்குமதி விலை குறியீட்டெண்

ஊது = ஏற்றுமதிக்கு பொருள் உற்பத்தி செய்யும் தொழில் துறையின் உற்பத்தி திறன் குறியீட்டெண்

ஊM = இறக்குமதி பொருள் உற்பத்தி செய்யும் நாட்டில் அத்துறையின் உற்பத்திறன் குறியீட்டெண்.

**39. அயல் நாட்டுச் செலுத்து நிலையின் கூறுகளைஅட்டவணை வடிவில் விளக்குக.**

**அயல்நாட்டுச் செலுத்துநிலையின்கூறுகள்**

**40.அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையின் வகைகளை விவரி.**

**அயல்நாட்டுச் செலுத்துநிலை சமனற்றநிலையின் வகைகள்**

அ) சுழற்சி சமனற்ற நிலை

ஆ) நீண்டகால சமனற்ற நிலை

இ) கட்டமைப்பு சமனற்ற நிலை

**அ) சுழற்சி சமனற்றநிலை**

வாணிபசு ழற்சியின் விளைவாக எழும் அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையைசுழற்சி சமனற்ற நிலை என்கிறோம். கீழ்கண்டஇரண்டு காரணங்களால் இது நிகழ்கிறது முதலாவது, நாடுகள் வாணிபசுழற்சியின் வெவ்வேறு கட்டங்களிலிருப்பது இரண்டாவது, நாடுகளுக்கிடையே தேவை நெகிழ்வு அளவு மாறுபடுவது

**ஆ) நீண்டகால சமனற்றநிலை**

நாடுகள் பொருளாதார வளர்ச்சி படிநிலைகளில் முன்னேறும்பொழுது நீண்டகால தலைகீழ் மாற்றங்கள் நிகழ்வதால் உண்டாகும். அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையை நீண்ட கால சமனற்ற நிலைஎ னலாம். வளர்ச்சியின் துவக்கநிலையில் ஒரு நாட்டின் உள்நாட்டு முதலீடு உள்நாட்டு சேமிப்பை விட கூடுதலாக இருக்கும். இறக்குமதி ஏற்றுமதியை விட அதிகமாக இருக்கும். இந்தியாவில் 1951 லிருந்தே இந்தசூழ் நிலை நிலவுகிறது.

**இ) கட்டமைப்பு சமனற்றநிலை**

நாட்டின் பொருளாதார கட்டமைப்பு மாற்றங்களினால் நிகழும் அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையே கட்டமைப்பு சமனற்ற நிலையாகும். மாற்று வழங்கல் ஆதாரங்களை கண்டுபிடித்தல், செயற்கையான பதிலீட்டுப் பொருட்களை கண்டுபிடித்தல், உற்பத்தி வளங்கள் தீர்ந்து மோதல் அல்லது போக்குவரத்து வழிகளும் செலவும் மாற்றமடைதல் போன்றவையே பொருளாதார கட்டமைப்பு மாற்றம் என்கிறோம்.

41. மாற்று வீதம் எவ்வாறு இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது என்பதை உதாரணத்துடன் விளக்குக.

**பண மாற்று வீதம் நிர்ணய முறைகள்**

பணமாற்று வீதம் இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது. அவையாவன 1) நிலையான பணமாற்று வீதம் மற்றும் 2)

மாறுபடும்/ நிலையற்ற பணமாற்று வீதம். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நிர்வகிக்கப்பட்ட பணமாற்று வீத நிர்ணமுறை ஒன்றும் உண்டு. இந்தியாவில் வகையான முறையே பின்பற்றப்படுகிறது.

**1. நிலையானபணமாற்று வீதம்**

மாறாத பணமாற்று வீதத்தை நிலையான பணமாற்று வீதம், மற்றும் நிலை நிறுத்தப்பட்டப ணமாற்று வீதம் என்ற பெயர்களாலும் குறிப்பிடலாம். ஒரு நாட்டின் அரசாங்கம் மைய வங்கியின் மூலம் பணமாற்று வீதம் நிர்ணயித்தால் அதை மாறாத பணமாற்று வீதம் என்கிறோம். தங்க மாற்று பன்னாட்டு பணவியல் முறையில் (Gold Standard) நாடுகளின் பணமாற்று மதிப்பு தங்கத்தின் அளவில் நிர்ணயிக்கப்பட்டது.

2. ©õÖபடும்/ நிலையற்ற பணமாற்று வீதம்

A¢{¯ ö\»õÁo \¢øu Âø\PÎõÚ ©õÖQßÓ A¢{¯ ö\»õÁoUPõÚ ÷uøÁ²® AÎ¨¦® £n ©õØÖ Ãuøu {ºn°US® •øÓ÷¯ ©õÖQßÓ £n ©õØÖ Ãu©õS®. Cøu ªSUS® £n©õØÖ Ãu® GßÖ® AøÇUP»õ®.

42. பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குக.

**இந்தியாவின் வெளிநாட்டு நேரடி மூலதனம்**

இந்தியாவில் 1991ல் பொருளாதார சீர்த்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டது. இது இந்தியாவின் சந்தையை வெளிநாட்டு மூலதனத்திற்கு திறந்து விட்டது. தொடர்ந்து வெளிநாட்டு மூலதனம் இந்தியாவில் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இது உழைப்பு மற்றும் முதலீட்டு இடம் பெயர்தலை தாராளமாக்கியது, புதிய தொழில் நுட்பத்தைக் கொண்டு வந்தது, புதிய மேலாண்மை நுட்பங்களை அறிமுகம் செய்தது மேலும் இந்தியாவுக்கு பன்னாட்டு சந்தையில் நுழையும் வாய்ப்பையும் உருவாக்கியது.

**வெளிநாட்டு மூலதனத்தால் பலனடைந்தஇந்தியத் துறைகள்**

(i) நிதித் துறை
(ii) காப்பீடு
(iii) தகவல் தொடர்பு
(iv) சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறை
(v) மருந்து உற்பத்தி
(vi)பொருள் மற்றும் தகவல் தொழில் நுட்பம்

**இந்தியாவில் வெளிநாட்டு மூலதனம் தடை செய்யப்பட்டத் துறைகள்**

(i) போக்கருவிகள் மற்றும் ஆயுத உற்பத்தி
(ii) அணு ஆற்றல்
(iii) தொடர்வண்டி போக்குவரத்து
(iv) நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி
(v) இரும்புத் தாது, மாங்கனீசு, கிரோம், ஜிப்சம், சல்பர், தங்கம், வைரம், தாமிரம் போன்ற தாது சுரங்கத் துறை

வெளிநாட்டு நேரடி மூலதனம் இந்தியாவுக்குள் 97 மில்லியன் அளவுக்கு 1990 – 91ல் வந்தது. இது 5,535 மில்லியனாக 2004 – 05ல் இருந்தது. இது 2011 – 12 32,955 ஆக உயர்ந்தது. UNCTAD உலக முதலீட்டு அறிக்கை2018ன்படி 2016ல் 44 பில்லியனாக இருந்தவெளிநாட்டு நேரடிமூலதனம் 2017ல் 40 பில்லியனாக குறைந்துள்ளது.

**அத்தியாயம் 8 பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்**

**பகுதி – அ**

**சரியானவிடையைதெரிவு செய்க:**

1. **பன்னாட்டு** பண நிதியம் கீழ்க்கண்ட இந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது

அ) பான்டுங் மாநாடு ஆ) சிங்கப்பூர்மாநாடு இ) பிரிட்டன்வூட்ஸ் மாநாடு ஈ) தோஹா மாநாடு

**இ) பிரிட்டன் வூட்ஸ் மாநாடு**

2. **பன்னாட்டு** பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்

அ)வாஷிடங்டன்டி.சி
ஆ)நியூயார்க் இ)வியன்னா
ஈ) ஜெனிவா

**அ)வாஷிடங்டன் டி.சி**

3.ஐபிஆர்டி இவ்வாறாகவும் அழைக்கப்படுகிறது.

www.Padasalai.Net

அ) பன்னாட்டு பணநிதியம் ஆ) உலக வங்கி இ) ஆசியான் ஈ) பன்னாட்டு நிதி கழகம்

**ஆ) உலக வங்கி**

4. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர்

அ) தாள் தங்கம்ஆ) பங்களவுகள் இ) தன்விருப்ப ஏற்றுமதி தடைகள் ஈ) இவைஏதுமில்லை

**அ) தாள் தங்கம்**

5. நீண்டகாலக் கடன் வழங்கும் நிதி நிறுவனம்

அ) உலக வங்கி ஆ) பன்னாட்டுப் பண நிதியம் இ) உலக வர்த்தக அமைப்பு ஈ) பிரிக்ஸ்

**அ) உலக வங்கி**

6. கீழ்கண்ட நாடுகள் எது சார்க் அமைப்பின் உறுப்பினர் இல்லை?

அ) இலங்கை ஆ) ஜப்பான் இ)வங்காளதேசம் ஈ)ஆப்கானிஸ்தான்

**ஆ) ஜப்பான்**

7. பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்க்கண்ட இதன் துணை அமைப்பாகும்

அ) பன்னாட்டுப் பண நிதியம் ஆ) உலக வங்கி இ) சார்க் ஈ) ஆசியான்

**ஆ) உலக வங்கி**

8. காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக ரகசியம் போன்றவை_______உடன் தொடர்புடையவை

அ) வணிகம் சார் சொத்துரிமை ஆ) வணிகம் சார்ந்த முதலீட்டு வழிமுறைகள் இ) காட்ஸ் ஈ) NAMA

**அ) வணிகம் சார் சொத்துரிமை**

9. உலக வர்த்தக அமைப்பின் முதலாவது அமைச்சர்கள் அளவிலான மாநாடு நடைபெற்ற இடம்

அ) சிங்கப்பூர் ஆ) ஜெனிவா இ) சியாட்டில் ஈ) டோஹா

**அ) சிங்கப்பூர்**

10. ஆசியான் கூட்டங்கள்______ ஆண்டுகளுக்கு ஒரு முறைநடைபெறும்.

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

**ஆ) 3**

11. கீழ்கண்டவைகளில் எது SAARC உறுப்பினர் நாடு அல்ல?

அ) பாகிஸ்தான் ஆ) ஸ்ரீலங்கா இ) பூடான் ஈ) சீனா

**ஈ) சீனா**

12. சார்க்உச்சி மாநாடு _____________ ஆண்டுகளுக்கொரு முறை நடைபெறுகிறது.

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

**அ) 2**

13. ஆசியான் அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்

அ) ஜகார்த்தாஆ) புது டெல்லி இ) கொழும்பு ஈ டோக்கியோ

**அ) ஜகார்த்தா**

14. பிரிக்(BRIC) என்ற சுருக்கச் சொல் சேர்க்கப்பட்ட ஆண்டு

அ) 2001 ஆ) 2005 இ) 2008 ஈ) 2010

**அ) 2001**

15. ஆசியான் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு

அ) 1965 ஆ) 1967 இ) 1972 ஈ) 1997

**ஆ) 1967**

16. வது பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு ஜுலை 2018ல் நடைபெற்ற இடம்

அ) பீஜிங் ஆ) மாஸ்கோ இ) ஜோகனஸ் பர்க் ஈ) பிரசிலியா

**இ) ஜோகனஸ் பர்க்**

www.Padasalai.Net

17. புதிய மேம்பாட்டு வங்கி இந்த அமைப்புடன் தொடர்புடையது.

அ) பிரிக்ஸ் ஆ) டபிள்யூ.டி.ஓ இ) சார்க் ஈ) ஆசியான்

**அ) பிரிக்ஸ்**

18. ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும்ஆறு நாடுகளில் சேராத நாடு

அ) சீனா ஆ) ஜப்பான்இ) இந்தியா ஈ) வடகொரியா

**ஈ) வடகொரியா**

19. சார்க் வேளாண் தகவல் மையம் துவங்கிய ஆண்டு

அ) 1985 ஆ) 1988 இ) 1992 ஈ) 1998

**ஆ) 1988**

20. பெனிலக்ஸ் (BENELUX) என்பது இதன் வடிவமாகும்.

அ) தடையற்ற வர்த்தகப் பகுதி ஆ) பொருளாதார ஒன்றியம் இ) பொது சந்தை ஈ) சுங்கவரி ஒன்றியம்

**ஈ) சுங்கவரி ஒன்றியம்**

**பகுதி – ஆ**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்**

**21. சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக.**

**சிறப்பு எடுப்புரிமைகள் (Special Drawing Rights)**

தாள் தங்கம் என்று அழைக்கப்படும் சிறப்பு எடுப்புரிமைகள் (SDRs) என்ற திட்டத்தை நிறுவியதில் நிதியம் வெற்றி பெற்றுள்ளது. பன்னாட்டு நீர்மைத் தன்மையை உருவாக்க1969ல் நிதியம் பன்னாட்டு பண இருப்புகளை ஏற்படுத்தியது. இவை நிதியத்தின் உறுப்பு நாடுகளுக்கு அவர்களின் மூலதனப் பங்குத் தொகையின் அளவுகளுக்கு ஏற்றாற் போல் அளிக்கப்படுகின்றது. இதன் மூலம்சிறப்பு எடுப்புரிமைகள் பன்னாட்டு மதிப்பளவையாகவும் செலுத்து நிலையாகவும் செயல்படுகின்றது. நிதியம் வழங்கும் வைப்புகள், மூலதனம் போன்ற அனைத்து செயல்பாடுகளும் சிறப்பு எடுப்புரிமையில் வெளிப்படுத்தப்படுகின்றது.

**22. ஆசியானின் இரண்டு நோக்கங்களை குறிப்பிடுக.**

(i) பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி மற்றும் பண்பாட்டு மாற்றத்தை துரிதப்படுத்துவது.

(ii) ஐநா சபையின் கொள்கைகளைக் கடைபிடித்து தென்கிழக்காசிய பகுதியில் அமைதி மற்றும் உறுதியான அரசியல் சூழ்நிலையை மேம்படுத்துவது.

(iii) அரசுத் துறைத் தணிக்கையில் உள்ள அறிவையும் அனுபவத்தையும் பரிமாறிக் கொள்வதன் மூலம் உறுப்பினர்களை ஒன்றிணைந்து செயல்படவைப்பது.

**23. ஐபிஆர்டி யின் ஏதேனும் இரண்டு கடன் திட்டங்களின் பெயர்களைசு ட்டிக்காட்டுக**

உலக வங்கி கடன் வழங்க மூன்று வகையான நடைமுறைகளை கடைபிடிக்கிறது.

i) வங்கியின் இருப்பில் உள்ள சொந்த நிதியிலிருந்து கடன் வழங்குவது

ii) கடன் நிதியிலிருந்து கடன் வழங்குவது

iii) ஈட்டுறுதி வழங்கி கடன் பெற்றுத் தருவது

உலக வங்கி (WB) கடன் வழங்கும் செயல்யுக்தியை மாற்றிக் கொண்டுள்ளது. உறுப்பு நாடுகளின் பெருந்திரளான ஏழைமக்களுக்கு பலனளிக்கும் கடன் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குகிறது. வேளாண்மைத் துறைக்கு மற்ற துறைகளைக் காட்டிலும்கூடுதல் கடன் வழங்குகிறது. ஊரக மேம்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கும் நடவடிக்கைகளுக்கு கடன் வழங்க கவனம் செலுத்துகிறது. அவ்வாறான மூன்று நடவடிக்கைகள்.

அ) ஊரக வாழ்மக்களுக்கு கல்வியைபரப்புதல்.

ஆ) ஊரக சாலைகளை மேம்படுத்துதல்

இ) கிராமங்களை மின்சாரமயமாக்கல்.

**24 பொது சந்தை வரையறு.**

**பொதுசந்தை (Common Market)**

புவியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகம் மற்றும் உற்பத்திக் காரணிகள் இடப்பெயர்வுக்காக அமைக்கும் அமைப்பே

பொது சந்தை. உதாரணம்: ஐரோப்பிய பொது அங்காடி (European Common Market – ECM)

**25. தடையற்ற வாணிகப்பகுதி என்றால் என்ன?**

**தடையற்றவாணிகப் பகுதி (Free Trade Area)**

ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாகக் கருதி வாணிகத் தடைகளை குறைக்க ஒத்துழைக்கும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் போடப்படுகிறது. உதாரணம்: SAFTA, EFTA.

**26. எங்கு மற்றும் எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது?**

÷|£õÒ uø»|Pµ® Põm©sk Cuß uø»ø©a ö\¯»P©õPU ö\¯»©õPU öPõsk áÚÁ› 16, 1987À ö\¯À£h xÁ[Q¯x.

27. உலக வங்கிக் குழுமத்தின் கீழ் செயல்படும் இரண்டு துணை நிறுவனங்களின் பெயர்களை குறிப்பிடுக.

உறுப்பு நாடுகளின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு கடன் வழங்கும் பணியை உலக வங்கி செய்கிறது. இதற்காக நீண்ட கால கடன்களை வழங்குகிறது.

கடன் மற்றும் ஈட்டுறுதி வழங்குதல்

முக்கியமான திட்டங்களுக்கு கடன் வழங்குவது மற்றும் பிற வழிகளில் பிற வழிகளில் கடன்பெற ஈட்டுறுதி வழங்குவது ஆகிய பணிகளையும் வங்கி செய்கிறது.

உலக வங்கி வாஷிங்டனின் அமைந்துள்ள பணியாளர் கல்லூரி நிபுணர்களைக் கொண்டு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் உறுப்பு நாடுகளுக்கு வழங்குகிறது.

**பகுதி – இ**

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்**

**28. பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு வடிவங்களைக் குறிப்பிடுக.**

பன்னாட்டு வாணிபத்தின் அடிப்படைகள், வாணிபத்தின் பலன்கள், வாணிப வீதம், அயல்நாட்டுச் செலுத்து நிலை மற்றும் அந்நிய செலாவணி மாற்று வீதம் ஆகியவற்றை பயின்றோம். நாடுகளுக்கிடையே வாணிபம் நடைபெறும் போது, வளர்ந்த நாடுகளே எப்பொழுதும் ஆதாயம் பெறுகின்றது மற்றும் குறை வளர்ச்சி நாடுகள், பாதகமான வாணிப வீதம் மற்றும் அயல்நாட்டு செலுத்துநிலை, அவற்றின் மாற்று வீதங்கள் ஆகியவற்றால் பாதிக்கப்படுகிறது. 1930களில் ஏற்பட்ட உலக பெருமந்தம் மற்றும் இரண்டாம் உலகப் போர் தேசிய கொள்கைகளை உருவாக்க முனைந்ததால் ஒவ்வொரு நாடும் ஏற்றுமதியை பெருமளவில் ஊக்குவிப்பதற்கும், இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும், வாணிபத் தடைகள், நாணய மாற்றுக் கட்டுப்பாடுகள் மற்றும் நாணய மதிப்புக்குறைத்தல் போன்ற தடைகளை விதித்தது.

பன்னாட்டு பண நிதியம்( International Monetary Fund), உலக வங்கி (International Bank for Reconstruction and Development (IBRD) மற்றும் பன்னாட்டு வாணிக நிறுவனம்(International Trade organization (ITO) ஆகிய மூன்று நிறுவனங்களை உருவாக்க1944ல் கூடிய பிரிட்டன் வூட்ஸ் மாநாடு பரிந்துரைத்தது. பன்னாட்டு பண நிதியமும் உலக வங்கியும்1945ல் செயல்படத் தொடங்கியது. பன்னாட்டு வாணிக நிறுவனத்துக்குப் பதிலாக தற்காலிக தீர்வாக வாணிகம் மற்றும் தீர்வைகளுக்கான பொது ஒப்பந்தம் (General Agreement on Tariff and Trade (GATT) என்ற அமைப்பு அமைப்பக. இது உலக வர்த்தக அமைப்பாக (World Trade Organisation-WTO) 1995ல் மாற்றப்பட்டு நிரந்தர நிறுவனமானது. பன்னாட்டு பண நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக அமைப்பு ஆகியவற்றின் தலைமை அலுவலகம் துவங்கப்பட்ட ஆண்டு அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| நிறுவனம் | தலைமையிடம் |
|---|---|
| பன்னாட்டு பண நிதியம் | வாஷிங்டன்டி.சி |
| உலக வங்கி | வாஷிங்டன்டி.சி |
| உலக வர்த்தக அமைப்பு | ஜெனிவா |

**29. வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் என்றால் என்ன?**

சில நாடுகள் வாணிகத்தில் போட்டியைத் தவிர்க்க பிற நாட்டுப் பொருளாதாரத்துடன்

www.Padasalai.Net

தங்களுடையப் பொருளாதாரத்தை இணைத்து புதிய வாணிக வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கின்றன. நாடுகளுக்கிடையேசு மூக நன்மை தரும் வாணிகத் தொகுதிகள் பல விதங்களில் அமைகின்றன. சமூக நன்மைக்காக நாடுகள் அமைக்கும் வாணிகத் தொகுதிகள் பரஸ்பர நல்லிணக்கத்திற்கு உதவுகிறது. தடையற்ற வாணிகப் பகுதி, சுங்கத் தீர்வை ஒன்றியம், பொது சந்தை மற்றும் பொருளாதார ஒன்றியம் ஆகிய வடிவங்களில் பொருளாதார ஒருங்கிணைப்பு நிகழ்கிறது.

**30. ஐஎம்எப்- ன் கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.**

**(i) அடிப்படைக் கடன்வசதி**

உறுப்பு நாடுகள் தற்காலிக அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மை சிரமங்களிலிருந்து விடுபட இந்த வகை கடன் உதவியை நிதியம் அளிக்கின்றது. ஒரு உறுப்பு நாடு நிதியத்திடமிருந்து மற்ற நாட்டு பணத்தையோ சிறப்பு எடுப்புரிமையையோ(SDR) தங்கள் நாட்டுப் பணத்தைக் கொடுத்து பெற்றுக் கொண்டு அயல்நாட்டு செலுத்து நிலை பற்றாக்குறையை நிரப்பிக் கொள்ளலாம்.

**(ii) விரிவாக்கப்பட்ட நிதி வசதி**

உறுப்பு நாடுகள் தங்களின் மூலதனப் பங்குத் தொகையில் 140 விழுக்காடு அளவுக்கு அடிப்படைக் கடன் தொகைக்கு மேல் அதிகமாக கடன் பெற அனுமதிப்பதே விரிவாக்கப்பட்ட கடன் திட்டம். இது மூன்று ஆண்டுகளில் குறைந்த வட்டியில் திரும்ப செலுத்தத்தக் கடன் திட்டமாகும்.

**(iii) ஈடு செய் நிதி வசதி**

நிதியம் 1963 ஆம் ஆண்டில் ஈடுசெய் கடன் திட்டத்தைஅ றிமுகப்படுத்தியது. குறைவான ஏற்றுமதி வருவாய்ஈட்டும் முதன்மைத் துறை பொருளுற்பத்தியை சார்ந்திருக்கும் நாடுகளுக்கான தனிப்பட்ட கடன் திட்டமே ஈடுசெய் கடன் திட்டமாகும்.

**31. பலதரப்பு ஒப்பந்தம்என்றால் என்ன?**

**பலதரப்பு வாணிக ஒப்பந்தம் (Multilateral Trade Agreement):** பன்னாட்டு வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் (Trade Blocks) பன்னாட்டு வாணிகத்தில் ஒரே குழுவாக ஒன்றிணைந்து செயல்படும் நாடுகளின் கூட்டமைப்பு வழக்கமாக தடையற்ற வாணிக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு செயல்படுபவர்கள்.

**32 பிரிக்ஸ் மாநாடு 2018ன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக.**

பத்தாவது உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்காவில் ஜீலை 2018ல் நடைபெற்றது. உள்ளடக்கிய வளர்ச்சி, வாணிகப் பிரச்சனைகள், உலகளாவிய அரசு நிர்வாகம், பகிரத்தக்க வளமை, நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே இந்த உச்சி மாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும்.

**33. சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக.**

**சார்க் அமைப்பின் பணிகள் (Functions of SAARC)**

1. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்
2. உறுப்பினர் நாடுகளின் பொதுவான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்
3. உறுப்பினர் நாடுகளிடையிலான உறவை மேம்படுத்துதல்
4. வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மூலம் ஏழ்மையை ஒழிப்பது
5. பயங்கரவாத செயல்களை தடுப்பது.

**34. ஆசியான் அமைப்பின் சாதனைகளைப் பட்டியலிடுக.**

i) ஐரோப்பிய ஒன்றியம் போன்று ஒரே சந்தையாக செயல்பட ஆசியான் உறுப்பினர் நாடுகளுக்கிடையில் தடையற்ற பொருள், பணிகள் மற்றும் மூலதன போக்குவரத்துக்கான வழிமுறைகளைஉருவாக்கும்பணியை ஆசியான் அமைப்பு செய்கிறது.

ii) ஒரு உறுப்பு நாட்டு விற்பனையாளர் மற்ற எல்லா உறுப்பு நாடுகளிலும் விற்க தடையற்ற அனுமதி அளிக்கும் பணியையும் செய்கிறது.

iii) உறுப்பு நாடுகளின் வணிக நிறுவனங்களின் போட்டித் திறனை மேம்படுத்துவது மற்றும் பொருளாதார மேம்பாட்டு இடைவெளியை குறைப்பது.

iv) உறுப்பு நாடுகளுக்கு சந்தை மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை பெற்றுத் தருவது.

**பகுதி – ஈ**

www.Padasalai.Net

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக**

**35. பன்னாட்டுப் பண நிதியத்தின் நோக்கங்களை விளக்குக.**

EÖ¨¦ |õkPÎøh÷¯ £ßÚõmk £›Á°zuøÚ°À £nÂ¯À JzxøÊ¨ø£¨ ÷©®£kzxÁx.

2. £ßÚõmk Áõo£® ÷ÁP©õPÄ® \©a^µõPÄ® ÁÍµ EuÄÁx.

3. EÖ¨¦ |õkPÒ ÂvUS® ö\»õÁoU Pmk¨£õkPøÍ SøÓzuÀ AÀ»x }UPuÀ.

4. £ßÚõmk }°ø© ¤µa]øÚUSz w°Ä Põs£x.

**36. உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க.**

**1. உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுக்கான கடன் உதவி**

உற்பத்திக்கு கடன் முதலீடு வழங்கும் திட்டத்தின் மூலம் உறுப்பு நாடுகளின் நில எல்லைக்குட்பட்ட பகுதிகளின் மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கு உதவி செய்யும் பணியை உலக வங்கி செய்கிறது. பின் தங்கிய நாடுகளில் உற்பத்தி வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு உதவுகின்றது.

**2. பன்னாட்டு வாணிகத்தின் சரிவிகித வளர்ச்சி**

பன்னாட்டு கடன் மூலதனம் வழங்கி உறுப்புநாடுகள் அனைத்தும் சரிவிகித பன்னாட்டு வாணிப நீண்ட கால வளர்ச்சியடைய உதவும் பணியை வங்கி செய்கிறது. இதன் விளைவாக உறுப்பு நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்து நிலை சமநிலையை அடையும்.

**3. கடன் மற்றும் ஈட்டுறுதி வழங்குதல்**

முக்கியமான திட்டங்களுக்கு கடன் வழங்குவது மற்றும் பிறவழிகளில் கடன் பெற ஈட்டுறுதி வழங்குவது ஆகிய பணிகளையும் வங்கி செய்கிறது.

**4. வெளிநாட்டுத் தனியார் முதலீட்டிற்கு ஊக்கமளித்தல்**

தனியார் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலம் உலக வங்கியின் உறுப்பு நாடுகளுக்கு கடன் வழங்கஈட்டுறுதிகள் வழங்கும் பணியைச் செய்து வெளிநாட்டு மூலதனத்துக்கு ஊக்கமளிக்கிறது. இந்தப் பணியின் மூலம் தனியார் மூலதனத்துடன் ஒன்று சேர்ந்து சொந்த நிதியிலிருந்து மட்டும் கடன் வழங்காமல் கடன் நிதியிலிருந்தும் கடன் வழங்க முடிகிறது.

**5. தொழில் நுட்ப சேவைகள்**

உலக வங்கி வாஷிங்டனில் அமைந்துள்ள பணியாளர் கல்லூரி நிபுணர்களைக் கொண்டு தொழில் நுட்ப ஆலோசனைகளையும்உறுப்பு நாடுகளுக்கு வழங்குகிறது.

**37. இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ.டி.ஓ – ன்பங்கினைவிவாதிக்க**

38. குறிப்பு எழுதுக அ) சார்க்ஆ) ப்ரிக்ஸ்

அ) சார்க்

சார்க் ஒப்பந்தத்தின் முதலாவது பிரிவின்படி அதன் நோக்கங்களாவன

தெற்காசிய மக்களின் பொதுநலம் காத்தல் மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்

தெற்காசிய மண்டலத்தின் பொருளாரதார, சமூக மற்றும் பண்பாட்டு வளர்ச்சியை துரிதப்படுத்துதல்

தெற்காசிய நாடுகளின் கூட்டு தற்சார்பை உறுதிப்படுத்துதல்

**சார்க் அமைப்பின் பணிகள் (Functions of SAARC)**

.

1. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்

2. உறுப்பினர் நாடுகளின் பொதுவான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்

3. உறுப்பினர் நாடுகளிடையிலான உறவை மேம்படுத்துதல்

4. வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மூலம் ஏழ்மையை ஒழிப்பது

5. பயங்கரவாத செயல்களை தடுப்பது

**பிரிக்ஸ் நாடுகள் (BRICS)**

**பிரிக்ஸ்(BRICS)**

1. வணிக ஒத்துழைப்பு தொகுதியை அமைத்து ஒத்துழைப்பை மேம்படுத்துதல்.

www.Padasalai.Net

2. பன்னாட்டு பரிவர்த்தனைகளில் அமெரிக்க நாட்டுப் பணமான டாலருக்கு பதிலாக வேறு நாட்டு பணத்தை புழக்கத்துக்குக் கொண்டுவர தேவையானவற்றை செய்தல்.

3. மண்டல ஒத்துழைப்பை மேம்படுத்துவது**பிரேசில்-ரஷ்யா-இந்தியா-சீனா-தெற்கு ஆப்ரிக்கா**

வேகமாக வளர்ந்து வரும் நாடுகளின்முதல் எழுத்துக்களைக் கொண்டு குறிப்பிடப்படும் சுருக்கப் பெயர் பிரிக்ஸ் (BRICS) பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகியவையே அந்த ஐந்து விரைவாக வளர்ந்து வரும் நாடுகள், இது 2010 வரை தென் ஆப்பிரிக்காவை உள்ளடக்காமல் பிரிக் என அழைக்கப்பட்டது. பிரிக் என்ற சுருக்க ப்பெயர் 2001ல் பயன்பாட்டுக்கு வந்தது. பிரிக்ஸ் உறுப்பினர்கள் அவை அமைந்துள்ள புவிப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க ஆதிக்கம் செலுத்தும் நாடுகளாகும். இந்த நாடுகள் 2009 லிருந்து உச்சி மாநாடுகளை நடத்தி வருகின்றன. பத்தாவது உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்காவில் ஜீலை 2018ல் நடைபெற்றது. உள்ளடக்கிய வளர்ச்சி, வாணிகப் பிரச்சனைகள், உலகளாவிய அரசு நிர்வாகம், பகிரத்தக்க வளமை, நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே இந்த உச்சி மாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும்.

சீனாவின் ஷாங்காய் நகரில் பிரிக்ஸின் தலைமை அலுவலகம் செயல்படுகிறது. இதன் உறுப்பினர் நாட்டு அரசாங்கங்கள் ஒன்று சேர்ந்து பிரிக்ஸ் மேம்பாட்டு வங்கி என்ற வங்கியை தொடங்கியுள்ளார்கள். இதற்கு புதிய மேம்பாட்டு வங்கி (The New Development Bank) என்ற பெயரும்உண்டு. முதல் மாநாடு ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்றது. இந்தியாவில் நான்காவது மாநாடு 2012 லும் எட்டாவது மாநாடு 2016 லும் நடைபெற்றது.

**பிரிக்ஸின் பணிகள் (Functions of BRICS)**

1. பன்னாட்டு பரிவர்த்தனை நடைமுறைகளை சட்ட வரம்புக்குட்படுத்துவது மற்றும் ஐநா பாதுகாப்பு சபை செயல்படுவதில் சீர்திருத்தங்களையும் கோருகிறது.

2. தெற்கு – தெற்கு (South – South) ஒத்துழைப்பை மேம்படுத்தும் கட்டமைப்பாக செயல்படுதல்

3. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கிடையிலான இடைவெளியை குறைக்கும் பணிகளையும் செய்கிறது. உதாரணமாக உலக வர்த்தக நிறுவனத்தில் பிரிக்ஸ் வளரும் நாடுகளுக்கு சாதகமான வேளாண்க கொள்கையை வடிவமைக்க வலியுறுத்துவது.

4. வளரும் நாடுகளுக்கு சாதகமாக வாணிக மற்றும் பருவநிலை மாறுதல் பேச்சுவார்த்தையில் உதவிகளைசெய்தல்

5. பொருளாதார ஒத்துழைப்பு மட்டுமன்றி தகவல் பகிர்ந்து கொள்ளுதலுக்கான ஒரு தளமாகவும் பிரிக்ஸ் பணியாற்றுகிறது.

6. நடுத்தர நாடுகளின் நலன்களை பாதுகாக்கும் தூண்டுகோலாக பன்னாட்டுத் தளத்தில் பிரிக்ஸ் செயல்படுகிறது.

**அத்தியாயம் 9 நிதிப் பொருளியல்**

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. நவீனஅரசு எனப்படுவது

அ) தலையிடா அரசு
ஆ) மேல்மட்டத்தில் உள்ளவர்களின் அரசு
இ) நலம் பேணும் அரசு ஈ) காவல்அரசு

**இ) நலம் பேணும் அரசு**

2. கீழ்வருவனவற்றுள் தனியார் நிதியின் பண்புகளில் இல்லாதது

அ) வருமானம் – செலவு சமம் ஆ) இரகசியம் இ) வருமானத்தின் ஒரு பகுதியைச்சேமித்தல்
ஈ) விளம்பரப்படுத்துதல்

**ஈ) விளம்பரப்படுத்துதல்**

3. வரி கீழ்க்காணும் குணங்களைக் கொண்டது

அ) கட்டாயத் தன்மை ஆ) பிரதிபலன் கருதாமைஇ) வரி மறுப்பு ஒரு குற்றம்
ஈ) மேல் கூறப்பட்ட அனைத்தும்

**ஈ) மேல்கூறப்பட்ட அனைத்தும்**

4. ஆடம் ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது?

அ) சமத்துவம் விதி
ஆ) நிச்சயத் தன்மை விதி இ) வசதி விதி
ஈ) எளிமைவிதி

**ஈ) எளிமைவிதி**

5. கீழே உள்ள வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு, சரியான ஒன்றை அடையாளம் காண்க.

i. மாநில பட்டியலிலோ, இணைப்பு பட்டியலில குறிப்பிடப்படாத வரியை விதிப்பதற்கு மைய அரசுக்கு தனி உரிமையில்லை
ii. அரசியலமைப்பு சிலவரிகளைமைய அரசு பட்டியலில் இருந்து மாநிலஅரசு பட்டியலுக்கு மாற்றவசதி செய்கிறது

அ) i மட்டும்ஆ) i i மட்டும்இ) இரண்டும்
ஈ) ஏதுமில்லை

**ஆ) i i மட்டும்இ**

6. GST இதற்கு சமம்?

அ) விற்பனை வரி ஆ) தொழிற்குழும வரி
இ)வருமானவரி ஈ) உள்ளாட்சி வரி

**அ) விற்பனை வரி**

7. இந்த நன்மையை நேர்முக வரி கொண்டிருக்கவில்லை

அ) சமத்துவம் ஆ) வசதி
இ) நிச்சயத்தன்மை ஈ) நாட்டுப் பற்று

**ஆ) வசதி**

8. கீழ்வருவனற்றுள் எது நேர்முக வரி?

அ) கலால்வரி ஆ) வருமானவரி
இ) சுங்கவரி ஈ) சேவைவரி

**ஆ) வருமானவரி**

9. கீழே உள்ளவற்றில் எந்தவரி மைய அரசின் பட்டியலில் இல்லை?

அ) தனிநபர் வருமானவரி
ஆ) நிறுவனவரி இ) விவசாய வருமானவரி ஈ) கலால்வரி

**இ) விவசாய வருமானவரி**

10. அரசின் வருவாய்வ ரவு ( Revenue Receipts) கணக்கில் சேராதது

அ) வட்டிஆ) இலாபம் மற்றும் இலாப ஈவு
இ) கடன்களைத் திரும்பப் பெறுதல்
ஈ) மொத்தத்திலிருந்து கிடைக்கிற வாரம்

**ஈ) மொத்தத்திலிருந்து கிடைக்கிற வாரம்**

11. வருவாய் செலவு (Revenue Expenditure) வருவாய் வருவாயை விட(Revenue receipts) அதிகமாக இருந்தால், அது

அ) வருவாய் பற்றாக்குறை
ஆ) நிதிப் பற்றாக்குறை இ) வரவு செலவு பற்றாக்குறை ஈ) அடிப்படைப் பற்றாக்குறை(Primary deficit)

**அ) வருவாய் பற்றாக்குறை**

12. மொத்தச்செலவு, கடன் அல்லாத மொத்த வருவாயை விட அதிகமாக இருந்தால், அது

அ) நிதிப்பற்றாக்குறை ஆ) வரவு செலவு திட்டபற்றாக்குறை
இ)முதன்மைபற்றாக்குறை
ஈ) வருவாய்பற்றாக்குறை

**அ) நிதிப்பற்றாக்குறை**

13. பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கமாவது

அ) பொருளாதார முன்னேற்றம்
ஆ) பொருளாதார நிலைத்தன்மை
இ) பொருளாதார சமத்துவம்
ஈ) வேலைவாய்ப்பு உருவாக்குதல்

**அ) பொருளாதார முன்னேற்றம்**

14. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்பன் பொருளாவது

அ) அரசின் செலவை விடஅரசின் வருவாய் அதிகம் ஆ) அரசின் நடப்புக்கணக்குச் செலவு நடப்புக் கணக்கு வருவாயை விட அதிகம் இ) அரசின் மொத்தச்செலவு மொத்த வருவாயை விட அதிகம் ஈ) மேலே கூறியவற்றில் எதுவும் இல்லை

**இ) அரசின் மொத்தச்செலவு மொத்த வருவாயை விட அதிகம்**

15. பொதுக்கடனைத் திரும்பிச் செலுத்தும் முறை

அ) கடனை மாற்றுதல் ஆ) மூழ்கும் நிதி இ) பகுதியாகச் செலுத்துதல் ஈ) இவை அனைத்தும்

**ஈ) இவை அனைத்தும்**

16. பொதுக் கடனை மாற்றுதல் என்பது

அ) பழைய கடன் பத்திரங்களுக்குப் பதிலாக புதிய கடன் பத்திரங்களை மாற்றுதல் ஆ) அதிக வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களுக்குப் பதிலாக குறைவான வட்டி வீதம் கொண்டகடன் பத்திரங்களைக் கொடுத்தல் இ) குறுகிய கால பத்திரங்களுக்குப் பதிலாக நீண்ட காலபத்திரங்களைத் தருதல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

**ஆ) அதிக வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களுக்குப் பதிலாக குறைவான வட்டி வீதம் கொண்டகடன் பத்திரங்களைக் கொடுத்தல்**

17.பட்ஜெட் என்ற பதம் ஃப்ரென்ஞ்ச் வார்த்தையாகிய (Bougette) விலிருந்து பெறப்பட்டது. அதன் பொருள்

அ) சிறிய பை ஆ) பெரிய பெட்டி இ) காகிதங்கள் அடங்கிய பை ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

**அ) சிறிய பை**

18. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது இந்தியாவில் பெரிய பற்றாக்குறையாக இருக்கும்?

அ) வருவாய் பற்றாக்குறை ஆ) வரவு செலவுத் திட்டபற்றாக்குறை இ) நிதிப் பற்றாக்குறை ஈ) முதன்மைப் பற்றாக்குறை

**இ) நிதிப் பற்றாக்குறை**

19. **நிதிக் குழு நிர்ணயம் செய்வது எது?**

அ) இந்திய அரசின் நிதியினை ஆ) நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல் இ) பல்வேறு துறைகளுக்கு நிதியை மாற்றுதல் ஈ) மேற்கூறப்பட்ட எதுவுமில்லை

**ஆ) நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்**

20. **கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி**

(i) ஜனாதிபதியால் நிதிக் குழு பணியமர்த்தப்படுகிறது
(ii) ஒரு நிதிக் குழுவின் காலம் 5 ஆண்டுகள்

அ) I மட்டும் ஆ) ii மட்டும் இ) இரண்டும் ஈ) இரண்டும் இல்லை

**இ) இரண்டும்**

பகுதி – ஆ

**இரண்டு மதிப்பெண்வினாக்கள்**

**21. "பொது நிதி " வரையறு.**

"பொதுநிதி என்னும் பாடம் அரசியலுக்கும் பொருளியலுக்கும் இடையே எல்லைக்கோடாக திகழ்கிறது. இது பொது அதிகார அமைப்பின் வரவு செலவுகளைப் பற்றியும், அது ஒன்றோடொன்று சரி செய்து கொள்வதைப் பற்றியும் கருத்தில் கொள்கிறது".

**-டால்டன்**

"அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பையும். கொள்கைகளையும் ஆராய்வதே பொது நிதியியல்ஆகும்".

**-ஆடம் ஸ்மித்**

**22. "பொது வருவாய்" என்றால்என்ன?**

பொது வருவாய் அல்லது பொது வருமானம் என்பது அனைத்து மூலங்களின் வழியாக அரசு பெறும் வருமானத்தைக் குறிக்கும்.

டால்டன் கூற்றுப்படி " பொது வருமானம்" என்பதை குறுகிய மற்றும் பரந்த பொருளில் விளக்கப்படுகிறது. பரந்த பொருளில் பொது வருவாய் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் பொது அதிகார அமைப்பினர் பெறும் அனைத்து வருவாய் அல்லது கடன் உட்பட உள்ள பெறுதல்களைக் குறிக்கும். குறுகிய கண்ணோட்டத்தில் பொது அதிகார அமைப்பின் வருமான வளங்களை மட்டும் உள்ளடக்கியுள்ளது. இதனை வருவாய் வளங்கள் எனக் கூறப்படுகிறது.

**23. "வரி" "கட்டணம்" வேறுபடுத்து.**

**வரி**

வரி என்பது குடிமக்கள் எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் அரசுக்கு கட்டாயமாக செலுத்தக் கூடியதாகும். இது அரசால் சட்டப்படி வரி செலுத்துவோர் மீது விதிக்கப்படுகிறது. இதனை வரி செலுத்துபவர் மறுக்காமல் செலுத்த வேண்டியதாகும்.

**கட்டணம்**

அரசிற்கான மற்றொரு முக்கியமான வருவாய் ஆதாரம் கட்டணம் ஆகும். பொது நிர்வாகத்தில் செய்யும் சேவைக்காக கட்டணம் விதிக்கப்படுகிறது.. கட்டணம் என்பது வரியைப் போல் கட்டாயம் செலுத்தக்கூடியது அல்ல. அரசானது சில சேவையைச் செய்வதற்காக கட்டணங்களை வசூலிக்கிறது. எடுத்துக்காட்டாக, கட்டணம் என்பது பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமங்கள் போன்றவற்றை வழங்குவதற்காக விதிக்கக் கூடியது.

**24. "பூஜ்யஅடிப்படை வரவு செலவுத் திட்டம்" குறிப்பு வரைக.**

**பூஜ்ய வரவு செலவுத் திட்டம்** இந்திய அரசு 1987 –88ல் பூஜ்ய வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்தது. இதில் ஒவ்வொரு செலவினமும் புதியதாகக் கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடுகள் செய்யப்படும்.புதிய இனமாக கருதப்பட்டு அரசு பட்ஜெட்டில் புதிதாக செலவு மதிப்பீட்டை கொண்டுள்ளது. சமூகத்தின் முந்தைய முன்னுரிமைகளை சமூக பொருளாதார நோக்கங்களின் பார்வையில்மறு ஆய்வு செய்யப்பட்டு நியாயப்படுத்தும்.

**25. நேர்முக வரிக்கு இரு உதாரணங்கள் தருக.**

.நேர்முக வரி என்பது நபரின் வருமானம் மற்றும் செல்வம் மீது விதிக்கப்பட்டு அரசுக்கு நேரடியாக செலுத்தக் கூடியதாகும்.

உதாரணம்: வருமான வரி

வருமானம் பெறும் போது, வரி செலுத்துவதற்கான பொறுப்பும் ஏற்படும் - இறுதியான வரிச்சுமையை அவரே ஏற்க வேண்டும்.

**26. GST யின் கூறுகள் யாவை?**

GST – ன் உள்ளடக்கங்கள்

GST மூன்று வகைப்படும். அவையாவன:

**CGST, SGST மற்றும் IGST.**

**CGST**: மாநிலத்திற்குள்ளே நடைபெறுகிற விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும். (உ.ம். மாநிலத்திற்குள்/யூனியன் பிரதேசம்)

**SGST:** மாநிலத்திற்குள் நடைபெறும் விற்பனையில் மாநில அரசால் வசூலிக்கப்படுவதாகும். (உ.ம். மாநிலத்திற்குள்/யூனியன் பிரதேசம்)

**IGST:** மாநில அரசுகளுக்கிடையேயான விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும். (உ.ம். மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு பொருள் விற்பனை).

**27. "பொதுக்கடன்" என்பதன் பொருள் யாது?**

"கடன் என்பது அரசு கருவூலத்தால் கடன் வழங்கியவர்களுக்கு வட்டியும், அசலும் கொடுக்கப்பதற்கான உத்தரவாதம் ஆகும். நடப்பு நிதி பற்றாக்குறையைச் சரிசெய்வதற்காக திரட்டப்படும் நிதி ஆகும்"

– பிலிப் E. டெய்லர்.

**Or**

கார்ல எஸ். கஷாப் *

பகுதி - இ

**மூன்று மதிப்பெண்வினாக்கள்**

**28. வரி விதிப்பு விதிகளைவிவரிக்க.**

**வரி விதிப்பின் புனித விதிகள**

ஆடம் ஸ்மித் கருத்துப்படி நான்கு புனித விதிகள் உள்ளன அவையாவன

1. செலுத்தும் திறன் பற்றிய விதி

மக்களின் வரி செலுத்தும் திறனுக்கு ஏற்ப அரசானது வரி விதிக்க வேண்டும். ஏழை அல்லது நடுத்தர வர்க்கதினரை ஒப்பிடும் போது செல்வந்தர் அதிக வரி செலுத்தும் வகையில் இருக்க வேண்டும்.

1. நிச்சயத்தன்மை விதி

வரி வீதம் அல்லது செலுத்தும் காலம் குறித்து நிச்சயமற்ற தன்மை இல்லாத வகையில் அரசு வரியினை விதிக்க வேண்டும். அரசு தன் போக்கிற்கு வரிகளை விதித்தால் அது மக்களின் செலுத்தம் திறன் மற்றும் வேலை செய்யும் திறனையும் பாதிக்கும்.

2. வசதி விதி

வரி வசூலிக்கும் முறை மற்றும் வரி செலுத்தும் காலம் மக்களின் வசதிக்கேற்ப அமைய வேண்டும். வரி செலுத்துவோர்கள் வரிமை சிரமமின்றி செலுத்தும் வண்ணம் வசதியான ஏற்பாட்டை செய்ய வேண்டும்.

3. சிக்கன விதி

அரசு வரிகளை வசூலிப்பதற்கு பணம் செலவிடுகிறது. உதாரணமான, வரிகளை வசூலிப்பவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. வசூலிப்பதற்கான செலவு வரிகளை விட அதிகமாக இருக்கும் அவை மோசமான வரிகளாகும். எனவே, ஆடம்ஸ்மித் கருத்துப்படி வசூலிக்கும் செலவுகள் குறைவாக இருக்கும் வரிகளை மட்டுமே அரசு விதிக்க வேண்டும் என்பதாகும்.

29. தனியார் நிதிக்கும் பொது நிதிக்கும் உள்ள மூன்று ஒற்றுமைகளை எழுதுக.

**ஒற்றுமைகள்**

**1. பகுத்தறியும் தன்மை**

பொது மற்றும் தனி நிதி பகுத்தறிவை அடிப்படையாக கொண்டவை. இரண்டும் குறைந்த செலவில்அதிக நலத்தைப் பெறுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. கடனுக்கான வரையறை**

இரண்டுக்குமான கடன்கள் **வரையறைக்** கொண்டுள்ளது. தனது வருவாய்க்கு அப்பால் அரசும் செல்வதில்லை. அரசின் பற்றாக்குறை வரவு செலவு, திட்டத்திற்கும் எல்லை இருக்கிறது.

**3. வளங்களின் பயன்பாடு**

தனி மற்றும் பொது துறைகள் வரையறுக்கப்பட்ட வளங்களையே கொண்டுள்ளது. இவ்விரண்டும் உத்தம அளவில் வளங்களைப் பயன்படுத்த முனைகிறது.

30. நவீன அரசின் பணிகள் யாவை?

**(i) பாதுகாப்பு**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அழிவிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதே அரசின் முக்கியப் பணியாகும். அரசு போதுமான அளவில் காவல் மற்றும் ராணுவ நிலைகளை பராமரித்து பாதுகாப்பு பணிகளைச் செய்கிறது.

**(ii) நீதி**

நீதியை பரிபாலனம் செய்தல் மற்றும் தகராறுகளைத் தீர்த்தல் ஆகியவை அரசின் பணியாகும். அரசானது, அனைத்து வகுப்பினரும் சமநீதி பெறும் வகையில் நீதி அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

**(iii) நிறுவனங்கள்**

தனி நிறுவனங்கள் மீதான ஒழுங்கு முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தற்கால அரசின் பணியின் கீழ் வருகிறது. அரசானது சில நிறுவனங்களின் சொந்தமாகக் கொண்டு அவற்றினை வெற்றிகரமாக செயல்படுத்துவதும் அரசின் பொறுப்புகளாகும்.

**(iv) சமூக நலன்**

நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக கல்வி, சமூக பாதுகாப்பு, சமூக காப்பீடு, உடல்நலம் மற்றும் துப்புரவு போன்றவற்றை ஏற்படுத்துவது அரசின் கடமையாகும்.

**(v) கட்டமைப்பு:**

தற்காலஅரசுகள் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பினை உருவாக்குவதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்திற்கான அடித்தளத்தை அமைக்கிறது.

**(vi) பேரின கடன் பொருளாதாரக் கொள்கை**

பேரின கடன் பொருளாதார நோக்கங்களை அடைவதற்காக நிதிக் கொள்கை மற்றும் பணக் கொள்கை ஆகியவற்றை அரசு மேற்கொள்கிறது.

**(vii) சமூக நீதி**

பொருளாதாரத்தின் வளர்ச்சி நிலையின் போது சமூகத்தின் சில பிரிவனர் மற்றவர்களை விட கூடுதல் நன்மை அடைகின்றனர். நிதித்

www.Padasalai.Net

தீர்வை மூலம் வருவாயை மறுபகிர்வு செய்வதற்கு அரசானது தேவைப்படுகிறது.

| | | |
|---|---|---|
| விதிக்கப்படுதல் வசூலித்தல் | மற்றும் | தனிநபர் மற்றும் இந்து குடும்பம், ந ஆகியோரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது |
| சுமை | | மற்றவர் மீது மாற்ற முடியா |

**31. வரியின் ஏதேனும் மூன்று பண்புகளைஎழுதுக.**

1. வரி என்பது அரசுக்கு கட்டாயமாக செலுத்தப்படக் கூடிய ஒன்றாகும். மக்கள் மீது சுமத்தப்படுகிற வரியை கட்டாயம் செலுத்த வேண்டும். வரியைச்செலுத்த மறுப்பது தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும்.

2. பொது நிர்வாகத்தினரிடம் வரி செலுத்துவோர் எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் செலுத்தவேண்டியது. இதன் பொருளாவது என்னவென்றால் வரி செலுத்துவோர், வரி செலுத்துவதால் தனக்கு குறிப்பிட்ட நன்மை ஏதும் எதிர்பாராமல் செலுத்தக் கூடியது.

3.ஒவ்வொரு வரியும் வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது.

**33. முதன்மைப் பற்றாக்குறை என்றால் என்ன?**

**முதன்மைப் பற்றாக்குறை**

முதன்மைப் பற்றாக்குறையானது நிதி பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்தலை கழித்தபின் உள்ள பற்றாக்குறையாகும். இது அரசின் உண்மையான சுமையை காட்டும். மேலும் இதில் முன்னர் வாங்கிய கடனுக்கான வட்டியை கணக்கில் கொள்ளாது. எனவே முதன்மைப் பற்றாக்குறை என்பது அரசின் கடனுக்கான குறிப்பாக வட்டி செலுத்தலுக்கான தேவையைக் குறிக்கும்.

எனவே நிதிப் பற்றாக்குறை முதன்மைப் பற்றாக்குறையை விட அதிகமாக இருக்கும்.

முதன்மைப் பற்றாக்குறை (PD) = நிதிப் பற்றாக்குறை (FD) - வட்டி செலுத்துதல்(IP)

**32. நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறுக.**

| ஒப்பீட்டிற்கான அடிப்படை | நேர்முகவரி | மறைமுக வரி |
|---|---|---|
| பொருள் | நேர்முக வரி என்பது ஒரு நபரின் வருமானம் மற்றும் செல்வத்தின் மீது விதிக்கப்பட்டு நேரடியாக அரசுக்கு செலுத்துவதாகும். | மறைமுக வரி என்பது ஒருவர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்பட்டு மறைமுகமாக அரசுக்கு செலுத்துவதாகும் |
| இயல்பு | வளர்வீதம் | தேய்வுவீதம் |
| சுமை மற்றும் தாக்கம் | ஒரே நபர் மீது வரி விழுகிறது | பல்வேறு நபர்கள் மீது வரி விழுகிறது. |
| வரி அடிப்படை | வரி செலுத்துபவரின் வருமானம் மற்றும் செல்வம் | பண்டங்கள் மற்றும் பணிகள் இறக்குமதி / விற்பனை / உற்பத்தியின்போது |
| வரி ஏய்ப்பு | வரி ஏய்த்தலுக்கு வாய்ப்பு உள்ளது | பொருளின் விலையிலேயேவரி சேர்ந்திருப்பதால்வரி ஏய்ப்பு கடினமாகும் |
| பணவீக்கம் | நேர்முக பணவீக்கத்தைகுறைப்பதற்கு உதவுகிறது | வரி மறைமுக வரி விலைஉந்து பணவீக்கத்தைஏற்படுத்துகிறது. |

**34. பொதுக்கடனை திரும்ப செலுத்துவதற்கான மூன்று முறைகளைக் கூறுக.**

**(1) மூழ்கும் நிதி**

கடனுக்கென அரசு தனியொரு நிதியினை ஏற்படுத்தும் அதனை 'மூழ்கும் நிதி' என்பர். அரசு ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட நிலையான தொகையை செலுத்துகிறது. கடன் முதிர்ச்சியடையும் போது வட்டியோடு அசலையும் சேர்த்து வழங்கும் வகையில் இந்நிதி பெருக்கிவிடும். இந்த முறை முதன் முதலில் இங்கிலாந்தில் வால்போல் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

**(2) கடனை மாற்றுதல்**

பொதுக்கடன் திரும்பச் செலுத்தப்படும் மற்றொரு முறை கடன் மாற்றுதல் ஆகும். இம்முறையில் பழைய கடனை புதிய கடனாக மாற்றப்படுகிறது. இம்முறையின் கீழ் அதிக வட்டி கொண்ட பொதுக்கடன் குறைவானவட்டி கொண்ட பொதுக்கடனாக மாற்றப்படுகிறது.. டால்டன் கடன் மாற்றுதல் கடன் பளுவை குறைக்கிறது என்கிறார்.

**(3) வரவு செலவு திட்டஉபரி**

உபரி வரவு செலவு திட்டத்தை அரசு தாக்கல் செய்யும் போது அந்த உபரியை கடனைத் திருப்பிச் செலுத்த பயன்படுத்திக் கொள்ளும். பொது வருவாய், பொதுச் செலவை விட அதிகரிக்கும் போது உபரி ஏற்படுகிறது. இது எப்போதாவது தான் பயன்படுத்தப்படுகிறது

பகுதி - ஈ

**ஐந்து மதிப்பெண்வினாக்கள்**

**35. பொது நிதியின் எல்லைகளை விளக்குக.**

**1. பொது வருவாய்**

பொது வருவாய் என்பது வருவாயைப் பெருக்கக் கூடிய முறைகளான வரி மற்றும் வரியல்லா வருமானங்கள் பற்றியும், வரிக் கொள்கை, வரி விகிதம், வரியின் பளு, வரியின் தாக்கம் மற்றும் அவற்றின் விளைவுகள் ஆகியவற்றையும் விளக்குகிறது.

**2. பொதுச் செலவு**

இப்பகுதி அரசின் செலவு, பொதுச்செலவின் விளைவுகள் மற்றும் பொதுச்செலவைக் கட்டுப்படுத்துதல் போன்றவை சார்ந்த அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டுள்ளது.

**3. பொதுக் கடன்**

பொதுக் கடன் என்ற பகுதியில் உள்நாடு மற்றும் வெளிநாட்டின் மூலம் பெறக்கூடிய கடன்களுக்கான வளங்களைப் பற்றி படிக்கிறது. இதில் பொதுக் கடன்களின் சுமை, அதன் விளைவுகள் மற்றும் திரும்பச் செலுத்தும் முறைபற்றி இத்தலைப்பின் கீழ் வருகிறது.

**4. நிதி நிர்வாகம்**

இப்பகுதி அரசின் வரவு செலவு திட்டத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றி படிக்கிறது. வரவு செலவு திட்டம் என்பது ஓராண்டிற்கான அரசின் பேரளவு நிதி திட்டமாகும். வரவு செலவு திட்டத்தின் பல்வேறு நோக்கங்கள் மற்றும் அதனைத் தயாரிப்பதற்கானவழிமுறைகள், நிதி ஒதுக்கீடு, மதிப்பீடு மற்றும் தணிக்கை போன்றவைகள் நிதி நிர்வாகத்தின் கீழ் வருகிறது.

**5. நிதிக் கொள்கை:**

வரிகள், மானியங்கள், பொதுக்கடன் மற்றும் பொதுச்செலவு ஆகியவைகள் நிதிக் கொள்கையின் கருவிகளாகும்.

**36. மறைமுக வரிகளின் நன்மைகள் யாவை?**

**மறைமுக வரிகளின் நன்மைகள்**

**(1) பரந்து காணப்படுதல்**

எல்லா நுகர்வோர்களும் அவர்கள் ஏழை அல்லது பணக்காரர்களாக இருந்தாலும் மறைமுக வரிகளை செலுத்த வேண்டும். இதனால் தான் நேர்முக வரிகளை விடமறைமுக வரிகள் அதிக நபர்களைஉள்ளடக்கியுள்ளது. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் 2 சதவீத நபர்கள் மட்டுமே வருமானவரி செலுத்துகிற நிலையில் மறைமுக வரியை அனைவரும் செலுத்துகின்றனர்.

**(2) சமத்துவம்**

பணக்காரர்களால் பயன்படுத்தப்படக் கூடிய ஆடம்பர பொருட்கள் மீது அதிக வரி சுமத்தப்படுவதால் மறைமுக வரி சமத்துவ விதியின் அடிப்படையில்அமைகிறது.

**(3) சிக்கனத் தன்மை**

உற்பத்தியாளர்களும், சில்லறைவிற்பனையாளர்களும் வரியை வசூலித்து அரசுக்கு செலுத்துவதால் வசூலிப்பதற்கானசெலவு குறைவாகிறது. வணிகர்கள் மதிப்புமிக்க வரி வசூலிப்பவர்களாக செயலாற்றுகின்றனர்.

**(4) உடலுக்கு தீங்கான பொருட்களின் நுகர்வைகுறைக்கிறது**

அரசானது உடலுக்கு தீங்கு விளைவிக்ககூடிய பொருட்கள் மீது மறைமுக வரியை விதிக்கிறது. எடுத்துக்காட்டாக புகையிலை, மது போன்ற பொருட்கள் மீதானவரி. இது பாவ வரி என அழைக்கப்படுகிறது.

**(5) வசதியானது**

மறைமுக வரியானது பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படுகிறது. நுகர்வோர் இதனை வாங்கும் போது விலையுடன் சேர்த்து செலுத்தி விடுவதால், வரி செலுத்துவதை உணர்வதில்லை.

**37. கடன் திரும்பச் செலுத்தும் முறைகளை விளக்குக.**

**(1) மூழ்கும் நிதி**

கடனுக்கென அரசு தனியொரு நிதியினை ஏற்படுத்தும் அதனை 'மூழ்கும் நிதி' என்பர். அரசு ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட நிலையான தொகையை

பொது வட்டியோடு அசலையும் சேர்த்து வழங்கும் வகையில் இந்நிதி பெருகிவிடும். இந்தமுறை முதன்முதலில் இங்கிலாந்தைச் சேர்ந்த வால்போல் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

**(2) கடனை மாற்றுதல்**

பொதுக்கடன் திரும்பக் செலுத்தப்படும் மற்றொரு முறை கடன் மாற்றுதல் ஆகும். இம்முறையில் பழைய கடனை புதிய கடனாக மாற்றப்படுகிறது. இம்முறையின் கீழ் அதிக வட்டி கொண்ட பொதுக்கடன் குறைவான வட்டி கொண்ட பொதுக்கடனாக மாற்றப்படுகிறது.. டால்டன் கடன் மாற்றுதல் கடன் பளுவை குறைக்கிறது என்கிறார்.

**(3) வரவு செலவு திட்டஉபரி**

உபரி வரவு செலவு திட்டத்தை அரசு தாக்கல் செய்யும்போது அந்த உபரியை கடனைத் திருப்பிச் செலுத்த பயன்படுத்திக் கொள்ளும். பொது வருவாய், பொதுச் செலவை விடஅதிகரிக்கும் பொது உபரி ஏற்படுகிறது. இது எப்போதாவது தான் பயன்படுத்தப்படுகிறது

**(4) பகுதியாகச் செலுத்தல்**

இந்தமுறையின் கீழ் அரசு பொதுக் கடனை சம வருடாந்திர தவணைகளாக செலுத்துகிறது. இது பொதுக் கடனைச் செலுத்தும் மிக சுலபமான முறையாகும்.

**(5) கடன் மறுப்பு**

அது அரசு கடன் செலுத்தும் சுமையிலிருந்து வெளி வருவதற்கான எளிமையான முறையாகும். இதில் அரசானது ஏற்கனவே செலுத்துவதாக உறுதியளித்த கடமையை மறுக்கும். இது கடனை திரும்பசெலுத்துவதாகாது, அதனை அழிப்பதாகும். சாதாரண சூழ்நிலைகளில் கடனை மறுக்க இயலாது ஏனெனில்அது அரசின் நாணயத்தன்மையை பாதித்து விடும்.

**(6) வட்டி வீதத்தைகுறைத்தல்**

நிதிச்சிக்கல் ஏற்படும் நேரங்களில் கட்டாயமாக வட்டியை குறைத்து கடனை செலுத்துவதும் ஒரு வகையான கடன் தீர்வு முறையாகும்..

**(7) மூலதனத் தீர்**வை

ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் ஒரு குறிப்பிட்டஅளவிற்கு மேல்அல்லது வளர்ச்சி போக்கில்உள்ள மூலதன சொத்துக்கள் பெற்றிருப்பின் அதன் மீது அரசு வரி விதித்து, அதனை போர்க்கால கடனை செலுத்துவதற்கு பயன்படுத்துவதாகும். ஆனால் இது சர்ச்சைக்குரிய கடன் தீர்வை முறையாகும்

38. நிதிக் கொள்கைகளின் கருவிகள் எவை? விளக்குக.

i) **வரிவிதித்தல்:** வரிகள் மக்களிடமிருந்து வருமானத்தை அரசிற்கு மாற்றுகிறது. வரிகள் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கும். வரி அதிகரிப்பு செலவிடத்தக்க வருமானத்தை குறைக்கிறது. எனவே பணவீக்கத்தை கட்டுப்படுத்த வரியை அதிகப்படுத்த வேண்டும். மந்த காலத்தில் வரிகள் குறைக்கப்பட வேண்டும்.

ii) **பொதுச் செலவு:** பொது ச்செலவு பணியாளர்களின் கூலி மற்றும் சம்பளங்களை அதிகரிக்கும்போது பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான மொத்த தேவை உயருகிறது. ஆகையால் பொதுச் செலவு பின்னிறக்கம் மற்றும் பணவீக்கத்தை கட்டுப்படுத்த உதவுகிறது.

iii) **பொதுக் கடன்:** அரசு, கடன் மூலம் பொது மக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது. அது பின்னர் மக்களுக்கு திரும்பவட்டியோடு செலுத்தப்படுகிறது. இதனால் அரசிடமிருந்து பணம் மக்களுக்கு மாற்றப்படுகிறது.

**39. கூட்டாட்சி நிதியின் கொள்கைகளை விளக்குக.**

**கூட்டரசு நிதியில் கீழ்க்காணும் முக்கிய கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன.**

1. சுதந்திரம்
2. சமத்துவம்
3. ஒரேமாதிரியானதன்மை
4. போதுமானவளங்களைப் பெற்றிருத்தல்
5. நிதி வசதி
6. ஒருங்கிணைத்தல்மற்றும் ஒன்றுபடுதல்
7. செயல்திறன்
8. நிர்வாகச்சிக்கனம்
9. பொறுப்பேற்பு

**1. சுதந்திரம்**

கூட்டரசு நிதி முறையின் கீழ், ஒவ்வொரு அரசும் தன்னனுடைய நிதியில்தன்னாட்சி அதிகாரம் கொண்டதாக இருக்கவேண்டும். அதன்

பொருளாவது ஒவ்வொரு அரசும் வருவாய் ஆதாரங்கள், வரி விதிப்பதற்கான அதிகாரம், பணத்தைகடன் வாங்குவது மற்றும் செலவினை சமாளிப்பது போன்றவைபற்றி தன்னாட்சி பெற்றிருக்கவேண்டும்.

**2. சமத்துவம்**

சமத்துவ நீதியின் அடிப்படையில், மாநிலங்கள் நியாயமான வருவாய் பங்கினை பெறும் வண்ணம் வளங்கள் பங்கீடு செய்யப்படவேண்டும்.

**3 ஒரேமாதிரியான தன்மை**

கூட்டரசு முறையில், ஒவ்வொரு மாநிலமும் கூட்டாட்சி நிதிக்கு சம வரி செலுத்தல்களை செய்ய வேண்டும். ஆனால் வரி செலுத்தும் திறன் ஒவ்வொரு பகுதிக்கும் சமமாக இல்லாததால் இந்தகொள்கையை பின்பற்றப்படஇயலாது.

**4. போதுமான வளங்களைப் பெற்றிருத்தல்**

போதுமான வளங்களைப் பெற்றிருத்தல் கொள்கை என்பது மத்திய மற்றும் மாநில அரசுகள், அவற்றின் பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் போதுமான அளவில் வளங்களைப் பெற்றிருக்கவேண்டும். போதுமான வளம் என்பது தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவையைக் கொண்டு குறிக்கப்படுகிறது. இவை அதிகரித்து வரும் தேவையையும் எதிர்பாராத செலவுகளான போர் மற்றும் வெள்ளம் ஏற்படும் சூழ்நிலைகளை சமாளிக்க நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கவேண்டும்.

**5. நிதி வசதி**

கூட்டரசு நிதி முறையில், மத்திய மற்றும் மாநில அரசுகள் புதிய வரி ஆதாரங்களை தங்களது நிதி தேவைக்கேற்றவாறு பெருக்கி கொள்ளமுடியும். சுருக்கமாக கூறின், அரசின் பெருகிவரும் பொறுப்புகளுக்கேற்றவாறு வளங்களை வளர்த்து கொள்ளவேண்டும்.

**6. ஒருங்கிணைப்பு மற்றும் ஒன்றுபடுதல்**

அனைத்து நிதிமுறைகளும் முழுவதும் நல்ல முறையில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். நாட்டின் பல்வேறு அடுக்குகளுக்கிடையே உள்ள நிதி முறைகளில் ஒருங்கிணைப்பு அவசியமாகிறது. அப்பொழுது தான் கூட்டரசு முறை பிழைக்கும் இவை நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியை முன்னேற்றுவதற்கு உதவும்.

**7. செயல்திறன்**

நிதிமுறைகளை ஒன்றாக ஒருங்கிணைத்து மற்றும் திறமையான முறையில் நிர்வகிக்கப்படவேண்டும். ஏய்ப்பு மற்றும் மோசடிக்கான வாய்ப்புகள் இருக்கக் கூடாது. ஓர் ஆண்டில் ஒரு முறைக்கு மேல் ஒருவரும் வரி விதிப்பிற்குட்படுத்தக் கூடாது. இரட்டைவரி முறைகூடாது.

**8. நிர்வாகச் சிக்கனம்**

எந்த ஒரு கூட்டரசு முறைக்கும் சிக்கனம் என்பது முக்கிய பண்பாக உள்ளது. வசூலிக்கும் செலவு குறைவாக இருப்பதோடு அதிக வருவாய் பெற்று அரசின் பிற துறைகளுக்கு செலவிடுவதற்கு ஏதுவாக அமைய வேண்டும்.

**9. பொறுப்புணர்வு**

நிதிசார் முடிவுகளுக்கு ஒவ்வொரு அரசும் பொறுப்பேற்கவேண்டும். அதாவது மத்திய அரசு பாராளுமன்றத்திற்கும், மாநிலஅரசு சட்டசபைக்கும் பொறுப்பேற்கவேண்டும்

**40. வரவு செலவுத் திட்டத்தில்உள்ள பலவகை பற்றாக்குறைகளை விளக்குக.**

**வரவு செலவுத் திட்டபற்றாக்குறைகள்**

வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை என்பது வரவு செலவு திட்டத்தில் உள்ள வருவாய் செலவை விட குறைவாக இருப்பதாகும். இந்த நிலையை அரசு பற்றாக்குறை எனவும் அழைக்கப்படும்.

இந்திய அரசின் வரவு செலவுத திட்டத்தில் நான்கு வகையான பற்றாக்குறைகள் உள்ளன.

(அ) வருவாய்பற்றாக்குறை
(ஆ) வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை
(இ) நிதிப் பற்றாக்குறை
(ஈ) முதன்மைப் பற்றாக்குறை

**அ. வருவாய் பற்றாக்குறை**

அரசின் வருவாய் செலவினம், வருவாய் வரவை விட அதிகமாக இருந்தால் அது வருவாய் பற்றாக்குறை எனப்படும். இதில் மூலதன வரவு மற்றும் மூலதனச் செலவை கணக்கில் கொள்ளப்படமாட்டாது. வருவாய் பற்றாக்குறை என்பது அரசின் அன்றாட பணிகளை நடத்துவதற்கு தேவையானதை விட குறைவாக உள்ளதைக் காட்டுவதாகும்.

வருவாய் பற்றாக்குறை(RD) = மொத்த வருவாய் செலவினம் (RE) – மொத்த வருவாய் வரவுகள் (RR)

RE – RR > 0 ஆக இருக்கும்.

**ஆ. வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை**

வருவாய் மற்றும் மூலதனக் கணக்குகளின் மொத்த வரவுக்கும் செலவுக்கும் உள்ள இடைவெளியே வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையாகும்.

வரவு செலவுத் திட்டபற்றாக்குறை= மொத்தச்செலவு – மொத்தவரவு

**இ. நிதிப் பற்றாக்குறை**

நிதிப்பற்றாக்குறை= வரவு செலவுத் திட்டபற்றாக்குறை– அரசின் அங்காடிக் கடன்களும் ஏனைய பொறுப்புக்களும்

எனவே நிதிப் பற்றாக்குறை என்பது வரவு செலவு பற்றாக்குறையை விட அதிகமானதாகும்.

**ஈ. முதன்மைப் பற்றாக்குறை**

முதன்மைப் பற்றாக்குறையானது நிதி பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்தலை கழித்தபின் உள்ள பற்றாக்குறையாகும். இது அரசின் உண்மையான சுமையை காட்டும். மேலும் இதில் முன்னர் வாங்கிய கடனுக்கானவட்டியைகணக்கில்கொள்ளாது.என வே முதன்மைப் பற்றாக்குறை என்பது அரசின் கடனுக்கான குறிப்பாக வட்டி செலுத்தலுக்கான தேவையைக் குறிக்கும்.

எனவே நிதிப் பற்றாக்குறை முதன்மைப் பற்றாக்குறையை விடஅதிகமாக இருக்கும்.

முதன்மைப் பற்றாக்குறை(PD) = நிதிப்பற்றாக்குறை(FD) - வட்டி செலுத்துதல்(IP)

41.அரசுச்செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள் யாவை?

**1. மக்கள்தொகைவளர்ச்சி**

67 ஆண்டு காலதிட்டங்களில், இந்தியாவின் மக்கள்தொகை1951 –ல்36.1 கோடியிலிருந்து 2011–ல்121 கோடியாக உயர்ந்துள்ளது. மக்கள் தொகைவளர்ச்சியினால்உடல்நலம், கல்வி, சட்டம் செய்ய வேண்டியிருக்கிறது. இளைஞர்களுக்கானகல்வி மற்றும் சேவைகளுக்காகவும், முதியோர்களுக்கான ஓய்வூதியம், சமூக பாதுகாப்பு மற்றும் உடல்நலத்திற்கான வசதிகள் ஏற்படுத்தவும் பொதுச்செலவு அதிகமாகிறது.

**2. பாதுகாப்புச் செலவு**

இந்தியாவில் பாதுகாப்பிற்கான செலவு அதிகரித்த வண்ணம் உள்ளது. இராணுவ தளவாடங்களை நவீனமயமாக்குவதால் இராணுவ செலவு பலமடங்கு அதிகரித்துள்ளது. 1990 – 91-ல்10,874 கோடியாக இருந்த அரசின் பாதுகாப்புச் செலவு 2018-19-ல்2,95,511 கோடியாக அதிகரித்துள்ளது.

**3. அரசு மானியங்கள்**

இந்திய அரசானது, உணவு, உரங்கள், முன்னுரிமை துறைக்கான கடன் வழங்கல், ஏற்றுமதி மற்றும் கல்வி போன்ற பல இனங்களுக்கு மானியங்களை வழங்குகிறது. மானியங்களுக்கான தொகை மிக அதிகமாக இருப்பதால் பொதுச் செலவு பல மடங்கு அதிகரித்துள்ளது.

1991-ம் ஆண்டில் மத்திய அரசின் மான்யத்திற்கான செலவு 9581 கோடியிலிருந்து 2,29,715.67 கோடியாக 2018 – 19ல் அதிகரித்துள்ளது. மற்றொரு புறம் பெரும் நிறுவனங்களுக்கு மானியமாக (ஊக்கத் தொகை) 5-இலட்சம் கோடிக்கு மேல் வழங்கியுள்ளது.

**4. கடன் சேவைகள்**

அரசானது அதிகமான அளவில் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு ஆதாரங்கள் மூலம் கடன் பெற்றுள்ளன. அதன் விளைவாக அரசு கடனை திருப்பி செலுத்துவதற்காக அதிக பணம் தேவைப்படுகிறது..

மத்திய அரசின் வட்டி செலுத்தல்களுக்கான தொகை1990 – 91-ல்21500 கோடியிலிருந்து 2018 – 19ல்5,75,794 கோடியாக அதிகரித்துள்ளது.

**5. வளர்ச்சித் திட்டங்கள்**

அரசு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை மேற்கொள்கிறது. அவையாவன நீர்ப்பாசனம், இரும்பு மற்றும் எஃகு, கனரக எந்திரங்கள், எரிசக்தி, தொலை தொடர்பு போன்றவையாகும். இந்த வளர்ச்சித் திட்டங்கங்களுக்கு அதிகளவு முதலீடு தேவைப்படுகிறது.

**6. நகரமயமாக்கல்**

நகரங்களில் மக்கள் தொகை விரைவாக அதிகரித்து வருகிறது. 1950 – 51-ல் மொத்த மக்கள் தொகையில்17 சதவீதம் பேர் நகர்புறத்தில் வாழ்ந்தனர். தற்போது நகர மக்கள் தொகை4 3% அளவிற்கு அதிகரித்துள்ளது. தற்போது 1

மில்லியன் மக்கள் தொகைக்கு மேல் சுமார் 54 நகரங்கள் உள்ளது. இதனால் சட்டம் ஒழுங்கை பராமரிப்பதற்கு, கல்வி மற்றும் குடிமை வசதிகைளை மேற்கொள்ள அதிக அளவில் செலவுகள் ஏற்படுகின்றது.

**7. தொழில் மயமாக்கல்**

அடிப்படை மற்றும் கனரக தொழில்களுக்கு அதிக அளவு மூலதனம் தேவைப்படுகிறது. மேலும் இது உற்பத்திக்கு நீண்டகாலத்தையும் எடுத்துக்கொள்ளும். அரசானது இத்தகைய தொழிற்சாலைகளை திட்டமிட்ட பொருளாதாரத்தில் துவங்க வேண்டியுள்ளது. மேலும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் போக்குவரத்து, தகவல்தொடர்பு, எரிசக்தி , எரிபொருள் போன்ற அடிப்படை வசதிகள் தேவைப்படுகிறது.

**8. மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான மானியங்கள் அதிகரிப்பு**

இயற்கை பேரழிவுகளை எதிர்கொள்வதற்கு மாநிலமற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான வழங்கப்படும் மானியங்கள் உதவித்தொகை பெருமளவில் அதிகரித்துள்ளது.

## அத்தியாயம் 10
## சுற்றுச்சூழல் பொருளியல்

**பகுதி – அ**

**சரியான விடையைதெரிவு செய்க:**

1. " என்வைரான்மென்ட்" (Environment) என்றவார்த்தை----------------- என்றபொருள் கொள்ளும் எந்தபிரஞ்ச் வார்த்தையிலிருந்து தோன்றியது?

அ) என்வைரான் ஆ) என்வைரான்ஸ் இ) என்வைரோனியா ஈ) என்வைர்

**இ) என்வைரோனியா**

2. " உயிர்சார்" (biotic) என்றவார்த்தையின் பொருள் என்ன?

அ) உயிர் வாழ்வன ஆ) உயிரற்றவை இ) பருப்பொருள் ஈ) மேற்சொன்னஎதுவுமல்ல

**அ) உயிர் வாழ்வன**

3. சூழலியல் என்பது எந்தஒன்றின் சிறிய பகுதி?

அ) அயனோஸ்பியர் ஆ) லித்தோஸ்பியர் இ) பையொஸ்பியர் ஈ) மெஸ்ஸோஸ்பியர்

**இ) பையொஸ்பியர்**

4. " பொருள்சார் சமநிலை அணுகுமுறையை" நிறுவியவர் யார்?

அ) தாமஸ் மற்றும் பிக்கார்டி ஆ) ஆலன் நீஸ் மற்றும் ஆர்.வி. அய்யர்ஸ் இ) ஜோன் ராபின்சன் மற்றும் ஜெ.எம். கீன்ஸ் ஈ) ஜோசப் ஸ்டிக்லிஸ் மற்றும் எட்வர்ட்சேம்பா;லின்

**ஈ) ஜோசப் ஸ்டிக்லிஸ் மற்றும் எட்வர்ட்சேம்பா;லின்**

5. சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை------ --------------?

அ)சந்தைப் பொருட்கள் ஆ)சந்தையிடா பொருட்கள் இ)இரண்டும் ஈ) மேற்சொன்னஎதுவுமல்ல.

**ஆ)சந்தையிடா பொருட்கள்**

6. தூய பொதுப்பொட்களில், நுகர்ச்சி என்பது ------------------ .

அ) போட்டி உடையது ஆ) போட்டியற்றது இ) இரண்டும் ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

**அ) போட்டி உடையது**

7.சுற்றுச்சூழல் பொருளியலின் அடிப்படைகருத்துக்களில் ஒன்றும், சந்தைதோல்விக்கு காரணமானதும் ------------- ஆகும்.

அ)நேர்மறைபுற விளைவுகள் ஆ)எதிர்மறைபுற விளைவுகள் இ)இரண்டும் ஈ) மேற்சொன்னஎதுவுமல்ல

**ஆ)எதிர்மறை புற விளைவுகள்**

8.வெளிக்காற்றுமாசுவுக்கு------------ காரணமாகும்.

அ)சூடாக்குவதும் சமைப்பதும் ஆ)பாரம்பரிய அடுப்புகள்

இ)மோட்டார் வாகனங்கள் ஈ) மேற்கண்டஅனைத்தும்

**இ)மோட்டார் வாகனங்கள்**

9. கார்பன் மோனாக்சைட் அதிகமாவதில் பங்களிப்பைச் செய்வது

அ) மோட்டார் வாகனங்கள் ஆ) தொழில் செயற்பாடுகள் இ) நிலையாக எரிபொருள் எரிக்கும் கருவிகள்
ஈ) மேற்சொன்னஎதுவுமில்லை

**அ) மோட்டார் வாகனங்கள்**

10. பின்வரும் எது உலக வெப்பயமயமாதலுக்கு காரணம்?

அ) பூமியின் ஈர்ப்பு விசை ஆ) ஆக்ஸிஜன் இ) மையநோக்கு விசை ஈ) வெப்பநிலை அதிகமாதல்.

**ஈ) வெப்பநிலை அதிகமாதல்**.

11. பின்வரும் எந்தஒன்று புற ஊதாக்கதிர்களிலிருந்து மனிதர்களைபாதுகாக்கிறது?

அ) UV - A ஆ) UV - C இ) ஓசோன் படலம் ஈ) மேற்சொன்னஎதுவுமில்லை

**இ) ஓசோன் படலம்**

12. உலக வெப்பயமயமாதல் ------------ என்றும் குறிப்பிடப்படுகிறது.

அ) சூழலியல் மாறுபாடு

ஆ)பருவநிலை மாறுபாடு இ)வளிமண்டலமாறுபாடு ஈ) மேற்சொன்னஎதுவுமில்லை

**ஆ)பருவநிலை மாறுபாடு**

13. பின்வரும் எந்த ஒன்று உலக வெப்பயமயமாதலின் எதிர்பார்க்கப்படும் விளைவு?

அ) கடல் மட்டம் உயர்தல் ஆ) மழைப் பொழிவு மாறுதல் இ) பாலைவனம் அதிகரித்தல் ஈ) மேற்சொன்னஅனைத்தும்.

**அ) கடல் மட்டம் உயர்தல்**

14. சத்துக்களைஅதிகப்படுத்தும் செயல் எப்படி அழைக்கப்படுகிறது?

அ)யூட்ரோபிகேசன் ஆ)சத்துக்களைகட்டுப்படுத்துதல் இ)செறிவூட்டல் ஈ) சிஸ்டோஸ்மியாசிஸ்

**அ)யூட்ரோபிகேசன்**

15. மண்மாசுவிற்கு முதல்நிலை காரணம் ------------ .

அ) பூச்சியைகட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஆ) நிலமேம்பாடு இ) விவசாய நிலங்கள் வழியாக பாய்ந்தோடும் மழைநீர் ஈ) இரசாயனஉரங்கள்

**ஈ) இரசாயனஉரங்கள்**

16. வனஅழிவிற்கானமுதன்மை காரணம் யாது?

அ)மரம் வெட்டும் தொழில் ஆ)இயற்கைவனஅழிவு இ)நிலத்தைசமப்படுத்துதல் ஈ) தட்பவெட்பநிலை சமப்படுத்துதல்

**அ)மரம் வெட்டும் தொழில்**

17. மின்னணு கழிவுகளுகள் ------------ என்றபொதுவாக குறிப்பிட்படுகின்றன.

அ)திடக்கழிவுகள் ஆ) குப்பைக்கழிவுகள் இ) இ-கழிவுகள் ஈ) மருத்துவமனைக்கழிவுகள்

**இ) இ-கழிவுகள்**

18. அமிலமழைக்--------------- விளைவுகளில் ஒன்று.

அ) காற்று மாசு ஆ) நீர் மாசு இ) நிலமாசு ஈ) ஒலி மாசு

**அ) காற்று மாசு**

19. நீடித்தவளர்ச்சி (அல்லது) வளங்குன்றாவளர்ச்சிக்குறிக்கோள்களைஅடைய விதிக்கப்பட்டிருக்கும் காலம் --------- .

அ) 2020 ஆ) 2025 இ) 2030 ஈ) 2050

**இ) 2030**

20. கார நிலம் அதிகமாக காணப்படும் சமவெளி எது?

அ) சிந்து-கங்கைஆ) வட இந்திய
இ) கங்கை ஈ) மேற்கூறிய அனைத்தும்

**ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**பகுதி – ஆ**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்**

**21. சுற்றுச்சூழல் என்பதன் பொருள் கூறுக.**

சுற்றுச் சூழல் மற்றும் பொருளாதார நடவடிக்கைளின் மதிப்புகளின் அடிப்படையில் மதிப்புகளின் அடிப்படையில் தேர்வு செய்வதால் இது பொருளியியலில் வேறுபட்ட பிரிவாகும். செலவுகள் மற்றும் நன்மைகளைக் கணக்கிலெடுத்துக்கொண்டு பொருளாதார நடவடிக்கைகளையும் சுற்றுச் சூழலையும் சமன்செய்வதே இதன் நோக்கமாகும்.

**22. சூழலியல் என்றால் என்ன?**

ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருக்கும் உயிரனங்கள் மற்றும் உயிரற்றவைகள் (தட்பவெப்ப நிலை, பூமி, மண், வளிமண்டலம், பருவநிலை) ஆகியவற்றிற்கிடையோன தொடர்பே சூழல் அமைப்பு உயிர்க்கோளத்தின் அடிபப்படையாகும். மேலும் அதுவே பூமியின் நலத்தை தீர்மானிப்பதாகும். சுருக்கமாக கூறின் உயிர்ச் சமூகமும், உயிரற்றவைகளும் கொண்டுள்ள தொடர்பே சூழல் அமைப்பு எனப்படுகிறது. சூழல் அமைப்பு உயிர்க்கோளத்தின் அடிப்படையாகும். மேலும் அதுவே பூமியின் நலத்தை தீர்மானிப்பதாகும். சுருக்கமாக கூறின் உயிர்ச் சமூகமும், உயரற்றவைகளும் கொண்டுள்ள தொடர்பே சூழல் அமைப்பு எனப்படுகிறது.

23. தலா (per capita) கரிமிலவாயு அதிகமாக வெளியேறும் நாடுகள் யாவை?

| Á. Gs | \|õkPÒ | u»õ (Per capita) P›©» Áõ² |
|---|---|---|
| 1. | \Äv A÷µ¤¯õ | 16.85 |
| 2. | Bìv÷µ¼¯õ | 15.83 |
| 3. | Aö©›UPõ | 15.53 |
| 4. | PÚhõ | 15.35 |
| 5 | öuß öPõ›¯õ | 11.58 |

24. சுற்றுச்சூழல் பொருட்கள் என்றால் என்ன? உதாரணம் கூறு.

சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை சந்தையிடா பொருட்களான தூய்மை காற்று, பசுமையான போக்குவரத்து உள்கட்டடைப்பு, பொது பூங்காக்கள், ஆறுகள், மலைகள், பசுமை, வழிகள், கடற்கரை போன்றவைகளாகும். தனியார் சொத்துரிமை இல்லாத, பொதுவாக அனைவராலும் பயன்படுத்தும் இப்பொருட்கள் இலாபக்குறிக்கோள்காரர்களின் சுரண்டலிலிருந்து பாதுகாப்பது மனித நல்வாழ்வுக்கான அடிப்படையாகும்.

25. ஒலிமாசுவினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கூறுக.

1. ஒலித் தடைகளை ஏற்படுத்துதல்
2. தரைப்போக்குவரத்திற்கு புதிய சாலைகள் ஏற்படுத்துதல்
3. போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாடு
4. வேலை செய்யும் இடங்களில் ஒலித் தடுப்பானை நிறுவுதல்
5. கனரக வாகனங்கள் செல்லும் நேரத்தை கட்டுப்படுத்துதல்
6. ஒலி பெருக்கிகளைக் கட்டுப்படுத்துதல்

26. உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு.

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் E – கழிவுகள் என்று பொதுவாக அழைக்கப்படும் மின்னணுக்கழிவுகள் ஏற்படுகின்றன.

27. விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக.

J¸ Âøu ©snõÀ ‰iøÁUP¨£kQÓx. A¢u ©s Eµ® P»¢u PÎ©snõS®. ¤ÓS E»ºzu¨£kQÓx. ¤ß¦ G[S ÷Ásk÷©õ A[S AuøÚ ÂøuUP»õ®. CÆÁõÖ ö\´²® ÷£õx, A¢u Âøu •ß÷£ |h¨£mkÂmhx Gß÷Ó ö£õ¸Ò. ©µ[PÒ |kÁuØS Âøu£¢x •øÓ GÎuõÚ }izx {ø»US® ÁÈ¢u¤ß ÂøuPÒ Âøu¨£x PiÚ©õP •øÓ¯õS®.

**பகுதி – இ**

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்**

**28.பொருளாதாரத்திற்கும் சுற்றுச் சூழலுக்கும் உள்ள தொடர்பினை சுருக்கமாக கூறு.**

சமூக, அரசியல், அறவியல், தத்துவமற்றும் பொருளாதார அமைப்பு முறைகள் மனித வாழ்வினை தீர்மானிக்கிறது என்பது நம்மில் பலருக்கு தெரிந்திருக்கும். மனிதன் தனது வாழ்வாதாரத்திற்காக இயற்கையிலுள்ளமற்றஉயிரினங்களுடனும், உயிரற்ற பொருட்களுடனும் இணைந்துள்ளதால், அவனது வாழ்க்கைமுறையைசுற்றுச்சூழலேபெருமளவுக் கு தீர்மானிக்கிறது. பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும்

இடையேயான தொடர்பினை விளக்க ஆலன் நீஸ் மற்றும் R.V. அய்யர்ஸ் "பொருள்சார் சமநிலை அணுகுமுறை" (Material Balance Approach) வகுத்தளித்துள்ளனர்.

**29. பொருள்சார் சமநிலை அணுகுமுறையின் பொருள் குறிப்பிடுக**.

Page o.: 247 image*

இந்தமாதிரியில் மொத்த பொருளியியல் செயல்பாடுகள் உள்ளீடு, வெளியீடு ஆகியவற்றிற்கிடையே சமமான ஓட்டமாக உள்ளது என்று கருதப்பட்டுள்ளது. உள்ளீடுகளில் உள்ளதிறன் சுற்றுப்புறச் சூழலிலிருந்து பெறப்படுகின்றது. பொருளாதாரத்திற்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் உள்ள தொடர்பு வரைபடங்கள் மூலம் விளக்கப்படுகின்றது.

**30. பல்வகையான காற்று மாசுகளை விளக்குக.**

**காற்று மாசுபடுதலின் வகைகள்**

**உட்புறகாற்று மாசு**

மனிதர்களின் வசிப்பிடத்திற்குள் தீங்கு விளைவிக்கக்கூடிய அசுத்தங்கள் காற்றில் கலந்திருப்பதை உட்புற காற்று மாசு என்கிறோம். உதாரணமாக திட எரிபொருட்களைக் கொண்டு சமையல் செய்கின்றபோது உட்புற காற்று மாசு அடைகின்றது.

**வெளிப்புறகாற்று மாசு**

காற்று மண்டலத்தில் திட, திரவ, அல்லது காற்று வடிவ அசுத்தங்கள் கலந்திருப்பதே வெளிப்புற காற்றுமாசு எனப்படுகிறது. தொழிற்சாலைகளாலும் மோட்டார் வாகனங்களாலும் வெளிப்புறக்காற்று மாசு அடைகின்றது.

**31. நீர்மாசுக்கானகாரணங்கள் யாவை?**

**நீர் மாசுபடுதலுக்கான காரணங்கள்**

**1. கழிவு நீர் மற்றும் தேவையற்றநீர் வெளியேற்றம்**

பல இடங்களில் இருந்து வருகின்ற சாக்கடைத் தண்ணீர், கழிவு நீர் குப்பைகள், விவசாயக்கழிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் நீர் நிலைகளில் கொட்டப்படுகின்றது. இத்தகைய கழிவுகளில் உள்ளநச்சுப்பொருட்கள் தண்ணீரை மாசுபடுத்தி நச்சுத் தன்மை உள்ளதாக மாற்றுகின்றது

**2. திடக் கழிவுகள்குவித்தல்**

திடப்பொருள் கழிவுகளை நீர் நிலையில் கொட்டுதல், நீர் நிலையுடன் கலந்து விடுமாறு விட்டுவிடுதல்.

**3. ஆலைக் கழிவுகளைக் கொட்டுதல்**

மக்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் மாசுப்பொருட்களான, ஆஸ்பெஸ்ட்டாஸ், காரீயம், பாதரசம், கிரிஸ் எண்ணெய் மற்றும் பெட்ரோலியக்கழிவுகள் போன்றவை ஆலைக்கழிவுகளில் அதிகம் உள்ளது.

**4. எண்ணெய் சிந்துதல்**

கப்பல்களாலும் குறிப்பாக எண்ணெய்க் கப்பல்களாலும் எண்ணெய் கடல்நீரை மாசுபடுத்துக்கின்றது. கடல்நீரில் எண்ணெய் கலக்காமல் படலமாகத் தண்ணீரில் படர்கின்றது. இதனால் கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.

**5. அமில மழை**

காற்று மாசுவினால் அமில மழை ஏற்பட்டு நீர் மாசு ஏற்படுத்துகின்றது. காற்று மாசுவில் உள்ள அமிலத் துகள்கள் தண்ணீர் ஆவியுடன் கலந்து அமில மழையை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

www.Padasalai.Net

**32. இ-கழிவுகள் என்பதன் பொருள் தருக.**

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் E – கழிவுகள் என்று பொதுவாக அழைக்கப்படும் மின்னணுக்கழிவுகள் ஏற்படுகின்றன.

குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுச் சீரமைப்பிகள் (Air conditioners), கைபேசிகள், கணினிகள் போன்ற பெருமளவில் வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தும் மின்னனுச் சாதனங்களை உள்ளடக்கியதாகும்.

தொலைசாதனம், கணினிகள், கேட்கும் கருவிகள், தொலைபேசி, VCR, DVD, தொலைநகல், நகலெடுக்கும் இயந்திரங்கள், கம்பியில்லாகருவிகள் போன்றவீட்டு உபயோகப் பொருட்களைகழிக்கும் போதோ அல்லது மறுசுழற்சி செய்யும் போதோ E கழிவுகள் தோன்றும்.

**33. நிலமாசு என்றால் என்ன? அதற்கான காரணங்களைகுறிப்பிடுக.**

**1. காடுகளைஅழித்தல்**

காடுகளை அழித்து நிலமாக மாற்றுவது சுற்றுச்சூழல் பாதிப்புக்கு முக்கிய காரணியாக விளங்குகின்றது. அவ்வாறு மாற்றப்படும் நிலங்களை எத்தகைய நடவடிக்கைகள் மூலமாகவும் செழிப்பான நிலமாக மாற்ற முடியாது.

**2. விவசாய நடவடிக்கைகள்**

மக்கள் தொகை அதிகரிப்பாலும் கால்நடைஅ திகரிப்பாலும் உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டியுள்ளது. அதற்காக விவசாயிகள் அதிக நச்சுத் தன்மை கொண்ட உரம் மற்றும் பூச்சி மருந்துகளை பயன்படுத்தப்படுகின்றனர். இந்த வேதிப் பொருட்களை அளவிற்கதிகமாக பயன்படுத்துகின்ற போது நிலம் நச்சுத் தன்மை அடைகின்றது.

**3. சுரங்கத் தொழில்கள்**

கனிமங்களை வெட்டி எடுக்கும் போதும் சுரங்கங்கள் அமைக்கப்படும் போதும் பூமிக்கு அடியில் நில அமைப்புகள் தோன்றுகின்றது. இதன் மூலம் நிலம் மாசடைகின்றது.

**34. குறிப்பு வரைக: அ) பருவநிலை மாற்றம் ஆ) அமிலமழை**

**அ) பருவநிலை மாற்றம்**

வளி மண்டலத்தில் பசுமைக் குடில் வாயுக்களின் அளவுகள் வளர்ந்து கொண்டே செல்வதால் நீண்ட காலத்தில் ஏற்படும் பருவநிலை மாறுபாடுகளே காலநிலை மாற்றம் எனப்படும்.

கடற்கரை நீரின் வெப்ப அதிகரிப்பு, உயர்ந்த வெப்பநிலை, மழை பெய்யும் காலங்களில் மாற்றம், அதிக வேகத்துடன் அடிக்கடி தோன்றும் புயல் ஆகியவற்றை உலகின் பலபகுதிகளிலும் உணரத் தொடங்கியுள்ளார்கள். கடல் மட்டமும் வெப்பமும் அதிகரிக்கும் எனத் திர்பார்க்கப்படுகின்றது.

**ஆ) அமிலமழை**

காற்று மாசுவின் விளைவே அமிலமழை ஆகும். தொழிற்சாலைகள், வாகனங்கள் கொதிப்பான்கள் போன்றவை வெளியிடும் வாயுக்கள் வளிமண்டலத்தின் உள்ள நீர்த்துகள்களோடு இணையும் போது ஏற்படுகின்றது. இந்த வாயுக்கள் நைட்ரஜன் ஆக்ஸைடு, சல்பர் டைஆக்ஸைடு மற்றும் சல்பர் டிரை ஆக்ஸைடு, தண்ணீரோடு கலக்கின்ற போது சல்பரஸ் அமிலம், நைட்ரிக் அமிலம், சல்பியூரிக் அமிலம் போன்றவையாக மாறுகின்றது. இந்நிகழ்வுகள் எரிமலை வெடித்துச் சிதறும் போதும் எரிகுழம்புகளைக் கக்கும்போதும் இயற்கையிலேயும் ஏற்படும். தாவரங்கள், நீர்வாழ் உயிரனங்கள், கட்டமைப்புக்கள் அதிக அளவில் அமிலமழையால் பாதிக்கப்படுகின்றது.

**பகுதி – ஈ**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்கஅளவில் பதில் தருக**

**35. தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்திற்கும் இடையேயான தொடர்பினை சுருக்கமாக விளக்குக.**

**தேசிய உற்பத்தி**

சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்திற்குமான இணைப்பினை நாம் அறிவியல் விதிகொண்டு விளங்கிக் கொள்ளலாம். “உற்பத்தி முறைக்குள் உள்நுழையும் எந்தவொன்றும் பிறகு வெளியேறித்தான் ஆகவேண்டும்” (What goes in must come out) என்பதனை வலியுறுத்துகிறது

இயற்பியலின் பொருள் மற்றும் ஆற்றல் பாதுகாப்பிற்கான வெப்ப இயக்கவியல் முதல்விதி (First law of Thermodyanmics). இவ்விதியை ஆதாரமாகக் கொண்டு சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்திற்குமான தொடர்பினை விளக்குவது தான் மேற்சொன்ன பொருள்சார் சமநிலை அணுகுமுறையாகும். சுழல் விளக்கப் படத்தில் கொடுக்கப்பட்டுள்ளதைப் போல் அனைத்து விதமான உற்பத்திக்கும் ஆதாரம் இயற்கையே ஆகும். இயற்கை சூழலிருந்து எடுக்கப்படும் மூலப்பொருட்கள் உள்வருவதும், அவைகள் உற்பத்தி செய்யப்பட்டு நுகர்ச்சித் துறைக்கு செல்வதும், உற்பத்தி மற்றும் நுகர்ச்சித்துறையின் கழிவுகள் மறுசுழற்ச்சி செய்யபப்பட்டு மீளவும் பொருட்களாக்கப்படுவதும் நடக்கின்றன. நுகர்ச்சியிலிருந்தும், உற்பத்தியிலிருந்தும் வெளியேறும் இறுதிக் கழிவுகள் இயற்கை சூழலிலேயே கலக்கவிடப்டுகின்றன. ஆனால், முழுமையான மறுசுழற்ச்சியும் முறையற்ற இறுதிக் கழிவுகள் வெளியேற்றமும் இயற்கை சூழலை பொрதும் பாதிக்கும். மீண்டும் அங்கிருந்து உற்பத்திக்காக நாம் எடுக்கும் மூலப்பொருட்களின் தரம் குறையும், உற்பத்தி செலவு அதிகரிக்கவும் வழிவகுக்கும்.

**M = G–(RC– RP) + (RrP + Rrc) = Rdp + Rdc**

இயற்கை உலகிலிருந்து பெறப்படும் மூலப்பொருட்களும் சக்தியும் (M) = பொருளாதார நடவடிக்கைகள் உற்பத்தியில் பணிகளும் (G) – நுகர்ச்சி மற்றும் உற்பத்தியில் ஏற்படும் கழிவுகள் **(Rc + RP)** + மறு சுழற்சி செய்யப்பட்ட உற்பத்தி மற்றும் நுகர்ச்சிக்கழிவுகள் **(RrP + Rrc)** = இயற்கை உலகில் இறுதியாக விடப்படும் உற்பத்தி மற்றும் நுகர்ச்சிக்கழிவுகள் **(Rdp + Rdc)**

இது சரியா? சுற்றுச் சூழல் சுழற்சி செய்யக்கூடிய, சுழற்சி செய்யமுடியாத வளங்களை வழங்கினாலும் கழிவுகளைக் கொட்டக்கூடிய இடமாகவும் உள்ளது. நுகர்வோரும் உற்பத்தியாளர்களும் ஒருவருக்கொருவர் தொடர்புடன் இருந்தாலும் வளங்களுக்காக இயற்கையைச் சார்ந்திருப்பதால் சுற்றுச்சூழலுடன் தொடர்புடையவர்களாக இருக்கின்றார்கள். நுகர்வோரும் உற்பத்தியாளர்களும் தங்கள் கழிவுகளை இயற்கையில் கொட்டுகின்றனர். இயற்கைக்கு எல்லாக் கழிவுகளையும் செரிக்கும் தன்மை இருந்தாலும் இத்தன்மை வரையறைக்குட்பட்டது. எதற்கும் ஒரு அளவு உள்ளது. உலகத்தின் கழிவு தாங்கும் சக்தி முழுஅளவிற்கு மேல் உள்ளதால் அதனால் நிறைய வகைக் கழிவுகளை சுத்திகரிக்க முடியவில்லை.

சுற்றுச்சூழல் தரம் *

**36. புற விளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்குக.**

Page no.: 250 image

**37. நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.**

**முக்கியத்துவம்**

இப்போதுள்ள சந்ததியினருக்கு மட்டுமின்றி, எதிர்காலச் சந்ததியினருடன் வாழ்வதற்குத் தேவையான வளத்தை வைத்துவிட்டு அடைகின்ற மேம்பாடே நீடித்தநிலையான மேம்பாடு எனப்படும். மேல்தட்டு மக்களின் ஆடம்பர விருப்பங்கள் மட்டுமல்லாது ஏழை மக்களின் அடிப்படைத் தேவைகளான, உணவு, சுகாதாரம், உடல்நலம், கல்வி போன்றவற்றையும் அளிக்கவேண்டும். தற்பொழுதுள்ள தலைமுறை, முன்னோர் விட்டுச் சென்ற இயற்கை வளங்களை முழுவதுமாகப் பயன்படுத்தாமல் பின்வரும் சந்ததியினருக்கு விட்டுச் செல்லவேண்டும். முன் சந்ததிக்கு கிடைத்தஅனைத்தும் அதேசெலவில், அதேசிரமத்தில் அதேஅளவில் பின்சந்ததிக்கும் கிடைத்தால் அது தலைமுறைகளுக்கு இடையேயான சமத்துவம் ஆகும்.

**நோக்கங்கள்**

1. எல்லா வடிவங்களிலும் எல்லா இடத்திலும் வறுமையை ஒழித்தல்

2. பட்டினியை முடிவுக்குக் கொண்டு வருதல்; உணவுப் பாதுகாப்பை அடைதல், ஊட்டச் சத்தினை உயர்த்துதல், நீடித்த நிலையான விவசாயத் துறை வளர்ச்சியை ஊக்கப்படுத்துதல்.

3. அனைத்து வயது மனிதர்களின் நலமான வாழ்வை உறுதிப்படுத்துதல்

4. எல்லோரையும் உள்ளடக்கிய தரமான கல்வியை வழங்கி வாழ்நாள் முழுக்கக் கற்றுக் கொள்ள வசதி செய்தல்.

5. பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல் பாலின சமன்பாட்டைசாதித்தல்.

6. குடிநீரும் சுகாதாரமும் அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.

7. சுத்தமான, நீடித்தநிலையான, எளிதில் பெறக்கூடிய சக்தியினை (எரிபொருள்: Energy) அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.

8. அனைவருக்கும் தரமானவேலை வாய்ப்பினையும் நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சியினையும் வழங்குதல்.

9. நிலையான கட்டமைப்புகளை வழங்குதல், தொழில்மயமாக்கல், புத்தாக்கங்களை ஊக்குவித்தல்.

10. நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக்கிடையேயும் உள்ள சமமின்மைகளை அகற்றுதல்.

11. பாதுகாப்பான, அமைதியானயாவரையும் உள்ளடக்கிய நகரங்களை உருவாக்குதல்.

## அத்தியாயம் 11 பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல்

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. " வளர்ச்சியுடன் கூடிய மறு பகிர்வு" கீழ்கண்ட எந்த அணுகுமுறையின் புகழ் பெற்ற முழக்கம் இது.

அ) பழமையான அணுகுமுறை ஆ) புதிய பொது நல அணுகுமுறை இ) தொழில் அணுகுமுறை ஈ) இவற்றில் எதுவுமில்லை

**ஆ) புதிய பொது நல அணுகுமுறை**

2. பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியின் தன்மைஇல்லாதவைஎது?

அ) வளர்ந்தநாடுகளை பற்றியது ஆ) படிப்படியான மாற்றம் இ) எண்களின் அடிப்படையில் அமைந்தது ஈ) விரிவான கருத்து

**ஈ) விரிவான கருத்து**

3. கீழ்கண்டவற்றுள் எவைபின்தங்கிய நாடுகளின் பண்புகளில் ஒன்றாகும்

அ) வறுமையின் நச்சு சுழற்சி ஆ) பெரும் நுகர்வைஅதிகப்படுத்துதல் இ) தொழில்சாலைகள் வளர்ச்சி ஈ) அதிக அளவில் நகர்மயமாதல்

**அ) வறுமையின் நச்சு சுழற்சி**

4. கீழ்கண்டவற்றுள் எந்தபொருளாதாரம் சாராத காரணி, பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கிறது

அ) இயற்கைவளங்கள் ஆ)மனிதவளங்கள். இ) மூலதன உருவாக்கம் ஈ)பன்னாட்டு வாணிபம்

**ஆ) மனித வளங்கள்.**

5. பொருளாதார வளர்ச்சி ________ ஐ அளவிடுகிறது

அ) உற்பத்தித் திறன் வளர்ச்சி ஆ) பெயரளவு வருமான அதிகரிப்பு இ) உற்பத்தி அதிகரிப்பு ஈ) இவை எதுவுமில்லை

**இ) உற்பத்தி அதிகரிப்பு**

6. அளிப்பு பக்கத்திலிருந்து இயங்கும் வறுமையின் நச்சு சுழற்சியின்படி ஏழைநாடுகள் ஏழையாகவே இருக்கின்றன ஏனென்றால்

அ) சேமிப்பு குறைவாகவே உள்ளது ஆ) முதலீடு குறைவாகவேஉள்ளது இ) திறன் மிக்கஅரசு இல்லை ஈ) அ மற்றும் ஆ

**ஈ) அ மற்றும் ஆ**

7. கீழ்கண்ட எந்த திட்டத்தில், வேளாண்மை மற்றும் கிராமப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டது?

அ) மக்கள் திட்டம் ஆ) பாம்பேதிட்டம் இ)காந்தியத்திட்டம் ஈ) விஸ்வேசுவரய்யாதிட்டம்

**இ)காந்தியத்திட்டம்**

8.கீழ்கண்டதிட்டங்களை அவை முன் மொழியப்பட்ட ஆண்டின் அடிப்படையில் கால கிராம வரிசைப்படி தொகுத்து விடையைத் தேர்ந்தெடுக்கவும்

i) மக்கள் திட்டம் ii) பாம்பேதிட்டம் iii) ஜவஹர்லால் நேரு திட்டம் iv) விஸ்வேசுவரய்யாதிட்டம்

அ) i) ii) iii) iv) ஆ) iv) iii) ii) i) இ) i) ii) iv) iii) ஈ) ii) i) iv) iii)

**ஆ) iv) iii) ii) i)**

9. எம். என் ராய் வழங்கியத் திட்டம் கீழ்கண்டவைகளில் எது?

அ) காங்கிரஸ் திட்டம் ஆ) மக்கள் திட்டம் இ) பாம்பேதிட்டம் ஈ) இவை எதுவுமில்லை

**ஆ) மக்கள் திட்டம்**

10. சுட்டிக்காட்டும் திட்டமிடலை செயல்படுத்திய நாடு

அ) பிரான்சு ஆ) ஜெர்மனி இ) இத்தாலி ஈ) ரஷ்யா

**ஆ) ஜெர்மனி**

11. குறுகிய காலத் திட்டத்தின் இன்னொரு பெயர்

அ) கட்டுப்படுத்தும் திட்டம் ஆ) கட்டுபாட்டைநீக்கும் திட்டம் இ) சுழல் திட்டம் ஈ) சுழற்சியற்றதிட்டம்

**அ) கட்டுப்படுத்தும் திட்டம்**

12. நீண்டகாலத் திட்டத்தின் மற்றொரு பெயர்

அ)மேம்பாட்டுத் திட்டம் ஆ)மேம்பாடு இல்லாத திட்டம் இ)முன்னோக்குத் திட்டம் ஈ) முன்னோக்கமற்றதிட்டம்

**இ) முன்னோக்குத் திட்டம்**

13. நீண்டகாலத்திட்டமிடலின் அடிப்படைக்கருத்து நாட்டின் _______மாற்றமாகும்

அ) நிதி ஆ) வேளாண்மை இ) தொழில் ஈ) கட்டமைப்பு

**இ) தொழில்**

14. சர்வோதாயத் திட்டத்தைமுன்மொழிந்தவர் யார்?

அ)மஹாத்மாகாந்தி ஆ)ஜெயப்பிரகாஷ் நாராயணன் இ)எஸ்.என்.அகர்வால் ஈ) எம்.என்.ராய்

**ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்**

15. இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்டஆண்டு------------

அ) 1950 ஆ) 1951 இ) 1947 ஈ)1948

**அ) 1950**

16. “ அடிமைத்தனத்திற்கான பாதை“ என்றபுத்தகத்தைஎழுதியவர் யார்?

அ) பிரடெரிக்ஹேயக்ஆ) ஜெ.ஆர் ஹிக்ஸ் இ) டேவிட்ரிக்கார்டோ ஈ) டி.ஆர். மால்தஸ்

**அ) பிரடெரிக்ஹேயக்**

17. முன்னோக்குத் திட்டத்தின் மற்றொருப் பெயர்________.

அ) குறுகிய கால திட்டமிடல் ஆ) நடுத்தரக்காலத் திட்டமிடல் இ) நீண்டகாலத் திட்டமிடல் ஈ) இவைஎதுவுமில்லை

**இ) நீண்டகாலத் திட்டமிடல்**

18. நிதி ஆயோக்கீழ்கண்டஎதன் மூலமாக அமைக்கப்பட்டது?

அ) குடியரசு தலைவரின் அவசர ஆணைஆ) குடியரசு தலைவரின் சுற்றறிக்கை இ) அமைச்சரவைத் தீர்மானம் ஈ) இவைஎதுவுமில்லை

**இ) அமைச்சரவைத் தீர்மானம்**

19. நிதி ஆயோக்கின் (NITI Aayog) சரியான ஆங்கில விரிவாக்கம்

அ) National Institute for Transport in India ஆ) National Institute for Trade in India இ) National Institute for Tomorrow’s India ஈ) National Institution for Transforming India

**ஈ) National Institution for Transforming India**

20. சட்டப்பூர்வமாக நிதி ஆயோக்கின் தலைவராக கீழ்க்கண்டஎந்தப்பதவியில் உள்ளஒருவர் செயல்படுவார்?

அ) பிரதமர் ஆ) குடியரசுத் தலைவர் இ) உதவி குடியரசுத் தலைவர் ஈ) நிதி அமைச்சர்

**அ) பிரதமர்**

**பகுதி – ஆ**

**கீழ்க்காணும்வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்**

**21. பொருளாதார முன்னேற்றம் - வரையறு**

பொருளாதார வளர்ச்சி நாட்டு வருமானம் அதிகரித்தலைக் குறிக்கப் பயன்படும் சொல். நாட்டின் பொருளாதார கட்டமைப்பில் நிகழும் நல்ல மாற்றங்களை முன்னேற்றம் எனக் கருதலாம்

**22. பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடுகளை குறிப்பிடுக**

**நாட்டின் மொத்த உற்பத்தி (Gross National Product GNP)**

ஒரு நாட்டின் புவி எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் சந்தை மதிப்புடன் அந்த நாட்டு மக்கள் வெளிநாடுகளில் ஈட்டிய வருமானத்திற்கும், வெளிநாட்டினர் சம்பாதித்து அவர்கள் நாட்டுக்கு அனுப்பிய வருமானத்திற்குமிடையிலான வேறுபாடுத் தொகையை கூட்டினால் கிடைக்கும் மொத்தமதிப்பே மொத்தநாட்டு உற்பத்தி எனலாம்.

**தலா வீத மொத்தநாட்டு உற்பத்தி (GNP Per Capita)**

ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட ஆண்டின் மொத்த உற்பத்தி மதிப்பை அந்தஆண்டின் மக்கள் தொகையால் வகுக்கக்கிடைக்கும் ஈவுத் தொகையே தலாவீத மொத்த நாட்டு உற்பத்தியாகும்.

**நலன்:**
பொருளாதார முன்னேற்றத்தை மக்களின் சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத் தகுந்த அளவு மேம்படுவதாக சார்ந்து வரையறுக்கலாம்.

**சமூகக் குறியீடுகள் (Social Indicators):**

மக்களின் அடிப்படை மற்றும் கூட்டுத் தேவையை நிவர்த்தி செய்வதை சமூக குறியீடுகள் என அழைக்கப்படுகிறது. நேரடியாக வழங்கப்படும் அடிப்படைத் தேவை என்பது மக்களின் சுகாதாரம், கல்வி, உணவு, குடிநீர், துப்புரவு மற்றும் வீட்டு வசதி ஆகியவையாகும். இவற்றைக் கொண்டு சமூக பின்னடைவு தவிர்க்கப்படுகிறது.

**23. பொருளாதார வளர்ச்சியிலிருந்து முன்னேற்றத்தை வேறுபடுத்துக**

**பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்குமிடையேயான**

| **பொருளாதார வளர்ச்சி** | **பொருளாத** |
|---|---|
| வளர்ந்தநாடுகளின் பொருளாதார பிரச்சனைகளை கையாளுகிறது | வளரும் பிரச்சனைக |
| மாற்றங்கள் படிப்படியாகவும் நிதானமாகவும் நிகழ்கிறது | தொடர்ச்சிய நிகழ்கிறது |
| அதிக அளவான உற்பத்தியைக்குறிக்கிறது. | உற்பத்தி உற்பத்தியா மாறுகிறது |

**24. மொத்தநாட்டு உற்பத்தி என்றால் என்ன?**

**நாட்டின் மொத்தஉற்பத்தி (Gross National Product GNP)**

ஒரு நாட்டின் புவி எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் சந்தை மதிப்புடன் அந்த நாட்டு மக்கள் வெளிநாடுகளில் ஈட்டிய வருமானத்திற்கும், வெளிநாட்டினர் சம்பாதித்து அவர்கள் நாட்டுக்கு அனுப்பிய வருமானத்திற்குமிடையிலான வேறுபாடுத் தொகையை கூட்டினால் கிடைக்கும் மொத்த மதிப்பே மொத்தநாட்டு உற்பத்தி எனலாம்.

**25. பொருளாதார திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக**

உற்பத்தி மற்றும் விநியோக நடவடிக்கைகளை கூட்டாக கட்டுப்படுத்துவது அல்லது ஒடுக்குவதை குறிப்பதாகும்"

**- ராபின்ஸ்**

www.Padasalai.Net

" பொருளாதாரத் திட்டமிடல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்டஇலக்குகளை அடைய உரிய பொறுப்பில் உள்ளவர்கள் நிதானமாக சிந்தித்து, இருக்கக்கூடிய பொருளாதார வளங்களை அதிக அளவில் பயன்படுத்தசுட்டிக்காட்டும் வழிமுறைகளேஆகும்".

**- டால்ட்டன்**

**26. பொருளாதார முன்னேற்றத்தின் சமூக குறியீடுகளை பட்டியலிடுக**

**சமூகக்குறியீடுகள் (Social Indicators):**

மக்களின் அடிப்படை மற்றும் கூட்டுத் தேவையை நிவர்த்தி செய்வதை சமூக குறியீடுகள் என அழைக்கப்படுகிறது. நேரடியாக வழங்கப்படும் அடிப்படைத் தேவை என்பது மக்களின் சுகாதாரம், கல்வி, உணவு, குடிநீர், துப்புரவு மற்றும் வீட்டு வசதி ஆகியவையாகும். இவற்றைக் கொண்டு சமூக பின்னடைவு தவிர்க்கப்படுகிறது.

**27. நிதி ஆயோக்பற்றி குறிப்பு வரைக.**

National Institution For Transforming Indian என்பதன் சுருக்கமே நிதி ஆயோக் என்பதாகும். இதனை இந்தியாவை உருமாற்றம் செய்வதற்கான தேசிய நிறுவனம் என புரிந்துக் கொள்ளலாம். இதனை ஆகஸ்டு 13, 2014 - ல் திட்டக்குழுவுக்கு பதிலாக இந்த நிறுவனத்தை உருவாக்கும் முடிவை இந்திய அரசு எடுத்தது. இதன்படி ஜனவரி 1, 2015 அன்று அமைச்சரவைக் குழுவின் தீர்மானத்தின் மூலமாக நிதி ஆயோக் அமைக்கப்பட்டது. இந்தியப் பிரதமரே நிதி ஆயோக்கின் தலைவர். மத்திய அமைச்சர்கள் உறுப்பினர்கள் ஆவர். இதன் துணைத்தலைவரே நிர்வாகத் தலைவராவார். அரவிந்த் பனகரியா இதன் முதலாவது துணைத்தலைவராக செயல்பட்டு வருகிறார்.

**பகுதி – இ**

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்**

**28. வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுப்படுத்துக**

Page no.: 282 image

முன்னேற்றம் குறைவாக உள்ள நாடுகளில் குறைவான முன்னேற்றமே முன்னேற்றத்தைக் குறைவான அளவிலே தொடர்ந்து நீடிக்கசெய்யும் சுழற்சியினை உருவாக்குகிறது. நச்சுச் சுழலானது ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று ஏழைநாடுகளை தொடர்ந்து வறுமை நிலையிலேயே வைத்திருக்கும் விதத்தில் செயல்படுவதைக் குறிப்பதாக ராகனர் நர்க்ஸ் கூறுகிறார். உதாரணமாக ஒரு ஏழையிடம் உண்பதற்கு போதுமான உணவு இல்லை– குறைவான உணவு அவருடைய உடல் நிலையை பலவீனப்படுத்திவிடும். பலவீனமாக இருப்பவரின் உழைக்கும் தகுதி குறைவாக இருக்கும். உழைக்கும் திறன் குறைவாக இருந்தால் குறைவான வருமானம் ஈட்டுவார் வருமானம் குறைவாக இருப்பதால் அவர் ஏழை. அவர் உண்பதற்கு போதுமான உணவு இருக்காது. இந்தசுழல் தொடர்ந்து கொண்டேசெல்லும். இந்தவகையான சூழ்நிலையை ஒருநாட்டுக்கு ஒப்பிட்டுப் பார்த்தால் கீழ்கண்ட கருத்துரையாக சுருக்கலாம் "ஒரு நாடு ஏழை ஏனென்றால் அது ஏழைகளின் நாடு"

வறுமையின் நச்சு சுழற்சி தேவைப் பக்கத்திலிருந்தும் அளிப்பின் பக்கத்திலிருந்தும் செயல்படுகிறது.

அளிப்பின் பக்கத்திலிருந்து பார்த்தால், குறைவான உண்மை வருமானம் காரணமாக சேமிப்பு அளவு குறைகிறது. இது முதலீட்டு அளவைக் குறையச் செய்து மூலதன பற்றாக்குறையை உருவாக்குகிறது. இதனால் உற்பத்தித் திறன் குறைந்து வருமானமும் குறைகிறது. இவ்வாறு அளிப்பு பக்கத்தில் வறுமை நச்சு சுழற்சி செயல்படுகிறது.

தேவைப்பக்கத்திலிருந்து பாரத்தால், குறைவான உண்மைவருமானம் காரணமாக தேவையும் குறைவாக இருக்கும். இது முதலீட்டைக்குறைக்கச் செய்யும், இதனால் மூலதன பற்றாக்குறைஏற்பட்டு உற்பத்தி குறைந்து வருமானத்தைகுறைக்கும்..

**29. பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?**

**1. மனித வளம்**

மனித வளம் மனித மூலதனம் எனக் கூறப்படுகிறது. ஏனென்றால், இது உற்பத்தி

திறனை அதிகப்படுத்தி நாட்டு வருமானத்தையும் உயர்த்தும் ஆற்றல் பெற்றுள்ளது. மக்களின் முன்னேற்றத்துக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் சுழற்சியான உறவு நிலவுகிறது. ஒரு நாட்டுக்கு கல்வியறிவுள்ள, உடல் நலமுள்ள மற்றும் திறமையான தொழிலாளர்கள் உற்பத்தித் திறன்மிக்க சொத்தாக கருதப்படுகிறார்கள். மக்களின் அறிவு, திறன்கள் மற்றும் உற்பத்தி செய்யும் தகுதி ஆகியவற்றை அதிகரிக்கும் செயலை மனித மூலதன ஆக்கம் எனலாம். பொது சுகாதாரம், கல்வி மற்றும் மக்களுக்கான வசதிகள் மீது செய்யப்படும் செலவுகள் மனித மூலதன ஆக்கத்தை அதிகரிக்கும். திறமை மிக்க மனிதர்கள் உற்பத்திக்கு பங்களித்து முன்னேற்றத்தைத் தீர்மானிக்கிறார்கள். உதாரணம் ஜப்பான் மற்றும் சீனா போன்றநாடுகள்.

**2. தொழில் நுட்பஅறிவு**

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவு வளரும் பொழுது உயர்வகை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பிறக்கும். புதிய தொழில் நுட்ப முறைகள் உற்பத்தி திறனை அதிகப்படுத்தும். இது பொருளாதாரம் முன்னேற்றத்துக் காரணமாகிவிடும் என ஜோசப்சும்பீட்டர் கூறுகிறார்.

**3. அரசியல் சுதந்திரம்**

பொருளாதார முன்னேற்றத்திற்கும் அரசியல் சுதந்திரத்திற்கும் நெருங்கிய தொடர்புடையது. இந்தியாவின் வறுமைக்கு இந்தியாவின் செல்வம் ஆங்கிலேயர்கள் ஆட்சியில் எடுத்து செல்லப்பட்டதேகாரணம் என தாதாபாய் நவ்ரோஜி தனது " "வறுமையும் – இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி முறையும்" (Poverty and un – British Rule in India)' என்றநூலில் எழுதியுள்ளார். பிரிட்டிஷ் ஆட்சி முறைதான் இந்தியாவில் வறுமை அதிகரிக்க முக்கியக்காரணமாக இருந்தது.

**30. வறுமையின் நச்சு சுழற்சியைஎப்படித் தடுப்பது?**

அளிப்பு பக்கத்தில் வறுமையின் நச்சு சுழற்சி குறைவான சேமிப்பு மற்றும் குறைவான முதலீட்டினால் இயங்கத் துவங்குகிறது. ஆகவேபின்தங்கிய நாடுகளில் முதலீட்டையும் மூலதன ஆக்கத்தையும் அதிகரிக்கும் போது நுகர்வு அளவு குறையாமல் இருக்கவேண்டும்.. இதற்கு கடந்தகால சராசரி சேமிப்பு விகிதத்தைவிடஇறுதிநிலைசேமிப்பு அளவைஅதிகமாக இருக்குமாறு செய்யவேண்டும்.

தேவைப்பக்கத்தில் வறுமை நச்சு சுழற்சியை உடைத்தெரிய, நர்க்ஸ் சரிசம வளர்ச்சி உத்தியை பரிந்துரை செய்கிறார். ஒரே நேரத்தில் பலவகைத் தொழில்களில் ஒரு நாடு முதலீடு செய்தால் தொழிலாளர்களுக்கு அந்தத் தொழில்களில் வேலை கிடைக்கும். அவர்கள் மற்றத் தொழில்களில் உற்பத்தி செய்த பொருட்களுக்கு நுகர்வோர்களாக மாறுவார்கள். இவ்வாறு ஒவ்வொரு தொழிலிலும் வேலை கிடைத்த தொழிலாளர்கள் தங்களின் வருமானத்தைவேறு தொழிலிலும் உற்பத்தி செய்யப்பட்டபொருட்களை வாங்கும்போது சரிநிகர் சமமான முன்னேற்றம் நடைபெறும் என நார்க்ஸ் கூறுகிறார். எனவே அனைத்துத் தொழில்களின் சரிநிகர் சமமான வளர்ச்சியின் மூலம் தேவையின் பக்கத்தில் இயங்கும் வறுமையின் நச்சு சுழற்சியைத் தடுக்கமுடியும்.

**31. இந்தியாவில் பொருளாதாரத் திட்டமிடல் பரிணாம வளர்ச்சியை மதிப்பிடுக.**

**1. சர்.எம்.விஸ்வேஸ்வரய்யா(1934)** புகழ்பெற்ற பொறியியல் வல்லுநரும் அரசியல்வாதியுமான எம். விஸ்வேஸ்வரய்யா 1934-ல் இந்தியாவில் திட்டமிடுதலுக்கான அடித்தளத்தை அமைத்தார். அவர் தனது ஆலோசனையாக பத்தாண்டுத் திட்டமொன்றை அவர் எழுதிய "இந்திய பொருளாதார திட்டமிடல்" என்ற புத்தகத்தில் விளக்கியுள்ளார்.

**2. ஜவஹர்லால் நேரு (1938) :** "தேசியத் திட்டக்குழு" ஒன்றை அமைத்தார். அன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாகவும், இரண்டாம் உலகப்போர் ஆரம்பித்ததாலும் நேருவின் முயற்சிகள் நின்றுவிட்டன.

**3. பாம்பேதிட்டம்(1940)** மும்பையின் முன்னனி தொழிலதிபர்கள் பாம்பேதிட்டம் என்ற திட்டத்தை1938-ல் முன் மொழிந்தனர். இது பதினைந்து ஆண்டுகளுக்கான தொழில் முதலீட்டுத் திட்டமாகும்.

**4. எஸ்.என்அகர்வால் (1944)** என்பவர் "காந்தியத் திட்டம்" என்றதிட்டத்தை1944-ல் வழங்கினார். இது வேளாண்மை மற்றும் கிராமியப் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டமாகும்.

**5. எம்.என்.ராய் (1945):** மக்கள் திட்டம் என்பதை வடிவமைத்தார். இது வேளாண்மை உற்பத்தி மற்றும் விநியோகத்தை இயந்திர மயமாக்குவதையும் நுகர்வுப் பொருட்களை அரசேவிநியோகம் செய்யவேண்டும் என்பதையும் வலியுறுத்தியது.

**6. ஜெயப்பிரகாஷ் நாராயணன்(1950):** "சர்வோதயத் திட்டம்" ஒன்றை முன்மொழிந்தார். இது காந்தி மற்றும் வினோபா பாவே ஆகியோரின் கருத்துக்களின் உத்வேகத்தால் தயாரிக்கப்பட்டத் திட்டமாகும். விவசாயம் மட்டுமல்லாமல் சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் கூறுகளைக் கொண்டத் திட்டமாகும்.

இந் தஆறுத் திட்டங்களையும் கவனமாக ஆராய்ந்து திட்டக்குழுவை அமைத்து ஐந்தாண்டுத் திட்டங்களாக செயல்படுத்த ஜவஹர்லால் நேரு முடிவெடுத்தார். அவரே இந்திய அரசின் திட்டக்குழுவின் முதல் தலைவராவார்.

**32. திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகளை விவரி**

**திட்டமிடலுக்கு ஆதரவானகருத்துக்கள்**

**1. நாட்டின் சந்தைகளின் இயக்கத்தை முடுக்கி விடுதலும் உறுதியாக்குதலும்:** பின் தங்கிய நாடுகளில் சந்தைசக்திகள் சரிவர இயங்காதததற்கு அறியாமையும், பிரபலமும் இல்லாததேஆகும். நாட்டில் பெரும்பாலான பகுதியில் பணமாற்ற பறிமாற்றம் நடைபெறுகிறது. பொருட்கள், உற்பத்திக்காரணிகள், பணம் மற்றும் மூலதன அங்காடிகள் அமைப்பு முறை ஆகியவை ஒழுங்குற அமைக்கப்படவில்லை. எனவே, திட்டமிட்ட பொருளாதாரமே அங்காடிப் பொருளாதாராத்திற்கு சிறந்த மாற்றாக கருதப்படுகிறது.

**2. வேலையின்மையை அகற்றுதல்:** மூலதன குறைவும், தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும் ஏற்படுவதால் அதிகரித்துவரும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வேலைவாய்ப்பை உருவாக்குவது அரசுகளுக்கு சவாலாக உள்ளது. பின்தங்கிய நாடுகளில் வேலையின்மை மற்றும் மறைமுக வேலையின்மையை அகற்றதிட்டமிடுதல் அவசியமாகும்.

3. சமமான முன்னேற்றம் ஏற்படுத்துதல்: பொருளாதாரத்தின் பல துறைசார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளபோதுமான பெரிய நிறுவனங்கள் இல்லாத சூழ்நிலையில் திட்டக்குழுவே சரிசம முன்னேற்றத்தை ஏற்படுத்த உதவும். பின்தங்கிய நாடுகளில் வேளாண்மை, தொழில், சமூகப்கட்டமைப்பு, உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வாணிகம் ஆகியத் துறைகளின் முன்னேற்றம் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் விரைவாக நடைபெறத் தேவைப்படுகிறது.

**33. செயல்பாட்டுத் திட்டமிடலுக்கும் அமைப்புமுறைத் திட்டமிடலுக்குமிடையேயான வேறுபாடுகளை எழுதுக**

**பணிகள் திட்டமிடல் மற்றும் கட்டமைப்புத் திட்டமிடல் (Functional Vs Structural Planning)**

**34. நிதி ஆயோக்கின் பணிகள் யாவை?**

நிதி ஆயோக்கின் பணிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

கூட்டுறவு மற்றும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சி

மாநிலங்கள் நாட்டின் கொள்ளை வடிவமைப்பதில் துடிப்புடன் பங்கெடுக்கத் தேவையானவற்றை செய்வது.

நாட்டின் நிகழ்வுகளின் மாநிலங்களைப் பங்கெடுக்க வைத்தல்

நாட்டின் முன்னேற்றத்திற்கான முன்னுரிமைகள் மற்றும் உத்திகளில் மாநிலங்களையும் இணைத்துக் கொள்ளுதல்

பரவலாக்கப்பட்டத் திட்டமிடல்

திட்டமிடல் நடைமுறையை கீழிருந்து மேல் என்ற முறையில் மாற்றும் கொண்டுவலுதல்.

தொலை நோக்கு மற்றும் காட்சித் திட்டமிடல்

நாட்டின் எதிர்காலத்தை கவனத்தில் தொலை நோக்கு கட்டமைப்பை உருவாக்குதல்.

நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்

அரசின் கொள்கைகள் வடிவமைப்பதிலும், திட்டங்களை செயல்படுத்துவதிலும் அரசுக்கு

வெளியில் உள்ள நிபுணர்கள் ஒன்றிணைந்து பங்குபெற வைத்தல்.

உகந்ததாக்குதல்

அரசின் பல படிநிலைகளில் பணியாற்றிபவர்களை குறிப்பாக பலதுறைகள் ஒன்றிணைந்து செயல்படுமிடங்களில் ஏற்படும் பிரச்சணைகளை களைய தொடர்பு கொள்ளுதல்,

ஒருங்கிணைத்தல் கைகோர்த்தல் மற்றும் கூட்டிணைத்தல் மூலம் உகந்த பணியை நிதி ஆயோக் செய்கிறது.

9. உள்நாட்டு ஆலோசனை வழங்குதல்

கொள்கைள் மற்றும் திட்டங்கள் வகுக்கு மாநில மற்றும் மைய அரசுகளுக்கு ஆலோசனைகள் வழங்குகிறது.

கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்

அரசு செயல்படுத்தும் திட்டங்களை நிதி ஆயோக் கண்காணித்து அதன் வளைகளை மதிப்பீடும் செய்கிறது.

பகுதி - ஈ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக

35. பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்தகாரணிகளை விவாதிக்கவும்

காரணிகள் *கீதை பட்டியலிடப்படுள்ளன.

1. இயற்கை வளங்கள்

ஒரு நாடு பெற்றுள்ள இயற்கை வளங்களின் அளவு அந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் காரணியாகும். முன்னேற்றத்துக்கு தேவைப்படும் அளவுக்கு ஒரு நாடு இயற்கை வளங்கள் பற்றாக்குறையாக உள்ள நாடு விரைவாக முன்னேற இயலாது. ஆனால், ஜப்பான் நாட்டின் வளங்கள் பற்றாக்குறையாக இருந்தாலும் முன்னேறிய நாடாக உள்ளது. ஏனென்றால் தேவையான வளங்களை இறக்குமதி செய்து கொள்ளுகிறது. இந்தியா அளவில் அளவில் வளங்களைப் பெற்றிருந்தாலும் முன்னேற்றம் குறைந்த நாடாக உள்ளது.

**2) மூலதன உருவாக்கம்**:

மூலதனம் பொருளாதாரத்தின் அனைத்துச் செயல்பாட்டிற்கும் அடிப்படையானதாகும். ஏற்கனவே உள்ள இருப்புடன் தற்போது கூடும் நிகர அளவு மூலதனமேமூலதன உருவாக்கம் என்பர். இதில் கண்ணுக்கு புலனாகக்கூடிய தொழிற்சாலைகள், இயந்திரங்களும், கண்ணுக்கு புலனாகாத உடல்நலம், கல்வி மற்றும் ஆராய்ச்சி போன்ற இரண்டு இனங்களுமே இதில் உள்ளடங்கும். தொழிலாளர்களின் உற்பத்தி திறனை உயர்த்தி வருமானத்தை அதிகரிக்க மூலதன ஆக்கம் உதவுகிறது. புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதால் இயற்கை வளங்களை நன்முறையில் பயன்படுத்தவும். தொழில்மயமாதலுக்கும், மற்றும் அங்காடி விரிவாக்கத்திற்கும் உதவுகிறது. இதனால் பொருளாதாரம் வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.

**3) சந்தையின்அளவு**

சந்தை அளவானது பெரிய அளவில் இருந்தால் கூடுதலான உற்பத்தி, அதிக வேலைவாய்ப்பு மற்றும் தேசிய தலா வருமான உயர்வு ஆகியவற்றைத் தூண்டும். இவ்வாறு வளர்ந்த நாடுகள் உலக வர்த்தக மையத்தின் வழியாக சந்தை அளவை வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவுகிறது.

**4) கட்டமைப்பு மாற்றம்**

கட்டமைப்பு மாற்றம் என்பது பொருளாதாரத்தில் தொழில் கட்டமைப்பில் எற்படும் மாற்றத்தைக் குறிக்கும். நாட்டின் பொருளாதாரத்தின் மூன்று துறைகளான பிரிக்கப்படுகின்றன. அதில் முதன்மைத் துறையானது வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, காடுகள் போன்றவற்றை உள்ளடக்கியும், இரண்டாம் துறையானது தொழிற்சாலைஉற்பத்தி, கட்டுமானப் பணிகள் போன்றவற்றை உள்ளடக்கியும் மற்றும் சார்புத் துறைகளான வாணிபம், வங்கி மற்றும் வர்த்தகம் போன்றவற்றையும் உள்ளடக்கியிருக்கும். எந்த ஒரு பொருளாதாரமும் முழுக்க வேளாண்மையை மட்டும் சார்ந்து இருந்தால் பின் தங்கிய நிலையிலேயே இருக்கும்..

**5) நிதியியல் முறை**

நிதியியல் முறை என்பது ஒரு நாட்டில் திறமையான மற்றும் சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்ட வங்கி முறையினைக் கொண்டதாகும். ஒழுங்குற அமைக்கப்பட்டட பண அங்காடியானது தேவையான மூலதனத்தை வழங்குகிறது.

**6) விற்பனைக்குரிய உபரி**

வேளாண் துறையில் குடும்பத்திற்கான நுகர்வுத் தேவையைவிட கூடுதலாக செய்யப்படும் உற்பத்தியை விற்பனைக்குரிய உபரி என்கிறோம். இந்தக் கூடுதல் விளைப் பொருட்களை விவசாயிகள் சந்தையில் விற்று

வருமானம் ஈட்டலாம். இது அவர்களுடைய வாங்கும் திறன் அதிகபடுத்தும், இதனால் நாட்டில் பொருள் உற்பத்தி அதிகரித்து வேலைவாய்ப்பும், நாட்டு வருமானமும் உயர்ந்து நாடு முன்னேற்றமடையும்.


**7) பன்னாட்டு வாணிகம்**

பன்னாட்டு வாணிகத்தில் சாதகமான சூழ்நிலைஇருந்தால் ஒரு நாடு போதுமான அளவு அந்நிய செலாவணியை கையிருப்பில் வைக்கமுடியும். அந்நிய செலாவணியை கையிருப்பு போதுமானதாக இருந்தால் அந்தநாட்டின் பணமாற்று வீதம் ஏற்ற இறக்கமின்றி நிலைத்திருக்கும்.

**8) பொருளாதார அமைப்புமுறை**

ஒரு நாடு தடையில்லா பொருளாதாரக் கொள்கையை கடைப்பிடித்தால் கட்டளைப் பொருளாதாரத்தை விட வேகமான வளர்ச்சி பெறும். இது சில நாடுகளுக்கு மட்டும் பொருந்தும்.

36. பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விவரி



மக்களாட்சி மற்றும் சர்வாதிகாரம் திட்டமிடல்

திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதலில் உள்ள அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக்கொள்ளும் திட்டமிடலே. அரசு தனியார் மற்றும் பொது மக்களை உள்ளடக்கிய மிகப்பரவலான ஆலோசனைகளை பெற்றுத் தயாரிக்கப்பட்டு, அவர்களாலேயே செயல்படுத்தப்படும் திட்டமிடல் முறையாகும். திட்டக்குழுவினால் தயாரிக்கப்பட்ட திட்ட வழிமுறைகளை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. இதனை அந்நாட்டின் பாரளுமன்றம் ஏற்பகோ அல்லது மறுக்கவோ அல்லது மாற்றியக்கவோ செய்யும்.

மையப்படுத்தப்பட்ட மற்றும் பரவலாக்கப்பட்ட திட்டமிடல்

மையப்படுத்தப்பட்ட திட்டமிடலில், அனைத்து நிலைகளிலும் திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மையத் திட்டக்குழுவின் க[illegible]

வ[illegible]ல் மற்றும் திட்டமிடல்

திட்டக்குழு வழிகாட்டுதல் வழங்கி, திட்டம் தயாரித்து மேலும் திட்டத்தை ஆ[illegible]யல்படுத்தின வ[illegible]கும்.

சு[illegible]ாய திட்டமிடல்

கலப்பினப் பொருளாதார நாடுகளுக்கு பொருத்தமான திட்டமிடல் முறையாக "மோனட் திட்டம்" என்ற பெயரில் பிரான்ஸ் நாடானது 1947 லிருந்து 1950 வரை செயல்படுத்தியது. திட்டக்குழு

இலக்குகளை அடையும் வழிமுறைகளை குறிப்புரைகளாக தயாரித்து, தனியார் நிறுவனங்களில் பிரதிநிதிகள் தொழிற்சங்கத் தலைவர்கள், நுகர்வோர் குழுக்கள் நிதி நிறுவனங்கள் மற்றும் பிற துறை நிபுணர்களிடம் கலந்து ஆலோசித்து செயல்படுத்தும் திட்டமிடலே சுட்டிக்காட்டு திட்டமிடல் ஆகும்.

குறுகிய நடுத்தர மற்றும் நீண்ட கால திட்டமிடல்

ஓராண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறுகியகாலத் திட்டங்களாகும். "கட்டுப்படுத்தும் திட்டம்" "ஆண்டுத் திட்டம் எனவும் அறியப்படுகிறது.

நிதித்திட்டமிடல் மற்றும் நாணய திட்டமிடல்

திட்டதை செயல்படுத்த தேவையான நிதியை பண ஒதுக்கீடு செய்யும் திட்டமிடலே நிதித்தட்டமிடலாகும்.

பணிகள் திட்டமிடல் மற்றும் கட்டமைப்பு திட்டமிடல்

ஒரு நாடு பெற்றுள்ள பொருளாதார மற்றும் சமூக அமைப்பு முறையை மாற்றாமல் பொருளாதார சீர்கேடுகளை நீக்குவதற்கு வழிகாட்டுதல் மட்டுமே செய்யும் திட்டமிடல் பணிகள் திட்டமிடலாகும்.

பொது மற்றும் பகுதித் திட்டமிடல்

நாட்டின் அனைத்து பொருளாதாரப் பிரச்சினைபளைத் தீர்பதற்கான திட்டமிடல் விரிவான திட்டமிடலாகும். ஒரு சில துறைகளுக்கு மட்டுமே இலக்கு நிர்ணயம் செய்து அதை அடைய தீட்டப்படும் திட்டம் பகுதித் திட்டமாகும்.

**37. திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும்**

**1. தன் விருப்பம் போல் செயல்பட இயலாமை**

தன் விருப்பம் போல் செயல்பட இயலாததால் பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது. திட்டமிடல் கட்டுப்பாடுகளையும் வழிமுறைகளையும் விதித்து நாட்டிற்கு முதுகெலும்பாக உள்ளது. தலையிடா பொருளாதாரத்தில் நுகர்வு, பணியை தேர்வு செய்தல், உற்பத்தி செய்தல், மற்றும் விலை நிர்ணயம் செய்தல் ஆகியவற்றில் தன் விருப்பம் போல் முடிவெடுக்க உள்ள அனுமதி உள்ளது. ஆனால் திட்டமிட்ட பொருளாதாத்தில் சிக்கலான முடிவுகளை மத்திய திட்டக்குழு எடுக்கிறது. இது நுகர்வோர், உற்பத்தியாளர் மற்றும் பணியாளர்களின் கட்டுப்படுத்துகிறது. ஹேயக் எழுதிய "அடிமைத்தனத்திற்கான பாதை" என்னும் நூலில் மையப்படுத்தப்பட்ட திட்டமிடலில் மக்களின் பொருளாதார விடுதலைக் கட்டுப்படுத்தி நாட்டைம ந்தநிலைக்கு இட்டுச் செல்லும், என கருத்து தெரிவிக்கிறார். அரசின் முடிவுகள் அனைத்தும் எப்பொழுதும் சரியாக இருப்பதில்லை. ஆனால் தனியார் உற்பத்தியாளர்களுக்கு சுதந்திரம் வழங்கும் போது, அதனை தவறாக பயன்படுத்தப்பட்டு, மக்களின் நலன் புறக்கணிக்கப்பட்டு , இலாபம் ஒன்றுக்கே மிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

**2. தன்முனைப்புக்குறைதல்**

மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலில் நடவடிக்கைகளில் ஊக்கப்படுத்துதல் மற்றும் புதுமைகளை புகுத்துதல் ஆகியவற்றுக்கு ஊக்கமிருக்காது. திட்டமிடுதலானது வழக்கமான செயல்முறைகளைப் பின்பற்றி வளர்ச்சியில் தேக்கத்தை உண்டு பண்ணும்.

இது வளர்ச்சியைக் கீழ் கண்டவழிகளில் தடுக்கிறது.

அ. தனியார் உரிமை இல்லாதது, இலாப நோக்கை குறைத்து தொழில் முனைவோர் திறம்படமுடிவு எடுப்பதையும், இடர் எதிர்நோக்குதலையும் குறைக்கிறது. அபரிதமான இலாபமே புதிய வழிமுறைகளைத் தேடவும், அதனைசெயல்படுத்தவும், அதில் வரும் இடர் தாங்கி புதுமையைபுகுத்தி இலாபத்தைபெற தூண்டும். ஆனால் திட்டமிடுதலில் இந்தத் தூண்டுதல் இல்லை

ஆ. திட்டமிடல் பொருளாதாரத்தில் அனைவருக்கும் அவர்களது முயற்சி, திறமை மற்றும் உற்பத்தி திறன் ஆகியவற்றைகணக்கில் கொள்ளாமல் சமமான பலன்கள் வழங்கப்படுவதால், எவரும் இடர்பாடுகளை ஏற்று புதிய நிறுவனத்தைதுவக்கமுன் வர மாட்டார்கள்

இ. உயர் பதவியில் உள்ள அலுவலர்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும் போக்கு

திட்டமிடலில் தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது. சமவுடைமை பொருளாதார நாடுகள் திட்டமிடலில் சந்திக்கும் பிரச்சனை இது. அரசுப் பணிகளைப் பயன்படுத்துவதில் கால விரயமாகிறது. இது பொருளீட்டும் நடவடிக்கையையே சீர்குலைக்கிறது.

**3. அதிகமான நிர்வாக செலவு**

திட்டமிடலின் நோக்கமென்னவோ தொழில்மயமாக்கல், சமூக நீதி, நாட்டு நிலைமையை சமப்படுத்துதல் போன்ற உயர்வானவை ஆனால் அதற்கு நாடு செலவிடும் தொகை அடையவுள்ள பலனை விட அதிகமாக இருக்கும். புள்ளி விவரங்களை சேகரித்து, தொகுத்து திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்தி நிர்வகிப்பதில் தேவைப்படும் பணியாளர் எண்ணிக்கை மிக அதிகம். லூயிஸ் இதைப்பற்றி குறிப்பிடும் பொழுது "திட்டமிடல் சிறப்பாக அமைய வேண்டுமானால் கூடுதலான திட்டமிடல் நிபுணர்கள் தேவை என்கிறார்". சரியான புள்ளிவிவரம் இல்லாமை, தவறாக கணிப்பது, திட்டமிடுதலைசரிவர செயல்படுத்தாது போன்றவை வளங்களை வீணடித்து உபரி அல்லது பற்றாக்குறை நிலைக்கு கொண்டு செல்லும்.

**4. முன் கணிப்பதில் உள்ள சிரமங்கள்**

அரசு தடையில்லாத நாட்டில், விலை இயக்க முறையில், விலை, தேவை மற்றும் அளிப்பு ஆகியவை தானாக இயங்கி ஒன்டிறயொன்றி சரி செய்து கொள்கிறது. உற்பத்தியார்கள் தங்களது தேவைகளையும் விலை மாற்றத்துக்கேற்றவாறு சரிசெய்து கொள்வார்கள். திட்டமிடல் நாடுகளில் இப்படி ஒரு வசதி இல்லை. நுகர்வு மற்றும் உற்பத்தி அளவுகளை துல்லியாக முன்கூட்டியே நிர்ணயிப்பது கடினம். உபரி அளிப்போ, உபரித் தேவையோ அங்காடிப் பொருளாதாரத்தில் ஏற்படலாம். அமெரிக்கா போண்ற முதலாளித்துவ நாடுகளில் இது போன்று ஏற்பட்டுள்ளது.

**அத்தியாயம் 12 புள்ளியியல்**

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. ‘ ஸ்டாட்டிஸ்டிக்ஸ்’ (Statistics) என்ற வார்த்தை---------------- ஆகும்.

அ) ஒருமை ஆ) பன்மை
இ) ஒருமைமற்றும் பன்மை
ஈ) மேற்சொன்னஎதுவுமல்ல

**இ) ஒருமை மற்றும் பன்மை**

2. புள்ளியியல்எண்விவரங்களை பற்றி படிக்கும் பயன்பாட்டுக்கணிதத்தின் ஒரு சிறப்புப்பகுதி என்று கூறியவர்யார்?

www.Padasalai.Net

அ) ஹோராஸ் செக்ரிஸ்ட் ஆ) ஆர். ஏ. ஃபிஷர் இ) யா-லன்-தூ ஈ) போடிங்கட்டன்

**ஈ) போடிங்கட்டன்**

3. இரண்டாம் நிலை விவரங்களுக்கான ஆதாரம் ------------------ .
அ) வெளியிடப்பட்ட விவரங்கள் ஆ) வெளியிடப்படாத விவரங்கள் இ) மேற்சொன்னஇரண்டில்ஒன்று ஈ) அ மற்றும் ஆ

**ஈ) அ மற்றும் ஆ**

4. கேள்வித்தாள் மூலம் புள்ளிவிவரம் திரட்டப்பட்டால்அது -----------.
அ) முதல்நிலைவிவரம் ஆ) இரண்டாம் நிலைவிவரம் இ) வெளியிடப்பெற்ற விவரம் ஈ) தொகுக்கப்பட்ட விவரம்

**அ) முதல்நிலைவிவரம்**

5. நேர்கோட்டு உறவினை கொண்டிருக்கும் இரு மாறிகளின் உறவினை அளவினை அளக்கும் முறைக்கு ----------- பெயர்.
அ) சரிவு `ஆ) அச்சுவெட்டு இ)உடன்தொடர்புக்கெழு ஈ) ஒட்டுறவுச் சமன்பாடு

**இ) உடன்தொடர்புக்கெழு**

6. X மற்றும் Y மாறிகள் இரண்டும் ஒரேதிசையில்மாறினால், உடன்தொடர்புக்கெழு எவ்வாறு இருக்கும்?
அ) நேர்மறையாக ஆ) எதிர்மறையாக இ) 0 `ஈ) 1

**அ) நேர்மறையாக**

7. ஒரு சிதறல்விளக்கப்படத்தில்ஒரு மாறி அதிகரித்துச் செல்லும்பொழுது மற்றொரு மாறி குறைந்து சென்றால்உடன்தொடர்புக்கெழுவின் அளவு எவ்வாறாக இருக்கும்?
அ) முழு நேர்மறையாக ஆ) முழு எதிர்மறையாக இ) எதிர்மறையாக ஈ) 0

**இ) எதிர்மறையாக**

8. உடன்தொடர்புக்கெழு γ-ன் அளவு எந்தஎல்லைக்குள் இருக்கும்
ஆ) 0 மற்றும் 1 ஆ) -1 மற்றும் 0 இ) -1 மற்றும் 1 ஈ) - 0.5 மற்றும் 0.5

**இ) -1 மற்றும் 1**

9. ஒட்டுறவு என்ற கருத்தினை முதலில்பயன்படுத்தியவர்
அ) நியூட்டன் ஆ) பியர்ஸன் இ) ஸ்பியர்மேன் ஈ) கால்டன்

**ஈ) கால்டன்**

10. ஒட்டுறவு பகுப்பாய்வுவின் நோக்கம்?
அ) ஒரு காரணியின் மதிப்பினைக்கொண்டு அடுத்து காரணியின் மதிப்பினை கண்டறிவது. ஆ) சிதறல் விளக்கப் படத்தில் உள்ள புள்ளிகளுக்கு பதிலாக கோட்டினை வரைவது இ) இரு மாறிகளும் எந்தஅளவுக்கு உறவு கொண்டுள்ளன என்பதை தெரிந்து கொள்வதற்கு. ஈ) சாரா மாறியின் எதிர்பார்க்கப்படும் மதிப்பினை தெரிந்து கொள்ள சார்பு மாறியின் மதிப்பினை அளித்தல்.

**அ) ஒரு காரணியின் மதிப்பினைக்கொண்டு அடுத்து காரணியின் மதிப்பினை கண்டறிவது**

11. சார்பு மாறியின் மதிப்பினை மதிப்பீடு செய்வதற்காக சாரா மாறிகளை பயன்படுத்தும் செயலுக்கு -------- பெயர்
அ)உடன் தொடர்புக்கெழு இ) சரிவு ஆ) ஒட்டுறவு ஈ) பிழைக்கருத்து

**இ) சரிவு**

12. Y = 2 - 0.2X எனில், Y அச்சு வெட்டு -------------- ஆகும்.
அ) - 2 ஆ) 2 இ) 0.2 X ஈ) மேற்சொன்னஅனைத்தும்

**ஆ) 2**

13. Y = β0+β1x, என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில்Y என்பது------------- .
அ)சாரா மாறி ஆ)சார்பு மாறி இ)தொடர்ச்சிமாறி ஈ) மேற்சொன்னஎதுவுமல்ல.

**ஆ)சார்பு மாறி**

14. Y = β0+β1x என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில்x என்பது ------------ .

www.Padasalai.Net

அ) சாரா மாறி ஆ) சார்பு மாறி இ)தொடர்ச்சிமாறி ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல.

**அ) சாரா மாறி**

15. பொருளாதார அளவையியல் என்பது எதன் இணைப்பு?

அ) பொருளியல் மற்றும் புள்ளியியல் ஆ) பொருளியல் மற்றும் கணிதம் இ) பொருளியல், கணிதம், மற்றும் புள்ளியியல்
ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

**இ) பொருளியல், கணிதம், மற்றும் புள்ளியியல்**

16. பொருளாதார அளவையியல் என்ற வார்த்தையை உருவாக்கியவர்?

அ) ஃபிரான்ஸி கால்டன் ஆ) ராக்னா; ஃபிரிஸ்க்இ)கார்ல்பியர்சன் ஈ) ஸ்பியர்மேன்

**ஆ) ராக்னா; ஃபிரிஸ்க்**

17.பொருளாதார அளவையியலுக்கான மூலப்பொருள்---------------- .

அ) புள்ளிவிவரம் ஆ) பொருட்கள் இ) புள்ளியியல்ஈ) கணிதம்

**அ) புள்ளி விவரம்**

18. U என்பது ------------.

அ) விலகல்ஆ) திட்டப்பிழை இ)பிழைக்கருத்து ஈ) மேற்சொன்னஎதுவும் அல்ல

**இ)பிழைக் கருத்து**

19. U என்பது எதைக்குறிக்கிறது?

அ) விடுபட்ட காரணிகள் ஆ) திட்டப்பிழை இ) பிழை ஈ) தொடர்ச்சியற்ற காரணி

**அ) விடுபட்ட காரணிகள்**

20. பொருளாதார அளவையியல்என்பது எத்தனை பாடங்களின் இணைப்பு?
அ) 3 பாடங்கள் ஆ) நான்கு பாடங்கள் இ) 2 பாடங்கள் ஈ) 5 பாடங்கள

**அ) 3 பாடங்கள்**

**பகுதி – ஆ**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்**

21. புள்ளியியல்என்றால்என்ன?

"புள்ளியியல்" என்ற பதம் தனிமை மற்றும் பன்மை என இரண்டு வகைகளில் பயன்படுத்தப்படுகின்றது. புள்ளியியல் முறை என்ற பொருளில் அறியப்படுகிறது. அதாவது, புள்ளி விவர சேகரிப்பு, விவரங்களை முறைப்படுத்தி வழங்குதல் என்ற பல பகுதிகளை உள்ளடக்கிய தனிப் பாடமாமக பார்க்கப்படுகிறது. இரண்டாவதாக இது பன்மையில் புள்ளிவிவரங்களை குறிப்பிடுகிறது.

22. புள்ளியியலின் வகைகள் யாவை?

புள்ளியியல் இரு வகைகள் உள்ளன. அவைகள் விவரிப்பு புள்ளியியல் மற்றும் உய்த்துணர்வு புள்ளியியல்

23. உய்த்துணர்புள்ளியியல்என்றால்என்ன?

1. கூறுவின் விவரங்களை பகுத்தாய்வு செய்து அதன் பண்பினை அறிந்து கொள்வதன் மூலம் முழுத் தொகுப்பின் விவரங்களுக்கான பண்புகளை அறிந்து கொள்வது ஆகும்.
2. மேலும் உய்த்துணர்வதற்குப் பயன்படும் புள்ளியிலின் ஒரு பகுதி உய்த்துணர்வு புள்ளியல் எனப்படுகிறது.

24. புள்ளிவிவர வகைகள் யாவை?

புள்ளிவிலரங்கள் இருவகைப்படும். அவையாவன: அளவு விவரங்கள் மற்றும் பண்பு விவரங்கள்

25. உடன் தொடர்பு என்பதனை வரையறு.

உடன்தொடர்புப் பகுப்பாய்வு என்பது இரண்டு அல்லது அதற்கு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு மாறுகின்றன என்பதை பற்றி கணக்கிடுவது ஆகும். சர் ஃபிரான்சிஸ் கால்டன் என்பவர் இப்பகுப்பாய்வினைக் கண்டறிந்தார்.

27. பொருளாதார அளவையியல் என்றால் என்ன?

பொருளாதார அளவியியல் என்பது பொருளியல், புள்ளியில் மற்றும் கணித ஆகிய மூன்றின் ஒருங்கிணைப்பாகும்.

பொருளாதார அளவியியல் என்பது பொருளாதார அளவீட்டு முறை. பொருளாதார

www.Padasalai.Net

அளவையியல் பொருளாதாரத் தன்மைகளை அளவீடு செய்ய பயன்படுகிறது.

பொருளியல் + கணிதம் = கணிதப் பொருளியியல்

கணிதப் பொருளியியல் + புள்ளிவிவரங்கள் மற்றும் புள்ளியியல் முறைகள் = பொருளாதார அளவையியல் (பொருளாதாரம் + புள்ளியியல் + கணிதம்) + எண்வடிவ புள்ளி விவரங்கள் = பொருளாதார அளவையியல்.

26. ஒட்டுறவு என்பதனை வரையறு.

ஒட்டுறவு என்பது இரு மாறிகளுக்கிடையே உள்ள உறவை விளக்குகின்றது. ந சார்பு மாறி என்றும் ஙீ தனித்தமாறி என்றும் எடுத்துக் கொண்டால் இரு மாறிகளுக்கு இடையே உள்ள நேர்கோட்டுத் தொடர்பு ஙீ இன் மீது ந சார்ந்த ஒட்டுறவுக் கோட்டுச் சமன்பாடு எனப்படுகின்றது. இதைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட, தெரிந்தஙீ மதிப்புக்கு து மதிப்பு என்ன என்பதைக் கணிக்கலாம். இந்தக் கோடே ஒட்டுறவு மாற்றத்தை அல்லது பின்னோக்கிச் செல்லல் என்ற கருத்தை விளக்கும் கால்டலான் ஒட்டுறவுக் கோடு எனஅழைக்கப்பட்டதாகும்.

27. பொருளாதார அளவையியல் என்றால் என்ன?

கணிதம், புள்ளியியல் முறைகள் மற்றும் பொருளியல் ஆகிய மூன்று பாடங்களையும் இணைத்து பொருளாதார அளவையியல் என்ற பாடத்தை ரோக்னர் ஃபிரிஸ்க் உருவாக்கினார்.

**பகுதி – இ**

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்**

**28. புள்ளியியலின் பணிகள் யாவை?**

**புள்ளியியலின்பணிகள்**

- புள்ளியியல் விவரங்களை துல்லியமான வடிவில் வழங்குகிறது.
- இது பரந்த விவரங்களை சுருக்கித் தருகிறது.
- இது ஒப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.
- இது எடுகோள்களை உருவாக்கவும், சோதனைக்கு உட்படுத்தவும் உதவுகிறது.
- இது மதிப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.
- கொள்கைகளை உருவாக்குவதில் இது உதவுகிறது.

**29. பின்வரும் விவரங்களுக்கு திட்டவிலக்கத்தினை காண். 14, 22, 9, 15, 20, 17, 12, 11 (வி டை: σ 4.18).**

| X | X- | (X- ) |
|---|---|---|
| 14 | 1 | 1 |
| 22 | 7 | 49 |
| 9 | 6 | 36 |
| 15 | 0 | 0 |
| 20 | 5 | 25 |
| 17 | 2 | 4 |
| 12 | -3 | 9 |
| 11 | -4 | 16 |
| Ex = 120 | | E(x- )= 140 |

= Ex/n n = 8

= 120/8

= 15

(x-)2/n

140/8

17.5

திட்டவிலக்கம் = 4.18

**30. பல்வகையான உடன் தொடர்புகளை கூறி விளக்குக.**

**I. மாறிகளுக்கு இடையேயான உறவின்திசைஅடிப்படையில்**

மாறிகள் ஒன்றுக் கொன்று நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ உறவு கொண்டிருக்கும். அதன் அடிப்படையில் உடன் தொடர்பினை நேர்மறை உடன் தொடர்பு மற்றும் எதிர்மறை உடன்தொடர்பு என பாகுபடுத்தப்படுகின்றது.

**உடன் தொடர்பின் வகைகள்;**

பகுப்பாய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும் மாறிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வகைப்பாடு மாறிகளுக்கு இடையேயான உறவின் திசையின் அடிப்டையில்வகைப்பாடு, மாறிகள் மாறும் விகிதத்தின் அடிப்படையில்வகைப்பாடு

நேர்மறைஉடன் தொடர்பு

நேர்கோட்டு உடன் தொடர்பு

எதிர்மறைஉடன் தொடர்பு

வளைகோட்டு உடன் தொடர்பு

எளியஉடன் தொடர்பு

பன்முக உடன் தொடர்பு

பகுதி உடன் தொடர்பு

**நேர்மறை உடன்தொடர்பு**

இரு மாறிகளின் மதிப்புகளும் ஒரே திசையில் நகர்ந்து சென்றால் அதனை நேர்முறை உடன்தொடர்பு என்கிறோம்.

**உதாரணம்:** வருமானம் அதிகரிக்கும் பொழுது செலவும் அதிகரிக்கிறது. ஆகவே வருமானம் மற்றும் செலவு மாறிகள் நேர்மறைஉடன் தொடர்பைக் கொண்டிருக்கிறது என்கிறோம்.
உதாரணம் $Y = a + bx$

**எதிர்மறை உடன்தொடர்பு**

இரு மாறிகளின் மதிப்புகள் எதிர் எதிர்திசையில் நகர்ந்து சென்றால் அதனை எதிர்மறை உடன்தொடர்பு என்கிறோம்.

**உதாரணம்:** விலை அதிகரிக்கும் பொழுது பொருளுக்கான தேவை குறைந்து செல்கிறது.
உதாரணம் $Y= a - bx$

**II. பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மாறிகளின்எண்ணிக்கையின்அடிப்படையில்:**

உடன்தொடர்பு பகுப்பாய்வுக்கு எவ்வளவு எண்ணிக்கையிலான மாறிகளை எடுத்துக் கொள்கிறோம், அவற்றை எவ்வாறு பகுப்பாய்வுக்கு பயன்படுத்துகிறோம் என்ற வகையில்உடன் தொடர்பினை வகைப்படுத்தலாம். அவ்வகைகள்:

அ) எளியஉடன்தொடர்பு,
ஆ) பன்முக உடன்தொடர்பு
இ) பகுதி உடன்தொடர்பு

**எளிய உடன்தொடர்பு**

உடன்தொடர்பு பகுப்பாய்வில் ஒரு நேரத்தில் இரு மாறிகளை மட்டும் எடுத்துக் கொண்டால் அதனை எளிய உடன்தொடர்பு என்கிறோம்.

உதாரணம் $Y= a + bx$

**பன்முகஉடன்தொடர்பு**

உடன்தொடர்பு பகுப்பாய்வில் இரண்டிற்கும் மேற்பட்ட காரணிகளை ஒருசேர எடுத்துக்கொண்டால் அது பன்முக உடன்தொடர்பு என்கிறோம். உதாரணத்திற்கு, தேவைக்கும், தேவையினை தீர்மானிக்கும் மாறிகளான குறிப்பிட்ட பொருளின் விலை, நுகர்வோரின் வருமானம், தொடர்புடைய பொருளின் விலை ஆகியவற்றை எடுத்து பகுப்பாய்வு செய்தால்அது பன்முக உடன்தொடர்பு ஆகும்.

உதாரணம்: $Qd= f (P, Pc, Ps, t, y)$

இதில் Qd பொருளின் தேவை

f – சார்பு

P – பொருளின் விலை

Pc – போட்டிப்பொருளின் விலை

Ps – பதிலீட்டுப்பொருளின் விலை

t – நுகர்வோரின் விருப்பு வெறுப்புக்கள்

y – வருமானம்

**பகுதி உடன்தொடர்பு**

உடன்தொடர்பு பகுப்பாய்வில் இரண்டிற்கும் மேற்பட்ட காரணிகளை எடுத்துக் கொண்டாலும், அவற்றினில் இரண்டு காரணிகளை மட்டும் (மற்றவை மாறாமல் இருக்கும் என வைத்துக் கொண்டு) பகுத்தாய்ந்தால், அதனை பகுதி உடன்தொடர்பு என்கிறோம்.

**III. பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மாறிகளின்மாறும் விகித அடிப்படையில்**

நாம் பகுப்பாய்வுக்கு எடுத்துக் கொண்ட மாறிகள் மாறும் விகிதம் ஒரே அளவில் இருக்கின்றதா, அல்லது மாறிக் கொண்டே இருக்கின்றதா என்பதன் அடிப்படையில் உடன்தொடர்பினை நேர்கோட்டு உடன்தொடர்பு, மற்றும் வளைகோட்டு உடன்தொடர்பு எனவகைப்படுத்துகிறோம்.

**நேர்கோட்டு உடன்தொடர்பு**

இரு மாறிகளின் மாறும் விகிதங்கள் ஒரே அளவாக இருந்தால் அதனை நேர்கோட்டு உடன்தொடர்பு என்கிறோம். வரைபடைத்தில் அம்மாறிகளின் மதிப்புகளை குறித்து பார்த்தோமானால் அவை ஒரு நேர்கோட்டினை தரும். உதாரணம் $Y= a + bx$

www.Padasalai.Net

**வளைகோட்டு உடன்தொடர்பு**

இரு மாறிகளின் மாறும் விகிதங்கள் ஒரேஅளவாக இல்லாமல் குறைந்து வந்தாலோ, அல்லது அதிகரித்து வந்தாலோ அதனை வளைகோட்டு உடன்தொடர்பு என்கிறோம். மாறிகளின் மதிப்புக்களை வரைபடத்தில் குறித்து பார்த்தால் அவைகள் ஒரு வளைகோட்டினைத் தரும்.
உதாரணம் Y= a + bx2

**31. ஒட்டுறவுப்பகுப்பாய்வின் பயன்களை கூறுக.**

ஒட்டுறவு என்பது இரு மாறிகளுக்கிடையே உள்ள உறவை விளக்குகின்றது. ங சார்பு மாறி என்றும் ஙீ தனித்த மாறி என்றும் எடுத்துக்கொண்டால் இரு மாறிகளுக்கு இடையே உள்ள நேர்கோட்டுத் தொடர்பு ஙீ இன் மீது ங சார்ந்த ஒட்டுறவுக் கோட்டுச் சமன்பாடு எனப்படுகின்றது. இதைப்பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட, தெரிந்த ஙீ மதிப்புக்கு து மதிப்பு என்ன என்பதைக் கணிக்கலாம். இந்தக் கோடே ஒட்டுறவு மாற்றத்தை அல்லது பின்னோக்கிச் செல்லல் என்ற கருத்தை விளக்கும் கால்டலான் ஒட்டுறவுக்கோடு என அழைக்கப்பட்டதாகும்

32. பொருளாதார அளவையியலின் நோக்கங்களை கூறுக.


1. பொருளாதார நடவடிக்கைகளை முன்கணித்தல் மூலமாக அறிந்து விளக்குவற்கு உதவுகின்றது.

2. இவைகள் மாறிகளுக்கு இடையேயுள்ள கடந்தகாலத்திலுள்ள பழைய மற்றும் நிறுவப்பட்ட உறவுகளை மீண்டும் நிரூபிப்பதற்கும் உதவிகின்றது.

3. புதிய கோட்பாடுகளையும் புதிய உறவுகளையும் நிறுவுவதற்கு உதவுகின்றது.

4. எடுகோள்களை சோதனை செய்யவும், முழுத்தொகுப்பின் பண்புகளை மதிப்பீடு செய்யவும் உதவுகின்றது.

*




**33. பொருளாதார மாதிரியிலிருந்து பொருளாதார அளவையியல் மாதிரியினை வேறுபடுத்துக.**

| Á. Gs | ö£õ¸Íõuõµ ©õv› | ö£õ¸Íõuõµ AÍøÁ ©õv› |
|---|---|---|
| 1. | ö£õ¸Íõuõµ ©õv› J¸ EÒÑº ¤›v{zxÁ AÔÄ BS®. | ö£õ¸Íõuõµ AÍøÁ ©õv›¯õÚx \õº¢x. \õº¦øh¯ ©õÔ°ß ÂÍUP©õÚ ©õÔPÒ J¸ SÔ¨¤mh ö£õ¸Íõuõµ £S¨£õ´Ä ö\´QÓx. |
| 2. | ö£õ¸Íõuõµ ö\¯À•øÓPÎß J¸ vmhÁmh©õÚ ©ØÖ® xÀ¼¯©õÚ E¸ÁõUS® AÎUP Cx EuÄQÓx. | Cx J¸ SÔ¨¤mh P¸zxU÷PõÒPøÍ ¤µv{vzxÁ¨£kzxQÓx. Cx SÔ¨¤mh ÷uvº¼¸¢x ©v¨¥miØSÒ ¦ÒÎ ÂÁµ J¨¦uø» AÝ©vUQÓx. |
| | Cx ö£õ¸Íõuõµ ÂvPÒ E¸ÁõUQ¯ ¤ÓS u¯õ›UP¨£kQÓx. | ö£õ¸Íõuõµ AÍøÁ ©õv› ö£õ¸Íõuõµ •øÓPÎÀ öuõhUP ¦ÒÎ¯õP EÒÍx. |
| 4. | Cx _UP©õÚ ö£õ¸Íõuõµ uzxÁzøu Ai¨£øh¯õP öPõshx. | Cx P¸x÷PõÒPøÍ ¤µv{vzxÁ¨ £kzxQÓx. |

**34. இந்தியாவில் புள்ளியில் ஆதார அமைப்புகளின் முக்கியத்துவத்தைவிவாதி.**

புள்ளிவிவரங்கள் சமுதாய மற்றும் பொருளாதார மேம்பாட்டினை வெளிப்படுத்துகிறது.

3. இது அரசின் கொள்கைகளை மதிப்பீடு செய்ய பயன்படுகிறது.

4. அரசின் வெறுப்புணர்வை அதிகரிக்கிறது.

5. புள்ளியியல் துறை திட்ட அமலாக்கத் துறையுடன் இணைக்கப்பட்டது.

6. குடிமக்களின் வாழ்க்கைத் தொடர்பான பல அளவு மற்றும் பண்பு விவரங்களை வெளியிடுகிறது.

7. புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சம் தனி அமைப்பாக 1999 முதல் செயல்பட்டு வருகின்றது.

8. புள்ளியியல் பிரிவானது தேசிய புள்ளியியல் அலுவலகம் (Nச்ட்டிணிணச்டு

www.Padasalai.Net

குச்டிண்டிஞிச்டு Oனூனூடிஞினு,N(குO) என அழைக்கப்படுகிறது.

9. மேலும் சில பிரிவுகளாக மததிய புள்ளியியல் கழகம் (இனுணணூச்டு குச்டிண்டிஞிச்டு Oணூஞ்ச்ணடிண்ச்டிணிண இகுO) கணினி மையம் மற்றும் தேசிய மாதிரிக் கூறெடுப்பு விசாரணை அலுவலகம் உள்ளன.

மத்திய புள்ளியியல் அலுவலகம்

1. நாடு முழுவதிலும் நடைபெறும் புள்ளிவிவர சேகரிப்புகளை ஒருங்கிணைப்பது மற்றும் அவற்றினை ஒருங்கிணைப்பது மற்றும் அவற்றினை பரிசோதிப்பது, தர மேம்பாட்டினை உறுதிப்படுத்துவதும் இதன் முக்கிய பணிகள் ஆகும்.

2. மேலும், மற்ற சமூதாய புள்ளி விவரங்களை சேகரிப்பது, பயிற்சி, பன்னாட்டு ஒத்துழைப்பை பேணுதல், தொழில் பிரிவுகளை நிர்ணயித்தல் ஆகிய பணிகளையும் இது செய்கிறது.

தேசிய மாதிரி கூறெடுத்தல் அருவலகம் புள்ளியியல் பணியைப் பொறுத்தவரை இது மிகப் பெரிய அமைப்பாகும்.

திட்ட அமலாக்கத் துறையின் பங்கு.

1. இந்திய அரசின் தீர்மானத்தின்படி தேசிய புள்ளியியல் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

2. பிறகு, தன்னாட்சி பெற்ற மற்றும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**பகுதி – ஈ**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்கஅளவில் பதில் தருக**

**35. புள்ளியியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்குக.**

**புள்ளியியலின் இயல்புகள்**

புள்ளியியலில் அறிவியல், கலையியல் ஆகிய இரண்டின் தன்மைகளும் கலந்திருக்கின்றன. முறைப்படுத்தப்பட்ட அறிவின் தொகுப்பினை அறிவியலாக காண்கின்றோம். அதே வகையில்புள்ளியியல் என்பது ஒரு முறைப்படுத்தப்பட்ட தொகுப்பாகும். இது விவரங்களை பகுத்தாய்ந்து, அதன் அடிப்படையில் கோட்பாடுகளை உருவாக்கவும், உருவாக்கப்பட்ட கோட்பாடுகளை சோதனை செய்து துல்லியமான முடிவுகளை எடுக்கவும் உதவுகிறது. எனவே, புள்ளியியல் ஒரு அறிவியலாக பார்க்கப்படுகிறது. புள்ளி விவரங்களை கடந்து தனது பட்டறிவின் அடிப்படையிலும் எடுக்கப்பட்ட முடிவுகள் பார்க்கப்படுகின்றன. மேலும், விவரங்களை திரட்டுவது, அட்டவணையிடுவது, முடிவுகளை எடுப்பது, தீர்மானங்களை செய்வது என பல புள்ளி விவர நடவடிக்கைகளில் கலையியலின் உட்கூறுகள் கலந்துள்ளன. இந்த அடிப்படையில் பார்த்தால் இது ஒரு கலையிலாகவும் விளங்குகிறது.

**பொருளியலில் புள்ளியியல்**

பொருளியலில் பல பிரச்சனைகள் உள்ளன. உதாரணத்திற்கு, உற்பத்தி, வருமானம், வேலைவாய்ப்பு, பகிர்வு, நுகர்ச்சி, சேமிப்பு, செலவு மற்றும் இவை தொடர்பான எண்ணற்ற ஆய்வுக்குரிய வினாக்கள் தோன்றும். வினாக்களுக்கு விடை தேடும் ஆய்வுகளுக்கு புள்ளி விவரங்கள் இன்றியமையாதவை. எடுகோள்களை உருவாக்குவது, விவரங்களை திரட்டுவது, வகைப்படுத்துவது, பகுப்பாய்வு செய்வது, முடிவுகளை எடுப்பது, கொள்கைகளை வகுப்பது என புள்ளியியல் பொருளியலில் இரண்டறக் கலந்துள்ளது.

**தொழிலில் புள்ளியியல்**

தொழிற்சாலைகளில் புள்ளியலின் பயன்கள் குறிப்பிடத்தகுந்ததாக உள்ளது. மிக முக்கியமாக தரக்கட்டுப்பாட்டு நுட்பம் (Quality Control) இங்கு பயன்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட தரத்தில்பொருட்கள் இருக்கின்றனவா என்பதை சோதிக்க இந்நுட்பம் பயன்படுகிறது.

**புள்ளியிலும் வணிகமும்**

உயிர்வாழ இரத்தம் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவுக்கு வணிகத்திற்கு புள்ளியியல் முக்கியமானதாகும். நடப்பு நிலைகளை புரிந்து கொள்ளவும், எதிர்கால போக்கினை உணர்ந்து கொள்ளவும் சந்தை ஆய்வுகள் மிக முக்கிய பங்காற்றுகின்றன. உற்பத்தியும், சந்தையிடலும் ஒரு சேர நடப்பதில்லை. உற்பத்தியை முன் கூட்டியே

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

திட்டமிட வேண்டியுள்ளது. அவ்வாறு திட்டமிடுவதற்கு புள்ளியியலின் தேவைஅவசியமாகும்.

**புள்ளியியலும் கல்வியியலும்**

மாறி வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதிய கல்விக்கான தேவையை கண்டறிவதில் புள்ளியியல் மிகப் பெரிய பங்கினை வகிக்கின்றது. அரசு மற்றும் தனியாரால் நடத்தப்படும் கல்வி நிலையங்களில் ஆய்வு மற்றும் மேம்பாட்டுத் துறைகள் இருக்கின்றன. இத்துறைக்கு புள்ளி விவரங்கள் பெரிதும் உதவுகின்றன. பழைய அறிவினை சோதித்துப்பார்ப்பதும், புதிய அறிவினைப் பெறுவதும் புள்ளி விவரங்களின் மூலமே சாத்தியமாகும்.

**புள்ளியியலும் திட்டமிடலும்**

திட்டமிடலில் புள்ளியியல் தவிர்க்க இயலாத ஒன்றாகும். இன்றைய நவீன உலகு திட்டமிடல் உலகு எனப்படுகிறது. அனைத்து அரசுத் துறைகளும் சிறப்பாக இயங்கும் பொருட்டு திட்டமிடலின் அடிப்படையிலேயேசெயல்படுகிறது. முக்கிய கொள்கை முடிவுகளை எடுப்பதிலும், அதை செயல்படுத்துவதிலும் புள்ளிவிவரங்கள் துணைசெய்கின்றன. மேற்கூறியவைகளை செய்ய பல்வேறு புதிய புள்ளியியல் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவின் மைய, மாநில மற்றும் உள்ளூர் அரசுகள் திட்டமிடலின் அடிப்படையிலேயே செயல்படுகிறது.

**புள்ளியியலும் மருத்துவமும்**

மருத்துவத்தில் புள்ளியியல் பெருமளவுக்குப் பயன்படுகிறது. உடல் சோதனைகள் அனைத்தும் புள்ளிவிவரங்களாக தொகுக்கப்படுகிறது. அவ்வாறு தொகுக்கப்படும் விவரங்களின் அடிப்படையிலேயே மருத்துவர்சிகிச்சை அளிக்கின்றார். தொடர் மருத்துவ கண்காணிப்பிலும், சிகிச்சைகளிலும் புள்ளி விவரங்களின் மற்றும் பகுப்பாய்வு முறைகளின் பங்கும் இன்றியமையாதது. மருத்துவத் துறையில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் அனைத்திலும் புள்ளியியலின் பல்வேறு பகுதிகள் பயன்படுகிறது.

**புள்ளியியலும் நவீன பயன்பாடுகளும்**

கனிணி மற்றும் தகவல்தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களைத் தன்னகத்தே ஏற்றுக்கொண்ட புள்ளியியல், நிறுவனங்களின் முடிவெடுத்தலில் புதிய மாதிரிகளை உருவாக்கி துல்லியமான முடிவுகளை எடுக்க உதவுகிறது. இப்பணியினை செய்வதற்கு பல புதிய மென் பொருட்களை உருவாக்கியுள்ளனர்.

**36. பின்வரும் விவரங்களுக்கு கார்ல்பியர்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினை கண்டறிக**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேவை X: | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| விற்பனை Y: | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

**விடை: r=0.9955)**

| தேவை x | விற்பனை Y | dx=x-A | dy=y-B | dx2 | dy2 | dxdy |
|---|---|---|---|---|---|---|
| 23 | 18 | -8 | -8 | 64 | 64 | 64 |
| 27 | 22 | -4 | -4 | 16 | 16 | 16 |
| 28 | 23 | -3 | -3 | 9 | 9 | 9 |
| 29 | 24 | -2 | -2 | 4 | 4 | 4 |
| 30 | 25 | -1 | -1 | 1 | 1 | 1 |
| 31 | 26 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 33 | 28 | 2 | 2 | 4 | 4 | 4 |
| 35 | 29 | 4 | 3 | 16 | 9 | 12 |
| 36 | 30 | 5 | 4 | 25 | 16 | 20 |
| 39 | 32 | 8 | 6 | 64 | 36 | 48 |
| Ex=311 | Ey= 257 | Edx= 1 | Edy = -3 | Edx2 = 203 | Edy2 = 159 | Edxdy = 178 |

**37. பின்வரும் விவரங்களிலிருந்து Y மீது X மற்றும் X மீது Y ஆகியவற்றினை கண்டறிக:**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Y:** | **45** | **48** | **50** | **55** | **65** | **70** | **75** | **72** | **80** | **85** |
| **X:** | **25** | **30** | **35** | **30** | **40** | **50** | **45** | **55** | **60** | **65** |

**(விடை: Y = 0.787X + 7.26, மற்றும் X =0.87Y + 26.65)**

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

| X | Y | dX= X-A A=45 | dy=y-B B=65 | dx2 | dy2 | dxdy |
|---|---|---|---|---|---|---|
| 25 | 45 | -20 | -20 | 400 | 400 | 400 |
| 30 | 48 | -15 | -17 | 225 | 289 | 225 |
| 35 | 50 | -10 | -15 | 100 | 225 | 150 |
| 30 | 55 | -15 | -10 | 225 | 100 | 150 |
| 40 | 65 | -5 | 0 | 25 | 0 | 0 |
| 50 | 70 | 5 | 5 | 25 | 25 | 25 |
| 45 | 75 | 0 | 10 | 0 | 100 | 0 |
| 55 | 72 | 10 | 7 | 100 | 49 | 70 |
| 60 | 80 | 15 | 15 | 225 | 225 | 225 |
| 65 | 85 | 20 | 20 | 400 | 400 | 400 |
| Ex= 435 | Ey= 645 | Edx= -15 | Edy= -5 | Edx2= 1725 | Edy2= 1813 | Edxdy =1675 |

bxy = NEdxdy-(Edx)(EdY)

__________________

NEdy2-(Edy)2

= (10(1675)-(-15)(-5)

____________________

(10)(1813)-(-5)2

= 16750-75

________

18130-25

= 16675/18105

= 0.92

X=Ex/n

= 435/10

= 43.5

Y=Ey/n

= 645/10

= 64.5

byx= NEdxdy-(Edx)Edy)

_______________

NEdx2-(Edx)2

= 10(1675)-(-15)(-5)

___________________

(10)(1725)-(-15)2

= 16675-75

_________

17250-225

= 16675/17025

= 0.98

X on Y

X-X= bxy(y-y)

x- 43.5 = 0.92 (y-64.5)

x- 43.5 = 0.92 y – 59.34

x = 0.92 y – 59.34 + 43.5

x = 0.92 y – 15.84

Y on X

Y-Y = byx (x-x)

y-64.5=0.98(x-43.5)

y-64.5=0.98(x-43.5)

y=0.98x-42.65+64.5

Y=0.98x+21.87

| |
|---|
| 12th chapter புத்தகத்தில் உள்ள அனைத்து எடுத்துக்காட்டு கணக்குகளையும் பார்க்கவும் |

**1 MARKS**

**அத்தியாயம் 1 பேரியல் பொருளாதாரம்**

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை

அ. சொத்து மற்றும் நலமும் ஆ. உற்பத்தி மற்றும் நுகர்வு இ.



www.Padasalai.Net

தேவையும் மற்றும் அளிப்பும் ஈ. நுண்ணியல் மற்றும் பேரியல்

**ஈ. நுண்ணியல் மற்றும் பேரியல்**

2. " " (Macro) என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார்?

அ. ஆடம்ஸ்மித் ஆ. ஜே.எம். கீன்ஸ் இ. ராக்னர் பிரிக்ஸ் ஈ. காரல் மார்க்ஸ்

**இ. ராக்னர் பிரிக்ஸ்**

3. " நவீனபேரியல் பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?

அ. ஆடம்ஸ்மித் ஆ. ஜே.எம். கீன்ஸ் இ. ராக்னர் பிரிக்ஸ் ஈ. காரல் மார்க்ஸ்

**ஆ. ஜே.எம். கீன்ஸ்**

4. பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது?

அ. விலை கோட்பாடு ஆ. வருவாய் கோட்பாடு இ. அங்காடி கோட்பாடு ஈ. நுண்ணியல் கோட்பாடு

**ஆ. வருவாய் கோட்பாடு**

5. பேரியல் பொருளாதாரம் என்பது பற்றிய படிப்பு.

அ. தனிநபர்கள் ஆ. நிறுவனங்கள் இ. நாடு ஈ. மொத்தங்கள்

**ஈ. மொத்தங்கள்**

6. ஜே. எம். கீன்ஸின் பங்களிப்பை குறிப்பிடுக.

அ. நாடுகளின்செல்வம் ஆ. பொது கோட்பாடு இ. மூலதனம் ஈ. பொது நிதி

**ஆ. பொது கோட்பாடு**

7. பொதுவான விலையின்த தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து ___________ஆகும்.

அ. மொத்தவிலைக் குறியீடு ஆ. வாணிபச் சுழல் இ. பணவீக்கம் ஈ. தேசிய வருவாய்

**இ. பணவீக்கம்**

8. பொருளாதாரக் கொள்கைகளின் அவசியத்தைக் குறிப்பிடுக

அ. அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பது ஆ. தடைகளை முறியடிப்பது இ. வளர்ச்சியை அடைவது ஈ. மேலேகூறப்பட்ட அனைத்தும்

**ஈ. மேலேகூறப்பட்ட அனைத்தும்**

9. ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக.

அ. உற்பத்தி மற்றும் பகிர்வும் ஆ. உற்பத்தி மற்றும் பரிமாற்றம் இ. உற்பத்தி மற்றும் நுகர்வு ஈ. உற்பத்தி மற்றும் சந்தையிடுகை. m

**இ. உற்பத்தி மற்றும் நுகர்வு**

10. ஒரு பொருளாதார அமைப்பில் காணப்படுவது

அ. உற்பத்தி துறைஆ. நுகர்வு துறை இ. அரசு துறை ஈ. மேலேகூறப்பட்ட அனைத்தும்

**ஈ. மேலேகூறப்பட்ட அனைத்தும்**

11. எந்தப பொருளாதார அமைப்பில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?

அ. முதலாளித்துவ அமைப்பு ஆ. சமத்துவ அமைப்பு இ. உலகமய அமைப்பு ஈ. கலப்புப் பொருளாதார அமைப்பு

**அ. முதலாளித்துவ அமைப்பு**

12. கிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கிற பொருளாதார அமைப்பு _________ ஆகும்.

அ. முதலாளித்துவ அமைப்பு ஆ. உலகமயத்துவ அமைப்பு இ. கலப்புப் பொருளாதாரம் அமைப்பு ஈ. சமத்துவ பொருளாதார அமைப்பு

**ஈ. சமத்துவ பொருளாதார அமைப்பு**

13. முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுவர் யார்?

அ. ஆடம்ஸ்மித் ஆ. காரல் மார்க்ஸ் இ. தக்கேரி ஈ. ஜே.எம்.கீன்ஸ்

**அ. ஆடம்ஸ்மித்**

14. முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு _________ ஆகும்.

அ. ரஷ்யா ஆ. அமெரிக்கா இ. இந்தியா ஈ. சீனா

**ஆ. அமெரிக்கா**

www.Padasalai.Net

15. சமத்துவத்தின் தந்தையை கண்டுபிடி.

அ. ஜே.எம்.கீன்ஸ் ஆ. காரல் மார்க்ஸ் இ. ஆடம்ஸ்மித் ஈ. சாமுவேல்சன்

**ஆ. காரல் மார்க்ஸ்**

16. தனியார் மற்றும் அரசு சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பை குறிப்பிடும் பதம் ___________ஆகும்.

அ. முதலாளித்துவ பொருளாதாரம் ஆ. சமத்துவ பொருளாதாரம் இ. உலகமயத்துவ பொருளாதாரம் ஈ. கலப்புப் பொருளாதாரம்

**ஈ. கலப்புப் பொருளாதாரம்**

17. ஒரு குறிப்பிட்டகாலத்தில் (Point of time) குவிந்த சரக்குகளின் அளவை குறிப்பிடும் பதம் ________ஆகும்.

அ. உற்பத்தி ஆ. இருப்பு இ. மாறிலி ஈ. ஓட்டம்

**ஆ. இருப்பு**

18. கீழ்வருவனவற்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி.

அ. பணஅளிப்பு ஆ. சொத்துக்கள் இ. வருவாய் ஈ. வெளிநாட்டுச் செலாவணி இருப்பு

**இ. வருவாய்**

19. இருதுறை மாதிரியில் உள்ள இருதுறைகளை குறிப்பிடுக

அ. குடும்பங்களும் நிறுவனங்களும் ஆ. தனியார் மற்றும் பொதுத்துறை இ. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத்துறைகள் ஈ. நிறுவனங்களும் அரசும்

**அ. குடும்பங்களும் நிறுவனங்களும்**

20. திறந்துவிடப்பட்ட பொருளதாரத்தின் வட்ட ஓட்ட மாதிரி என்பது ________ஆகும்

அ. இரு துறைமாதிரி ஆ. முத்துறைமாதிரி இ. நான்கு துறைமாதிரி ஈ. மேல் சொல்லப்பட்டஅனைத்தும்

**இ. நான்கு துறை மாதிரி**

## அத்தியாயம் 2 தேசிய வருவாய்

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. உற்பத்திக் காரணியின் செலவின் அடிப்படையிலான NNP

அ. தேசிய வருவாய் ஆ. உள்நாட்டு வருமானம் இ. தலை வீத வருமானம் ஈ. சம்பளம்

**அ. தேசிய வருவாய்**

2. முதன்மை துறைஎன்பது ___________

அ. தொழில் ஆ. வியாபாரம் இ.விவசாயம் ஈ.கட்டடம் கட்டுதல்

**இ.விவசாயம்**

3. எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?

அ. இரண்டு ஆ. மூன்று இ. ஐந்து ஈ. நான்கு

**ஆ. மூன்று**

4. எவற்றைக் கூட்டி வருமான முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?

அ. வருவாய் ஆ. வரி இ. செலவு ஈ. வருமானம்

**ஈ. வருமானம்**

5. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மிகப்பெரிய எண்ணாக இருக்கும்?

அ. செலவிடக்கூடிய வருமானம் ஆ. தனிநபர் வருமானம் இ. NNP ஈ. GNP

**ஈ. GNP**

6. __________ துறையில் செலவு முறையில் தேசிய வருவாய் மதிப்பிடப்படுகிறது.

அ. கட்டடத்துறை ஆ. விவசாயத் துறைஇ. பணித் துறை ஈ. வங்கித் துறை

**அ. கட்டடத்துறை**

7. மூன்றாம் துறை___________எனவும் அழைக்கப்படுகிறது.

அ. பணிகள் ஆ. வருமானம் இ. தொழில் ஈ.உற்பத்தி

**அ. பணிகள்**

www.Padasalai.Net

8. ஒரு நாட்டின்__________ செயலை தேசிய வருவாய் குறிப்பிடுகிறது.

அ. தொழில் ஆ. விவசாயம் இ. பொருளாதாரம் ஈ. நுகர்வு

**இ. பொருளாதாரம்**

9. ________ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்.

அ. உற்பத்தி ஆ. நாட்டின் மக்கள் தொகை இ. செலவு ஈ. GNP

**ஆ. நாட்டின்மக்கள் தொகை**

10. GNP = ……..+ வெளிநாட்டிலிருந்து வரும் நிகர காரணி வருமானம்.

அ. NNP ஆ. NDP இ.GDP ஈ. தனிநபர் வருமானம்

**இ.GDP**

11. NNP என்பது __________

அ. Net National Product ஆ. National Net Product இ. National Net Provident ஈ. Net National Provident

**அ. Net National Product**

12. மொத்த மதிப்பிலிருந்து __________ ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்?

அ. வருமானம் ஆ. தேய்மானம் இ. செலவு ஈ. முடிவடைந்த பொருட்களின்மதிப்பு

**ஆ. தேய்மானம்**

13. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது __________

அ. ஏப்ரல் 1 முதல் மார்ச்31 ஆ. மார்ச்1 முதல் ஏப்ரல் 30 இ. மார்ச்1 முதல் மார்ச்16 ஈ. ஜனவரி 1 முதல் டிசம்பர் 31

**அ. ஏப்ரல் 1 முதல் மார்ச்31**

14. NNPயிலிருந்து வெளிநாட்டு காரணிகளின் நிகர வருமானம் கழிக்கப்பட்டால் கிடைக்கும் நிகர மதிப்பு __________

அ. மொத்த தேசிய உற்பத்தி ஆ. செலவிடக்கூடிய வருமானம் இ. நிகர தேசிய உற்பத்தி ஈ. தனிநபர் வருமானம்

**இ. நிகர தேசிய உற்பத்தி**

15. உற்பத்திப் புள்ளியில் NNPயின் மதிப்பு __________ எனஅழைக்கப்படுகிறது

அ. காரணி செலவில் NNP ஆ. சந்தை விலையில் NNP இ. காரணி செலவில் GNP ஈ. தலைவீத வருமானம்

**அ. காரணி செலவில் NNP**

16. ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது __________

அ. தனிநபர் வருமானம் ஆ. தலைவீத வருமானம் இ. பணவீக்க வீதம் ஈ. செலவிடக்கூடிய வருமானம்

**ஆ. தலைவீத வருமானம்**

17. பணவீக்கத்திற்கு சரிபடுத்தப்பட்ட தேசிய வருவாயின்மதிப்பு __________ என அழைக்கப்படுகிறது

அ. பணவீக்க வீதம் ஆ. செலவிடக்கூடிய வருமானம் இ. GNP ஈ. உண்மைத் தேசிய வருவாய்

**ஈ. உண்மைத் தேசிய வருவாய்**

18. கீழ்வருவனவற்றுள் எது ஓட்ட (Flow) கருத்துரு?

அ. சட்டைகளின் எண்ணிக்கை ஆ. மொத்த சொத்து இ. மாத வருமானம் ஈ. பண அளிப்பு

**இ. மாத வருமானம்**

19. PQLI என்பது __________ன் குறியீடு ஆகும்.

அ. பொருளாதார வளர்ச்சி ஆ. பொருளாதார நலன் இ. பொருளாதார முன்னேற்றம் ஈ. பொருளாதார மேம்பாடு

**ஆ. பொருளாதார நலன்**

20. மிக அதிக அளவிலான தேசிய வருவாய் __________ லிருந்து வருகிறது.

அ. தனியார் துறை ஆ. உள்துறை இ. பொதுத்துறை ஈ. எதுவும் இல்லை

**அ. தனியார் துறை**

## அத்தியாயம் 3 வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்

www.Padasalai.Net

**பிரிவு – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. நடப்புக்கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது_________எனப்படும்

அ. முழுவேலைவாய்ப்பு ஆ. குறைந்தளவு வேலைவாய்ப்பு இ. வேலைவாய்ப்பின்மை ஈ. வேலைக்கான வாய்ப்பு

**அ. முழுவேலைவாய்ப்பு**

2. அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு_______

அ. இயங்காசமுதாயம் ஆ. சமதர்ம சமுதாயம் இ. இயங்கும்சமுதாயம் ஈ. கலப்புப் பொருளாதாரம்

**இ. இயங்கும்சமுதாயம்**

3. மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி

அ. பூஜ்யம் ஆ. ஒன்று இ. இரண்டு ஈ. நேர்மறை

**அ. பூஜ்யம்**

4. தொன்மைப் பொருளியல் கோட்பாட்டின் பிரதான இயல்பு _______

அ. குறைந்த அளவு வேலைவாய்ப்பு ஆ. பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும் இ. தேவை அதன் அளிப்பை உருவாக்குகிறது ஈ. நிறைகுறைப் போட்டி

**ஆ. பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும்**

5. J.B. சே ஒரு _____________

அ. புதிய – தொன்மை பொருளியலாளர் ஆ. தொன்மை பொருளியலாளர் இ. நவீன பொருளியலாளர் ஈ. புதிய பொருளியலாளர்

**ஆ. தொன்மை பொருளியலாளர்**

6. கீன்ஸின் கருத்துப்படி, முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் எப்படிப்பட்ட வேலையின்மை காணப்படுகிறது?

அ. முழு வேலைவாய்ப்பு ஆ. தன் விருப்ப வேலையின்மை இ. தன் விருப்பமற்ற வேலையின்மை ஈ. குறைவு வேலைவாய்ப்பு

**ஈ. குறைவு வேலைவாய்ப்பு**

7. வேலை வாய்ப்பு பற்றி தொன்மை போட்பாட்டின்மையக்கருத்து என்பது ______

அ. குறைந்து செல் விளைவு விதி ஆ. தேவைவிதி இ. அங்காடி விதி ஈ. நுகர்வு விதி

**இ. அங்காடி விதி**

8. கீன்ஸின் கூற்றுப்படி வேலையின்மை என்பது _____

அ. விளைவு அளிப்பு பற்றாக்குறை ஆ. விளைவு தேவை பற்றாக்குறை இ. இரண்டும் பற்றாக்குறை ஈ. எவையும்இல்லை

**ஆ. விளைவு தேவை பற்றாக்குறை**

9. சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே சம நிலையை கொண்டு வருவது __________ நெகிழ்வு ஆகும்.

அ. தேவையின் ஆ. அளிப்பின் இ. மூலதனத்தின் ஈ. வட்டியின்

**ஈ. வட்டியின்**

10. நவீன பொருளாதார கோட்பாட்டின் வளர்ச்சியில் __________ கோட்பாடு ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

அ. கீன்ஸ் ஆ. சே (Say) இ. தொன்மையது ஈ. வேலைவாய்ப்பு

**அ. கீன்ஸ்**

11. வேலை வாய்ப்பு மற்றும் வருவாய் பற்றிய கீன்ஸின் கோட்பாட்டின்அடிப்படைக் கருத்துரு __________ ஆகும்.

அ. தொகுத் தேவைஆ. தொகு அளிப்பு இ. விளைவுத் தேவை ஈ. இறுதி நிலை நுகர்வு விருப்பு

**இ. விளைவுத் தேவை**

12. தொகுத் தேவையின் கூறு __________ ஆகும்

அ. தனி நபர் தேவை ஆ. அரசுச் செலவு இ. ஏற்றுமதி மட்டும் ஈ. இறக்குமதி மட்டும்

**ஆ. அரசுச் செலவு**

www.Padasalai.Net

13. மொத்த அளிப்பு சமம்___________

அ. C + I + G ஆ. C + S + G + (X – M ) இ. C + S + T +(X-M ) ஈ. C + S + T + Rf

**ஈ. C + S + T + Rf**

14. தலையிடாக் கொள்கைக்குப் பதிலாக கீன்ஸின் கோட்பாடு _______யை எடுத்துரைக்கிறது.

அ. அரசுத் தலையீடின்மை ஆ. உச்ச அளவுத் தலையீடு இ. சில சூழல்களில் அரசின் தலையீடு ஈ. தனியார் துறை தலையீடு

**இ. சில சூழல்களில் அரசின் தலையீடு**

15. கீன்ஸின் வேலை வாய்ப்பு மற்றும் வருவாய் கோட்பாட்டில், __________ பொருளாதார மந்த நிலைக்குக்காரணமாக உள்ளது.

அ. குறைவான உற்பத்தி ஆ. அதிகத் தேவை இ. நெகிழ்வற்றஅளிப்பு ஈ. உற்பத்தித்திறன் ஒப்பிடும் போது மிகக் குறைந்தளவு மொத்தத்தேவை

**ஈ. உற்பத்தித்திறன் ஒப்பிடும் போது மிகக் குறைந்தளவு மொத்தத்தேவை**

16. தொன்மைக் கோட்பாடு _________ ஐ ஆதரிக்கிறது.

அ. சமநிலை வரவு செலவு ஆ. சமமற்றவரவு செலவு இ. உபரி வரவு செலவு ஈ. பற்றாக்குறை வரவு செலவு

**அ. சமநிலை வரவு செலவு**

17. __________ சமநிலையை கீன்ஸிடைய கோட்பாடு வலியுறுத்தியது.

அ. மிகக் குறுகிய காலம் ஆ. குறுகிய காலம் இ. மிக நீண்ட காலம் ஈ. நீண்ட காலம்

**ஆ. குறுகிய காலம்**

18. தொன்மைக் கோட்பாட்டின்படி, வட்டி வீதம்___________க்கான வெகுமதி

அ. முதலீடு ஆ. தேவைஇ. மூலதனம் ஈ. சேமிப்பு

**ஈ. சேமிப்பு**

19. கீன்ஸின் கோட்பாட்டில், பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது __________ ஆகும்.

அ. வட்டி வீதம் ஆ. விளைவுத் தேவை இ. தொகுத் தேவை ஈ. மொகு அளிப்பு

**அ. வட்டி வீதம்**

20. ஒரு பொருளாதாரத்தில் __________ இயக்கத்தை சே (Say) யின்விதி வலியுறுத்தியது.

அ. தூண்டப்பட்ட விலைக் கருவி ஆ. தானியங்கும்விலைக் கருவி இ. தூண்டப்பட்ட தேவை ஈ. தூண்டப்பட்ட முதலீடு

**ஆ. தானியங்கும்விலைக் கருவி**

## அத்தியாயம் 4 நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள்

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. சராசாி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது

அ) C/Y ஆ) C Y இ) Y/C ஈ) C+Y

**அ) C/Y**

2. இறுதி நிலைநுகர்வு நாட்டம் கூடினால்

அ) நுகர்வுச் சார்புக்கோடு செங்குத்தை நோக்கிச் செல்லும்

ஆ) நுகர்வுச் சார்பு மேல் நோக்கி இடம் பெயரும்

இ) நுகர்வுச் சார்பு கீழ் நோக்கி இடம் பெயரும்

ஈ) சேமிப்புச் சார்பை மேலே தள்ளும்

**அ) நுகர்வுச் சார்புக்கோடு செங்குத்தை நோக்கிச் செல்லும்**

3. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8 ஆக இருந்து, செலவிடக் கூடிய வருவாய் 1000 ஆக இருந்தால், நுகர்வு எவ்வளவு?

அ) 0.8 ஆ) 800 இ) 810 ஈ) 0.81

**இ) 810**

www.Padasalai.Net

4. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8Y ஆகஇருந்து, செலவிடக் கூடிய வருவாய் 100 ஆக இருந்தால், இறுதிநிலை நுகர்வு நாட்டம் எவ்வளவு?

அ) 0.8 ஆ) □800 இ) □810 ஈ) □0 .81
அ) 0.8
**அ) 0.8**

5. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10 + 0. 8Y ஆ கஇருந்து, செலவிடக்கூடிய வருவாய் 100 ஆக இருந்தால், சராசரி நுகர்வு நாட்டம் எவ்வளவு?

அ) □0.8 ஆ) □800 இ) □810 ஈ) 0.9

**ஈ) 0.9**

6. தேசிய வருவாய் உயரும் போது

அ) APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC யின் மதிப்பை நெருங்கிவிடும்.

ஆ) APC உயர்ந்து APC யின் மதிப்பைவிட்டு விலகிச் செல்லும்.

இ) APC மாறாமல் இருக்கும்.

ஈ) APC முடிவிலியை (INFINITY) நெருங்கிச் செல்லும்

**அ) APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC யின் மதிப்பை நெருங்கிவிடும்.**

7. ஒரு குறிப்பிட்ட வருவாய் அளவில், நுகர்வு அதிகரித்தால்

அ) மொத்த தேவை உயரும் ஆ) ஏற்றுமதி உயரும் இ) வரியின் மூலம் வரும் வருவாய் குறையும் ஈ) இறக்குமதி செலவு குறையும்

**அ) மொத்த தேவை உயரும்**

8. குறைவான வட்டி வீதம்

அ) நுகர்வைக் குறைக்கும் ஆ) கடனுக்கான செலவை உயர்த்தும் இ) சேமிப்பை ஊக்குவிக்கும் ஈ) நுகர்வையும் செலவையும் அதிகரிக்கும்

**ஆ) கடனுக்கான செலவை உயர்த்தும்**

9. இறுதி நிலைநுகர்வு விருப்பு =

அ) மொத்த செலவு/மொத்த நுகர்வு ஆ) மொத்த நுகர்வு/ மொத்த வருவாய் இ) நுகர்வு மாற்றம்/ வருவாய் மாற்றம் ஈ) மேற்காண் ஏதுமில்லை

**இ) நுகர்வு மாற்றம்/ வருவாய் மாற்றம்**

10. வருவாய்க்கும் மொத்த நுகர்வுச் செலவுக்கும் உள்ள தொடர்பு

அ) நுகர்வுச் சார்பு ஆ) சேமிப்பு சார்பு இ) முதலீட்டுச் சார்பு ஈ) மொத்த தேவைச் சார்பு

**அ) நுகர்வுச் சார்பு**

11. MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது

அ) 1 ஆ) 2 இ) 0.1 ஈ)1.1

**அ) 1**

12. வருவாய் உயர்ந்தால், நுகர்வு

அ) குறையும் ஆ) மாறாது இ) ஏறி இறங்கும் ஈ) உயரும்

**ஈ) உயரும்**

13. முதலீடு தன்னிச்சையானது என அனுமானிக்கப்பட்டால், AD யின் சாய்வை நிர்ணயிப்பது.

அ) இறுதி நிலை முதலீட்டு நாட்டம் ஆ) செலவிடக்கூடிய வருவாய் இ) இறுதி நிலை நுகர்வு நாட்டம் ஈ) சராசரி நுகர்வு நாட்டம்

**இ) இறுதி நிலை நுகர்வு நாட்டம்**

14. ________இடம் பெயர்ந்த பின்னர்________எவ்வளவு மாறுகிறது என்பதை பெருக்கி கூறுகிறது.

அ) வருவாய், நுகர்வு ஆ) வெளியீடு, முதலீடு இ) முதலீடு, சேமிப்பு ஈ) மொத்த தேவை, வெளியீடு
**ஈ) மொத்த தேவை, வெளியீடு**

15. பெருக்கியின் மதிப்பு =

அ) 1/(1-MPC) ஆ) 1/MPS இ) 1/MPC ஈ) அ மற்றும் ஆ

**ஈ) அ மற்றும் ஆ**

16. MPC = 0.5 எனில், பெருக்கியின் மதிப்பு

அ) 2 ஆ) 1/2 இ) 0.2 ஈ) 20

**அ) 2**

17. ஒரு திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தில் (Open Economy) இறக்குமதி, பெருக்கியின் மதிப்பை

அ) குறைக்கிறது ஆ) உயர்த்துகிறது இ) மாற்றாது ஈ) மாற்றும்

**அ) குறைக்கிறது**

18. கீன்ஸின் கருத்துப்படி, முதலீடு MEC ஐயும் ________சார்ந்தது.

அ) தேவையையும் ஆ) அளிப்பையும் இ) வருவாயையும் ஈ) வட்டி வீதத்தையும்

**ஈ) வட்டி வீதத்தையும்**

19. மிகைப் பெருக்கி (Super Multiplier) என்றகருத்தைமுதன்முதலில் பயன்படுத்தியவர்.

அ) J. R. ஹிக்ஸ் ஆ) R.G.D. ஆலன் இ) கான் ஈ) கீன்ஸ்

**அ) J. R. ஹிக்ஸ்**

20. MEC என்ற கருத்துருவைஅறிமுகப்படுத்தியவர்யார்?

அ) ஆடம் ஸ்மித் ஆ) J.M. கீன்ஸ் இ) ரிகார்டோஈ) மால்தஸ்

**ஆ) J.M. கீன்ஸ்**

## அத்தியாயம் 5 பணவியல் பொருளியல்

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. ஆர்பிஐ -ன் தலைமையகம் அமைந்துள்ளஇடம்

அ) டில்லி ஆ) சென்னை இ) மும்பை ஈ) பெங்களுரு

**இ) மும்பை**

2. பணம் என்பது

அ) உள்ளடக்க மதிப்பு இருந்தால் ஏற்றுக் கொள்ளளப்படுவது

ஆ) நிலையான வாங்கும் சக்தியை கொண்டது

இ) உள்ளவற்றில் அதிக நீர்மைத் தன்மை கொண்ட சொத்து ஆகும்.

ஈ) வளங்களைபங்கிட்டுக் கொள்ளதேவைப்படுகிறது.

**இ) உள்ளவற்றில் அதிக நீர்மைத் தன்மை கொண்ட சொத்து ஆகும்.**

3. காகிதப்பண முறையை மேலாண்மை செய்வது

அ) மைய பணவியல் அமைப்பு ஆ) மாநில அரசு இ) மைய அரசு ஈ) வங்கிகள்

**அ) மைய பணவியல் அமைப்பு**

4. M1 மற்றும் M2 ஆகிய இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்

அ) அஞ்சலக அனைத்து வைப்புகள் ஆ) அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள் இ) வங்கியின் கால வைப்புகள் ஈ) காகிதப்பணம்

**இ) வங்கியின் கால வைப்புகள்**

5. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு

அ) 1908 ஆ) 1910 இ) 1911 ஈ) 1914

**இ) 1911**

6. MV என்பது

அ) பணத் தேவை ஆ) சட்டபூர்வ பண அளிப்பு இ) வங்கிப் பண அளிப்பு ஈ) மொத்த பண அளிப்பு

**ஆ) சட்டபூர்வ பண அளிப்பு**

7. பண வீக்கம் என்பது

அ) விலைகள் அதிகரிப்பு ஆ) விலைகள் குறைதல் இ) பணமதிப்பு அதிகரிப்பு ஈ) விலைகள் மாறாதிருத்தல்

**அ) விலைகள் அதிகரிப்பு**

8. ______________ பணவீக்கம் பண மதிப்பில் தீவிர மதிப்பு குறைவினை ஏற்படுத்துகிறது.

அ) தவழும் ஆ) நடக்கும் இ) ஓடும் ஈ) உயர்

**ஈ) உயர்**

9. கூலி மற்றும் மூலப் பொருட்கள் செலவு கூடுவதால் பொருட்களின் பொது விலை மட்டம் அதிகரிப்பது __________ பணவீக்கம் ஆகும்

அ) செலவு உந்து ஆ) தேவை இழுப்பு இ) ஓடும் ஈ) தாவும்

**அ) செலவு உந்து**

10. பணவீக்கத்தின் பொழுது பயனடைபவர்கள் யார்?

www.Padasalai.Net

அ) கடன் பெற்றோர்கள் ஆ) கடன் வழங்கியோர்இ) கூலி மற்றும் சம்பளம் பெறுவோர்ஈ) அரசு

**அ) கடன் பெற்றோர்கள்**

11. ______________ என்பது பணவீக்க விகிதம் குறைந்து செல்வது ஆகும்.

அ) எதிர்பணவீக்கம் ஆ) பணவாட்டம் இ) தேக்கவீக்கம் ஈ) மந்தம்

**அ) எதிர்பணவீக்கம்**

12. தேக்கவீக்கத்தில் பணவீக்க விகிதத்துடன் இணைந்திருப்பது

அ) தேக்கம் ஆ) வேலைவாய்ப்பு இ) உற்பத்தி ஈ) விலை

**அ) தேக்கம்**

13. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை_____________ அழைக்கின்றோம்.

அ) பூரிப்பு ஆ) பின்னிறக்கம் இ) மீட்சி ஈ) வணிகச்சுழற்ச்சி

**ஈ) வணிகச்சுழற்ச்சி**

14. மந்தகாலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்

அ) உயர்ந்த பட்சமாக ஆ) மிக மோசமாக இ) மிக குறைந்த பட்சமாக ஈ) மிக நல்ல நிலையில்

**இ) மிக குறைந்த பட்சமாக**

15. " பரிவர்த்தனைகளில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு இடையீட்டுக் கருவியாகவும், அளவீடு மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினை செய்யும் ஒரு பொருள் பணம்" என்ற இலக்கணத்தை வழங்கியவர்;

அ) கிரௌதர் ஆ) பிகு இ) வாக்கர் ஈ)பிரான்சிஸ்டி பேக்கான்

**அ) கிரௌதர்**

16. பற்று அட்டை என்பது ___________ உதாரணம் ஆகும்.

அ) கட்டளைப் பண ஆ) காகிதப் பண இ) நெகழி பண ஈ) கடன் பண

**இ) நெகழி பண**

17. ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பணத்தின் இந்த பணியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது

அ) மதிப்பளவு ஆ) மதிப்பின் நிலைக்கலன் இ) பரிவர்த்தனைகருவி ஈ) வருங்கால செலுத்துதல்களுக்கான அடிப்படை

**இ) பரிவர்த்தனைகருவி**

18. MV = PT என்ற சமன்பாட்டில், V என்பது

அ) வாணிபத்தின் அளவு ஆ) பணத்தின் சுழற்ச்சி வேகம் இ) ரொக்கப் பணத்தின் அளவு ஈ) வங்கி மற்றும் கடன் பணஅளவு

**ஆ) பணத்தின் சுழற்ச்சி வேகம்**

19. விலைவாசி மெதுவாக உயரும் பொழுது அது அழைக்கப்படுவது

அ) தாவும் பணவீக்கம் ஆ) மிதமான பணவீக்கம் இ) உயர் பணவீக்கம் ஈ) பணவாட்டம்

**ஆ) மிதமான பணவீக்கம்**

20. _____________ பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்தவகையிலும் பாதிக்காது.

அ) நடக்கும் ஆ) ஓடும் இ) தவழும் ஈ) தாவும்

**இ) தவழும்**

## அத்தியாயம் 6 வங்கியியல்

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. ஒரு வங்கி என்பது

அ) நிதி நிறுவனம் ஆ) கூட்டு பங்கு நிறுவம் இ) தொழில் ஈ) சேவை நிறுவனம்

**அ) நிதி நிறுவனம்**

2. ஒரு வணிக வங்கி செய்யும் சேவை

www.Padasalai.Net

அ) வைப்புகளை ஏற்றுக் கொள்வது ஆ) கடன் வழங்குவது இ) அ மற்றும் ஆ. ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

**இ) அ மற்றும் ஆ.**

3. வணிக வங்கிகளின் பணிகளின் இரு பெரும் பிரிவு

அ) முதன்மைப் பணிகள் ஆ) இரண்டாம் நிலைபணிகள் இ) மற்ற பணிகள் ஈ) மேற்சொன்ன அனைத்தும்

**ஈ) மேற்சொன்ன அனைத்தும்**

4. வங்கிக்கடன் என்பது எதைக் குறிக்கிறது?

அ) கடன் பணம் ஆ) முன்பணம் இ) கடன் பணம் மற்றும் முன்பணம் ஈ) கடன் பெறுதல்

**இ) கடன் பணம் மற்றும் முன்பணம்**

5. கடன் உருவாக்கம் என்பதன் பொருள்

அ) கடன் மற்றும் முன்பண பெருக்கம் ஆ) வருவாய் இ) செலவு ஈ) சேமிப்பு

**அ) கடன் மற்றும் முன்பண பெருக்கம்**

6. வங்கியல்லா நிதிநிறுவனங்கள் ------- -------- வைத்திருப்பதில்லை.

அ) வங்கி உரிமம் ஆ) அரசு அங்கீகாரம் இ) பணச்சந்தை அங்கீகாரம் ஈ) நிதி அமைச்சக அனுமதி

**அ) வங்கி உரிமம்**

7. மைய வங்கி நாட்டின் ------------- அதிகார அமைப்பு.

அ) பணவியல் ஆ) நிதியியல் இ) கூலி ஈ) தேசிய வருவாய்

**அ) பணவியல்**

8. வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது

அ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஆ) நபார்டு இ) ICICI ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

**ஈ) இந்திய ரிசர்வ்வங்கி**

9. கடைசி நேரத்தில் உதவும் உற்ற நண்பன் என்ற பணியினைச் செய்வது

அ) மைய வங்கி ஆ) வணிக வங்கிகள் இ) நிலவளவங்கிகள் ஈ) கூட்டுறவு வங்கிகள்

**அ) மைய வங்கி**

10. வங்கி விகிதம் என்பது

அ) முதல் நிலை பத்திரங்களை மறு தள்ளுபடி செய்வது

ஆ) வட்டி விகிதம் இ) அந்நிய செலாவணி ஈ) வளர்ச்சி விகிதம்

**அ) முதல் நிலை பத்திரங்களை மறு தள்ளுபடி செய்வது**

11. ரெப்போ விகிதம் என்பதன் பொருள்

அ) வணிக வங்கிகள் ரிசர்வ்வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்

ஆ) ரிசர்வ்வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்

இ) அந்நிய செலாவணி விகிதம்

ஈ) நாட்டின் வளா;ச்சி விகிதம்

**ஆ) ரிசர்வ்வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்**

12. நெறிமுறை தூண்டல் என்பது

அ) உத்தமநிலைப் படுத்தல் ஆ) உச்சநிலைப்படுத்தல் இ) தூண்டுதல் நடவடிக்கை

ஈ) குறைவு நிலைப்படுத்துதல்

**இ) தூண்டுதல் நடவடிக்கை**

13. விவசாய மறுநிதி மேம்பாட்டுக்கழகம் துவங்கப்பட்டது

அ) ஜூன் 3, 1963 ஆ) ஜூலை3. 1963 இ) ஜூன் 1, 1963 ஈ) ஜூலை1, 1963.

**ஈ) ஜூலை1, 1963**

14. நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?

அ) ஜூலை1962 ஆ) ஜூலை1972 இ) ஜூலை1982 ஈ) ஜூலை1992

**இ) ஜூலை1982**

15. ஏற்றுமதி-இறக்குமதி வங்கி துவங்கப்பட்டது?

www.Padasalai.Net

அ) ஜூன் 1982 ஆ) ஏப்ரல் 1982 இ) மே1982 ஈ) மாh;ச் 1982

**ஈ) மார்ச் 1982**

16. மாநில நிதிக்கழகம் எந்த சட்டத்தின் கீழ் துவங்கப்பட்டது?

அ) இந்திய அரசு ஆ) தமிழக அரசு இ) யூனியன் பிரதேசம் ஈ) உள்துறை அரசு.

**அ) இந்திய அரசு**

17. பணவியல் கொள்கையைவடிமைப்பது

அ) கூட்டுறவு வங்கிகள் ஆ) வணிக வங்கிகள் இ) மைய வங்கி ஈ) வெளிநாட்டு வங்கி

**இ) மைய வங்கி**

18. நிகழ்நிலைவங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ) இ-வங்கி ஆ) இணைய வங்கி இ) ஆர்.டி.ஜி.எஸ் ஈ) நெப்ட்.

**ஆ) இணைய வங்கி**

19. ஏ.டி.எம்.(ATM) என்பதன் விரிவாக்கம் என்ன?

அ) தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்

ஆ) சரி செய்து பணம் வழங்கும் இயந்திரம்

இ) தானாக பணம் வழங்கும் முறை

ஈ) எந்த நேரமும் பணம் (Any Time Money)

**அ) தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்**

20. 2016 ல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்பு பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது?

அ) 500 மற்றும் 1000 ஆ) 1000 மற்றும் 2000 இ) 200 மற்றும் 500 ஈ) மேற்சொன்னவை அனைத்தும்

**அ) 500 மற்றும் 1000**

**அத்தியாயம் 7 பன்னாட்டுப் பொருளியல்**

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது ______

அ. வெளிவாணிகம் ஆ. உள்வாணிகம் இ. மண்டலங்களுக்கிடையானவாணிகம் ஈ. உள்நாட்டு வாணிகம்

**அ. வெளிவாணிகம்**

2.கீழ்கண்டவற்றுள் வாணிகத்தை தீர்மானிக்கும் காரணி எது?

அ. ஒரு பொருளின் மேம்பாட்டு கால கட்டம் ஆ. உற்பத்தி காரணிகளின் ஒப்பீட்டு விலை இ. அரசாங்கம் ஈ. மேற்கண்ட அனைத்தும்

**ஈ. மேற்கண்ட அனைத்தும்**

3. பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத்திலிருந்து வேறுபடக்காரணம்

அ. வணிகக் கட்டுப்பாடுகள் ஆ. உற்பத்திக் காரணிகள் இடம் பெயர இயலாமை
இ. நாடுகளின் கொள்கை வேறுபாடுகள்
ஈ. மேற்சொன்ன அனைத்தும்

**ஈ. மேற்சொன்ன அனைத்தும்**

4. நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட அடிப்படைகாரணம்

அ. ஒரு நாடு ஒரு குறிப்பிட்டப் பொருளையும் வேறு நாடு மற்றொரு பொருளையும் உற்பத்தி செய்யவிரும்புகிறது

ஆ. உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையேஏற்றத் தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளது

இ. பன்னாட்டு வாணிகம் லாபகுவிப்பு வாய்ப்பைஅதிகப்படுத்துகிறது

ஈ. நாடுகளில் நிலவும் வட்டி வீதமும் வெவ்வேறு அளவில் உள்ளது

**ஆ. உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையேஏற்றத் தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளது**

5. புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு எதன் அடிப்படையில் அமைந்தது?

அ. முழுமைச் செலவு

ஆ. ஒப்புமைச் செலவு

இ. உற்பத்திக்காரணிக் கோட்பாடு

ஈ. எதுவுமில்லை

6. பணமாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை

அ. பணசந்தை ஆ. அந்நிய செலாவணி இ. பங்கு சந்தை ஈ. மூலதனசந்தை

**ஆ. அந்நிய செலாவணி**

7.கீழ்கண்ட எந்த பணமாற்று நிர்ணய முறையில் சந்தை விலைகளான தேவையும் அளிப்பும் பணமாற்று வீதத்தை நிர்ணயிக்கிறது.

அ. மாறா பணமாற்று வீதம் ஆ. மாறுகின்ற பணமாற்று வீதம் இ. நிலைத்தபணமாற்று வீதம் ஈ. அரசு ஒழுங்காமைப்பும் முறை

**ஆ. மாறுகின்ற பணமாற்று வீதம்**

8. ஏற்றுமதி நிகரம் என்பது

அ. ஏற்றுமதி X இறக்குமதி ஆ. ஏற்றுமதி + இறக்குமதி இ. ஏற்றுமதி – இறக்குமதி ஈ. பணிகள் ஏற்றுமதி

**இ. ஏற்றுமதி – இறக்குமதி**

9. கீழ்கண்டவர்களில் யார்ஒற்றைக்காரணி வாணிபவீதத்தைவடிவமைத்தவர்

அ. ஜேக்கப் வைனர் ஆ.G.S. டோரன்ஸ் இ. எப்.டபில்யு டாசிக் ஈ. ஜே.எஸ் மில்

**அ. ஜேக்கப்வைனர்**

10. வாணிப வீதம் ________ பற்றி குறிப்பிடுகின்றது.

அ. பொருள் ஏற்றுமதி இறக்குமதி விகிதம் ஆ. இறக்குமதி வழி விகிதம் இ. ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம் ஈ. (அ) வும் (இ)யும்

**இ. ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம்**

11. சாதகமான வாணிக சூழலில் ஏற்றுமதி இறக்குமதியை விட ________ஆக இருக்கும்

அ. அதிகமாக ஆ. குறைவாக இ. கிட்டத்தட்ட சமமாக ஈ. சமமாக

**அ. அதிகமாக**

12. இறக்குமதி ஏற்றுமதியை விட அதிகமாக இருத்தலை கீழ்கண்ட வழிகளில் எது சரி செய்யும்

அ. சுங்கத் தீர்வையைக் குறைத்தல் ஆ. ஏற்றுமதி வரியை அதிகரித்தல் இ. ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல் ஈ. இறக்குமதிக்கு ஊக்கமளித்தல்

**ஆ. ஏற்றுமதி வரியை அதிகரித்தல்**

13.அயல்நாட்டுச் செலுத்து நிலைஉள்ளடக்கிய இனங்கள்

அ. புலனாகும் பொருட்கள் மட்டும் ஆ. புலனாகாத பணிகள் மட்டும் இ. அ மற்றும் ஆ ஈ. பண்டவாணிபம் மட்டும்

**இ. அ மற்றும் ஆ**

14. அயல்நாட்டுச் செலுத்து நிலை கூறுகள் கீழ் கண்டவைகளில் எவை

அ. நடப்பு கணக்கு ஆ. மைய வங்கி இருப்பு இ. மூலதன கணக்கு ஈ. அ,ஆ,இ மூன்றும்

**ஈ. அ,ஆ,இ மூன்றும்**

15. வாணிபக் கொடுப்பல் நிலை அறிக்கையில்

அ. பொருள் பரிவர்த்தனைமட்டும் பதிவாகிறது

ஆ. பொருள் மற்றும் பணிகள் பரிவர்த்தனைகள் பதிவாகிறது

இ. மூலதனம் மற்றும் நிதி பரிவர்த்தனைகள் பதிவாகிறது

ஈ. மேற்கண்ட அனைத்தும் பதிவாகிறது

**அ. பொருள் பரிவர்த்தனைமட்டும் பதிவாகிறது**

16. சுற்றுலா மற்றும் வெளிநாட்டுப்பயணம் தொடர்புடைய பரிவர்த்தனைகள் அயல்நாட்டு செலுத்துநிலையின் எந்தகணக்கின் கீழ் பதிவாகிறது

அ. பொருள் வாணிகக்கணக்கு ஆ. பணிகள் வாணிக கணக்கு இ. பணபரிவர்த்தனை கணக்கு ஈ. மூலதனகணக்கு

**ஆ. பணிகள் வாணிக கணக்கு**

www.Padasalai.Net

17. சுழற்சி அயல்நாட்டுச் செலுத்து நிலை சமமற்ற நிலைக்கான காரணம்

அ. வாணிக சுழற்சியின் மாறுபட்டகால கட்டம்
ஆ. வருவாய்மற்றும் விலை தேவை நெகிழ்ச்சி நாடுகளுக்கிடையே வேறுபடுதல்
இ. நீண்டகால பொருளாதார மாற்றங்கள்
ஈ. அ மற்றும் ஆ

**ஈ. அ மற்றும் ஆ**

18. கீழ்கண்டவைகளில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான உதாரணமாக கூற முடியாது?

அ. வெளிநாட்டில் தன்னுர்தி ஆலைஅமைத்தல்
ஆ.வெளிநாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இரும்பு உருக்கு ஆலையை வாங்குதல்
இ. வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தைவாங்குவது
ஈ. முழு தனி உரிமையுடன் ஒரு புதிய நிறுவத்தை வெளிநாட்டில் தொடங்குவது

**ஈ. முழு தனி உரிமையுடன் ஒரு புதிய நிறுவத்தை வெளிநாட்டில் தொடங்குவது**

19. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை?

அ. வங்கி ஆ. அணு ஆற்றல் இ. மருந்து உற்பத்தி ஈ. காப்பீடு

**ஆ. அணு ஆற்றல்**

20. கோட்பாட்டு அடிப்படையில் வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகளாவன

அ. பொருளதார வளர்ச்சி ஆ. பன்னாட்டு வாணிபவளர்ச்சி இ. வேலைவாய்ப்பு மற்றும் திறன் அதிகரித்தல்
ஈ. மேற்கண்ட அனைத்தும்

**ஈ. மேற்கண்ட அனைத்தும்**

## அத்தியாயம் 8 பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்

**பகுதி – அ**

**சரியானவிடையைதெரிவு செய்க:**

1. பன்னாட்டு பண நிதியம் கீழ்க்கண்ட இந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது

அ) பான்டுங் மாநாடு
ஆ) சிங்கப்பூர்மாநாடு இ) பிரிட்டன்வூட்ஸ் மாநாடு ஈ) தோஹா மாநாடு

**இ) பிரிட்டன் வூட்ஸ் மாநாடு**

2. பன்னாட்டு பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்

அ)வாஷிடங்டன்டி.சி
ஆ)நியூயார்க் இ)வியன்னா
ஈ) ஜெனிவா

**அ)வாஷிடங்டன் டி.சி**

3.ஐபிஆர்டி இவ்வாறாகவும் அழைக்கப்படுகிறது.

அ) பன்னாட்டு பணநிதியம் ஆ) உலக வங்கி இ) ஆசியான் ஈ) பன்னாட்டு நிதி கழகம்

**ஆ) உலக வங்கி**

4. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர்

அ) தாள் தங்கம்ஆ) பங்களவுகள் இ) தன்விருப்ப ஏற்றுமதி தடைகள் ஈ) இவைஏதுமில்லை

**அ) தாள் தங்கம்**

5. நீண்டகாலக் கடன் வழங்கும் நிதி நிறுவனம்

அ) உலக வங்கி ஆ) பன்னாட்டுப் பண நிதியம் இ) உலக வர்த்தக அமைப்பு ஈ) பிரிக்ஸ்

**அ) உலக வங்கி**

6. கீழ்கண்ட நாடுகள் எது சார்க் அமைப்பின் உறுப்பினர் இல்லை?

அ) இலங்கை ஆ) ஜப்பான் இ)வங்காளதேசம் ஈ)ஆப்கானிஸ்தான்

**ஆ) ஜப்பான்**

7. பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்க்கண்ட இதன் துணை அமைப்பாகும்

அ) பன்னாட்டுப் பண நிதியம் ஆ) உலக வங்கி இ) சார்க் ஈ) ஆசியான்

**ஆ) உலக வங்கி**

8. காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக ரகசியம் போன்றவை________உடன் தொடர்புடையவை

அ) வணிகம் சார் சொத்துரிமை ஆ) வணிகம் சார்ந்த முதலீட்டு வழிமுறைகள் இ) காட்ஸ் ஈ) NAMA

**அ) வணிகம் சார் சொத்துரிமை**

9. உலக வர்த்தக அமைப்பின் முதலாவது அமைச்சர்கள் அளவிலான மாநாடு நடைபெற்ற இடம்

அ) சிங்கப்பூர் ஆ) ஜெனிவா இ) சியாட்டில் ஈ) டோஹா

**அ) சிங்கப்பூர்**

10. ஆசியான் கூட்டங்கள்______ ஆண்டுகளுக்கு ஒரு முறைநடைபெறும்.

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

**ஆ) 3**

11. கீழ்கண்டவைகளில் எது SAARC உறுப்பினர் நாடு அல்லல?

அ) பாகிஸ்தான் ஆ) ஸ்ரீலங்கா இ) பூடான் ஈ) சீனா

**ஈ) சீனா**

12. சார்க்உச்சி மாநாடு ____________ ஆண்டுகளுக்கொரு முறை நடைபெறுகிறது.

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

**அ) 2**

13. ஆசியான் அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்

அ) ஜகார்த்தாஆ) புது டெல்லி இ) கொழும்பு ஈ டோக்கியோ

**அ) ஜகார்த்தா**

14. பிரிக்(BRIC) என்ற சுருக்கச் சொல் சேர்க்கப்பட்ட ஆண்டு

அ) 2001 ஆ) 2005 இ) 2008 ஈ) 2010

**அ) 2001**

15. ஆசியான் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு

அ) 1965 ஆ) 1967 இ) 1972 ஈ) 1997

**ஆ) 1967**

16. வது பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு ஜுலை 2018ல் நடைபெற்ற இடம்

அ) பீஜிங் ஆ) மாஸ்கோ இ) ஜோகனஸ் பர்க் ஈ) பிரசிலியா

**இ) ஜோகனஸ் பர்க்**

17. புதிய மேம்பாட்டு வங்கி இந்த அமைப்புடன் தொடர்புடையது.

அ) பிரிக்ஸ் ஆ) டபிள்யூ.டி.ஓ இ) சார்க் ஈ) ஆசியான்

**அ) பிரிக்ஸ்**

18. ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும்ஆறு நாடுகளில் சேராத நாடு

அ) சீனா ஆ) ஜப்பான்இ) இந்தியா ஈ) வடகொரியா

**ஈ) வடகொரியா**

19. சார்க் வேளாண் தகவல் மையம் துவங்கிய ஆண்டு

அ) 1985 ஆ) 1988 இ) 1992 ஈ) 1998

**ஆ) 1988**

20. பெனிலக்ஸ் (BENELUX) என்பது இதன் வடிவமாகும்.

அ) தடையற்ற வர்த்தகப் பகுதி ஆ) பொருளாதார ஒன்றியம் இ) பொது சந்தை ஈ) சுங்கவரி ஒன்றியம்

**ஈ) சுங்கவரி ஒன்றியம்**

## அத்தியாயம் 10

## சுற்றுச்சூழல் பொருளியல்

**பகுதி – அ**

**சரியான விடையைதெரிவு செய்க:**

1. " என்வைரான்மென்ட்" (Environment) என்றவார்த்தை----------------- என்றபொருள் கொள்ளும் எந்தபிரஞ்ச் வார்த்தையிலிருந்து தோன்றியது?

அ) என்வைரான் ஆ) என்வைரான்ஸ் இ) என்வைரோனியா ஈ) என்வைர்

**இ) என்வைரோனியா**

2. " உயிர்சார்" (biotic) என்றவார்த்தையின் பொருள் என்ன?

அ) உயிர் வாழ்வன ஆ) உயிரற்றவை இ) பருப்பொருள் ஈ) மேற்சொன்னஎதுவுமல்ல

**அ) உயிர் வாழ்வன**

3. சூழலியல் என்பது எந்தஒன்றின் சிறிய பகுதி?

அ) அயனோஸ்பியர் ஆ) லித்தோஸ்பியர் இ) பையொஸ்பியர் ஈ) மெஸ்ஸோஸ்பியர்

**இ) பையொஸ்பியர்**

4. " பொருள்சார் சமநிலை அணுகுமுறையை" நிறுவியவர் யார்?

அ) தாமஸ் மற்றும் பிக்கார்டி ஆ) ஆலன் நீஸ் மற்றும் ஆர்.வி. அய்யர்ஸ் இ) ஜோன் ராபின்சன் மற்றும் ஜெ.எம். கீன்ஸ் ஈ) ஜோசப் ஸ்டிக்லிஸ் மற்றும் எட்வர்ட்சேம்பா;லின்

**ஈ) ஜோசப் ஸ்டிக்லிஸ் மற்றும் எட்வர்ட்சேம்பா;லின்**

5. சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை------ ------------- ?

அ)சந்தைப் பொருட்கள் ஆ)சந்தையிடா பொருட்கள் இ)இரண்டும் ஈ) மேற்சொன்னஎதுவுமல்ல.

**ஆ)சந்தையிடா பொருட்கள்**

6. தூய பொதுப்பொட்களில், நுகர்ச்சி என்பது ------------------ .

அ) போட்டி உடையது ஆ) போட்டியற்றது இ) இரண்டும் ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

**அ) போட்டி உடையது**

7.சுற்றுச்சூழல் பொருளியலின் அடிப்படைகருத்துக்களில் ஒன்றும், சந்தைதோல்விக்கு காரணமானதும் -------------- ஆகும்.

அ)நேர்மறைபுற விளைவுகள் ஆ)எதிர்மறைபுற விளைவுகள் இ)இரண்டும் ஈ) மேற்சொன்னஎதுவுமல்ல

**ஆ)எதிர்மறை புற விளைவுகள்**

8.வெளிக்காற்றுமாசுவுக்கு------------- காரணமாகும்.

அ)சூடாக்குவதும் சமைப்பதும் ஆ)பாரம்பரிய அடுப்புகள் இ)மோட்டார் வாகனங்கள் ஈ) மேற்கண்டஅனைத்தும்

**இ)மோட்டார் வாகனங்கள்**

9. கார்பன் மோனாக்சைட் அதிகமாவதில் பங்களிப்பைச் செய்வது

அ) மோட்டார் வாகனங்கள் ஆ) தொழில் செயற்பாடுகள் இ) நிலையாக எரிபொருள் எரிக்கும் கருவிகள் ஈ) மேற்சொன்னஎதுவுமில்லை

**அ) மோட்டார் வாகனங்கள்**

10. பின்வரும் எது உலக வெப்பயமயமாதலுக்கு காரணம்?

அ) பூமியின் ஈர்ப்பு விசை ஆ) ஆக்ஸிஜன் இ) மையநோக்கு விசை ஈ) வெப்பநிலை அதிகமாதல்.

**ஈ) வெப்பநிலை அதிகமாதல்.**

11. பின்வரும் எந்தஒன்று புற ஊதாக்கதிர்களிலிருந்து மனிதர்களைபாதுகாக்கிறது?

அ) UV - A ஆ) UV - C இ) ஓசோன் படலம் ஈ) மேற்சொன்னஎதுவுமில்லை

**இ) ஓசோன் படலம்**

12. உலக வெப்பயமயமாதல் ----------- என்றும் குறிப்பிடப்படுகிறது.

அ) சூழலியல் மாறுபாடு

ஆ)பருவநிலை மாறுபாடு இ)வளிமண்டலமாறுபாடு ஈ) மேற்சொன்னஎதுவுமில்லை

**ஆ)பருவநிலை மாறுபாடு**

13. பின்வரும் எந்த ஒன்று உலக வெப்பயமயமாதலின் எதிர்பார்க்கப்படும் விளைவு?

அ) கடல் மட்டம் உயர்தல் ஆ) மழைப் பொழிவு மாறுதல் இ) பாலைவனம் அதிகரித்தல் ஈ) மேற்சொன்னஅனைத்தும்.

**அ) கடல் மட்டம் உயர்தல்**

14. சத்துக்களைஅதிகப்படுத்தும் செயல் எப்படி அழைக்கப்படுகிறது?

அ)யூட்ரோபிகேசன் ஆ)சத்துக்களைகட்டுப்படுத்துதல் இ)செறிவூட்டல் ஈ) சிஸ்டோஸ்மியாசிஸ்

**அ)யூட்ரோபிகேசன்**

15. மண்மாசுவிற்கு முதல்நிலை காரணம் ------------ .

அ) பூச்சியைகட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஆ) நிலமேம்பாடு இ) விவசாய நிலங்கள் வழியாக பாய்ந்தோடும் மழைநீர் ஈ) இரசாயனஉரங்கள்

**ஈ) இரசாயனஉரங்கள்**

16. வனஅழிவிற்கானமுதன்மை காரணம் யாது?

அ)மரம் வெட்டும் தொழில் ஆ)இயற்கைவனஅழிவு இ)நிலத்தைசமப்படுத்துதல் ஈ) தட்பவெட்பநிலை சமப்படுத்துதுல்

**அ)மரம் வெட்டும் தொழில்**

17. மின்னணு கழிவுகளுகள் ------------ என்றபொதுவாக குறிப்பிட்படுகின்றன.

அ)திடக்கழிவுகள் ஆ) குப்பைக்கழிவுகள் இ) இ-கழிவுகள் ஈ) மருத்துவமனைக்கழிவுகள்

**இ) இ-கழிவுகள்**

18. அமிலமழைக்-------------- விளைவுகளில் ஒன்று.

அ) காற்று மாசு ஆ) நீர் மாசு இ) நிலமாசு ஈ) ஒலி மாசு

**அ) காற்று மாசு**

19. நீடித்தவளர்ச்சி (அல்லது) வளங்குன்றாவளர்ச்சிக்குறிக்கோள்களைஅடைய விதிக்கப்பட்டிருக்கும் காலம் --------- .

அ) 2020 ஆ) 2025 இ) 2030 ஈ) 2050

**இ) 2030**

20. கார நிலம் அதிகமாக காணப்படும் சமவெளி எது?

அ) சிந்து-கங்கைஆ) வட இந்திய இ) கங்கை ஈ) மேற்கூறிய அனைத்தும்

**ஈ) மேற்கூறிய அனைத்தும்**

## அத்தியாயம் 11 பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல்

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. " வளர்ச்சியுடன் கூடிய மறு பகிர்வு" கீழ்கண்ட எந்த அணுகுமுறையின் புகழ் பெற்ற முழக்கம் இது.

அ) பழமையான அணுகுமுறை ஆ) புதிய பொது நல அணுகுமுறை இ) தொழில் அணுகுமுறை ஈ) இவற்றில் எதுவுமில்லை

**ஆ) புதிய பொது நல அணுகுமுறை**

2. பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியின் தன்மைஇல்லாதவைஎது?

அ) வளர்ந்தநாடுகளை பற்றியது ஆ) படிப்படியான மாற்றம் இ) எண்களின் அடிப்படையில் அமைந்தது ஈ) விரிவான கருத்து

**ஈ) விரிவான கருத்து**

3. கீழ்கண்டவற்றுள் எவைபின்தங்கிய நாடுகளின் பண்புகளில் ஒன்றாகும்

அ) வறுமையின் நச்சு சுழற்சி ஆ) பெரும் நுகர்வைஅதிகப்படுத்துதல் இ) தொழில்சாலைகள் வளர்ச்சி ஈ) அதிக அளவில் நகர்மயமாதல்

**அ) வறுமையின் நச்சு சுழற்சி**

4. கீழ்கண்டவற்றுள் எந்தபொருளாதாரம் சாராத காரணி, பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கிறது

அ) இயற்கைவளங்கள் ஆ)மனிதவளங்கள். இ) மூலதன உருவாக்கம் ஈ)பன்னாட்டு வாணிபம்

**ஆ) மனித வளங்கள்.**

5. பொருளாதார வளர்ச்சி ________ ஐ அளவிடுகிறது

அ) உற்பத்தித் திறன் வளர்ச்சி ஆ) பெயரளவு வருமான அதிகரிப்பு இ) உற்பத்தி அதிகரிப்பு ஈ) இவை எதுவுமில்லை

**இ) உற்பத்தி அதிகரிப்பு**

6. அளிப்பு பக்கத்திலிருந்து இயங்கும் வறுமையின் நச்சு சுழற்சியின்படி ஏழைநாடுகள் ஏழையாகவே இருக்கின்றன ஏனென்றால்

அ) சேமிப்பு குறைவாகவே உள்ளது ஆ) முதலீடு குறைவாகவேஉள்ளது இ) திறன் மிக்கஅரசு இல்லை ஈ) அ மற்றும் ஆ

**ஈ) அ மற்றும் ஆ**

7. கீழ்கண்ட எந்த திட்டத்தில், வேளாண்மை மற்றும் கிராமப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டது?

அ) மக்கள் திட்டம் ஆ) பாம்பேதிட்டம் இ)காந்தியத்திட்டம் ஈ) விஸ்வேசுவரய்யாதிட்டம்

**இ)காந்தியத்திட்டம்**

8.கீழ்கண்டதிட்டங்களை அவை முன் மொழியப்பட்ட ஆண்டின் அடிப்படையில் கால கிராம வரிசைப்படி தொகுத்து விடையைத் தேர்ந்தெடுக்கவும்

i) மக்கள் திட்டம் ii) பாம்பேதிட்டம் iii) ஜவஹர்லால் நேரு திட்டம் iv) விஸ்வேசுவரய்யாதிட்டம்

அ) i) ii) iii) iv) ஆ) iv) iii) ii) i) இ) i) ii) iv) iii) ஈ) ii) i) iv) iii)

**ஆ) iv) iii) ii) i)**

9. எம். என் ராய் வழங்கியத் திட்டம் கீழ்கண்டவைகளில் எது?

அ) காங்கிரஸ் திட்டம் ஆ) மக்கள் திட்டம் இ) பாம்பேதிட்டம் ஈ) இவை எதுவுமில்லை

**ஆ) மக்கள் திட்டம்**

10. சுட்டிக்காட்டும் திட்டமிடலை செயல்படுத்திய நாடு

அ) பிரான்சு ஆ) ஜெர்மனி இ) இத்தாலி ஈ) ரஷ்யா

**ஆ) ஜெர்மனி**

11. குறுகிய காலத் திட்டத்தின் இன்னொரு பெயர்

அ) கட்டுப்படுத்தும் திட்டம் ஆ) கட்டுபாட்டைநீக்கும் திட்டம் இ) சுழல் திட்டம் ஈ) சுழற்சியற்றதிட்டம்

**அ) கட்டுப்படுத்தும் திட்டம்**

12. நீண்டகாலத் திட்டத்தின் மற்றொரு பெயர்

அ)மேம்பாட்டுத் திட்டம் ஆ)மேம்பாடு இல்லாத திட்டம் இ)முன்னோக்குத் திட்டம் ஈ) முன்னோக்கமற்றதிட்டம்

**இ) முன்னோக்குத் திட்டம்**

13. நீண்டகாலத்திட்டமிடலின் அடிப்படைக்கருத்து நாட்டின் ________மாற்றமாகும்

அ) நிதி ஆ) வேளாண்மை இ) தொழில் ஈ) கட்டமைப்பு

**இ) தொழில்**

14. சர்வோதாயத் திட்டத்தைமுன்மொழிந்தவர் யார்?

அ)மஹாத்மாகாந்தி ஆ)ஜெயப்பிரகாஷ் நாராயணன் இ)எஸ்.என்.அகர்வால் ஈ) எம்.என்.ராய்

**ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்**

15. இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்டஆண்டு------------

அ) 1950 ஆ) 1951 இ) 1947 ஈ)1948

**அ) 1950**

16. “ அடிமைத்தனத்திற்கான பாதை“ என்றபுத்தகத்தைஎழுதியவர் யார்?

அ) பிரடெரிக்ஹேயக்ஆ) ஜெ.ஆர் ஹிக்ஸ் இ) டேவிட்ரிக்கார்டோ ஈ) டி.ஆர். மால்தஸ்

**அ) பிரடெரிக்ஹேயக்**

17. முன்னோக்குத் திட்டத்தின் மற்றொருப் பெயர்_________.

அ) குறுகிய கால திட்டமிடல் ஆ) நடுத்தரக்காலத் திட்டமிடல் இ) நீண்டகாலத் திட்டமிடல் ஈ) இவைஎதுவுமில்லை

**இ) நீண்டகாலத் திட்டமிடல்**

18. நிதி ஆயோக்கீழ்கண்டஎதன் மூலமாக அமைக்கப்பட்டது?

அ) குடியரசு தலைவரின் அவசர ஆணைஆ) குடியரசு தலைவரின் சுற்றறிக்கை இ) அமைச்சரவைத் தீர்மானம் ஈ) இவைஎதுவுமில்லை

**இ) அமைச்சரவைத் தீர்மானம்**

19. நிதி ஆயோக்கின் (NITI Aayog) சரியான ஆங்கில விரிவாக்கம்

அ) National Institute for Transport in India ஆ) National Institute for Trade in India இ) National Institute for Tomorrow's India ஈ) National Institution for Transforming India

**ஈ) National Institution for Transforming India**

20. சட்டப்பூர்வமாக நிதி ஆயோக்கின் தலைவராக கீழ்க்கண்டஎந்தப்பதவியில் உள்ளஒருவர் செயல்படுவார்?

அ) பிரதமர் ஆ) குடியரசுத் தலைவர் இ) உதவி குடியரசுத் தலைவர் ஈ) நிதி அமைச்சர்

**அ) பிரதமர்**

## அத்தியாயம் 12 புள்ளியியல்

**பகுதி – அ**

**சரியான விடையை தெரிவு செய்க:**

1. ‘ ஸ்டாட்டிஸ்டிக்ஸ்’ (Statistics) என்ற வார்த்தை---------------- ஆகும்.

அ) ஒருமை ஆ) பன்மை இ) ஒருமைமற்றும் பன்மை ஈ) மேற்சொன்னஎதுவுமல்ல

**இ) ஒருமை மற்றும் பன்மை**

2. புள்ளியியல்எண்விவரங்களை பற்றி படிக்கும் பயன்பாட்டுக்கணிதத்தின் ஒரு சிறப்புப்பகுதி என்று கூறியவர்யார்?

அ) ஹேராஸ் செக்ரிஸ்ட் ஆ) ஆர். ஏ. ஃபிஷர் இ) யா-லன்-சூ ஈ) போடிங்ட்டன்

**ஈ) போடிங்ட்டன்**

3. இரண்டாம் நிலை விவரங்களுக்கான ஆதாரம் ------------------ .

அ) வெளியிடப்பட்ட விவரங்கள் ஆ) வெளியிடப்படாத விவரங்கள் இ) மேற்சொன்னஇரண்டில்ஒன்று ஈ) அ மற்றும் ஆ

**ஈ) அ மற்றும் ஆ**

4. கேள்வித்தாள் மூலம் புள்ளிவிவரம் திரட்டப்பட்டால்அது -----------.

அ) முதல்நிலைவிவரம் ஆ) இரண்டாம் நிலைவிவரம் இ) வெளியிடப்பெற்ற விவரம் ஈ) தொகுக்கப்பட்ட விவரம்

**அ) முதல்நிலைவிவரம்**

5. நேர்கோட்டு உறவினை கொண்டிருக்கும் இரு மாறிகளின் உறவினை அளவினை அளக்கும் முறைக்கு ----------- பெயர்.

www.Padasalai.Net

அ) சரிவு `ஆ) அச்சுவெட்டு இ)உடன்தொடர்புக்கெழு ஈ) ஒட்டுறவுச் சமன்பாடு

**இ) உடன்தொடர்புக்கெழு**

6. X மற்றும் Y மாறிகள் இரண்டும் ஒரேதிசையில்மாறினால், உடன்தொடர்புக்கெழு எவ்வாறு இருக்கும்?

அ) நேர்மறையாக ஆ) எதிர்மறையாக இ) 0 `ஈ) 1

**அ) நேர்மறையாக**

7. ஒரு சிதறல்விளக்கப்படத்தில்ஒரு மாறி அதிகரித்துச் செல்லும்பொழுது மற்றொரு மாறி குறைந்து சென்றால்உடன்தொடர்புக்கெழுவின் அளவு எவ்வாறாக இருக்கும்?

அ) முழு நேர்மறையாக ஆ) முழு எதிர்மறையாக இ) எதிர்மறையாக ஈ) 0

**இ) எதிர்மறையாக**

8. உடன்தொடர்புக்கெழு γ-ன் அளவு எந்தஎல்லைக்குள் இருக்கும்

ஆ) 0 மற்றும் 1 ஆ) -1 மற்றும் 0 இ) -1 மற்றும் 1 ஈ) - 0.5 மற்றும் 0.5

**இ) -1 மற்றும் 1**

9. ஒட்டுறவு என்ற கருத்தினை முதலில்பயன்படுத்தியவர்

அ) நியூட்டன் ஆ) பியர்ஸன் இ) ஸ்பியர்மேன் ஈ) கால்டன்

**ஈ) கால்டன்**

10. ஒட்டுறவு பகுப்பாய்வின் நோக்கம்?

அ) ஒரு காரணியின் மதிப்பினைக்கொண்டு அடுத்து காரணியின் மதிப்பினை கண்டறிவது. ஆ) சிதறல் விளக்கப் படத்தில் உள்ள புள்ளிகளுக்கு பதிலாக கோட்டினை வரைவது இ) இரு மாறிகளும் எந்தஅளவுக்கு உறவு கொண்டுள்ளன என்பதை தெரிந்து கொள்வதற்கு. ஈ) சாரா மாறியின் எதிர்பார்க்கப்டும் மதிப்பினை தெரிந்து கொள்ள சார்பு மாறியின் மதிப்பினை அளித்தல்.

**அ) ஒரு காரணியின் மதிப்பினைக்கொண்டு அடுத்து காரணியின் மதிப்பினை கண்டறிவது**

11. சார்பு மாறியின் மதிப்பினை மதிப்பீடு செய்வதற்காக சாரா மாறிகளை பயன்படுத்தும் செயலுக்கு -------- பெயர்

அ)உடன் தொடர்புக்கெழு இ) சரிவு ஆ) ஒட்டுறவு ஈ) பிழைக்கருத்து

**இ) சரிவு**

12. Y = 2 - 0.2X எனில், Y அச்சு வெட்டு ------------- ஆகும்.

அ) - 2 ஆ) 2 இ) 0.2 X ஈ) மேற்சொன்னஅனைத்தும்

**ஆ) 2**

13. Y = β0+β1x, என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில்Y என்பது------------ .

அ)சாரா மாறி ஆ)சார்பு மாறி இ)தொடர்ச்சிமாறி ஈ) மேற்சொன்னஎதுவுமல்ல.

**ஆ)சார்பு மாறி**

14. Y = β0+β1x என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில்x என்பது ------------ .

அ) சாரா மாறி ஆ) சார்பு மாறி இ)தொடர்ச்சிமாறி ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல.

**அ) சாரா மாறி**

15. பொருளாதார அளவையியல் என்பது எதன் இணைப்பு?

அ) பொருளியல் மற்றும் புள்ளியியல் ஆ) பொருளியல் மற்றும் கணிதம் இ) பொருளியல், கணிதம், மற்றும் புள்ளியியல்

ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

**இ) பொருளியல், கணிதம், மற்றும் புள்ளியியல்**

16. பொருளாதார அளவையியல் என்ற வார்த்தையை உருவாக்கியவர்?

அ) ஃபிரான்ஸி கால்டன் ஆ) ராக்னா; ஃபிரிஸ்க்இ)கார்ல்பியர்சன் ஈ) ஸ்பியர்மேன்

**ஆ) ராக்னா; ஃபிரிஸ்க்**

17.பொருளாதார அளவையியலுக்கான மூலப்பொருள்--------------- .

www.Padasalai.Net

அ) புள்ளிவிவரம் ஆ) பொருட்கள் இ) புள்ளியியல்ஈ) கணிதம்

**அ) புள்ளி விவரம்**

18. U என்பது ------------.

அ) விலகல்ஆ) திட்டப்பிழை இ)பிழைக்கருத்து ஈ) மேற்சொன்னஎதுவும் அல்ல

**இ)பிழைக் கருத்து**

19. U என்பது எதைக்குறிக்கிறது?

அ) விடுபட்ட காரணிகள் ஆ) திட்டப்பிழை இ) பிழை ஈ) தொடர்ச்சியற்ற காரணி

**அ) விடுபட்ட காரணிகள்**

20. பொருளாதார அளவையியல்என்பது எத்தனை பாடங்களின் இணைப்பு?

அ) 3 பாடங்கள் ஆ) நான்கு பாடங்கள் இ) 2 பாடங்கள் ஈ) 5 பாடங்கள

**அ) 3 பாடங்கள்**

**Refer from Namma Kalvi or Padasalai.net**

1. **Old Public Exam Question papers**
2. **Ideal Question Bank**

**BEST WISHES**

www.Padasalai.Net